அன்பு மலர்—17

மஹாகவி
காளிதாஸன்

(MAHAKAVI KALIDASAN)

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

:: அன்பு நிலயம் ::
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா
1939

MAHAKAVI KALIDASAN—224 pages.

Published by

: : THE ANBU NILAYAM : :

RAMACHANDRAPURAM, TRICHY DISTRICT

1939

Price Rs. 1-4-0

Printed by

THE SADHU PRESS,

Royapettah, Madras

அன்பு மலர்—17

உ

மஹாகவி

காளிதாஸன்

[காளிதாஸன் வரலாறு, கவிநயம், இரகுவம்சம்,
குமார சம்பவம், அபிக்ஞான சகுந்தலம்
மொழிபெயர்ப்பு]

சுத்தானந்தபாரதி.

பொருளடக்கம்

மஹாகவி காளிதாஸன்

பதிப்புரை

எமது நிலயத்தின் பதினேழாவது அன்பு மலரை உலகம்மையப்பர் திருவடியில் வைத்து வணங்குகிறோம். "மஹாகவி காளிதாஸன்" என்னும் இவ்வரிய இலக்கியம், உலகப் புகழ்பெற்ற நமது நாட்டுக் கவியரசனைத் தமிழருக்கு நன்கு விளக்கிக் காட்டுகிறது. கவியின் இலக்கணம், தொண்டு, பயன், காளிதாசனுடைய கால ஆராய்ச்சி, வரலாறு, காவியத் திறமை, அவனியற்றிய நூல்கள், அவற்றின் பெருமை ஆகிய வற்றை இந்நூல் முன்னே விளக்குகிறது. அதன் பிறகு, காளிதாச காவியங்களிற் சிறந்தவையான இரகு வம்சம், குமார சம்பவம் இரண்டின் சுவையையும் தமிழருக்கு அளிக்கிறது. திலீபன் கோவிரதம், இரகுவின் வீரம், சிவ பார்வதி தவம் இம்மூன்றையும் நூலின் முதற் பாகத்திற் காணலாம். காளிதாஸன் நூல்களில் எல்லாம் உலகப் புகழ்பெற்று விளங்குவது அபிக்ஞான சகுந்தலமாம். மற்றெல்லா மொழிகளிலும் அதை ஆக்கி அரங்கேற்றுகின்றனர். அந்த அரிய நாடக நூலை, எளிய இனிய தமிழில், சுவை குன்றாமல், அரங்கில் நடிக்கத் தக்கதாக எழுதவேண்டுமென்ற எமது நெடுநாள் விருப்பம் இந்நூலால் நிறைவேறியது.

இந்நூலாசிரியர் சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள், ஒரு மாதக் காலத்திற்குள் நூல் முழுவதையும் வெற்றியுற முடித்துத் தந்தார்கள். இரகு வம்சம், அஜராஜன் வரலாறு, மேக தூதம், மாளவிகாக்னிமித்திரம், விக்ரமோர்வசியம் முதலிய அரிய நூல்களினின்றும் திரட்டிய சுமார் நூறு இனிய காளிதாச வாக்குகளை, மொழிபெயர்ப்புடன் நூலிறுதியிற் சேர்க்கக் கருதினோம். நூல் பெருகிவிட்டதால் அதற்கு இடமில்லாமற் போயிற்று. "அருளமுதம்" என்னும் தொகை நூலுக்குப் பிறகு, பன்மொழி இலக்கியங்களினின்றும் அரிய பெரிய அறிஞர் மொழிகளைத் திரட்டி வெளியிடவுள்ளோம். அவ்வகையில், "ஆரியப் பூங்கா" வென்னும் ஒரு தொகை

நூல் வெளிவரும். அந்நூலில் காளிதாசன் வாக்கமுதத்தையும் அன்பர் நுகரலாம்.

மஹாகவி காளிதாசனை மிகவும் ஆர்வமுடன் வெளியிட்டுதவிய தமிழ்த் திருத்தொண்டர் அமராவதி புதூர் திருவாளர் - **பழ. நா. நாராயணஞ் செட்டியார் அவர்களுக்கு** எமது நிலயம் நன்றியும் அன்பும் செலுத்துகிறது. இப்போன்பர், உண்மையான சிவப்பற்றும், தமிழ்ப் பற்றும் மிகுந்தவர். எமது நிலயத்துக்குப் பலவகையில் அரிய துணைசெய்யும் இந்த அன்பருக்கு இறைவனருளால் சீரும் செல்வமும் பெருகுக !

"தமிழுணர்ச்சி"யில் தமிழ் மொழியைக் கொண்டே ஆரியத்தை எழுதலாமென்று கண்டிருந்தது. அதை இந்நூலில் நிறைவேற்றி யுள்ளோம். இனிய பல காளிதாச வாக்குகள், உரையுடன் இந்நூலை அலங்கரிக்கின்றன. இவ்வாறே, **பகவத்** கீதையைத் தமிழ் எழுத்தில் விரிவுரையுடன் வெளியிட உள்ளோம்.

இவ்வாறு தமிழிலேயே ஆரியச் செய்யுட்களை அச்சிடமுற்பட்ட பெருமை சாது அச்சகத்தையே சேரும். மிகவும் கருத்தூன்றிய பொறுமையுடன், செந்தமிழ்ச் செல்வரான **திரு. வி. உலகநாத முதலியாரவர்கள்** இந்நூலை இவ்வளவு அழகாக முடித்துத் தந்தார்கள். இப்பெரியார் எமது வெளியீடுகளுக்குச் செய்யுந் தொண்டு சிவத்தொண்டாகுக ! சிவன் மகளே தமிழ்த்தாயன்றோ ?

கம்பர், வள்ளுவர், இளங்கோ இம்மூன்று தமிழ்க் கவியரசருக்கும் மாளிகை அமைத்தாயிற்று. காளிதாசனுக்கும் ஒரு மாளிகை அமைத்துள்ளோம். இனி, ஷேக்ஸ்பியர், மில்தன், ரவீன், விர்கில், ஹோமர் போன்ற உலக மஹாகவிகளுக்கும் எம்மால் இயன்ற சிறப்புச் செய்ய இறைவனருள் துணை தருக !

அன்பு வாழ்க ! அன்பர் வாழ்க !

20-2-1939
இராமச்சந்திரபுரம்

அன்பு நிலயத்தார்.

மஹாகவி காளிதாஸன்

வணக்கம்

வேதாந்தேஷு யமாஹுரேக புருஷம்
 வ்யாப்த ஸ்திதம் ரோதஸீ,
யஸ்மின் னீஸ்வர இத்யனன்ய விஷய:
 ஶப்தோ யதார்தாக்ஷர:
அந்தர் யஶ்ச முமுக்ஷுபிர் நியமித
 ப்ராணாதிபிர் ம்ரிக்யதே
ஸ: ஸ்தாணு: ஸ்திரபக்தி யோக ஸுலபோ
 நி: ஶ்ரேயஸா யாஸ்து வ:

விண்ணும் மண்ணும் விரிந்துமியல் பாயிருக்கும்
 புருடனென்பர் வேதாந் தத்தில்;
எண்ணுமவ னேயிறைவ னெவ்வகைத்தும்;
 *வளியடக்கி முத்தி வேட்பார்,
உண்முகப்பட் டுன்னியடைந் திடப்பெறுவர்;
 அன்புறுதி யோக மிக்க
திண்மையருக் கெளிதெய்துஞ் சிவபெருமான்
 பேரின்ப மருள்க மாதோ!

*ப்ராணாதி வாயுக்கள்

க. மஹாகவி காளிதாஸன்

1. மகாகவி

குயில் இளவேனிலைக் கூவுகிறது; கவி புதுயுகத்தைக் கூவுகிறான்; அவன் புதுவாழ்வின் தூதனாக வந்து காலச்சக்கரத்திற்குப் புதிய மின்ஸாரவேக மளிக்கிறான். புதிய எண்ணங்களே கவியுருவெடுக்கின்றன.

வாழ்க்கை ஒரு கற்பகம் போன்றது: அதன்வேர் அறம், கிளை பொருள், மலர் இன்பம், கனி வீடு பேறும். இக்கற்பகத்தை இன்னிசையூற்றி வளர்ப்பவரே மஹாகவிகளாவர். இக்கற்பகம் பழைய இலைகளையும் பட்டைகளையும் உதிர்த்துப் புதிய வனப்படையும் போதெல்லாம் ஒரு மஹாகவி தோன்றுவான். மஹாகவி புகழும், பரிசிலும் அவாவிச் சொற்சிலம்பம் வீசுவோனல்லன்; அவன் புதுமைப்பசிக்கு வாக்கமுதம் கொண்டு வரும் காமதேனு போன்றவன்; அவன் வாழ்வு மலரில் பேரின்ப மகரந்தம் பொழிந்து, கடவுட்சுவை கனியவைக்கும் ஞானவண்டாவன். அவன் வாக்கு அருட்புலமையினின்றே பொங்கிப் பொசியும் அறிவமுதமாகும். அது தனது சண்டவேகத்தால் காலத்தாற் படர்ந்த தீமைகளை வாரிவிழுங்கி, "சுத்தம், சுதந்திரம், சமத்துவம்" என்னும் முழக்கத்துடன் முன்னேறிச் செல்லும் மந்திர வெள்ளமாகும். மஹாகவியின் வாக்கு எளிமை, இனிமை, சரளம், இயலோட்

டம், அருளழகு, பொருளாழம் இவற்றுடன் மாந்தர் வாழ்வை மாற்றும் மந்திரசக்தி வாய்ந்ததாகும். அந்த வாக்கிற்குச் சிருட்டித் திறமையுண்டு. அத்தகைய வாக்கே உலகை ஆளுகிறது. மனித சமுதாயத்தை உயர்த்தவந்த உத்தமர் அத்தகைய மந்திரவாக்குடனே தோன்றினர். வேதரிஷிகள், வான்மீகி, வியாசர், காளிதாஸர், துளஸிதாஸர், வள்ளுவர், நம்மாழ்வார், கம்பர், அப்பர், மாணிக்கவாசகர், சங்கரர், தாயுமான வர், அருட்சோதி வள்ளலார் - முதலிய அருட்கவி களே நமது பாரத சமுதாயத்தை ஆக்கினர்.

2. கவியின் தோற்றம்

வேத முனிவர் ஆத்மானுபவங்களைப் பாடினர்; அவர் பாட்டில் வளர்ந்த பாரத சமுதாயம், அந்தண்மை யும், வீரமும், அறிவும், தொழிலும், பொதுநலத் தொண்டும் செறிந்த தீரர் கூட்டமாக விளங்கியது. வான்மீகி, வியாசர் ஆகிய இரண்டு அருட்புலவரும் வேதவழி நிற்கும் ஆதர்ச புருஷர்களைத் தமது கவி வாணியாற் சிருட்டித்தனர். வான்மீகி தருமவீரத்தை இராமன்வடிவில் விளக்கினர்; வியாசர் ஞானவீரத் தைக் கண்ணன் வடிவாக விளக்கினர். இராமாயண மும் பாரதமும் நமது சமுதாயவாழ்வை அமைத்தன. தூயமுனிவர் எழுப்பிய சமுதாயவாழ்க்கை, காலத்தாற் சிதைந்தது. அறிவொளி மங்கியது; அறத்தின் அடிப்படை ஆட்டங் கொடுத்தது. அனைத்தையும் தானகக் காணும் சமதரிசனமும், உயிர்க்கருணையும்

மாந்தர் மனத்தினின் றகன்றன. சடங்குகளிற் பிடிவாதங்கொண்டு, மாந்தர் சமரஸ ஞானத்தை மறந்தனர்: தாம் விண்ணின்பம்பெற ஆட்டு வேள்வியும், மாட்டு வேள்வியும் செய்தனர்! மன்னர் இடம்பவாழ்வால் எளியவர் வருந்தினர். மாந்தர் மனம் ஆசைச்சுழலில் அகப்பட்டு, போலியின்பங்களைத் தேடிப் புண்ணானது. இத்துயர நிலையினின்று மாந்தரை விடுவிக்கப் புத்தர் அவதரித்தார். புத்தர் வேள்விக் கொலைகளைக் கண்டித்தார்; அன்பு, உண்மை, தூய்மை, உயிர்க்கருணை, அறவாழ்க்கை அவாவின்மை—ஆகிய நல்லொழுக்கங்களே இன்பவழியென உபதேசித்தார். அசோகன் புத்த மதத்தை உலகளாவப் பரப்பினான். அவனுக்குப் பிறகு, அம்மதத்தில் மாசு படர்ந்தது; வேற்றுமை யெழுந்தது; வீண்வாதம் வலுத்தது. பாரத தருமச் சுடரில் புயல் வீசியது; பாரத தருமம் கடவுளை உண்மை - அறிவு - இன்பம் என்னும்; உயிர்க்குயிராகக் காணும்; உலகெல்லாம் அவன் கோயிலாகக் காணும்; அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளடைவே வாழ்வின் நோக்கமென்னும். இவ்வுண்மைகள் மறைந்தன; நாத்திகம் வலுத்தது; 'வாழ்வு அரை நொடி துன்பக்கனவு, அதைத் தப்பியோடுவதே இன்பவழி; இன்பதுன்பங்கள் வினையின் விளைவாம்; அவ்வினை விளைவிற்குக் கடவுள் வேண்டுவதில்லை' என்ற கொள்கைகள் கூச்சலிட்டு வாதாடின; வேத தருமத்தைப் பழித்தன; கற்பனைக் கதைகளை முழக்கின; பேதை மாந்தர் மதியைச் சூதாடின. உலக வெறுப்பும், பெண் வெறுப்பும், பெண்ணடிமையும், வாழ்வின்

வெறுப்பும் பெருகி, திரர் கூட்டமாகிய பாரத சமுதாயத்தை மெலிவித்தன. பாரத மகரிஷிகள் வகுத்த நெறிமுறை நியமங்கள் செல்லாக் காசுகளாயின. மீண்டும் வேத வொளியைத் தூண்டவேண்டும். வறட்டுத்துறவில்லாமல் வாழ்வை வளப்படுத்த வேண்டும். இளமையிற் கல்வி,வாலிபத்திற் காதல்,முதுமையில் முனிவாழ்வு, இறுதியில் யோகசித்தி இவற்றால் மக்கள் வாழ்வின் பயனைப் பெறவேண்டும்.நிறைமுறையான இல்லறமும், ஒளி பொருந்திய ரிஷி வாழ்க்கையும் நாட்டில் வளரவேண்டும். அறிவு, ஆற்றல், வீரம், தொழில், செல்வம், தவக்கனல்—இவை நிறைந்த புதிய பாரத சமுதாயத்தை உண்டாக்க வேண்டும்; இக்காரியத்திற்கே காளிதாஸன் வரகவியாகத் தோன்றினான்.

3. கால ஆராய்ச்சி

எப்போது? ஆராய்ச்சி மூளைகள் பலவிதம். சிலர் காளிதாஸன் 11-வது நூற்றாண்டில் இருந்தான் என்பர். "காளிதாஸன் யவனரைப்பற்றிச் சொல்லுகிறான்; 'யவனர்' என்றால் துருக்கர்; துருக்க இந்தியாவிலே அவன் இருந்தான்" என்பர். இது ஆதார மற்றது; ஏனெனில், யவனர் என்றால் அயோனியரான கிரேக்கரையே குறிக்கும். சிக்கந்தர் காலம்முதல் இந்தியாவில் யவனர் இருந்தனர். 9-வது நூற்றாண்டில், விக்ரமோர்வசியம், கன்னடத்தில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. 8-வது நூற்றாண்டில் எழுதப் பெற்ற அமரம் விரிவுரையில் காளிதாஸன் மேற்கோள் உள்

ளது; 8-வது நூற்றாண்டில் வசித்த குமரிலபட்டர், தந்திரவார்த்திகம் என்னும் தமது நூலில் காளிதாஸன் வாக்கை எடுத்தாளுகிறார். கி. பி. 650-ல் வசித்த பாணகவி, தனது ஹர்ஷ சரித்திரத்தில் காளிதாஸனைக் குறிக்கிறான். 6-வது நூற்றாண்டிலிருந்த தண்டிகவி காளிதாஸனைப் புகழ்கிறான். ஆகையால் காளிதாஸன் 6-வது நூற்றாண்டிற்கு முன்பேஇருந்திருக்கவேண்டும். காளிதாஸனை, போஜராஜன் போற்றிய நவமணிப் புலவரில் ஒருவன் என்பர்; போஜ - காளிதாஸக் கதைகளும் பலவுண்டு. போஜன் 11-வது நூற்றாண்டில் உஜ்ஜினியில் ஆண்டான்; அவனே ஒரு புலவன்; அவன், 5-வது நூற்றாண்டிலிருந்த பாமஹன் என்னும் நாவலன் வாக்கைத் தனது நூலில் எடுத்தாளுகிறான்; பாமஹன் காளிதாஸன் வாக்கை எடுத்தாளுகிறான். ஆதலால் காளிதாஸன் 5-வது நூற்றாண்டிற்கு முன்பே இருந்திருக்க வேண்டும். ஸர் வில்லியம் ஜோன்ஸ், காளிதாஸன் கி. மு. 1-வது நூற்றாண்டில் இருந்ததாக விளக்குகிறார்; இவ்வுண்மையைத் தற்போது பல புலவர் போற்றுகின்றனர். மயூரவம்சத்தை நிலைநாட்டிய புஷ்பமித்திரன்மகன் அக்கினிமித்திரன் ஆவன். "அக்கினிமித்திரன் காவலனாயிருக்கும்போது, பிரஜைகளின் விருப்பம் எதுவும் நிறைவேறும்" என்று மாளவிகாக்னி மித்திரமென்னும் நாடகமுடிவுரையிற் காண்கிறோம். ஆதலால் காளிதாஸன் அக்னிமித்திரனுடைய சமஸ்தான வித்வான் என்கின்றனர். "காளிதாஸன்" என்ற பெயர் காளியுபாஸனையால் அவனுக்குக் கிடைத்த தென்பர்; அது இயற்பெயர் என்பர் சிலர். காளிதாஸன் விக்கிர

மாதித்தியன் காலத்திலே யிருந்தான் என்பர் பலர் ; 'விக்ரம ஆதித்யன் (வீரசூரியன்) என்பது ஒரு பட்டப் பெயர். அப்பெயரால் பண்டை மன்னர் பலர் இருந்தனர். கி. மு. 53-ல் ஒரு விக்கிரமாதித்யன் இருந்தான்; அவன் சமஸ்தான வித்வானகவே காளிதாஸன் செழித்தான்' என்பர் சிலர். 'காளிதாஸன் குப்தமன்னர் காலத்தில் (கி. பி. 300—650) இருந்தான். முதலாவது சந்திரகுப்தன், குமாரகுப்தன், ஸ்கந்தகுப்தன் - ஆகிய மன்னரில் ஒருவர் காலத்திலே காளிதாஸன் இருந்தான். சந்திரகுப்தனும், ஸ்கந்தகுப்தனும் "விக்கிரமாதித்யன்" என்னும் பட்டம் பூண்டனர். மேகதூதம் கி. பி. 413-ல் சந்திரகுப்த - விக்கிரமாதித்யன் ஆளும்போது பாடப் பெற்றது. காளிதாஸன் சுமார் 30 ஆண்டுகள் இலக்கியப் பணிபுரிந்தான்' என்பர் சிலர்.

அக்கினிமித்திரன் கி.மு. முதலாவது நூற்றூண்டில் ஆண்டான். அக்காலம் வடமொழி, பாலி இரண்டும் வழங்கின. சமுஸ்கிரதத்தில் கிராமியப் பேச்சிற்குப் பிராகிருதம் என்பர் ; இதையே அக்காலப் பெண்களும் தாழ்ந்தோரும் பேசினர் என்பது காளிதாஸ நாடகங்களினின்று விளங்கும். கி. மு. 300-ல் பாணினி இலக்கணம் எழுதினர் ; அதைத் தழுவியே காளிதாஸன் கவியெழுதினன்; காளிதாஸன் நடை பிற்காலப் புலவர் நடை போன்று வெறும் சொல்வீச்சுகளும் கற்பனைச் சாயங்களும் இன்றி, சங்கப்புலவர் நடைபோன்று இயல்பாய், செம்பாகமாயுள்ளது. புத்த சரித்திரம் எழுதிய அஸ்வகோஷன் காளிதாஸனுடைய நடையைப் பின்பற்றியிருக்கிறன். ஒரு சினயாத்திரி, கி. மு. 60-ல், புத்த

சரித்திரத்தை நகல் எடுத்துச் சென்றான். ஆதலால் காளிதாஸன், அசுவ கோஷனுக்கு முன்பே, கி. மு. முதலாவது நூற்றாண்டில் இருந்திருக்கிறான் எனத் தெரியவருகிறது. கி. மு. 300-க்கு முன்னில்லை - கி. மு. 100-க்குப் பின்னில்லை-இரண்டிற்கும் இடையே காளிதாஸன் இருந்திருக்கிறான் என்னலாம். அவன் காலத்திற் பல புலவர் மணிகள் இருந்தனர்; பல துறை ஆராய்ச்சிகள் நடந்தன. சுதந்திரபாரதம் கலையிலும், தொழிலிலும், அறத்திலும், வீரத்திலும் சிறந்து விளங்கியது. எலிஜபெத்தின் இங்கிலாந்து, லூயி பதினான்கின் பிரான்ஸு, விக்கிரமாதித்தியன் வடநாடு, நெடுஞ்செழியன் - கரிகாலன் - செங்குட்டுவன் இவர்கள் ஆண்ட தமிழகம், கிருஷ்ண தேவராயர் ஆந்திரம் - இவையெல்லாம் உலகிற்குப் பல புலவர் மணிகளை அளித்தன. அதுபோலவே அக்கினிமித்திரன் ஆண்ட பாரதநாடும் சிறந்த புலவரைப் படைத்தது; அப்புலவர்க்கரசன் மஹாகவி காளிதாஸனுவன்.

4. வரலாறு

கம்பன், காளிதாஸன் போன்ற மஹாகவிகளின் வரலாறு நமக்கு நன்கு விளங்கவில்லை; பண்டை இந்தியா, புலவர் வாக்கைச் சேமித்ததே யொழிய வரலாற்றைச் சேகரிக்கவில்லை; பின்னால் எழுந்த கட்டுக் கதைகள் ஆதாரமற்றவையாம்: " ஒரே ஒரு ராசா மகளாம்; அவள் மெத்தப் படித்தவளாம். தனது கேள்விக்கு விடையளிக்கும் புலவனையே மணப்பதாகச் சப

தம் செய்தாளாம்; பல புலவரைத் தோற்கடித்தாளாம்; புலவருக்குக் கோபம் வந்ததாம்; ஒரு மாட்டிடையனை வித்துவான் வேடம் போட்டு அரசன் மகள் முன்னே நிறுத்தினர்களாம். 'வாயைத் திறவாதே; இன்ன மாதிரி விரலைக் காட்டு' என்று அவனுக்குச் சொல்லி வைத்திருந்தார்களாம்; இராசா மகள் ஒரு விரலைக்காட்டினளாம்; இடையன் இரண்டு விரலைக் காட்டினனாம். பதில் பொருத்தமா யிருந்ததாம்; கலியாணம் நடந்ததாம்; பள்ளியறை மெத்தையில் இடையன் சொகுசாகப் படுத்துறங்கி ஆட்டுக் கனவு கண்டானாம். அப்போது ராசாத்தி, சந்தனம் பூசினளாம். 'சீ சீ ஆடு மூ........பேயுது' என்றானாம்; அவள் வெற்றிலை பாக்கு ஊட்டினளாம். 'சி சி ஆட்டுப் புளுக்கை' என்று துப்பினனாம். அரசகுமாரி திகைத்து, கணவனை யெழுப்பி உண்மையைக் கேட்டாளாம். அவன், "நான் இடையன், எழுத்தறியேன்; புலவர்கள் இந்த வேலை செய்தனர்" என்றானாம். கட்டிக்கொண்ட பிறகு என்ன செய்வது? கணவனுக்குப் புலமை வர ஒரு யுக்தி சொன்னளாம் அரசன் மகள்: "இது நள்ளிரவு; காளிகோயிலுக்குப்போய்க் கதவை மூடிக்கொண்டு உள்ளே இரும்; அப்போது வெளியே சென்றிருக்கும் காளி வருவாள்; கதவைத் தட்டுவாள்; வரம் தந்தாலேதான் திறப்பேன் என்று பிடிவாதமாகச் சொல்லும். கவிதை வரமே கேளும்; தருவாள்" என்றாளாம். அவ்வாறே செய்து, காளிதாஸன் வரகவியாகி, சியாமளா தண்டகம் பாடி அம்பிகையைத் துதித்தானாம். (சியாமளா தண்டகம் பாடியது வேறொரு கவி என்று இப்போது ஆராய்ந்

திருக்கின்றனர்). அந்த இடையனே காளிதாஸனும்; அவன் போஜராஜனுடைய சமஸ்தான வித்துவானும்; அவன் சிவ பக்தனும்; ஒரு சிவராத்திரியின்போது, போஜராஜன் காளிதாசனைத் தாசி வீட்டிலே அடைத்துப் போட்டானும். பெண்ணின் மார்பையே சிவலிங்கமாகக் கருதி வழிபட்டானும் காளிதாஸன். ...." இவ்வாறு கட்டுக்கதைகளுக்குப் பஞ்சமில்லை. கம்பன், காளிதாஸன், ஷேக்ஸ்பியர், ஹோமர்போன்ற மஹா கவிகளின் உடல் வரலாறு நமக்குத் தெரியவில்லை. பேகனே ஷேக்ஸ்பியர் என்ற வாதங்களும் கிளம்புகின்றன. இத்தகைய மஹான்கள் தாமே தமது வரலாறுகளை எழுதி வைத்திருந்தால் உலகிற்குப் பெரும் பயனுகும். காற்றும், கதிரும், மதியும், மலரும், தமது கடமையைச் செய்து மௌன விடை பெற்றுக்கொள்ளுகின்றன. மலர், அழகும் மணமும் அளித்துப் புன்னகையை மண்மகள் மடியில் உதிர்த்து, அவ்வாறே ஐக்கியத் துயில்கொள்ளுகிறது. கவிமலர், சொல்லழகும் பொருள்தேனும் அருள் மணமும் கொண்டு மனித வாழ்வை இன்புறுத்துகிறது. இதழ்கள் நிலமகளுக்கே அருச்சனையாகின்றன; மலரிற் பழுத்த அருங்கலைக்கனி என்றும் வற்றாச் சுவையளித்து வாழுகிறது. கவிஞர் வடிவு கவிதை, வாழ்வு கவிதை, வரலாறும் கவிதையேயாம். கவிதையே காளிதாஸன்; அதுவே அவன் வரலாறும் என்போம்.

காளிதாஸன் உஜ்ஜினியில் அந்தணர் குலத்தில் பிறந்தவன்; 'அவன் அக்கினிமித்திரன் ஸமஸ்தான வித்துவானுக விதிசா நகரத்தில் இருந்தான்' என்று ஒரு வங்கப்

புலவர் ஆராய்கிறார். காளிதாஸன் சிவசக்தியை உபாசித்துக் கவி வரம் பெற்றவன். இவ்வாறு தெய்வ சக்தியுபாசனையாலே கவி வரம் பெற்றவர் இன்றும் இருக்கிறார்கள். அருளாவேசத்தாலேதான் சிரஞ்ஜீவிக் கவிகள் மலரும்; தீவிரமான தெய்வ பக்தியினாலும், தவயோக சாதனங்களாலும், விசுத்த சக்கரம் மலர்ந்த புலவருக்கே அருள் வாக்குப் பிறக்கும். அருட்சோதி வள்ளலார் அவ்வாறு அருள் வாக்குப் பெற்றவர். காளிதாஸன் அந்தணன், கிரஹஸ்தன், உஜ்ஜினியிலுள்ள மஹாகாலனான சிவனை அன்பு செய்தவன் என ஊகிக்கின்றனர். காளிதாஸன், சக்தி, சிவம் இரண்டையும் உபாசித்தவனாவன். சிவனை வழுத்தியே காளிதாஸன் தனது நூல்களைத் தொடங்குகிறான். சொல்லும் பொருளும் போலக் கூடிய பார்வதி பரமேசுவரரைத் தொழுதே இரகுவம்சத்தைத் தொடங்குகிறான். சிவனையே பொருளாகக் கொண்டு குமாரசம்பவத்தை ஆர்வமுடன் பாடுகிறான்; அஷ்டமூர்த்தங்களை உடலாகக்கொண்ட பரமேசனை வணங்கியே சகுந்தலக் காட்சியைத் தொடங்குகிறான். அதன் முடிவில், "மன்னர் மன்னுயிர்க் கினிதுசெய்க! புலவர் வாணி பெருமை பெறுக! தனது பரந்துவிரிந்த சக்தியால் நீலகண்டன் நான் மீண்டும் பிறவாதருளுக!" என்றே பரதவாக்கியம் கூறுகிறான். "உறுதியான பக்தி யோகிகளுக்கு எளிதெய்தும் சிவபெருமான் பேரின்பமருளுக!" என்றே விக்கிரமோர்வசியத்தைத் தொடங்குகிறான். மங்கைபாகனை வழுத்தியே மாளவிகாக்னிமித்திரத்தைத் தொடங்குகிறான். மேகதூதத்தில் உஜ்ஜினிமகா

காலனே வர்ணிக்கிருன். இரகுவம்சத்தில் "ஆதியில் உல கைப் படைத்தவனே" என்று விஷ்ணுவைப் போற்று கிருன். "கேவலாத்மனே, உலகம் படைத்தவனே, பிறப் பற்றவனே!" என்று பிரம்மாவை வணங்குகிருன்; கம்பன் சமரஸ வைணவன்; காளிதாசன் சமரஸச் சைவனுவன்.

5. வாக்கு

காளிதாஸன் பன்னூற் புலவன்; பாணினி வியா கரணத்தை நன்ருகக் கற்றவன்; சித்தாந்த நூல்களேப் பார்த்தவன்; பலதுறை ஆராய்ச்சியுள்ளவன்; வேத வேதாந்த நூல்களே நன்ருக ஆராய்ந்தவன்; இராமா யணம், பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் ஆகிய இலக்கியங்களே ஆழ்ந்து கற்றவன்; மனுதரும சாஸ்தி ரத்தை அறிந்தவன்; நாட்டிய சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவன்; வைத்தியம், சோதிடம், தாவரம், பூகோளம் முதலிய சாத்திரங்களே அறிந்தவன்; அரசியல் நிபுணன்; நாற்புறமும் சுற்றிப்பார்த்து உலகியல்பையும், மக்க ளியல்பையும் நன்கறிந்தவன்; குழந்தைகளின் இயல்பை யறிந்தவன்; கைலாயம் முதல் கன்னியாகுமரி வரை, நமது புண்ணிய நாட்டைச் சுற்றிப் பார்த்திருக்கிருன் மஹாகவி. வங்காளம், பீஹார், ஒரிஸா, கூர்ஜரம், காஸ்மீரம், இமயமலேப் பிரதேசம் இவற்றில் நமது கவி சுற்றி அனுபவம் பெற்றிருக்கிருன். காளிதாஸன், தமிழ் நாட்டிற்கும் வந்திருக்கிருன். அவன் இரகுவம்ஸத்தில் பாண்டியனே வர்ணிக்கிருன்: இந்துமதியின் சுயம்வரம்

நடக்கிறது ; அவள் தோழி ஒவ்வொரு தேசமன்னரையும் காட்டி வர்ணிக்கிறாள். அவள் பாண்டியனை இவ்வாறு போற்றுகிறாள் : "சகோரம் போல் விழியுடைய இந்துமதியே, இதோ பார் ; இவன் பாண்டிய மன்னன் ; இவன் புஜத்தில் நீண்ட முத்துமாலை தொங்குகிறது ; இவன் மேனி ஹரி சந்தனம் பூசப்பெற்றுள்ளது ; காலைச் செங்கதிர் பரவி அருவிகள் ஓடும் மலையரசு மாதிரி இவன் பொலிகிறான் ; இவ்வரசன் பெரும் புகழ் பெற்ற மரபைச் சேர்ந்தவன் ; இவன் உன்னை மணந்தால் உலகம் போலே நீ அவனுக்கு முதன்மையாவாய்; இரத்தினங்கள் பொதிந்த கடல் சூழ்ந்த தென்னாட்டிற்கு நீ அரசியாவாய்!" காளிதாஸன் மாந்தர் வாழ்வின் அகப்புறத் துறைகளில் தேர்ச்சி பெற்றிருக்கிறான் ; அவன் வாழ்க்கைச் சித்திரங்களை அரங்கேற்றுவதில் ஷேக்ஸ்பியர், நடைத்தெளிவில் வால்மீகி போன்றவன். காளிதாஸன் வாக்கு நமது பழைய பாரத நாட்டின் சொல்லோவியமேயாகும். அதில் ரிஷி ஆசிரமங்கள் துலங்குகின்றன; அதில் ஏறும் ஓமத்தீயில் பாரதசக்தி கொழுந்தேறுகிறது ; பெண்மையின் கற்பனல் வீசுகிறது ; பெண்களும் கல்வியில் தேர்ந்து, பிரமசரியம் பூண்டு ரிஷி ஆசிரமங்களை அலங்கரிக்கின்றனர் ; வறட்டுத் துறவின்றி ரிஷிகள் தங்கள் பத்தினிகளுடன் தவம் புரிந்து, மாணவரைப் பயிற்றி, நாட்டில் அறிவையும், தவவொளியையும், தெய்வத் திருவையும் பரப்புகின்றனர். மன்னர் மணிமுடியின் மீது தரும தேவதையின் திருவடிகள் காண்கின்றன. பொதுஜனங்கள் நீதி மன்னனுக்கும், நேர்மையான மனசாட்சிக்கும்

பணிந்து நடக்கின்றனர். அந்தணர், வீரர், வாணிபர், தொழிலாளர், பிரமசாரிகள், இல்லறத்தார், வானப் பிரஸ்தர், முனிவர் - அனைவரும், தத்தமக்குரிய அற வினையைக் காத்துத் தமது நிலையினின்று, ஒற்றுமையாக நாடொப்பன செய்து, முரணின்றி வாழுகின்றனர். காளிதாஸக் கவிப் பொழிலில் காதற்குயில்கள் கொஞ்சிக் குலாவுகின்றன. நாண் மலர்த்தேனுண்டு ஞான வண்டுகள் பாடுகின்றன. அழகின் புன்னகை வாழ்வுக் கொடியில் மலர்ந்து சிவமணங் கமழ்கின்றது. இயற்கைப் பொலிவு நமது மனத்தில் இன்பவெறி யேற்றுகிறது. காளிதாஸன் கவிகளைப் படிக்கும்போது, சுதந்திர பாரதம் நம்முன் விளங்குகிறது ; அதில் குருகுலங்கள் துலங்குகின்றன ; அதினின்று தீர வாலிபர் வருகின்றனர் ; அவர் நாட்டை எழில் பெற, தொழில் பெற வளர்க்கின்றனர். கல்வி, தொழில், கலை, அரசியல், பயிர், வாணிபம், இல்லறம், துறவறம் அனைத்திலும் நாடு செழித்தோங்குகிறது.

6. நூற்சுவை

காளிதாஸன் “ கவிகுல சூடாமணி, சகல கவி சிரோமணி ” எனப் புகழ் பெற்று விளங்குகிறான். “ காளிதாஸன் உவமை ” என்பது பழமொழியாம். ஸர் வில்லியம் ஜோன்ஸ், மோனியர் வில்லியம்ஸ், மாக்ஸ் முல்லர் போன்ற மேனாட்டறிஞர், காளிதாஸனை “ இந்திய ஷேக்ஸ்பியர் என்று போற்றுகின்றனர். மில்தனும் ஷேக்ஸ்பியரும், ஸொஃபோக்கிளியனும், விர்கிலும்,

காளிதாஸன் நடையில் விளங்குகின்றனர். பவபூதியின் நடை, காட்டாற்று வெள்ளம் கரை புரண்டோடுவது போன்றது; அதில் பாறைகள் தகர்ந்தோடுவது போன்ற சொல்லடுக்குகளைக் காண்கிறோம். காளிதாஸன் கவி, உள்ளத்தினின்றும் இயல்பாகப் பொங்கியெழுந்து இன்னிசையுடன் ஓடிவரும் காவிய கங்கை என்று நன்கறிகிறோம். எளிய நடை, அரிய உவமையணிகள், பொருளுக்கேற்ற சொற்சுருக்கம், அதில் ஒரு வார்த்தையை எடுத்துவிட்டு இன்னொரு வார்த்தையைப் பொருத்த முடியாது; நகாசு செய்த பொன்னணியில் துலங்கும் இரத்தினங்கள் போன்றது காளிதாஸ வாக்கின் பொருட்சுவை. காளிதாஸன் கவிகளில், யாப்பிலக்கணப் பொருத்தத்துடன், ஒவ்வொரு சொல்லிலும் விசேஷம் உண்டு.

கம்பனைப்போலக் காளிதாஸனும் காதலின்பக் கவியாவன். "காதலால் வாழ்வு" என்பதைக் காளிதாஸன் ஒவ்வொரு நூலிலும் விளக்குகிறான். நிறைமுறையான காதலைச் சுற்றியே அவன் மாசற்ற தேசவாழ்வைச் சித்தரிக்கிறான். காளிதாஸன் கவிவாணி சிற்பிக்கும் பெண்மை, காதலும், கற்பும், அழகும், அறிவும், தவமும் நிறைந்த இன்பக் கனலாக நம்முன் காட்சி யளிக்கிறது. சீதை, பார்வதி, இந்துமதி, சகுந்தலை முதலிய தெய்விகப் பெண்மணிகள் இப்புண்ணிய பூமியைப் பெருமை செய்கின்றனர். பெண்மையின் பெருமையைப் போலவே காளிதாஸன், பரதன், ஆயு, ரகு, குமரன் முதலிய வீரமணிப் புதல்வரை நம் முன் விளக்குகிறான்.

7. நூல்கள்

காளிதாஸன் நான்கு காவியங்களையும், மூன்று நாடகங்களையும் இயற்றியிருக்கிறான். இரகுவம்ஸம், குமார சம்பவம், கிரதார்ஜுனீயம், சிசுபாலவதம், நைஷதிய சரிதம் - ஆகிய ஐந்தும் பஞ்ச காவியங்கள் எனப் புகழ் பெற்றவை. இவற்றில் இரகுவம்சம், குமார சம்பவம் ஆகிய இரண்டும் காளிதாஸன் இயற்றியவை; இவை புலவர் உச்சிமேற் கொண்டு போற்றும் மஹா காவியங்களாம். சப்தமும் நிகண்டும் படித்ததும், ஒவ்வொரு வடமொழி மாணவனும் இரகுவம்ஸம் படிப்பான். இரகுவம்ஸம் பத்தொன்பது சருக்கங்களாகப் பிரிக்கப்பெற்றது ; 21 வகைச் சந்தங்களுடன் கூடியது; 1569 சுலோகங்களைக் கொண்ட மஹாகாவியம். அது திலீபன், ரகு, அஜன், தசரதன், இராமன், இலவன், குசன் முதலிய 21 இரகுவம்ச மன்னர் வரலாற்றைச் சொல்லும். குமாரசம்பவம் 17 சருக்கங்களாக வகுக்கப் பெற்ற 1000 சுலோகங்களைக் கொண்டது. அது சிவன் தவம், பார்வதி தவம், சிவபார்வதி திருமணம், குமரன் பிறப்பு, தாரகாசுரப்போர் ஆகிய ஐந்தையும் பொருளாகக் கொண்டது. இக்கதை சிவபுராணத்தினின் றெடுத்தாளப் பெற்றது. இக்காவியத்தில் சிவ - பார்வதி கலியாணமும் குமரன் பிறப்பும் அடங்கிய எட்டுச் சருக்கங்களே காளிதாஸன் வாக்கெனப் புலவர் கொண்டாடுவர். ஆனால் தாருகப் போர் முடிய, 17 சருக்கங்களாலேயே காவியம் நிறைவுறுகிறது. இக்காவியம் சிவ - சக்தி அல்லது புருஷப் பிரகிருதி விளக்கத்தை வர்ணிக்கும் புண்ணிய நூலாகும். மேகதூதம் பூர்வம், உத்தரம் என்று இரண்டு

பகுதிகளாகப் பிரித்த 121 செய்யுட்களைக் கொண்டது. இயற்கை வர்ணனையிலும், கலைச்சுவையிலும் இச்சிறு காவியம் மிகச்சிறந்தது. ருது ஸம்ஹாரம் ஆறு பருவ காலங்களை, ஆறு சருக்கங்களாக வர்ணிக்கும் 144 செய்யுட்களைக் கொண்டது. இது காளிதாஸன் இளமையில் எழுதியது; வர்ணனை, கற்பனைகளிற் சிறந்தது. பெரிய வடமொழிப் புலவர் மூவரும் மூன்று மூன்று நாடகங்களை இயற்றினர்; ஹர்ஷன் இரத்தினுவளி, பிரியதர்சிகா, நாகானந்தம் ஆகிய மூன்றையும் இயற்றினுன். பவபூதி உத்தரராம சரித்திரம், மலதிமாதவம், மஹாவிர சரித்திரம் ஆகிய மூன்றையும் இயற்றினுன். காளிதாஸன், சகுந்தலம், விக்ரமோர்வசி, மாளவிகாக்னிமித்ரம் ஆகிய மூன்றையும் இயற்றினுன். சகுந்தலமும், விக்ரமோர்வசியும் இணையற்ற காதல் நாடகங்கள். இந்த எழு நூல்களே காளிதாஸன் பெயரால் புகழ்பெற்றவை. இவற்றைத்தவிர ச்ருதபோதம், சிரிங்கார திலகம், ரஸாஷ்டகம், ஸேதுகாவியம், கற்பூரமஞ்சரி, புஷ்பபாண விலாசம், நவரத்னமாலை ஆகிய நூல்களையும் காளிதாஸன் வாக்கென்பர். சியாமளா தண்டகமும் காளிதாஸன் வாக்கென்பர். காளிதாஸன் நூல்களுக்கு உரையெழுதினோர் பதினேரு புலவராவர். அவர்களுள் கி. பி. 14-வது நூற்றுண்டிலிருந்த மல்லிநாதசூரியே மிகச்சிறந்த உரையாசிரியர் என்று புலவர் மதிப்பர்.

8. கவியின் புகழ்

இன்று உலகமெல்லாம் பாரதக்கலையைப் போற்றுகிறது; வேதம், உபநிடதம், கீதை, இராமாயணம், பாரதம் முதலிய புண்ணிய நூல்களை வெண்ணுட்டறிஞர்

கருத்தூன்றிக் கற்கின்றனர்; இவற்றிற்கெல்லாம் காரணம் காளிதாஸனேயாவன். கரும்பைச் சுவைத்தவர், கற்கண்டை விரும்பினர் ; காளிதாஸனைச் சுவைத்தவர், ஆரியக்கலை யின்பத்தில் ஆழ்ந்தனர். கி. பி. 1789-ல் ஸர் வில்லியம் ஜோன்ஸ், சகுந்தலத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார் ; அது எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் வெளிவந்தது. "அழகு! இன்பம்! அற்புதம்! இவனே கவியரசு! இவனே இந்திய ஷேக்ஸ்பியர் ! இதுவன்றோ காவியம் ! இதுவன்றோ நாடகம் ! என்று அறிஞரெல்லாம் அதை ஒருங்கே மெச்சினர்! ஜர்மன் கவியரசர் கேத்தே (Goethe) ஆவர். அவர் சகுந்தலத்தைப் படித்துப் பரவசங்கொண்டார் : "இளமையின் மலர்கள், முதுமையின் கனிகள் - இவை வேண்டுமா ? பரவசங்கொண்டு, உள்ளஞ்சிலிர்த்து, ஆன்மா நிறைவெய்தும் இன்பங்களெல்லாம் ஒருங்கே நுகர வேண்டுமா ? இம்மை - மறுமை இன்பத்தை ஒரே பெயரில் அடக்க வேண்டுமா ? சகுந்தலம் - இதுவே அதன் பெயர் ; பிறவெல்லாம் அதில் அடக்கம்" என்று ஜெர்மானியக் கவியரசர் நமது பாரதக்கவியரசரைப் போற்றியே ஃபாஸ்ட் (Faust) என்னும் தமது நாடகமணியைத் தொடங்குகிறார். மோனியர் வில்லியம்ஸ் விக்ரமோர்வசியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். வில்ஸன் மேகதூதத்தை மொழிபெயர்த்தார். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய வெண்ணாட்டு மொழிகளிலெல்லாம் காளிதாஸ காவியங்கள் விளங்குகின்றன. "காளிதாஸன் அரிய ஆரியக்கவி; இனிய நாடகாசிரியன்; இவன் இயற்றிய சகுந்தலமும் விக்ரமோர்வசியும் உலகிசை பெற்

றன" என்று வெண்ணாட்டகராதிகள் நமது கவிமன்னனைப் புகழ்கின்றன. "கவிசக்ரசாரு சூடாமணி" என்று காளிதாஸனைப் பரம்பரையாக நமது நாட்டறிஞர் கொண்டாடுகின்றனர்.

வால்மீகி, வியாசர், காளிதாஸன், கம்பன், துளஸிதாஸர், வள்ளுவர் - இந்த ஐவரும் நமது பாரதக் கலையின், பாரத நாகரிகத்தின், ஐந்துயிர்கள் ஆவர். இவர் வாக்கே பாரத சரித்திரம். இவர்களே பாரத மணி விளக்குகள். இந்த ஐவர் வாக்கும் உள்ளமட்டும் பாரதக் கலையும், அதன் புண்ணியப்புகழும் நிலவி யோங்கும். பழைய ரோம கிரேக்க சாம்ராஜ்யங்களும், மயூர, குப்த, சோழ, பாண்டிய சாம்ராஜ்யங்களும் காலவெள்ளத்தில் கரைந்து மறைந்தன. விர்கிலும், ஹோமரும், காளிதாஸனும், கம்பனும், வள்ளுவரும் இன்னும் நாத வடிவில் நமது உள்ளத்தில் புதப்புது இன்பமளித்து வாழுகின்றனர். புவியரசு மங்கும்; கவியரசு மேன் மேலும் பொங்கும். அத்தகைய காவிய சாம்ராஜ்யத்தைப் படைத்து, கிழக்கையும் மேற்கையும் ஆளும் காளிதாஸன் எழுப்பிய கலைக்கோயிற் புகுவோம். கலைவாணியருளுக!

உ. திலீபன்

காப்பு

சொல்லும் பொருளும் போலச் சேர்ந்த, உலகத் தாய் - தந்தையரான, பார்வதி - பரமேசுவரரை, சொற் பொருள் அறிவிற்காக வணங்குகிறேன்.

அவையடக்கம்

இரவியிற் போந்த மரபெங்கே? எனது சிற்றறி வெங்கே? பரிசலைக்கொண்டு விரிகடல் கடப்பவனைப் போன்றேன். நான் மந்தன், கவிப்புகழ் விரும்பி, நெட் டையன் அடையும் கனியை எட்டக் கையுயர்த்தும் குட் டையனைப்போல நகைப்பிற் கிடமாகிறேன். ஆயினும், இந்த இரகுவம்சத்தைப் பற்றிப் பூர்வகவிகள் இராமாய ணாதி கிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள். வச்சிரம் துளைத்த மணியில் நூல் நுழைவதுபோல, அப் பூர்வகவி கள் சொல்வழியே என் கவியை முடிக்கிறேன். அதுவே என்கதி. எனது சொல்வன்மை சிறிதேயாம்; ஆயினும் இரகு மன்னர் குணங்கள் என் செவிக்கெட்டியுள்ளன. அதனால் சபலமுற்று இரகுவம்சத்தைச் சொல்லலா னேன். சத், அஸத் பான்மை யறிந்த புலவர் இதைக் கேட்டற்குரியர். அவரே இதன் குறைகுணங்களை அறி வர். தீயிலிட்டாலே தங்கம் சுத்தமா கலப்பா என்பது விளங்கும்.

இரகு மன்னர் பெருமை

இரகு மன்னர் பிறப்பிலே தூயர்; எடுத்த வினையைப் பயனுற முடிப்பவர்; கடல்வரை உலகிற்கிறைவர்; விண்ணொட்டத் தேர் நடத்துவோர்; விதிப்படி வேட்டமுத்தி யுடையார்; இரப்போர்க்கு வேண்டுமட்டும் ஈவோர்; குற்றத்திற்கேற்றபடி தண்டிப்போர்; காலத்திற்கேற்ற விழிப்புடையோர்; ஈவதற்கே பொருள் சேர்ப்போர்; உண்மைக்காகச் சொற்சுருக்க முடையோர்; புகழோங்க வெற்றி பெறுவோர்; சந்ததி விளங்கவே இல்லறம் பூண்டோர்; இளமையிற் கற்பவர்; வாலிபத்தில் சுகபோகிகள்; முதுமையில் முனித்தொழிலோர்; இறுதியில் யோகத்தால் உடல் பிரிவோர்.

திலீபன்

இரவி மகனான வைவஸ்வதன் என்றோர் மனு இருந்தான்; அவன் அறிஞர் புகழத்தக்கவன்; வேதங்களுக்குப் பிரணவம்போலே பூபாலர் தலைவனாயிருந்தான். அவன் மரபில் மிகத் தூயனான திலீபன் என்னும் ராஜேந்த்ர, பாற்கடலிற் சந்திரன்போலே பிறந்தான். அவன் அகன்ற மார்பன், காளைத் தோளன், சாலமரம் போல நெடியன், நீள்கையன், தனது தொழிலுக்கேற்ப க்ஷாத்ர தர்மத்தின் இருப்பிடம்போன்ற உடலோன். எல்லாப் பூதங்களைக்காட்டிலும் வலிமையும், அனைத்திலும் மிக்க எழிலும், அனைவரினும் ஓங்கிய உன்னதியும் கொண்ட சரிரத்தால்,அவன் மேருவைப்போலே உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான். அவன் உருவிற்

கேற்ற அறிவும், அறிவிற்கேற்ற நூற்பயிற்சியும், பயிற்சிக்கேற்ற முயற்சியும், முயற்சிக்கேற்ற பலசித்தியும் உடையவன். அரசன் குணங்கள் வெருட்டும் இனிமைகளாம் (பீமகாந்தி) ; ஜந்துக்களும் இரத்தினங்களும் உறையும் கடல்போலே அவன் ஆர்வலர் அணுக அஞ்சும் வலிமையும், புகழும், பெருமையும் கொண்டவன்; அணுகினோர்க்கு ஈகை அன்பு இவற்றால்இனியவனவன். சரியான பாகன் நடத்தும் தேர் நெறிவழுவாது ; சிக்ஷகனான திலீபன் சக்கரத் தொழிலின் கீழுள்ள குடிகள் ஒரு கோட்டளவுகூடத் தாண்டாமல் மனுநெறி பிடித்தொழுகுவர். ஆயிரம் மடங்கு வழங்கவே கடல்நீரை இரவி முகக்கிறது ; அதுபோல, மக்கள் செழிக்கவே அவர்களிடம் மன்னன் வரியேற்றான். சேனை அவனுக்கு உபகரணமேயாம் ; பரந்த நூலறிவு, வில்லேறிய நாண்-இவ்விரண்டே அவனுக்கு அர்த்த சாதனங்களாயின. முகச்சாடையினாற்கூடப் பிறர் அறிய முடியாமல் அவனது இரகசிய ஆலோசனைகள் மறைவாயிருக்கும். பூர்வ ஸம்ஸ்காரங்களைப் போலப் பலித்தபிறகே அவன் முயற்சிகளை ஊகிக்கமுடியும். திலீபன் அஞ்சாதவன் எனினும் தற்காப்புடனிருந்தான் ; நோயற்றவனாய் அறங்காத்தான் ; அவாவின்றிப் பொருளேற்றான் ; பற்றின்றிச் சுகமனுபவித்தான். அறிந்தும் மௌனம், சக்தியிருந்தும் பொறுத்தல், புகழ்ச்சி வேண்டா ஈகை - மாறுபட்ட இக்குணங்கள், உடன் பிறந்தவைபோல அவனிடம் கூடியிருந்தன. விஷயச் சிக்கின்றி, கல்வியிற் கரைகண்டு, தரும விருப்பமுங்கொண்ட திலீபன், கிழடுதட்டாமல் மூப்பெய்தினான்.

நன்னெறி பயிற்றி, இடர்களினின்றும் காப்பாற்றி, உணவுடையிந்து, திலீபன் பிரஜைகளைப் போற்றினன் ; அவனே அவர் தந்தை ; அவர் தந்தையர் அவரைப் பெற்றனர்; அவ்வளவுதான். இத்தீரனுடைய பொருளும் இன்பமும் அறத்திற்கே ஆயின ; அறத்தை நாட்டவே அவன் தண்டிக்க வேண்டியவரைத் தண்டித்தான் ; சந்ததிக்காகவே மணம் புரிந்தான் ; வேள்விக்காகவே உலகைக் (உலகப்பொருளை) கறந்தான் ; அவன் பயிர் செழிக்கவே இந்திரன் வானைச் சுரந்தான்; தமது சம்பத்துக்களை மாற்றிக் கொண்டு, இருவரும், இவ்வாறு, ஈருலகங்களையும் போஷித்தனர். அவனரசில் திருட்டே கிடையாது ; சட்ட புத்தகத்தில் அது சொல்லளவிலேதா னிருந்தது. ஆதலால் குடியோம்புவதில், பிற மன்னர் திலீபனைப் போன்று புகழ்பெறுதவராயினர். நோயாளி மருந்தை விரும்புவது போலே, பகைப்பவனுயினும் யோக்கியனை அவன் விரும்பினன். பிரியனுயினும், பாம்பு கடித்த விரல்போலே, துஷ்டனை நீக்கினன். பஞ்சபூதங்களைப் போலே அவன் குணங்கள் பிறர் நலத்திற்கே பயனுயின. வேலாவலையமே மதிலாகவும், கடலே அகழியாகவும் கொண்டு, பிறர் ஆதிக்கமில்லாத சுதந்திரவுலகை அவன் ஒரு நகரம்போலாண்டான்.

சந்ததி வேண்டல்

அவன் மனைவி உத்தமமான மகத வம்சத்தினள் ; தாக்ஷிண்ய குணப்பெருமையால் ஸுதக்ஷிணை எனப் பெயர் பெற்ற உத்தமி ; வேள்விக்குத் தக்ஷிணை போன்றுள்; கணவனுக்குச் சக்திக்கன லானுள். திலீபனுக்குப்

பலராணிகள் இருந்தனர்; எனினும் மனவுறுதி கொண்ட உத்தமியான ஸுதக்ஷிணையையும், ராஜ்ய லக்ஷ்மியையுமே அவன் மணம்புரிந்ததாகக் கருதினான். அவன், தனக்குவந்த ஸுதக்ஷிணை மூலம், ஒரு மகனைப் பெறவிரும்பி, அவளுடன் காலம் கழித்தான்; அவன் மனோரதம் நிறைவேறவில்லை. பிறகு, கனமான அரசியற் சுமையைத் தனது தோளினின் றிறக்கி, மந்திரிகள் மேல் போட்டு, திலீபன் மகப்பே றளிக்கும் அனுட்டானங்களைச் செய்ய முற்பட்டான். தம்பதிகள் புத்திரனை வேண்டி, பரிசுத்தமாகப் பிரமனை வழிபட்டு, தமது குலகுருவான வசிஷ்டமுனிவர் ஆசிரமத்திற்கு ஒரு கருநிறத்தேரில் புறப்பட்டனர்.

வழிக்காட்சி

தேர் மதுர கம்பீர கோஷத்துடன் சென்றது; அதில் மின்னலும் ஐராவதமும் போல, ஸுதக்ஷிணையும் திலீபனும் விளங்கினர். அவர் ஆசிரமத்திற்குத் தொந்தர விருக்கக்கூடா தென்றே சொற்பப் பரிவாரங்களுடன் சென்றனர்; எனினும், தமது மகத்துவத்தால், சேனைமுழுதும் புடை சூழ்ந்தது போல விளங்கினர். காட்டு மரத்தொகுதிகளை மெல்ல அசைத்து, பூந்தூட்களைத் தூவி, சாலமரப் பிசின்மண மேறி, இனிமையான காற்று வீசியது; அவர் விருப்பம் நிறைவேறுதற் கறிகுறியாகக் காற்று அனுகூலமாயிருந்தது; அதனால் அரசிகூந்தலும், அரசன் பாகையும் குதிரைகள் கிளப்பும் தூசிபடியாம லிருந்தன. அலைவீச்சினால் குளிர்ந்த குளத் தாமரைகளின் நறுமண வாடையை

அவர்கள் உயிர்த்தனர். தேர்ச்சக்கரவோசை கேட்டு, அது மேககர்ஜனை யென்று, மயில்கள் தலையுயர்த்தி, விட்டுவிட்டுத் தொடரும் இரண்டு ஷட்ஜஸ்வரம் போன்று, மனத்திற் கினிய குரலொலிப்பதைக் கேட்டனர்; பாதையினின்றும் சற்றுவிலகி, இரதத்தையே கண்ணுற்ற ஜோடி மான்களின் விழிகள் தங்கள் விழிகளைப் போலிருப்பதைப் பார்த்தனர்; சில இடங்களில், தூணில்லாத் தோரண வளைவில் இணைந்த மாலை போன்று, வரிசையாக இன்னிசையளித்து நிற்கும் சாரஸ பக்ஷிகளை நிமிர்ந்து பார்த்தனர். தம்மால் விடப்பெற்ற யூபஸ்தம்பங்களைச் சின்னமாயுடைய கிராமங்களில், பலனெய்திய வேள்வியந்தணர் அளித்த அர்க்கியம், பாத்தியம், ஆசீர்வாதம் இவற்றை ஏற்றனர்; இடையர்கள் புத்துருக்கு நெய்கொண்டு வந்து நின்றனர்; அவர்களிடம், பாதையிலுள்ள மரங்களின் பெயர்களைக் கேட்டுக் கொண்டே வழி நடந்தனர். தூய அணிகளுடன் பிரயாணம் செய்யும் இந்த ராஜதம்பதிகள், பனிவிட்ட சந்திரனும் சித்திரையும் சேர்ந்ததுபோல் உரை கடந்த பொலிவுற்றிருந்தனர். பூபதியாகிய திலீபன், பிரியதரிசனன், புதனுக்கிணையான அறிஞன்; அவன் அந்தந்த வஸ்துக்களை அரசிக்குக் காட்டிக்கொண்டே சென்றபோது, வழி தாண்டிய தூரங்கூடத் தோன்றவில்லை.

விசிஷ்டாசிரமம்

எய்தற்கரிய புகழோங்கும் திலீபன், தனது பத்தினியுடன், சாயங்காலம், சம்யமத்திற்சிறந்த வசிஷ்ட முனிவர் ஆசிரமத்தை யடைந்தான்; குதிரைகள் களைத்

துப்போயின; தேரினின்று தனது பத்தினியை இறக்கி, தானும் இறங்கி, குதிரைகளை இளைப்பாற்றும்படி சாரதிக்குப் பணித்து, ஆசிரமத்திற்குள் நுழைந்தான் திலீபன். அந்த ஆசிரமம் தவசிகளால் நிறைந்திருந்தது; அவர்கள் அப்போது அருகிலுள்ள வனங்களினின்று, சமித்து, தருப்பை, கனிகள் ஆகியவற்றைப் பறித்துத் திரும்பி வந்தனர்; காணரிய வேள்வித்தீ அவர்களை அழைத்தது; மான்கள், தமக்குரிய காட்டு நெல்லிற் சிறு துண்டு, ரிஷிபத்தினியர் மக்கள் போலப் பர்ணசாலை வாயில்களை வழியடைத்து நின்றன. அந்தியில், பர்ணசாலை அங்கணங்களில் குவிந்த நீவாரதானியங்களின் பக்கத்தில் மான்கள் படுத்து அசை போட்டன. முனி கன்னியர் செடிகளுக்கு நீர் வார்த்து, பாத்தி நீரைப் பட்சிகள் நம்பிக்கையாகக் குடிக்கட்டுமென்று தாம் தள்ளிப் போயினர். ஆசிரமத்தில் முத்தீ பொலிகிறது; அதில் வழங்கும் ஆகுதி மணக்கிறது. அதன் புகையைக் காற்று மேலெழுப்புகிறது; அப்புகை அதிதிகளைப் புனிதமாக்குகிறது.

திலீபன் தம்மைக் காப்பவன்; சாத்திரங்களை அறிந்து நடப்பவன்; மரியாதைக்குரிய அவனையும், அவன் மனைவியையும், பண்பும் புலனடக்கமும் மிக்க முனிவர் தகுமுறை வரவேற்றனர்.

வசிஷ்டர்—திலீபன் சம்பாஷணை

வசிஷ்டர் தபோநிதி; அதர்வ வேதநிதி; மந்திரக் கவிஞர்; மந்திர சக்தியால் அரசிற்கு நலம் செய்பவர். யக்ஞேசுவரனை வழிபடும் ஸ்வாஹா தேவிபோல், அருந்ததி அவரை வழிபட்டாள். சாயங்கால ஜபஹோமங்

கள் முடிந்ததும், அரச தம்பதிகள், அருந்ததி - வசிஷ்டர் பாதம் பணிந்தனர். குருவும் குரு பத்தினியும் அவரை மனமகிழ்ந்து ஆசிர்வதித்தனர்; வசிஷ்டர் விருந்தோம்பினர்; தேரில் வந்த சிரமம் நீங்கியபின் ராஜ்யாசிரம முனியான திலீபனை, தவமுனி வசிஷ்டர், "அரசில் எல்லாம் க்ஷேமமா?" என்று நலங்கேட்டார். சொல்வன்மைமிக்க திலீபன் பொருள் செறிந்த மொழிகளைப் பேசினன் :—

"பஞ்சம், வெள்ளம் முதலிய தெய்வீக விபத்துக்களினின்றும், பகை திருட்டு முதலிய மானுஷீக விபத்துக்களினின்றும் தேவரீர் எனதரசைக் காப்பாற்றுகிறீர்; அரசன், அமைச்சு, சுற்றம், செல்வம், சேனை, ராஷ்ட்ரம், கோட்டை ஆகிய ஏழங்கங்களிலும் அது க்ஷேமமாயிருந்தே தீரவேண்டும். தங்கள் மந்திரசக்தி, தூரத்திலிருந்தே பகைவரை வீழ்த்தும் போது, காணும் பொருளையே தைக்கவல்ல எனது அம்புகளுக்கு வேலையே இல்லை. வேட்போனே, விதிப்படி தீயில் தாம் வழங்கும் அவியே பயிர்களுக்கு மழையாகிறது. இன்றேல் அவை வரட்சியால் வாடிப்போம். தமது பிரம்மவர்ச்சசினலே அச்சம், துயரம் இன்றி எனது பிரஜைகள் நூறுண்டு வாழ்கின்றனர். பிரம்ம புத்திரரும் எனது குருவுமாகிய தேவரீர், இவ்வளவு கவலையெடுத்துக் கொள்ளும்போது, எனது சம்பத்து ஆபத்தின்றி வளரத் தடையுண்டோ? ஆயினும் தந்தையே, உமது நாட்டுப் பெண்ணை ஸுதக்ஷிணை ஒரு புத்திர ரத்தினத்தைப் பெறக் காணிலேன்; அதனல் இரத்தினங்களைத் தரும் தீவுமேவிய உலகம் என்னை மகிழ்விக்கவில்லை. எனக்குப்பிறகு பிண்டம் கொடுப்பாரில்லை; எள்ளுத் தண்ணீர் இறைப்

பாரில்லை என்று என் பிதுர்க்கள் வருந்துகிறார்கள்; நான் வைக்கும் சிரார்த்தங்களில் அவர்கள் திருப்தியாயுண்ணார்; அவர் விடும் பெரு மூச்சால் நான் விடும் திலோதகமும் வெதுவெதுக்கிறது. வேள்வியால் தூயவனான நான், மகப் பேறில்லாமல், சக்கரவாளகிரியைப் போல, ஒளியும் இருளும் மேவியுள்ளேன். தானம் தவங்களாலெய்தும் புண்ணியம் பரலோகத்திலே சுகமளிக்கிறது; சுத்தவம்ஸத்தி லுதித்த சந்ததியோ இகம் பரம் இரண்டிலும் இன்பமளிக்கிறது. இவ்வாறு நான் புத்திரபாக்கியமற்றவனானதைக் கண்டு தாங்கள் வருந்தவில்லையா? ஹே விதாதா, ஆசிரமத்தில் தாங்கள் பிரியமாக நீரூற்றி வளர்த்த ஓர் இளம் மரம் மலடாகக் கண்டு சகிப்பீரா? ஹா, பிதுர்க்கடனை நினைக்கையில் குளிப்பில்லா யானைக்குத் தொழுமரக்கட்டு போலே, எனக்குச் சகிக்கமுடியாத துக்கம் வருகிறது; இக்ஷ்வாகரின் அசாத்தியமான காரியங்களைச் சித்தி பெறச் செய்த தாங்கள், பிதுர்க்கடன் தீர எனக்கொரு வழி செய்யவேண்டும்—தந்தையே!"

அரசன் இவ்வாறு வேண்டவே, முனிவர், கண்மூடி மீனுறங்கும் பொய்கைபோலே அசையாத் தியானத்தில் ஆழ்ந்தார். சுத்தாத்மாவான வசிஷ்டர் ஏகாக்கிரத்தியானத்தால், மன்னனுக்குச் சந்ததியற்ற காரணத்தை யறிந்து சொல்லலானார்:—

"முன்னே, நீ இந்திரனைத் தரிசித்துப் பூமிக்குத் திரும்பும் வழியில், கற்பக நிழலில், காமதேனு படுத்துக் கொண்டிருந்தது. அப்போது ருதுஸ்நானம் செய்திருந்த ராணியைப்பற்றியே நீ சிந்தித்தாய்; சுற்றிவந்து

வணங்கத்தக்க காமதேனுவை நீ மதிக்கவில்லை; "நீ என்னைத் திரஸ்கரித்தாய்; என் சந்ததியை வழிபட்டா லொழிய உனக்கு மகப்பேறில்லாமற் போகக்கடவது" என்று காமதேனு சபித்தது. ஆகாசகங்கை யருவியும், மதங்கொண்ட திசையானைகளும் செய்த முழக்கத்தால் நீயாவது, தேர்ப்பாகனுவது அந்தச் சாபத்தைக் கேட்க வில்லை. பூசனைக்குரியாரைப் பூசியாமை ஒருவன் சிரேயஸைத் தடுக்கும். காமதேனுவை அவமதித்ததால் உன் விருப்பம் நிறைவேறவில்லை. அக்காமதேனு, வருணன் செய்யும் நீண்ட சத்ரயாகத்திற்கு ஹவிஸ் அளிக்கப் பாதாள லோகத்தில் இருக்கிறது. அப்பாதாள வாயில் பாம்புகளால் காக்கப்படுகிறது. அங்கே நீ போகமுடியாது. அச்சுரபியின் பிரதிநிதியாகக் கருதி, இங்கிருக்கும் அதன் மகளை நீயும் உன் மனைவியும் சித்தசுத்தியுடன் ஆராதித்தால் விருப்பம் நிறைவேறும்."

நந்தினி

இவ்வாறு சொன்னதும், வசிஷ்டர் ஆகுதிக்குச் சாதனமான அப்பசு காட்டினின்று வந்தது; அதன் பெயர் நந்தினி; அது தளிர்ச் செந்நிறத்தது; அதன் நெற்றியில் வெண் மயிர்வளை யிருந்தது; அதனுல் அது பிறை முளைத்த அந்திவானம் போலத் தோன்றியது. அது தனது கன்றைப் பார்த்ததும் குடம்போன்ற மடுவி னின்று சூடான பாலைப் பூமியிற் பொழிந்தது; அப் பொழிவு அபிஷேக ஸ்நானத்தினும் புனிதமானது. அது அருகே, பாதத்தால் கிளப்பிய தூசி புண்ணியநதி முழுக்கைப் போலத் திலீபனைப் புனிதமாக்கியது. இப் புண்ணியக் காட்சியைப் பார்த்து, சகுன மறியும்

தபோநிதியான வசிஷ்டன் திலீபனிடம் கூறியதாவது: " அரச, பெயர் சொன்னதும் இக்கல்யாணி, இந்த நந்தினி வந்ததால், உன் காரியசித்தி சமீபத்தில் இருக்கிறதென்றறி. வனத் தொழிலே மேற்கொள் ; பயிற்சியால் கல்வியை வளர்ப்பதுபோல, எப்போதும் உடனிருந்து இந்த நந்தினியைக் கருத்துடன் வளர்த்து மகிழ்வி ; அது செல்லும்போது செல் ; நிற்கும்போது நில் ; அமரும்போது அமர் ; அது பருகிய பின் நீ பருகு. நின் மனைவி, பக்தியும் சித்தவைராக்கியமும் கொண்டு, காலை பூஜித்த இப்பசுவுடன் தபோவனம் வரையில் செல்ல வேண்டும்; சாயங்காலம் அவளை எதிர்கொண்டழைக்க வேண்டும். அவள் அனுக்கிரம் கிடைக்குமட்டும், இவ்வாறு, அதன் பணியில் கருத்தூன்றி இரு. உன் பணி நிர்விக்னமாகுக ! நின் தந்தையைப்போலே, நன்மக்களைப் பெற்றவரில் முதன்மையாயிருப்பாயாக! தேச கால மறிந்த திலீபன் மனமகிழ்ந்து, " அப்படியே ஆகட்டும்" என்று வணங்கித் தனது மனைவியுடன் குருவின் கட்டளையை ஏற்றான். திலீபனுக்கு நல்ல காலம் பிறந்தது. இரவில், அறிஞனும் சத்தியவாக்வியுமான வசிஷ்டன், திலீபனைத் துயில் கொள்ளும்படி பணித்தான். தனது தவசித்தியால் எதையும் ஆக்கவல்லவன் வசிஷ்டன் ; எனினும் அரசன் கொண்ட நியமத்திற்கேற்றபடி அவனுக்கு ஒரு புல்படுக்கை யீந்தான். முனிவர் குறித்த பர்ணசாலையில், அரசனும் அரசியும் இடங்கொண்டு, குச சயனத்தில் இரவைக் கழித்தனர். அதிகாலையில் சிடரின் அத்யயன வொலிகேட்டு இருவரும் எழுந்தனர்.

௩. நந்தினி வழிபாடு

காலையில், ஸுதக்ஷிணா காமதேனுவுக்குச் சந்தனமிட்டு மாலை சூட்டினாள்; கன்றுக்குப் பாலூட்டிக் கட்டிய பிறகு, பிரஜாதிபனும், கீர்த்திச் செல்வனுமான திலீபன், ரிஷியின் பசுவை அவிழ்த்து வனத்திற்குக் கொண்டு சென்றான். பதிவ்ரதாரத்தினமான திலீபன் மனைவி, சுருதியைப் பின்பற்றும் ஸ்மிருதிபோல, நந்தினியின் பரிசுத்தமான பாததூளி வழியே உடன்சென்றாள். வனத்தின் எல்லை வந்தது; இனிய கீர்த்தியும், கருணையுங் கொண்ட மன்னன், அரசியைத் திருப்பியனுப்பி, நாற்கடல் மடியாகி, பூமியே பசுவுருக்கொண்டதுபோன்ற சுரபி மகளை, உலகைக் காப்பதுபோன்றே காத்தான். மனுவின் சந்ததிகள், தமது வீரத்தினாலேயே தம்மைக் காத்துக்கொள்வர். ஆதலால், தொண்டு - விரதம் பூண்ட திலீபன், தனது சேவகரையும் திருப்பியனுப்பித் தனியே பசுவைத் தொடர்ந்தான். ஸம்ராட் திலீபன், சாரமான பசும்புல் - கவள மீந்து, காட்டு ஈ மொய்க்காது சொறிந்து கொடுத்து, தடையில்லாமல் சுயேச்சையாகச் சஞ்சரிக்கவிட்டு பசு - வழிபாட்டில் கருத்தூன்றினான். அது நிற்கும்போது நின்றான்; போகும்போது பின் சென்றான்; இருக்கும்போது தானும் உறுதியா யமர்ந்தான்; அது நீர் குடிக்கும்போது தானும் குடித்தான்—இவ்வாறு அரசன் காமதேனுவை நிழல் போலத் தொடர்ந்தான். அரசச் சின்னங்களை அவன்

நீத்தான் ; எனினும், தோஜோ விசேஷத்தால் அவனே யாரும் திருவுடை மன்னன் என்று அனுமானிக்கலாம். அவன் வெளியே தோற்ருமல் உள்ளே மதாவஸ்தை கொண்ட கஜேந்திரனைப்போல ராஜகம்பீரத்தால் விளங்கினுன். அவன் கேசம் மெல்லிய கொடியால் முடித்திருந்தது ; நாணேற்றிய வில்லுடன், முனியின் ஓமப்பசுவை ஓம்பும் வாயிலாக, தீய வனவிலங்குகளை ஒறுப்பவன்போல அவன் காட்டில் திரிந்தான். இருபுறமும் அடர்ந்த மரங்கள் ; அவற்றில் பக்ஷிகள் மகிழ்ந்து பாடின; அவற்றின் வாயிலாக, மரங்களே, வருணன்போன்ற மன்னனுக்கு நீண்ட ஆலோகசப்தம் (ஜயமுழக்கம்) செய்வதுபோலிருந்தது. மன்னன் செல்லும்போது, நகரக்கன்னியர் பொரியிறைத்து மரியாதை செய்வர் ; இங்கே காற்றிலசையும் பைங்கொடிகள், இந்திரன்போலொளிரும் மன்னனுக்கு மலர் தூவின. அவன் வில் பிடித்திருந்தான் ; எனினும், அச்சமற்ற மனத்துடன், கருணுரஸத்தை விளக்கும் அவன் திருவடிவையே பெண் மான்கள் நோக்கி, அகன்ற கண்படைத்த பயனைப்பெற்றன. மூங்கில் துவாரங்களில் காற்று நிரம்பிக் குழல்போல் ஒலித்தது; அதற்கிணேந்து, புதர்களினின்று வனதேவதைகள் தனது புகழைப் பலக்கப் பாடக் கேட்டான் மன்னன். மலையருவியின் துமிகளால் நனேந்து, அசையும் மரப் பூக்களின் மணமேறிய காற்று, ‘ஜில்’லென்று வீசி, குடையில்லாமல் வெய்யிலிற் செல்லும் ஆசாரசுத்தனுன அரசன் களைப்பை நீக்கும். உயிர்க்காவலனுன திலீபன் பிரவேசித்ததால், காட்டுத்தீ மழையில்லாமலே அணேந்தது; பூவும், கனியும் மிகவும் செழித்தன. விலங்கு

களில் வலியன மெலியவற்றிற்குத் தீங்கு செய்யா தொழிந்தன ; தாம் செல்லும் திசைகளை அரசனும் பசுவும் புனிதமாக்கினர். காமதேனுவைப் போலத் தளிர்ச்செந்நிறமான அந்திவெய்யில் அடிக்கும்போது, திலீபன் முனிவர் பசுவை ஆசிரமத்திற்கு ஓட்டிவந் தான் ; தேவ, பிதுர், அதிதி காரியங்களுக்குப் பால் நெய்யுதவும் காமதேனு பின்னால் பூபாலன் சென்றான் ; விதியை அனுசரிக்கும் சாக்ஷாத் சிரத்தை போன்று விளங்கினாள் திலீபனுடன் சென்ற காமதேனுவும். குட்டைகளினின்று வரும் காட்டுப்பன்றிக் கூட்டங்களை யும், தங்கள் உறைவிடமான மரங்களை நோக்கும் மயில் களையும், பசும்புல் தரையில் அமர்ந்திருக்கும் மான்களை யும்,இருண்ட வனங்களையும் பார்த்துக்கொண்டே திரும் புவான் திலீபன். ஒரே தடவையே ஈன்ற காமதேனு வின் மடி மிகக் கனமானது ; திலீபன் உடலும் கன மானது; இருவரும் சொகுசாக நடந்து, ஆசிரமத்திற்கு வரும் வழியையே அழகு செய்தனர். வனத்தினின்று பசுவுடன் வரும் தன் கணவனை, அன்புள்ள ஸுதக்ஷிணா தேவி,பட்டினியிருந்தவன் நீர் பருகுவதுபோலே,மெல்ல மூடும் இமைகொண்ட விழிகளால் பருகிநிற்பாள். தரும பத்தினி பசுவை எதிர்கொண் டழைப்பாள் ; திலீபனுக் கும் அவளுக்கும் இடையே செல்லும் செந்நிறக் காம தேனு, பகலுக்கும் இரவிற்கும் இடையேவரும் சந்தியா காலம் போலத் தோன்றியது. அக்ஷதாபாத்திரத்துடன் ஸுதக்ஷிணா பசுவைச் சுற்றிவந்து வணங்கி, இஷ்டசித்தி யின் விசால வாயில் போன்ற இருகொம்புகளின் நடுவி லுள்ள இடத்தில் அர்ச்சனை செய்தாள். தன் கன்றைக்

காண ஆவலாயிருந்த போதிலும், காமதேனு, அமைதியாய் நின்று, அப்பூஜையை ஏற்பாள்; அதனால் அவர் மகிழ்வர்; இத்தகைய அருட்குறிப்பு, பக்தருக்குப் பலன் விளைத்தேதீரும். தன் கைகளால் பகைவரை முடித்த திலீபன், பத்தினியுடன்கூடிய வசிஷ்டர்பாதம் பணிந்து, சாயம் சந்தியை விதிப்படி முடித்து, பால் கறந்த பிறகு, அமுதளிக்கும் காமதேனுவை மீண்டும் வணங்கினான். இரவில் திலீபன், தனது பத்தினியுடன், தேனுவின் பக்கத்தில், விளக்கையும் வழிபாட்டுச் சாமான்களையும் வைத்துக்கொண்டு, அது உறங்கிய பிறகே தான் உறங்கினான்; காலையில் அது எழுந்ததும் தானும் எழுந்தான். மஹாகீர்த்திமானும், தீனோத்தாரகனுமான திலீபன், மனைவியுடன், புத்திரனை விரும்பி, இவ்வாறு இருபத்தோரு நாட்கள் கோவிரதம் அனுஷ்டித்தான்.

சிங்கத்தின் முன் திலீபன்

முனிஹோமதேனு, மறுநாள், தன்னை வழிபடும் திலீபனுடைய அன்புறுதியைச் சோதிக்க, கங்கை வீழ்ச்சியின் பக்கம் பசும்புல் நிறைந்த இமயமலைப் பிரதேசத்திலுள்ள ஒரு குகையில் நுழைந்தது. எக்கொடிய விலங்கும், மனத்தால்கூடக் காமதேனுவை அணுகாதென நினைத்து, அரசன் மலைக்காட்சியின் அழகைப் பார்த்து நின்றான். அப்போது, அரசனுக்குத் தெரியாமல், ஒரு சிங்கம் வந்து, பசுவைப் பலாத்காரமாக இழுத்தது. வருந்துவோர்க்கினிதுசெய்யும் திலீபன், குகையினின்று தேனுவின் உரத்த அபயக்குரலைக் கேட்டதும், திரும்பிப் பார்த்தான். செந்தாது மேவிய மலையில் பூத்த லோத்

திரா மரம்போல், செந்நிறப் பசுவின் முதுகில் சிங்கம் இருக்கக் கண்டான் வில்லனை திலீபன். தீனசரண்யன், பகைவரை ஒறுத்தவன், சிங்கநடையோன் ஆகிய திலீபன், கொல்லத்தகும் சிங்கத்தைக்கொல்ல, தூணியினின்றும் அம்பெடுக்கப் போனான். சிங்கத்தை அடிக்க முயன்ற அவனது வலது கை அம்பு நுனியில் ஒட்டிப்போனது; அதில் இணைந்த கொக்கிறகுகளை அவன் நகப்பொலிவு அழகு செய்தது; மன்னன் சித்திரப் பாவையானான்; மந்திர, மூலிகைகளால் தடையுண்ட பாம்புபோ லானான்; குற்றவாளி அருகே யிருக்கிறான்; அவனைத் தீண்டமுடியவில்லை; கைஸ்தம்பித்துப்போனது; க்ஷாத்ர வீரம் கொதிக்கிறது; சினமேறுகிறது; ஆரியன், மனுவம்சக் கொடி போன்றவன், சிங்கம் போல வீறுடையான், வியந்தான்; அவன் மேலும் வியக்க, பசுவைப்பற்றிய சிங்கம் அவனுடன் மனிதப் பேச்சில் பேசியது :—“ மகிபால, போதும் உன்முயற்சி! என்மேல் நீ அம்பு விட்டாலும் அது வீணாகும்; மரத்தை வேரோடு தள்ளும் காற்றின் வேகம் மலையிடம் பலிக்குமா? அறிவாயாக: நான் கும்போதரன்; நிகும்பன் தோழன்; அஷ்டமூர்த்தியான சங்கரனுக்குக் கிங்கரன்; கைலாசம் போல் வெண்மையான நந்திமேல் ஏறும்போதெல்லாம் சிவபிரான் கால்வைத்துப் புனிதமான முதுகுடையேன். இதோ உன்முன்னால் பார் தேவதாருமரம்; தனது கும்பத்தனங்களால் கந்தனை வளர்த்தது போல, கௌரியன்னை, தங்கக்குடத்தால் நீரூற்றி இத்தேவதாருவை வளர்த்தாள்; அந்நீரின் சுவையறிந்த இம்மரத்தைக்

காளைக்கொடியுடைய சிவனார் தமது பிள்ளையாகக் கருதுகிறார். ஒரு நாள், ஒரு காட்டுயானை, இம்மரத்தில் தனது தலையைச் சொறிந்து கொண்டதில், மரப் பட்டை உரிந்து போயிற்று ; அதைக் கண்டு பருவத குமாரி, அசுரர் அம்பினால் குமரன் அடிபட்டால் எப்படி வருந்துவாளோ அப்படி வருந்தினாள். அது முதல், யானை பயத்தால், என்னைச் சிங்கமாக்கி இக்குகையில் காவல் வைத்து, இம் மரத்தருகே வரும் ஜந்துக்களை உண்ணப் பணித்தார் சூலபாணி. பட்டினியிருந்த எனக்குப் பரமன் குறித்தபடி இன்று பாரணை நாள் ; மதியமுதிற்கு ராகுபோல நான் பசிதவிக்கிறேன் ; என்முன் வந்த இப்பசுவின் இரத்தம் என்பசி தணியப் போதும். குருவுக்கு நீ சிஷ்யபக்தியைக் காட்டிவிட்டாய் ; இனி வெட்காது திரும்பிப்போ ; காக்கத்தக்க ஒன்றை ஆயுதத்தால் காக்கமுடியா விட்டால், அதனால் ஆயுத வீரர் இசை குன்றாது. ”

மிருகேந்திரனுடைய சாதுர்ய வசனங்களை நரேந்திரன் கேட்டான் ; இது தான் முதல் தடவை அவன் கணை பலிக்காமற்போனது ; அதற்காக அவன் வெட்கினான் ; சிவன் நெற்றிக் கண்ணால் திரிபுரம் எரிந்த போது, துர்க்கை ஒரு குழந்தையுடன் பார்க்கவந்தாள் ; அக்குழந்தையின் அழகில் பொறாமை கொண்ட இந்திரன், அதை அடிக்க வச்சிராயுதத்தை ஓங்கினான் ; திரியம்பகன் ஒரு பார்வை பார்த்தான். இந்திரன் கை அப்படியே ஸ்தம்பித்துப் போனது. அது போலத் திலீபன் கையும் அம்புவிட முடியாமல் ஸ்தம்

பித்தது. திலீபன் சிங்கத்திற்கு மறுமொழி கூறுகிறான் :—

"என் விருப்பம் வீணானது ; மிருகேந்திரா, என் சொல் நகைக்கிடமாகத் தோன்றினும், நீ பிராணிகளின் உட்கருத்தை அறிவாயாதலால், எனது கருத்தை உன்முன் நிவேதிக்கிறேன், கேள் :—ஸ்தாவரஜங்கமங்களின் சிருஷ்டி, ஸ்திதி, லய ஹேதுவான சிவபிரான், நான் வணங்குதற்குரிய இறைவனே. எனினும், நியோம்பும் எனது குரு வசிஷ்டருக்குரிய இப்பசுவையும் என்முன் உபேக்ஷிக்கலாகாது. இது அவருக்கு அவியளிக்கும் சாதனமாகும்.

நீ சிவாக்ஞை பெற்றிருக்கிறாய் ; பசியுடன் இருக்கிறாய் ; தயவுசெய்து, என் உடலை உண்டு, உன் உடற்கடனைத் தீர்த்துக்கொள். பொழுதுபட்டதும், இதன் இளங்கன்று தாயை ஆவலாக எதிர்பார்க்கும். மஹரிஷியின் பசுவை விட்டுவிடு.

தனது பல்லொளியால் இருட்குகை பொலியப் புன்சிரித்து, சிவகிங்கரனான சிங்கம் மீண்டும் உரைத்தது:—

"உனது ஏகசக்ராதிபத்தியம் (உலகிறைமை) இளமை பொலியும் அழகிய யாக்கை - அனைத்தையும் அற்பக் காரணத்திற்காக இழக்கக் கருதுகிறாய் ; நீ விசார மூடனாய்க் காண்கிறாய். இதுதான் உனது உயிர்க்கருணையானால், நீ இறப்பதால் இப்பசு ஒன்றே நலம்பெறும் ; குடிகளுக் கிறைவனே, நீ பிழைத்திருந்தால், ஒரு தந்தை போலே உன் குடிகளை இடர்களினின்றும் காப்பாற்றுவாய். யக்ஞேசுவரனைப்போன்ற உன் குருவிற்கு ஒரே பசு தோன்றியிருக்கிறது. அதை எனக்கு இரையாக்கி

னால் அவர் சினப்பார்; அச்சினத்தைத் தாங்கமுடியாதே என்று அஞ்சுகிருயா ? குடம்போல மடியுள்ள கோடிப் பசுக்களை யீந்து அவர் கோபத்தை நீ தணிக்கமுடியும். உன் உடல் வலிமையுள்ளது ; அது தொடர்ச்சியாகப் பல இன்பங்களை நுகரவேண்டிய உடல் ; அதைக் காப்பாற்று. ஒரு செழித்த அரசை, மண்மிசையுள்ள இந்திர பதவி என்பர். "

விலங்கரசு இம்மட்டில் பேசி நிறுத்தியது ; கேட்டான் திலீபன். குகையினின்று வந்த சிங்கத்தின் எதிரொலி, இமயமலையே திலீபனிடமுள்ள பிரியத்தால், அதே பொருளுரையை உரக்கப் பேசியதுபோ லிருந்தது. மாந்தர்க் கிறைவனான திலீபன், சிங்கத்தின் பிடியி லிருந்த காமதேனு, வெருண்ட விழியுடன் தன்னைப் பார்ப்பதைக் கண்டு, இரக்கம் மிகுந்து, மீண்டும் உரைத்தான் :—

" உன்னதமான க்ஷாத்ர சப்தத்திற்கு " (தீயரை) அழிப்பதால் (அறத்தைக்) காப்பது " என்பது உலகறிந்த பொருளன்ருே ? அதற்கு மாருக நடந்தபின் அரசினல் என்ன பயன் ? நிந்தையால் மாசுற்ற வாழ்வென்னபயனும் ? மற்றப் பாற்பசுக்களைத் தந்து மஹர்ஷியைச் சமனப்படுத்துவ தெப்படி ? இப்பசு சுரபிக்குச் சமானம்;உருத்திரன் சக்தியாலேதான் உன்னல் இதைத் தாக்கமுடிந்தது. என் சொந்தவுடலை ஈடு கொடுத்து, உன்னிடமிருந்து இப்பசுவை விடுவிக்கவேண்டியது நியாயமாகும் ; அதனல் உனது பாரணையும் தடைப்படாது ; முனிவர் ஹோமக் கிரியைகளும் பழுதாகா. நீ சிவனுக்குச் சேவகன்; நான் ரிஷியின் சேவகன் ; நீ

தேவதாருவைக் காக்கிறாய்; நான் பசுவைக்காக்கிறேன். நான் காக்கும் வஸ்துவைச் சாகக் கொடுத்து, என் எஜமான் முன் எப்படி நிற்கமுடியும்? யோசித்துப்பார். நீ கொல்ல நான் தகாதவன் எனக் கருதினால், இப்புகழுடல் மீதாயினும் தயவு வை; என்னைப் போன்ற அறிவாளிகளுக்கு, அழியும் இந்தப் பௌதிக பிண்டத்தில் அபிமான மிராது, உறுதி. ஒருவருக்கொருவர் வார்த்தையாடுவதால் நட்புண்டாகும் என்பர். இக் காட்டில் எதிர்ந்த நமக்கு அவ்வாறு நட்புண்டானது; பூத நாதனான சிவனுடைய கிங்கரனே, நண்பனாகிய எனது விண்ணப்பத்தை நீ மறுக்கக் கூடாது."

சிங்கம், "அப்படியே ஆகட்டும்" என்று பசுவை விட்டது; உடனே திலீபன் கையும் சுவாதீனத்திற்கு வந்தது. அக்கணமே ஆயுதங்களை நீத்து, அரசன் ஒரு மாமிச பிண்டம்போலத் தன்னுடலைச் சிங்கத்திற்குச் சமர்ப்பித்தான். ஜனங்களைப் பரிபாலிக்கும் திலீபராஜன் குனிந்து, பயங்கரமான சிம்மம் தன்மேல் பாயப் போவதை எதிர்பார்த்தான். அப்போது, வித்தியாதரர் தமது கையினால் பூமாரி பெய்தனர்!

வரமருளல்

"எழுந்திரு மகனே!" என்றோர் அமுதவாக்கெழுந்ததைக் கேட்டான் திலீபன்; எழுந்து பார்த்தான்; அன்பினால் பால் வடித்து, காமதேனுவே தனது சொந்தத் தாய்போல முன்னே நின்றது. சிங்கத்தைக் காணோம்! வியந்து நிற்கும் அரசனை நோக்கிக் காமதேனு இவ்வாறு பேசியது: "சாதுவே, ஒரு மாயை

யைக் கற்பித்து, என்னுல் நீ சோதிக்கப் பெற்ருய். வசிஷ்ட ரிஷியின் மகிமையால், எமன்கூட என்னை அடிக்க முடியாது; எனில் மற்ற வெய்ய விலங்குகளால் என்ன செய்ய முடியும்?

குருபக்தியினுலும், மாசற்ற தயையாலும் என்னை மகிழ்வித்தாய் ; மகனே, வரங்கேள் ! என்னைக் கேவலம் பால்மட்டும் சுரப்பவள் என்றெண்ணுதே ; என்னை மகிழ்வித்தோர் விருப்பத்தையும் நான் சுரப்பேன்."

ஆர்த்தருக் குதவுவோனும், தனது கைவலிவால் 'வீரன்' எனப் பேர்பெற்றவனுமான திலீபன், கை குவித்து, "என் வம்ச கர்த்தாவாக, அனந்த கீர்த்தியுடன் விளங்கும் ஒரு தனயனை ஸுதக்ஷிணுமூலம் எனக்கருளுக" என்று இறைஞ்சினுன். பிள்ளைவரம் கோரும் அரனுக்கு, "அவ்வாறே ஆகுக! மகனே ஒரு இலைத்தொன்னையில் என்பாலைக் கறந்து குடி" என்று அருளினுள் காமதேனு. திலீபன், "ஹே மாதா, நான் உலகின் காவலனுக ஆறிலொரு கடமை எற்கிறேன் ; அதுபோலே, தங்கள் கன்றிற்கு ஊட்டி, ஹோமகாரியங்களுக்கும் உபயோகித்து, மீதியிருக்கும் பாலையே மஹர்ஷி வசிஷ்டர் உத்திரவால் பருகுவேன்" என்ருன்.

இந்த விண்ணப்பத்தைக் கேட்ட வசிஷ்டர் பசு அதிகப் பிரீதியடைந்து, திலீபனுடன், சிரமமில்லாமல், இமயமலைக் குகையினின்றும் ஆசிரமத்திற்கு வந்தது. அரசர்க் கிறைவனுன திலீபன் முகம், முழுமதிபோல் விளங்கியது. அவன் களிப்பைக்கண்டே காமதேனுவின் அனுக்கிரகத்தை ஊகிக்கலாம். திலீபன், அன்று நடந்த சோதனையை வசிஷ்ட முனியிடமும், தனது பிரிய மனைவியிடமும் சொன்னுன். இழுக்கில்லாதவனும், நல்லோ

ரிடம் அன்பு கொண்டவனுமான திலீபன், வசிஷ்டர் அநுமதியால், கன்றுக்கும் ஹோமத்திற்கும்போக மீதி யிருந்த நந்தினிபாலை, மாசற்ற தனது ஒள்ளிய புகழுரு வென்றே கருதி, ஆவலாகப் பருகினுன்.

விடை கொடுத்தல்

மறுநாட் காலை, கோ விரதம் முடிந்ததற்காகப் பாரணை நடந்தது; அதன்பிறகு, ஜிதேந்திரியனுன வசிஷ்டன் ஆசிகூறி, ராஜதம்பதிகளை, அவர் தலைநகருக்குப் பயணம் பண்ணி அனுப்பினுன்.

திலீபன், ஸுதக்ஷிணுவுடன், அவியாற் பொலியும் ஓமத்தியை வலம்வந்து, அருந்ததி - வசிஷ்டரை நமஸ்கரித்து, கன்றுடன் காமதேனுவைப் பிரதக்ஷிணம்செய்து, மங்கல விரதத்தால், வரத்தால், பெரியாரை வணங்கியதால், நல்ல சகுனத்தால் ஓங்கிய புகழுடன் பயணமானுன். பொறுமையுடன் விரதங்காக்கும் திலீபன், தருமபத்தினியுடன், தனது மனோரதம் நிறைவேறி மகிழ்ந்து, சுகமான பாதையில் இனிய ஓசையுள்ள தேரில் சென்றுன். உடலிளைக்க நோற்றுச் சந்தான வரம் பெற்றுவந்த மன்னனை, ஆவலாயிருந்த ஜனங்கள், புதிதாக உதிக்கும் ஒஷதிக்கரசனுன சந்திரனைக்காண்பது போலக் கண்ணுல் சலிப்பின்றிப் பருகினர். இந்திரனைப் போன்ற சம்பத்துள்ள திலீபன், சந்தோஷமாக, கொடிகள் ஆடும் நகரில் பிரவேசித்து, ஆதிசேஷனைப் போன்ற தனது வலியதோளில் மீண்டும் பூபாரத்தை ஏற்றுக் கொண்டான்.

ச. வீர ரகு

பிறப்பு

இவ்வாறு முனிவன் ஆசியாலும், விரதப் பயனுலும் பிறந்த குழந்தையின் பெருமையைச் சுருக்கமாகக் கூறுவோம் : சந்திரன் காந்தியும், சிவக் கனலொளியான குமரன் வீரமும், லோகபாலகர் செல்வமும் பொருந்திய ஒரு மகவைக் கருத்தரித்தாள் ஸுதக்ஷிணை. பழுப்புதிர்ந்து, புதுத்துளிர்ப் பெய்திய பசுங்கொடிபோல ஸுதக்ஷிணை புத்தழகுடன் பொலிந்தாள். இரு பெரிய வண்டு மொய்த்த தாமரை மொட்டுக்களைப் போல அவள் தனங்கள் பூரித்தன. அரசன் மனமகிழ்ந்தான் ; உள்ளே நிதியைக் கொண்ட பூமியைப் போலவும், நெருப்பைக் கொண்ட சமீமரம் போலவும், நீர் ஓட்டத்தைக் கொண்ட சரஸ்வதி நதியைப் போலவும், வயிற்றில் மகவைக்கொண்ட ஸுதக்ஷிணையைக் கண்டு மகிழ்ந்தான் திலீபன். அவள் விரும்பியதை யெல்லாம் அவன் மனதறிந்துதவினுன் ; தனது அன்பிற்கும், மகிழ்விற்கும், பெருமைக்கும், புகழுக்கும், செல்வத்திற்கும் ஏற்றபடி, ஏராளமான தானதருமங்களைச் செய்து, பும்ஸவனதிக் கிரியைகளை நடத்தினுன்; பிரசவ நூல் அறிந்த வைத்தியர்களைப் பாதுகாப்பிற்காக அமர்த்தினுன். கார்மேகம் மழையை அறிவிப்பதுபோல, ஸுதக்ஷிணையின் தோற்றம் பிரசவக் குறியை அறிவித்தது ; ஐந்து கிரகம் உச்சத்துடன் வீரக் குழந்தை பிறந்தது ; திசை

கள் பளிச்சிட்டன; சுகமான காற்றடித்தது; ஓமத்தீ வடக்கே சாய்ந்து அவியேற்றது; குழந்தை ஜகஜ்ஜோதியாயிருந்தது. மதிகண்ட கடல்போல் குழந்தையின் முகங் கண்டு கண்டு மன்னன் பூரித்தான். செய்தி கேட்டு வசிஷ்டர் வந்து ஜாத கர்மங்களை நடத்தினர். இந்த ஸம்ஸ்காரத்திற்குப் பிறகு, திலீபன் குழந்தை சாணை பிடித்த மணிபோல் விளங்கிற்று. நாடு முழுதும் இளவரசன் பிறந்ததைக் கொண்டாடி மங்கள வாத்தியம் முழங்கியது. இச் சுபநாட்களில் கைதிகளை விடுதலை செய்வது அக்கால வழக்கம்; ஆனால் திலீபன் தருமராஜ்யத்தில் கைதிகள் இருந்தாலன்றோ விடுவிக்க? மகன் பிறந்ததால் திலீபனே பிதுர்க்கடனிலிருந்து விடுதலை பெற்றான். 'சாத்திரத்தை முடியக் கற்பான், சத்துருக்களை முற்றும் வெல்வான்' என்றுணர்ந்த திலீபன், தனது குழந்தைக்கு "ரகு" எனப் பெயரிட்டான்.

குழந்தை

இரவியின் கதிரால் நிலாமதி வளர்வதுபோலே, தினந்தோறும் தந்தையின் போஷணையில் அங்கங்கள் வளம்பெற வளர்ந்தான் ரகு. குமரனைக் கண்டு உமையும் சிவையும் மகிழ்வதுபோலும், ஜயந்தனைக் கண்டு இந்திரனும் சசிதேவியும் மகிழ்வதுபோலும், இரகுவைக் கண்டு ஸுதக்ஷிணாவும் திலீபனும் மகிழ்ந்தனர். இருவரும் சக்ரவாக ஜோடிகளைப்போலே ஒருவரையொருவர் நேசித்தனர். குழந்தையின்பால் தங்கள் முழு அன்பையும் வைத்தபோதிலும், அவர்களுக்குள்ள பரஸ்பரமான

அன்பு குறையவில்லை. குழந்தை தாதி சொல்லும் வார்த்தைகளைப் பேசிப் பழகினன்; அவள் கைவிரலைப் பிடித்துக்கொண்டே நடந்தான்; பெற்றோரையும், பெரியோரையும், தெய்வத்தையும் வணங்கக் கற்றான்; இவையெல்லாம் பெற்றோருக்குப் பெருமகிழ்வீந்தன. குழந்தையின் ஸ்பரிசம் தந்தைக்கு அமுதானந்தச் சிலிர்ப்பளித்தது. 'தன்மரபு வழிவழி வாழும்; இவன் கீர்த்தி வானுவான்' என்று திலீபன் மகிழ்ந்தான்.

கல்வி

ஐந்து வயதில் குடுமிவைத்து ரகுவைப் படிக்கப் போட்டார்கள்; நதிமுகம் வழியே விரிகடலிற் புகுவதுபோல், எழுத்துக் கற்றுக் கல்விக் கடலிற் புகுந்தான் ரகு. உபநயனம் ஆனபிறகு, புலவர்கள் அவனுக்குக் கல்வி பயிற்றினர்கள். தக்க பொருளின்பால் செய்யப்படும் முயற்சி பலனளிப்பதுபோலவே புலவர் புகட்டிய கல்வி ரகுவிடம் நல்ல பயனீந்தது. அவன் புத்தி சூரியனைப்போல் விளங்கியது: காற்றினும் வேகத்துடன் சூரியன் ஏழ்பரித்தேரில் நாலுதிசையும் தாண்டுகிறான்; அதுபோலவே, குருசேவை, பாடம் கேட்டல், கிரகித்தல், சிந்தித்து மனத்தில் நிறுத்தல், அதைப் பற்றிப் பேசல், அர்த்த விக்ஞானம், தத்வ விக்ஞானம் ஆகிய ஏழு புத்தி குணங்களால், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருஷார்த்தங்களைத் தரும் நான்கு வித்தைகளையும் கற்றான் ரகு. தந்தை திலீபனே மகனுக்கு அஸ்திர வித்தையும் அதற்குரிய மந்திரமும் பயிற்றினன். இளம் யானைபோலக் கம்பீரமும்,

இளங்காளைபோல மனோஹர வடிவுங் கொண்ட வாலிப னானன் ரகு.

இளவரசன்

பிரமசரியாசிரம தீக்ஷை முடிந்ததும், அவன் விவாக தீக்ஷைபூண்டு, இல்லறம் புகுந்தான். நுகத் தடிபோல நீள் கரங்கள், கதவுபோல் அகன்ற மார்பு, பெருத்த கழுத்து இவற்றுடன் அவன் தந்தை யினும் உடல்வனப் பெய்தியிருந்தான்; எனினும், பணிவுடன் நடந்து கொண்டான். திலீபன், தான் நீண்டகாலமாக வகிக்கும் காவற்சுமையைச் சிறிது குறைக்க எண்ணி, ரகுவிற்கு யுவராஜபட்டம் சூட்டி னான். நற்குணத்தை விரும்பும் திருமகள், குவியும் தாம ரையினின்று புதிதாய் மலரும் நீலோத் பலத்திற்கு வரு வதுபோலே, தனது மூலஸ்தானமான திலீபனிட மிருந்து மெல்ல ரகுவிடம் வந்தாள். காற்றுடன் கூடிய கனல்போலும், மேகங்கள் விலகிய சரத் சூரியன் போலும், மதமொழுகும் யானை போலும், ரகுவுடன் கூடிய திலீப ராஜன் அசாத்திய பலமும், சோபையும், புகழும் பெற்றான். இந்திரன் போன்ற திலீபன் ஒன்று குறையத் தொண்ணூற்றொன்பது அசுவமேத யாகங் களை முடித்தான்.

போர் வீரன்

நூறுவது வேள்விமுடிக்கக் குதிரையை அவிழ்த்து விட்டான் திலீபன். அக்குதிரை பின்னே ரகு சென் றான். நூறு யாகம் நிறைவேற்றினவனுக்கு இந்திர பதவிகிடைக்குமல்லவா? ரகுவின் வீரர் எதிரிலேயே உருமறைந்துவந்து, இந்திரன் வேள்விக் குதிரையை அப

கரித்து ஒளித்தான். ரகுவின் சேனை திகைத்து நின்றது. அப்போது எதிர்பாராமல் அங்கே வசிஷ்டர் பசு நந்தினி தோன்றியது. அதன் வேர்வையால் கண்ணைத் துடைத்துக் கொண்டான் ரகு. உடனே அவன் புலனுக் கெட்டாத பொருள்களைக் காணுந் திறமை பெற்றான். அதனால் வேள்விக் குதிரையை இந்திரன் தேரில் கட்டிக் கொண்டு போவதைப் பார்த்தான். உடனே ரகு இந்திரனை, உரக்க, விண்ணெட்டக் கூவினன்: "ஹே தேவேந்திரா, நீயே முதலில் அவிர்ப் பாகம் சாப்பிடுவதாக அறிஞர் எப்போதும் சொல்வர்; நித்தியதீக்ஷை பூண்ட என் தந்தையின் வேள்வியை ஏன் தடுக்க முயலுகிறாய்? நீ தெய்வ விழியுள்ளவன்; மூவுலகிற்கும் இறைவன்; வேள்விக்கு இடையூறு செய்வோரை நீ தடுக்க வேண்டும்; அப்படியிருக்க, நீயே தருமச் செயலுக்குத் தடைசெய்வாயானல், தருமானுஷ்டானங்களே நிற்கவேண்டியதுதான்! சன்மார்க்கப் பெரியோர் நெறியில்லா நெறியில் செல்லமாட்டார்கள்; பகவானே, இக்குதிரையை விடுவி; அது வேள்விக்கு அவசியமானது."

இதைக் கேட்ட இந்திரன் வியந்து தேரைத் திருப்பி வந்து, ரகுவிற்குப் பதிற் சொன்னன்:—

"க்ஷத்திரியகுமாரா, நீ சொல்வது உண்மைதான்; ஆனல், புகழையே செல்வமாகக் கொண்டவர் அதைக் காக்கவேண்டுமல்லவா? வேள்விகளால், உலகறிந்த என் புகழை மறைக்கப் பார்க்கிறான் உன் தந்தை; ஹரியைப் புருஷோத்தமன் என்பர்; சிவனை மஹேசன் என்பர்; முனிவர் என்னைச் சதமகன் என்பர்; அப்

பெயர் எனக்கே பொருந்தும். ஆதலால் முன்னே சகரன் குதிரையைச் செய்ததுபோல நான் உன் தந்தை குதிரையை அபகரித்தேன்; முன்னே சகர புத்திரர் செய்ததுபோல் நீயும் திரும்பிச் செல்!"

குதிரையைக் காக்கும், அச்சமற்ற ரகு சிரித்தான்:-

"இந்திரா, இதுவே உன் உறுதியானால், எடு ஆயுதத்தை; ரகுவை வெல்லாமல் உன் எண்ணம் பலியாது" என்றான்; ஆலீடத்திலிருந்து வில்லை நாணேற்றி அம்பைத் தொடுத்தான்; சினம் பொங்கி இந்திரனும் ஒரு வலிய அம்பு தொடுத்தான்; அந்த அம்பு ரகுவின் மார்பிற் பாய்ந்தது; குமரனைப் போன்ற வீரனான ரகு தன் பெயர் பொறித்த ஒரு அம்பை விட்டான்; அது ஐராவதத்தைத் தட்டிக் கொடுத்துச் சுரசுரத்த விரல்களையுடைய இந்திரன் கையில் தைத்தது; மற்றொரு மயிலிறகு தொடுத்த அம்பு, இந்திரன் வச்சிரக்கொடியை வீழ்த்தியது. அதைக் கண்டு, சுர லோகத்திருவின் கூந்தலையே அறுத்ததுபோல எண்ணி முனிந்தான் இந்திரன்.

இருவருக்கும் கடும்போர் நடந்தது; இரக்கை கொண்ட பாம்புகள் போலே அம்புகள் பறந்தன; நீர் மேகம் மின்னலை அணைக்க முடியுமா? இந்திரன் ரகுவை வெல்ல முடியவில்லை. ஒரு பிறையம்பினால் இந்திர வில்லின் நாணை அறுத்தான் ரகு. இந்திரன் மலைச் சிரகறுத்த வச்சிராயுதத்தை எடுத்தோங்கி ரகுவின் மார்பில் அடித்தான். இரகு வலி பொறாது வீழ்ந்தான்; மீண்டும் சமாளித்துக்கொண் டெழுந்தான்; இரகுவின் வீரத்தைக்கண்டு இந்திரன் வியந்து மெச்சினான்: "மலை

யைப் பிளக்கும் என் ஆயுதத்தை நீயே தாங்கி எதிர்த் தனை ; உன் வீரத்தை மெச்சினேன் ; குதிரையைத் தவிர வேறென்ன வரம் வேண்டுமானாலும் கேள் ; தருகிறேன் !" என்றான். இன்னொரு கணையைப் பாய்ச்சப் போன ரகு, அதை நிறுத்தி, " குதிரையை விடமுடியா தானால், நூறுவது யாகத்தை முடித்த பலனை எந்தைக்குத் தருக !" என்றான். இந்திரன் அவ்வாறே நூறுவது யாக பலனை யளித்துச் சென்றான் ; இரகு தந்தையிடம் இச்செய்தியைத் தெரிவித்தான். தந்தை, குலிசம்பட்ட மகன் மார்பைத் தடவிக்கொடுத்தான் ; மகன் வீரத்தைக் கண்டு மகிழ்வால் நிறைந்தான். தான் செய்த 99 யாகங்களும் அத்தனை மோக்ஷப் படிகளாகக் கருதினான். குல விரதத்தின்படி, திலீபன் உலக விஷயங்களைத் துறந்து, வீர ரகுவிடம் வெண்குடையை (அரச பாரத்தை) அளித்து, முனித்தொழில் பூண்டு, ஒரு வனத்தரு நிழலில் வாழ்ந்தான்.

* * * *

ரகு, தனது அரியணையை உறுதியாக்கி, குடிகள் மகிழும்படி நீதி செய்தான். அவனரசில் திருவும் கலையும் சேர்ந்து விளங்கின. அதிக வெப்பமும், அதிகக் குளிரும் இல்லாத தென்றலைப் போல, அவன் குடிகளுக்கு இதமாயிருந்தான். தனது தலைநகரையும், நாட்டையும் பலமாக்கி நல்ல காவலில் வைத்தான். சிற்றரசரை அடக்கி யாண்டான். பிறகு அயோத்தியினின்று படைநடத்தி, கிழக்கேயிருக்கும் வங்கம், கலிங்கம் முதலிய நாடுகளை வென்று, தெற்கே காவேரியையும் கடந்து, கன்னியாகுமரி வரை படைநடத்தி,

பிறகு மேற்கேயுள்ள நாடுகளை வென்று, வடக்கே சிந்து நதிவரை சென்று, பிறகு இமாலயப் பிரதேசங்களைக் கைப்பற்றி அஸ்ஸாமை வென்று, தனது திக்விஜயத்தை முடித்து, அயோத்திக்குத் திரும்பி, விசுவஜித் யாகம் நடத்தினன். அப்போது போர் வெற்றியால் குவிந்த ஏராளமான பொருள்களை யெல்லாம் ஜனங்களுக்கு அள்ளிக் கொடுத்தான்.

ரகுவிற்கு அஜன் என்னும் வீர மைந்தன் பிறந்தான். அவன் கல்வி, கேள்வி, போர்க்கலைகளில் தேர்ச்சி பெற்று வீர வாலிபனுகி, சுயம்வரத்தில் இந்து மதியை அடைந்து மணந்தான். ' அஜனுக்கு முடி சூட்டி, ரகு முனி ஆசிரமத்திற்குச் சென்று, இறுதி நாட்களை ஆத்ம சாதனத்திற் கழித்து முக்தி யெய்தினன். அஜனுக்கும் இந்து மதிக்கும் தசரதன் பிறக்கிருன். இவனே இராமன் தந்தை ; இராமன் வரலாறு அனைவருக்கும் தெரிந்ததே. இராமன் தனது அவதார காரியத்தை முடித்து வைகுண்டம் சென்ற பிறகு, அவன் மகன் குசன் நாடாளுகிருன். அவனுக்குப் பிறகு அவன் மகன் அதிதி அரசாளுகிருன். அதிதிக்குப் பிறகு, வழி வழியாக இருபத்தோரு மன்னர் ரகு வம்ஸத்தை அரசாளுகின்றனர். இறுதி மன்னன் அக்னிவர்ணன் ஆட்சியுடன் நூல் முடிகிறது.

ரகுவம்ஸத்தின் சுவை யறிந்தோம் ; இனிக் குமார ஸம்பவத்தின் இனிமையைச் சிறிது நுகர்வோம்.

ரு. பார்வதி

இமாலயம்

உலகிற்கு அளவுகோல் போல மலைக்கரசான இமாலயம் ஓங்கி நிற்கிறது; அது இரத்தினங்களையும், மூலிகைகளையும், தாதுப் பொருள்களையும் சுரக்கிறது; அதன்முடி மேகமண்டலத்தைத் தாண்டி உயர்ந்தது; அது பனியால் மூடப்பெற்றது. இம்மலையில் சித்தர் வசிப்பர். இம்மலைக் குகைகளினின்றும் பாய்ந்து வரும் காற்று, மூங்கில்களுட் புகுந்து, காந்தாரத்திற் பாடும் கின்னரருக்குச் சுருதி போடுகிறது. மலை யானைகள் உறைஞ்சி, தேவதாரு மரங்கள் பட்டை யுரிந்து பால் மணம் பரவும். சிங்கங்கள் யானைகளைக்கொன்றருந்திச் செல்லும்; அதன் இரத்தச் சுவடுகள் வழியே சென்று, வேடுவர் சிங்கத்தைப் பிடிப்பர். கங்கைத்துமி, தேவ தாரு, தோகை விரிந்த மயில் - இவற்றால் காற்று குளிர்ந்து வீசி, வேடரின் களைப்பை நீக்கும். மலையரச னுக்கு வெண்சாமரம் வீசுவதுபோலக் கவரி மான்கள் நிலாக்கற்றை போன்ற வாலை இங்குமங்கும் சுழற்றித் திரியும். கீழோரையும் மேலோர் காப்பதுபோல், பகலி லும் தனது குகையிருளைக் காக்கும் இமாலயம். கின்னரக்காதலர் வசிக்கும் அக்குகைகளில் மேகத் திரை படரும். இமயத்திலுள்ள பொய்கைத் தாமரையை வழிபாட்டிற்காக, ஸப்த ரிஷிகள் பறித்துச் செல் வர். இம்மலை உலகைத்தாங்கும் சக்தியுடையது;

வேள்விக்கு வேண்டிய சோமலதைகளைக் கொண்டது. அதனால் பிரமதேவன், இதை மலையரசனாக்கி, யக்ஞ பாகத்தையும் அளித்தான். (அதாவது இம் மலைநாட்டிற்கு ஒரு அரசன் ஏற்பட்டான் என்க.)

மலையரசன்

மலையரசன், தனக்கேற்ற பத்தினியான மேனகையை மணந்தான். மேனகை தேவர் மானஸ புத்திரி; முனிவர் போற்றும் நல்லாள். அவளுக்கு மைநாகன் என்னும் முதற் புதல்வன் உதித்தான்.

பிறகு, மேனகையின் விரதப் பயனால், சதி தேவியே அவளுக்கு மகளாய்ப் பிறந்தாள். தக்ஷ யாகத்தில், யோகத்தால் உடல் நீத்த தேவி, நன்னெறி யின்பத்தால் வரும் செல்வம்போல, மேனகை வயிற்றிற் பிறந்தாள். அத்தினம், திசையெங்கும் நல்ல காற்று வீசியது; சங்கொலித்தது; பூமாரி பெய்தது; தாவர ஜங்கமங்கள் ஒரு சுகவுணர்வு பெற்றன. புதிய மேக கர்ஜனையால் முளையெடுத்த பூமி போல், இரத்தின மயமாக விளங்கினாள் மேனகை. நாளுக்கு நாள் இளம் பிறைபோலக் கலையோங்கி வளர்ந்த குழந்தையைத் தந்தை பார்வதி என்றழைத்தான்; தாய் உமா என்றழைத்தாள். வசந்தத்திற்கு மாம்பூ போல, தனக்குதித்த பார்வதியிடம் மலையரசனுக்கு அன்பு மிகுந்தது.

பார்வதி

சுடரால் விளக்கு போலும், கங்கையால் விண் வழி போலும், வியாகரணத்தால் வித்துவான்

போலும், பார்வதியால் மலையரசன் பொலிவெய்தி னன். பார்வதி தனது சிறுதோழிகளுடன் கங்கை மணலில் பொம்மை வைத்து விளையாடினள். சரத் கால கங்கையை அன்னக் கூட்டம் போலவும், இரவில் ஜோதி மூலிகையை ஒளி போலும், பூர்வ ஜன்ம ஞானக் கலைகள் பார்வதியை இயல்பா யடைந்தன.

பருவமடைந்த பார்வதி, எழுதிய சித்திரம் போலும், கதிரால் மலர்ந்த கமலம் போலும், பொலி வெய்தினள்—ஒள்ளிய நகங்கள் ; நகரும் ரோஜா போன்ற சேவடி ; அன்ன நடை ; அதை முரல்வது போன்ற நூபுரங்கள் ; பிரமன் சிருஷ்டித்திறமையெல் லாம் விளங்கும் முழங்கால்கள் ; துதிக்கை, வாழை இவற்றை வென்ற மெல்லிய தொடைகள் ; தாமரை நூலவ்வளவுகூட இடையீடில்லாமல் நெருங்கி நிவந்த தட முலைகள் ; வாகைப் பூப்போல மென்மையான தோள் ; தன்னை அணி செய்யும் முத்துமாலைக்கு அணி யாகும் கழுத்து ; மதியும் மலரும் சேர்ந்தது போன்று அழகும், ஒளியும், மணமும் இலக்ஷ்மீகரமும் பொலியும் திருமுகம் ; குயிலைப்பழித்த குரல் ; மான் இவளிடம் பயின்றதோ அல்லது இவளே மானிடம் பயின்றளோ எனும்படி புரளும் விசாலமான குவளைக் கண்கள் ; வேள் - வில்லின் செருக்கழித்த மைப் புருவம் ; கவரி மான் வாலும் வெட்கும் பின்னல் ; விரிப்பானேன் - அழகையெல்லாம் ஒருங்கே கூட்டி இவளுறுப்புக்களை ஆக்கினன் பிரமன்.

நாரதர் வாக்கு

கன்னி பார்வதி ஒரு நாள் தனது தந்தையருகே இருந்தாள்; அப்போது, எங்கும் விருப்பம் போல் உலாவும் நாரதர் தோன்றி, "இக்கன்னி சிவனிற் பாதி கொண்டு ஏகபத்தினியாக விளங்குவாள்" என்றார். அதனால் தந்தை மலையரசன், தனது செல்விக்கு வேறு வரன் பாராதிருந்தான். மந்திரஹவி அக்கினிக்கே உரியதுபோல, உமையும் சிவனுக்கே உரியவளன்றோ?

ஆனால் சிவபிரான் மறுப்பரோ என்றஞ்சி, மலையரசன் வலுவில் கேட்கவில்லை; கேட்டால் விபலமாமோ என்றஞ்சி, விருப்பங்களில் உதாசீனரா யிருப்பர் சாதுக்கள்.

௬. சிவனார் தவம்

முன்னே தக்ஷனுடன் சினந்து சதிதேவி உடல் நீத்தது முதல், பரமன் விரக்தனாகி, தனியனாகித் தவ மேற்கொண்டான். இமயமலைப் பாங்கரில், கங்கை பாயும் தேவதாரு மரங்களும், கஸ்தூரி மணமும், கின்னர கானமும் நிறைந்த ஓரிடத்தில், கொன்றையணிந்து, உரியுடுத்தி, கற்பூர சிலாசத்து பூசி, ஒரு சிலாதலத்தில் தன்னையடக்கித் தவத்தில் ஆழ்ந்தான் பரமன்.

அவன் வாகனமான காளை, தனது குளம்பால் பனிக்கட்டியைத் தோண்டிக்கொண்டு, உன்னதமான சிம்ஹத்வனியுடன், கம்பீரமாகக் காவல் புரிந்து கொண்டிருந்தது. எல்லாத் தபோ பலன்களையும் அளிக்கும் அஷ்டமூர்த்தியான பரமன், ஸமிதாக்னி வளர்த்து, ஏதோவொன்றை விரும்பித் தவம் புரிந்தான். தேவர் வணங்கும் இறைவனை மலையரசன் வணங்கினான்; அவனை ஆராதிக்க, சேடிகளுடன் கூடிய தனது மகளான பார்வதி தேவியைப் பணித்தான். யோக சமாதிஸ்தனான பரமன், உமையின் ஆராதனையை ஏற்றான். இப்படி ஒரு பெண்ணிற்கு உரிமை கொடுப்பது தவத்திற்குக் கெடுதல் என்பர்; எனினும், மயக்கும் பொருள் எதிரிலுள்ள போதே மனவுறுதி மிக்க தூயனே தீரனாவான். பார்வதி சிவனுக்குப் பூஜை மலர்கள் பறித்து வருவாள்; அனுஷ்டானங்களுக்கு நீர் சுமந்து வருவாள்; தபோ வேதிகையைச் சுத்தம் செய்வாள். இவ்விதமாகத் தொண்டு செய்யும் பார்வதியின் சிரமத்தைச் சிவன் முடியில் விளங்கும் சந்திரகலை நீக்கும்.

எ. தாரகாசுரன்

இக்காலம், தாரகாசுரன் என்னும் அரக்கன் எழுந்தான்; அவன் கொடுமை தாங்காமல், தேவர்கள், சத்தியலோகம் சென்று பிரமனிடம் முறையிட்டார்கள். "பிரமனே, ஒருவனே, முக்குணம் வகுத்தவனே, ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் நடத்தும் மூவனே, ஆண்பெண்ணை ஆக்க இரண்டுருவானேனே, சராசரப் பிரபஞ்ச முதல்வனே, கல்ப - பிரளயங்களையே இரவு பகலாகக் கொண்டவனே, உலகையீன்ற பிறப்பிலியே, உலகை முடிக்கும் முடிவிலியே, உலகாதியான அனாதியே, தனக்குத் தலைவனற்ற உலகத் தலைவனே, தன்னைத் தன்னால் அறிவோனே, தன்னைத் தானே படைத்தவனே, தன்னில் தானே அடங்குவோனே, வணக்கம்; திரவம் கடினம், இலேசு கனம், ஸ்தூலம் சூக்ஷமம், காரணம் காரியம் இவை யனைத்தும் நீயே. வேத முதல்வனே, புருஷனுக்காக இயங்கும் இயற்கை நீ; இயற்கையின் ஆடலைச் சாக்ஷியாகப் பார்க்கும் புருஷனும் நீயே. நீயே, வேட்போன், அவி நுகர்வோன்; நீயே அறிவோன், அறியப்படுவோன்; நீயே தியானியும் தியானப்பொருளுமாவாய்; பிரமனே வணக்கம்!"

தேவர் துதியால் பிரமன் மகிழ்ந்து அவர்களை நல்வரவேற் றுரைப்பான் :—

" பராக்கிரமசாலிகளான தேவர்களே, பனிமூடிய நக்ஷத்திரம்போல் உம்முகம் ஒளி மங்கியதேன்? விருத்

திரனைக் கொன்ற இந்திரன் குலிசம் மழுங்கியது போலக் காண்பதேன்? வருணன் பாசம், கருட மந்திரத்தாற் கட்டுண்ட பாம்பு போலத் தளர்வானேன்? கொம்பொடிந்த மரம் போல், குபேரன் கதையில்லா திருப்பானேன்? பொலிவிழந்த காலதண்டத்தால் யமன் மண்ணைக்கிறி நிற்கிறான்; ஆதித்யர் தேசிழந்து சித்திரம் போல் நிற்பானேன்? தேவர்களே, பகைவருக்குத் தோற்றீர்களா? நீங்கள் வந்த காரணத்தைச் சொல்லுங்கள். இளங்காற்றில் அசையும் கமலம் போன்ற கண்களாயிரம் கொண்ட இந்திரன் பிருகஸ்பதியைக் குறிக்க, பிருகஸ்பதி வணக்கமுடன் பிரம்மாவை நோக்கிச் சொல்லலானான் :—

"பகவானே, தாங்கள் சொன்னது உண்மை; எங்கள் அதிகாரத்தைப் பகைவர் ஆக்ரமித்துக் கொண்டனர். நீர் தந்த வரத்தால் செருக்குற்ற தாரகாசுரன் என்னும் மஹாசுரன், தூமகேதுபோல உலகை அழிக்க எழுந்துள்ளான். அவன் ஊரில் தாமரை மலரப் போதிய சூட்டையே சூரியன் அளிக்கிறான்; சந்திரன் முழுக்கலையுடன் அவனைச் சேவிக்கிறான். பூந்தோட்ட மணஞ்சுமந்த காற்று, விசிறியசையும் வேகத்தை மீறாது அவன் பக்கத்தில் வீசும். ஆறு பருவங்களும் சேர்ந்து, அவன் தோட்டக்காரர்களுடன் வேலைசெய்து மலர்களைத் தரும். காந்தியுள்ள இரத்தினங்களைத் தன்னுட்கொண்டு, 'தாரகாசுரனுக்கு எப்போது காணிக்கை அளிப்போம்' என்று கடல் எதிர்பார்த்திருக்கிறது. வாசுகி முதலிய மணிப் பாம்புகள் இரவில் அவனுக்கு அணையா விளக்காகப் பணிசெய்கின்

றன. மேரு சிகரத்தைப் பெயர்த்து வந்து, அவன் கிரீடாசைலமாக வைத்துக் கொண்டிருக்கிறான். இந்திரனும் தூதன் மூலம் கற்பகத் திருக்களை யனுப்பி அவன் தயவைக் கோருகிறான். இவ்வாறு ஆராதிக்கப் பெற்றும், ஆசை தணியாமல், அவன் மூன்றுலகங்களையும் வருத்தப் புகுந்துள்ளான். உபகாரத்தாலல்ல, அபகாரத்தாலேதான் தீயன் ஒழிவான். அவனிடம் பல தெய்வப்பெண்கள் சிறையுண்டனர் ; அவன் உறங்கும் போது, அவர்கள் கண்ணீர் விட்டுக்கொண்டே வெண்சாமரம் வீசுவர். தாரகனுக்கு அஞ்சி, தேவர் விமானமேறி பூலோகத்திற்கு வரமுடியாமலிருக்கிறது. வேட்போர் அவியை அவன் பலாத்காரமாகப் பறித்துக்கொண்டு போகிறான். இந்திரன் குதிரையாகிய உச்சைஸ்வரத்தை அவன் அபகரித்தான். அது இந்திரன் புகழையே அபகரித்தது போலாம். சன்னிபாத ஜ்வரத்தில் மருந்து பற்றாது ; அதுபோல எங்கள் உபாயமும் அவ்வரக்கனிடம் பலிக்கவில்லை. சுதர்ஸனமும் ஒரு மார்பணிபோலாகி, அவனுக்கு எத்தீங்கும் செய்ய முடியவில்லை. ஐராவதத்தை வென்ற அவன் யானைகள், மேகங்களை மோதி விளையாடுகின்றன. பவத்துயர் நீங்க, வினைத்தளையறுக்கும் ஆத்மஞானத்தைத் தேடுவர் முமுக்ஷுக்கள். அவரைப்போலவே, இவ்வரக்கனை ஒடுக்கி எங்கள் திருவை மீட்கத்தக்க ஒரு தேவ சேனாதிபனைத் தேடுகிறோம் ; தோற்றியருளுக.

இவ்வாறு பிருஹஸ்பதி பேசியதும், கர்ஜித்துப் பொழியும் மேகத்தை வென்ற மனோகரமான சொற்களைப் பொழிந்தான் பிரமன் :—'தேவர்காள், உங்கள்

விருப்பம் ஆகுக ! எதிர்பாருங்கள் : சிறிது காலத்தில் சேனுதிபனைத் தோற்றுவேன் ; என்னுல் ஓங்கிய அரக்கனை நானே நலிப்பதாகாது ; நச்சு மரமானுலும் வளர்த்தவன் சிதையான். தேவரால் அழியக்கூடா தென்ற வரத்தை அவன் என்னிடம் பெற்றிருக்கிருன். அவன் போரில் வல்லவன் ; சிவரேதஸில் பிறந்த வீரனைத் தவிர வேறு யாராலும் அவனை வெல்லமுடியாது. சிவபிரான் இப்போது சமாதியில் ஆழ்ந்திருக்கிருன் ; உமாதேவி அவனுக்குப் பணிவிடை செய்கிருள். இரும்பைக் காந்தத்தால் இழுப்பதுபோல, தேவியார் அழகால் அரன் மனத்தைக் கவரல்வேண்டும். அரன் மகன், தனது வீரத் திறமையால் தாரகனை வெல்வான் ; தெய்வப் பெண்டிரைச் சிறை விடுவிப்பான் ". இவ்வாறு சொல்லிப் பிரமன் மறைந்தான் ; தேவர் சுவர்க்க மேகினர்.

அ. மன்மதன் வருகை

குமரன் பிறக்கச் சிவ-பார்வதி சேர்க்கையாக வேண்டுமே ; அதற்காக இந்திரன் மன்மதனை நினைத்தான். தோழனான வசந்தன், மாம்பூங்கணை யேந்தித் தொடர வந்தான் அழகிய மன்மதன், புஷ்பபாணன். ஆயிரங்கண்ணன் அவனைப் பார்த்துத் தழைத்துத் தன் அரியணைக்குப் பக்கத்தில் அமர்த்தினான்.

மன்மதன் :—ஆட்களின் ஆற்றலை அறியும் தலைவ ! உனக்கு உலகில் ஆகவேண்டியதென்ன ? ஆணையிட்டருள் ; ஆணையை நிறைவேற்றி, உனது தயவை வளர்க்கிறேன். உன் பதவியை விரும்பி எவனாவது பெருந்தவம் செய்கிறானா ? அதனால் உனக்கு அருமை ஏற்பட்டதா ? சொல்; அவனை என் அம்பிற்கு இணங்கச் செய்கிறேன். பிறவித் துயருக் கஞ்சி, உன் சம்மதமில்லாமல், எவனாவது முத்தியடைய உலகைத் துறந்தானா ? சொல் ; அவனை அழகிய மாதர் கடைக் கண்ணில் நீண்டகாலம் கட்டிப் போடுகிறேன். அசுரன் எவனாயினும் உனக்குப் பகைவனா? அவன் சுக்ர நீதி கற்றவனானாலும் சரி ; சொல் ; வெள்ளம் கரையுடைப்பதுபோல், காமவெள்ளத்தால் அவனை நலிக்கிறேன். அழகிய பதிவிரதையை விரும்புகிறாயா ? அவளே உன்னை வலுவில் அணையச்செய்கிறேன் ; 'அயல் மனை புகுந்தாய்' என்று உன்னை அவமதித்துப் பிணங்கும் பெண் உண்டா ? சொல்; அவள் தளிர்மேனி காமக் கனலால் வேக, உனக்கு இரங்கச் செய்கிறேன். வீர !

தயவுசெய்து வச்சிராயுதத்திற்கு ஓய்வுதா; எந்த அசுரன் உன்மேல் சினந்து உதடசைக்கிறான், சொல்! அவனைப் பெண்கள்முன் நடுங்கச் செய்கிறேன். எனக்கிருப்பது மெல்லிய பூங்கணைதான்; என் தோழன் வசந்தனே; எனினும், உன் தயவால், பிநாகபாணியின் தைரியத்தையும் கெடுப்பேன் என்றால் பிறரைப்பற்றிச் சொல்வானேன்?

இந்திரன் :—நண்பா, இதெல்லாம் உன்னால் முடிந்ததே. என் குலிசம் தவசிகளிடம் செல்லாது; உன் பூங்கணை எல்லாவிடங்களிலும் செல்லும். உன் ஆற்றலை யான் அறிவேன்; அதனாலேயே என் சமானனான உன்னை இப்பெரிய காரியத்திற்கு ஏவுகிறேன். உலகைச் சுமக்கும் திறமை கண்டல்லவா ஆதிசேஷனை விஷ்ணுமூர்த்தி தனது படுக்கை யாக்கினார்? 'சிவன்மீது கூடப் பூங்கணை பாய்ச்சுவேன்' என்றவுடனேயே நாங்கள் கருதிய காரியத்தை நீ கைக் கொண்டவனாகிறாய். அதுவே தேவர் விருப்பமுமாம். ஏனெனில், அசுரரை வெல்ல, அரன் வீரியத்தினின்றும் பிறக்கும் ஒரு படைத் தலைவனைத் தேவர் வேண்டுகின்றனர். சிவனார் சித்தமடக்கிப் பர நிஷ்டையில் ஆழ்ந்திருக்கிறார். நீ ஒரு கணை பாய்ச்சினாலேதான் அவர் உணர்வுற்றெழுவார். தூயளான பார்வதியை அவர் வரிக்கும்படி நீ செய்யவேண்டும். 'சிவ வீரியத்தைத் தாங்கத் தக்கவள் அவளே' என்று பிரமதேவர் சொன்னார். இப்போது பார்வதி தேவி, இமய முடிமேல் தவம் புரியும் சிவனை வழிபடுவதாக என்னைச் சார்ந்த அப்ஸரர் சொன்னார்கள். வித்து முளைக்க நீர் வேண்டுவது போன்று, இக்

காரியத்திற்கு உனது துணை வேண்டும். தேவ காரியம் சித்திபெறப் புறப்படு ; சிவனாலேதான் தேவர் வெற்றி பெறவேண்டும் ; அத்தகைய சிவன் மேல் அம்பு விடும் பேறு நீயே பெற்றாய். இக்காரியத்தால் உன் புகழ் பெருகும் என்று சொல்லவும் வேண்டுமோ ? பலிக்கா விட்டாலும், அசாதாரணமான காரியத்தை முயல்வது ஆண்பிள்ளைகளுக்குப் பெருமையாம். உன்னைவேண்டு வோர் தேவர் ; நீ செய்யும் காரியத்தின் பலனோ மூன் றுலகிற்கும் இசைந்ததாகும். உன் பூங்கணையாற் செய்வது கொடிய காரியமல்ல. என்னே உன் அற்புத வீரியம் ! காற்று தீக்குத் துணையாவது போலவே வசந்தன் உனக்குத் துணையாவான்.

தெய்வ நிர்மால்யத்தைப் பெறுவது போல, இந்தி ரன் கட்டளையைக் காமன் வணக்கமுடன் ஏற்றான். ஐராவதத்தைத் தட்டிக்கொடுத்துக் கடினமான கை யால் இந்திரன் மன்மதன் அங்கத்தைப் பரிசித்தான்.

கூ. காமனை எரித்தல்

'உடல் போனாலும் பரவாயில்லை; விண்ணோர் விருப்பத்தை நிறைவேற்றுவேன்; துணைக்கு வசந்தன் இருக்கிறான்' என்றுறுதிகொண்டு, மன்மதன் ரதியுடனும், வசந்தனுடனும் இமயமலையேறிச் சிவாச்சிரமத்தை யடைந்தான். அங்கே தவம் புரிவோருக்கு எதிரிடையாக, வசந்தன் தனது உண்மை வடிவை யெடுத்தான்:

சூரியன் வடக்கே திரும்பினான்; இளவேனில் பூத்தது; அயல்செல்லும் கணவனைப் பார்த்து இல்லாள் நெட்டுயிர்ப்பது போன்று தென்றல் வீசியது; அசோகம் துளிர்த்துப் பூத்துப் பெண்களின் பாத சம்பந்தத்தை வேண்டுவது போலப் பொலிந்தது. வசந்தன் காம பாணம் தயாரிப்பவனல்லவா? அவன் மாம்பூங்கணைகளுக்குத் தளிர்-இறக்கை கூட்டி, காமாக்ஷரம் போன்று வண்டுகளைப் புகுத்தினான்; மலைக்கோங்குப்பூ நிறம் பொலிந்தது; ஆனால் மணமில்லை; பிரமன் படைப்பில் ஏதாயினும் குறையுண்டு. பலாசப் பூக்கள் இளமதி போலச் சிவந்து விளங்கின. அவை, வசந்தனுடன் புணர்ந்த வனப் பெண்களின் நகக்குறிகளைப் போல் விளங்கின.

வண்டு மையாகவும், இளஞ்செங்கதிர் மாந்தளிரின் உதட்டுச் சாயமாகவும் கொண்டு, திலகப்பூம்பொலிவெய்தி விளங்கியது வசந்தத் திருமுகம். மதங்கொண்ட மான்கள், சடசடவென்று திரும்பிச் சருகுகளூடு சென்

றன ; பூக்களினின்றுதிரும் மகரந்தத் தூட்கள் அதன் பார்வையை மறைத்தன. மாமொட்டருந்தி, இனிய குரல் பெற்ற ஆண்குயில்கள் கூவின ; அது "பெண்டிர் பிணக்கந் தீர்க" என்று மன்மதன் மொழிவது போலிருந்தது. கிம்புருஷ ஸ்திரீகள் பனிக்காக உதட்டில் சாயமும், உடலிற் குங்குவமும் பூசிக்கொள்வர் ; இப்போது பனி விலகியதால், அவர்கள் பூச்சில்லாமல் இயல்பான வெண்ணழகுடன் தோன்றினர்.

இவ்வாறு வசந்தம் வந்ததைக் கண்டு ஈசுவர வனத் தபோதனர், கஷ்டப்பட்டு மனோவிகாரங்களைப் போக்கி, இந்திரியங்களை வசப்படுத்திக் கொண்டனர். மன்மதன் ரதியுடன் அங்கே தோன்றவே, தாவர ஜங்கம தம்பதிகளுக்கெல்லாம் காதலுணர்ச்சி எழுந்தது. ஆண் பெண் வண்டுகள் ஒரே மலர்க் கிண்ணத்தில் தேனருந்தின ; ஆண் மான், சுகத்தால் கண்மூடும்படி, தனது கொம்பினால் பெண்மானைச் சொறிந்து கொடுத்தது. பூந்தூள் மணக்கும் தாமரைக்குள நீரைப் பெண் யானை தனது ஆணுக்குத் தந்தது ; சக்ரவாகம், தான் உண்ட தாமரையின் மீதியைத் தன் காதலிக் களித்தது. கின்னரன், பாட்டிற் கிடையே, விழி புரளும் தனது காதலியின் ஒள்ளிய முகத்தில் முத்தமிட்டான். பூங்கொத்தாகிய தனங்களையும், தளிர்களாகிய உதடுகளையும் கொண்ட கொடிகளை, மரங்களாகிய காதலர், தாழ்ந்த கிளைக்கரங்களால் அணைந்தனர்.

வசந்தம் பொலிகிறது ; கின்னரர் பாடுகின்றனர் ; சிவன் புறவுணர்வின்றி, தன்னுள் லயித்திருக்கிறான் ; ஆத்ம ஜயம் பெற்றவருக்கு என்ன இடர்கள் வந்தா

லும் சமாதியிலே கலையாது. கொடிவீட்டின் வாயிலில், இடது கையில் தங்கப் பிரம்புடன் நின்று, நந்தீசுவரன், பூதகணங்களைப் பேசாதிருக்கும்படி ஆள்காட்டி விரலை வாயில் வைத்துச் சாடை காட்டினான். மரங்கள் ஆட வில்லை; வண்டுகள் அலையவில்லை; பறவைகள் பாட வில்லை; விலங்குகள் திரியவில்லை—நந்தியாணையால் ஓவி யத்தில் எழுதியது போலிருந்தது அவ்வனம். எதிர் - சுக்கிரனில் பிரயாணம் செய்பவனைப்போல, மாரன், நந்திகண் படாமல், சிவன் தியானிக்கும் இடத்தை யடைந்தான். அந்த இடம் கொன்றை சூழ்ந்திருந்தது; தேவதாரு நிழலில், வேதிகையில், புலித்தோல்மீது, வீரா சனத்தில் உறுதியாக வீற்றிருந்தான் முக்கண்ணன்; இரண்டு கைகளும் கமலம் பூத்ததுபோல் தொடை களுக்கிடையே யிருந்தன.

பாம்பால் எடுத்துக் கட்டி உயர்ந்த கற்றைச் சடை; காதில் இரண்டு வடமுள்ள மாலை; நீலகண் டத்தாற் பொலியும் மான்தோல் ஆடை; சிறிது காந்தி யுடன் நிச்சல - உக்கிரமான கருவிழி; இமை கொட் டாத மூக்குநுனிப் பார்வை; மழையில்லா மேகம், அலை வீசா மடு, காற்றுடா விளக்கு இவற்றைப் போன்ற அமைதி; பிரம்ம கபாலத்தினின்று, கொழுந்தேறிப் பொலியும் தவக்கனல் ஆகிய இத்தகைய கோலத்துடன் வீற்றிருந்த பரமனைப் பார்த்தான் பஞ்சபாணன். நவத் துவாரங்களையும் கட்டி, சமாதியால் மனத்தை யடக்கி இதயத்திலுய்த்து, க்ஷேத்ரக்ஞர் எவனை அக்ஷரனாக, அழிவற்றவனாக அறிவரோ, அந்தப் பரமாத்மாவே தானென்ற சாக்ஷாத்காரத்தில் இருந்தான் தற்பரன்.

இவ்வாறு, மனத்தாற்கூடப் பார்க்க முடியாத சிவனருகே வந்து, அச்சத்தால் வில்லும் அம்பும் நழுவியதுகூடத் தெரியாமல் நின்றான் மன்மதன்.

அப்போது வனதேவதைகள் சூழ விளங்கிய பார்வதிதேவி தோன்றினாள். அவள் அழகால், போன பலம் அவனுக்கு மீண்டது ; பார்வதி வசந்தப்பூவணிகளுடன் பொலிந்தாள் ; அவள், பூங்கொத்துக்களால் நிறைந்த தளிர்க்கொடி போலத் தனபாரங்களால் குனிந்து, இளங்கதிர் போன்ற செவ்வுடை யணிந்து தோன்றினாள். தக்க இடத்தில் ஒளிந்துகொண்ட மன்மதன் வில்நாணிற்கு மற்றொரு நாண்பூட்டியது போன்றது பார்வதி இடுப்பிற் கட்டிய வகுளமாலை ; அடிக்கடி நழுவும் அம்மாலையைப் பார்வதி சரிப்படுத்திக்கொண்டு வந்தாள். பத்மினிப் பெண்ணான பார்வதி, தனது விருப்பத்தை நினைந்து நெட்டுயிர்த்தாள் ; அவள் உயிர்ப்பு தாமரைபோல மணந்தது. தனது கொவ்வைச் செவ்வுதடுகளைச் சுற்றும் தும்பிகளை, விளையாட்டிற்குக் கையில் வைத்திருந்த தாமரையால் அவள் அடிக்கடி ஓட்டினாள். மாசற்ற உறுப்புகளுடன் ரதியினும் அழகிய பார்வதியைப் பார்த்து, ஜிதேந்திரியனாகிய சூலபாணியையும் திரும்பிப் பார்த்துத் தனது காரிய சித்தியைக் கோரினான் மன்மதன்.

பார்வதி தனது வருங்காலக் கணவனான சிவனருகே வந்தாள் ; பரமாத்மனான பரஞ்சோதியை நேரே கண்டு, சிவனும் தனது யோகங் கலைந்து, வீராசனத்தை விட்டெழுந்தான். நந்திதேவன் சிவனை வணங்கி, சேவை செய்யப் பார்வதி வந்திருப்பதைத்

தெரிவித்தான் ; புருவச் சாடையால் சிவன் அனுமதி யளிக்கவே பார்வதிதேவியை உள்ளே வரவிடுத்தான் நந்தி. பார்வதி தன் கையால் கொய்து தளிருடன் கூடிய வசந்த மலர்களை, அவள் தோழிமார் சிவனடியில் தூவினர். பார்வதி, கூந்தலில் முடித்த கோங்குப்பூ சரிய, செவியில் வைத்த தளிர் நழுவ, சிவனுக்குத் தலை வணங்கினாள். "மற்றொரு பெண்ணைக் கூடாத கண வனை நீ அடைக" என்று சிவபிரான் பார்வதியை ஆசீர்வதித்தார். அது உண்மையே ; உலகில் பெரியார் சொல் பிசகாது.

பார்வதி சிவனருகே யிருக்கிறாள்; இதுவே சமயம் என்று மன்மதன், தீயில் விழும் விட்டிலைப் போலச் சிவன் மேல் பாணம் போட நாணை உருவினான். அப்போது, வெயிலில் உலர்ந்த கங்கைத் - தாமரை - விதைகளால் தொடுத்த மாலையைத் தனது செங்கை யால் சிவனுக்குச் சமர்பித்தாள் பார்வதி. இறைஞ்சு வார்க்கினியனான முக்கண்ணன் அந்த மாலையை அங்கீ கரித்தான் ; அக்கணமே மாரன் கணை தொடுத்தான் ; மதிகண்ட கடல்போல, உறுதி குலைந்து, செங்கனிவாய் உமையின் முகத்தில் திருவிழியை நாட்டினான் சிவன். பார்வதிக்குச் சர்வாங்கமும் புளகித்தது ; அழகிய கண்கள் நாணத்தாற் சலிக்க, முகத்தை ஒரு புறம் திருப்பிக்கொண்டு, அவள் தனது காதலை விளக்கினாள். அப்போது, ஜிதேந்திரியனான அரன், தன் புலன்களை மீண்டும் அடக்கி, 'சித்தவிகாரத்தின் காரணமென்ன' என்று சுற்றிலும் பார்த்தான் ; இடதுபுறம், தன்மேல் அம்பு பாய்ச்சக் குனிந்து வில்லை வளைக்கும் மன்மதனைக்

கண்டான். தவத்தால் சினம் பெருகியது ; நெற்றிக் கண் சுடர்நெருப் புமிழ்ந்தது ; 'சினந்தணிக, தணிக, தலைவா!' என்று தேவர்கள் முறையிட்டனர் ; அதற்குள் அரன் கண்ணிற் பிறந்த கனல் மாரனைச் சாம்பலாக்கியது.

மாரனை எரித்தபின், தவத்திற்கு இடையூறான பெண்ணை விலக்கித் தனது பூதகணங்களுடன் மறைந்து வேறிடம் சென்றான் சிவன். தன்னைச் சிவனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற தந்தை விருப்பம் பலிக்கவில்லை ; தனது உடலழகும் வீணானது ; தோழிகள் முன்பு தனக்கு இப்படியானது ; பார்வதிதேவி வெட்கி மகிழ்வற்று மனை சேர்ந்தாள்.

௧0. இரதியின் துயரம்

இரதிதேவி மூர்ச்சையானாள்! மூர்ச்சை தெளிந்து பார்க்கையில் காமனைக் கண்டாளில்லை; அவன் எரிந்த சாம்பலில் அவள் விழுந்து புரண்டலறினாள் :—

" ஹா, பிராணநாதா! பூவுக்கு நீர் போல எனக்குச் சீவாதாரமான காதலா, நீ எங்கே மறைந்தாய்! 'அழகுக்கு மன்மதன்' என்பர் உலகில்! ஹா, நீயும் சாம்பலானாயோ! இருட்பாதையில், மேக கர்ஜனையால் பரவசமான காதலரைக் காதலிகளிடம் சேர்க்கவல்லவன் நீயன்றோ? இன்சொற் பெண்குயிலுக்கு, இனி யார் சேர்க்கை - இன்ப மளிப்பர்? நீ எனக்கு வசந்த புஷ்பாலங்காரம் செய்தாய்; பாதியில் தேவர் அழைத்தனர்; வந்தாய்; வெந்தாய். இனி யார் எனக்கு அலங்கரிப்பர்? ஹா நாதா! உன்னைப்பிரிந்து ஒருகணம் வாழ்ந்தேன் என்னும் வசை பொறேன்; இதோ யானும் செங்கொழுந்தேறும் தீயில் விழுந்து, உடலை நீத்து, உன்னிடம் வருகிறேன். உனக்குப் பூங்கணை தரும் வசந்தன் எங்கே? அவனும் சம்பலானானோ!"

அப்போது வசந்தன் வந்தான்; அவனைக் கண்டதும் ரதியின் துக்கம் அதிகரித்தது; உறவினரைக் கண்டதும் துயரம் மனக்கதவைத் திறந்துகொண்டு வரும். "வசந்தா உனது நண்பன் சாம்பலானனே! வசந்தா, எனது நாதனைக் கொன்றதால், விதியின் கொலைத் தொழில் பாதியே முடிந்திருக்கிறது; என்னையும் கொன்றாலேதான் அது முற்றுப்பெறும்; நாதன் இறந்தான்;

நானும் இறந்தேன் ; பற்றுக்கோடான மரத்தை யானை விழ்த்திய பின், கொடியும் விழவேண்டியது தானே! வசந்தா, என்னையும் தீயிலிட்டு ஆருயிர்க் கணவனிடம் சேர் ; பந்துவாகிய உன் கடமை இது ; சந்திரனுடன் நிலா மறைகிறது ; மேகத்துடன் மின்னல் மறைகிறது ; கணவன் வழியில் மனைவி செல்லுகிருள். இதை அறிவிலிகளும் அறிவர். நல்லோய், எங்களுக்கு நீ பூங்கணையீந்து மிகவும் துணை செய்தாய். வணக்கமுடன் வேண்டுகிறேன் ; விரைவில் ஜ்வ.தயடுக்கி, என்னைத் தீயிலிடு ; தீயைத் தென்றலால் ஜ்வாலையாக்கு ; ஒரு கணமும் என்னை நீங்கி மகிழார் உனது நண்பர் ; அவரிடம் நான் போய்ச் சேருகிறேன்.

இச்சமயம், "ஹே, ரதி ; கணவன் விரைவில் உனக்கெய்துவான்! சிவத் தீயில் விட்டில்போல அவன் இறந்ததன் காரணத்தை அறிவாயாக: இது பிரம்மசாபத்தால் விளைந்தது ; சிவ - பார்வதி கலியாணத்திற்குப் பிறகு இச்சாபம் விலகும் ; சிவத்தீயில் விட்டில்போ லிறந்த மதன் உனக்கெய்துவான் ; கோடையில் வற்றிய ஆறு மாரியில் நிறையும் ; உன் உடலைக் காப்பாற்று" என்று அசரீரி வாக்கெழுந்ததும், ரதி அமைதியடைந்து, பகலில் கலைமங்கிய சந்திரன் இரவை எதிர்பார்ப்பதுபோலத் தனது இடர் நீங்கும் நாளை எதிர்பார்த்திருந்தாள்.

கக. பார்வதி தவம்

வேளை யெரித்த சிவனிடம் தனது மனோரதம் நிறைவேறவில்லை; காந்தனைக் கவர முடியாத தனது அழகை நிந்தித்தாள் பார்வதி. மனங் குவிந்து, தவம் புரிந்து, சிவனுக்கேற்ற மாசற்ற அழகைப் பெற அவள் உறுதி பூண்டாள். "தவமெங்கே, உன் பூமேனி யெங்கே? வண்டின் காலைத் தாங்கும் வாகைப்பூ, புள்ளின் வலிய காலைத் தாங்குமா?" என்று தாய் தடுத்தாள்; தந்தை அநுமதித்தார்.

மயில்கள் உலாவும் கௌரி முடியில், மரவுரி யணிந்து, முப்புரி மௌஞ்சி கட்டி, ஜடை வளர்த்து, வைராக்கியமாகத் தவம் புரிந்தாள் பார்வதி. வண்டுக் கூட்டத்தாற் பொலிவதுபோல, நீர்ப்பாசியின் சேர்க்கையாலும் தாமரை பொலிகிறது; வாரி மலர் வைத்த கூந்தலைப்போலவே, ஜடையும் பார்வதி முகத்திற்கு எழிலீந்தது. முன்பு உதட்டிற்கு லாக்ஷா ரஸமும், மார்பிற்கு அங்கராகமும் பூசும் தளிர்க்கை, இப்போது இளந் தருப்பை கொய்தது, ஜபமாலை யுருட்டியது. முன்பு படுக்கையில் இப்படி யப்படிப் புரளும்போது, கூந்தல் மலர் சிந்தி உடலை உறுத்தும். மலர்கூடப் பொறா வுடல், இப்போது கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு வெறுந்தரையிற் படுக்கிறது; உட்காருகிறது. விலாச சேஷ்டை பூங்கொடிகளிலேதான்; சஞ்சலப் பார்வை மான்விழிகளிலேதான்; இவையிரண்டும் கடுந் தவம்புரியும் பார்வதியிடம் இல்லையாம். அவள் சிறு

செடிகளைக் குடநீர் வார்த்துப் பிள்ளையன்புடன் பேணினாள் ; நீவார தானியந் தந்து மான்களை வளர்த்தாள் ; மான்விழியுடன் தன் விழியை அளந்தாள். மரவுரியணிந்து, திருமுழுக்கு, ஓமம், தோத்திரம் இவற்றுடன் தவம் புரியும் கௌரிதேவியைப் பார்க்கப் பெரிய முனிவர் வந்தனர். அறம் வளர்ப்பவருக்கு வயதுக் கணக்கில்லை.

தீய விலங்குகள் பகையற்றன ; மரங்கள் வேண்டிய கனிக ளீந்தன ; அவை விருந்தோம்பப் பயனுயின; புதுப்புதுப் பர்ணசாலைகளில் ஓமம் வளர்ந்தது. அத்தபோவனம் பாவனமானது. முன்னே செண்டாட்டத்தால் களைப்புறும் கௌரி, இப்போது தனது விருப்பம் நிறைவேற, உடல் மென்மையைக் கருதாமல் வன்றவம் முயன்றுள். அவள் உடல் பொற்றுமரை போன்றொளிர்ந்தது ; அது தாமரைபோல் மிருதுவானது ; தங்கம்போல் வைராக்கியத்தால் கடினமானது. கோடையில் நான்கு தீக்களுக்கு நடுவேயிருந்து, ஐந்தாவது தீயாகச் சூரியனைப் பார்த்து, ஐந்தீத்தவம் புரிந்தாள் நுண்ணிடை. கதிர்களில் வாட்டிய அவள் முகம் கமலகாந்தி யெய்தியது ; சூரியனைப் பார்த்தலால் கடைக்கண்ணில் மட்டும் கருமை தோன்றியது. மரங்களைப்போலவே, இரவாமல் எய்தும் தண்ணீரையும், மதியின் கதிர்களையும் அவள் உண்டாள். பஞ்சாக்கினி தபஸால், அவள் உடலும், அவளமர்ந்த தரையும் மழைக் காலத்திலுங்கூடக் காந்தின. காற்றிலும், விடா மழையிலும், வெட்டவெளியில், வெறும் பாறையிலிருந்து இரவும் பகலும் தவம் புரிந்தாள் பார்வதி. இரவும்

மின்னல் விழிகளாற் கண்டு அவள் தவத்திற்குச் சாட்சி கூறியது. ஆண் பெண் சக்ரவாகங்கள் கூவிக் கொள்வதைப் பார்த்து இளகி, பனி இரவிலும் அவள் நீரில் நின்று தவம் புரிந்தாள். பனிக்காலத்தில், நலிந்த தாமரைக்குப் பதிலாக, இவளே மலர்ந்த நாண்மரையாக விளங்கினுள். உதிர்சருகைக்கூட உண்ணுமல் தவம் புரிந்த பார்வதியை "அபர்ணு" என்றழைத்தனர். தாமரை நூல் போன்ற மெல்லிய உடலைத் தீயிடையும், நீரிடையுமிருந்து வாட்டி, கொடிய தவத்தினரினும் மிகக் கடுமையான தவம் புரிந்தாள் கௌரி தேவி.

கஉ. தவப்பயன்

அப்போது, பிரம்ம தேஜஸ் ஜ்வலிக்கும் ஒரு பிரமசாரி - வைராகி - ஜடாதரனாக, மாந்தோலும், தண்டும் கொண்டு, கம்பீரமான வாக்குடன் அந்தத் தபோவனத்திற் புகுந்தான். தன்னையொத்த தவநிலையி லுள்ள அந்தப் பைராகியை வணக்கமுடன் உபசரித்தாள் கௌரிதேவி. அவன் பூஜையை ஏற்றபின், சிறிது இளைப்பாறுவதுபோ லிருந்து, பார்வதிதேவியை நோக்கி இவ்வார்த்தை பேசினான் வைராகி :—

"வாலையே, உன்சக்திக்கு மீறிய தவம் புரிகிறாயா ? சரீரமே தருமஸாதனம் ; ஓமத்திற்குத் தருப்பை, சமிது எளிதாகக் கிடைக்குமா ? குளிக்க நீருண்டா ? நீ நீரூற்றி வளர்க்கும் இக்கொடிகள், (நீண்டகாலம் அரக்கிடாமல் பாலைவர்ணமுற்ற) உன் கீழுதட்டைப் போன்ற துளிர் விடுகின்றனவா ? சஞ்சலப்பார்வையில் உன்னையொத்த மான்கள், செல்லமாக, உன் கையி லிருக்கும் தருப்பையைப் பிடுங்கிக் கொண்டால், உனக்குக் கோபம் வராமல் இருக்கிறதா ? தவத்தினருக்குச் சினம் கூடாதல்லவா ? பெருநோக்குடையவளே, அழகு பாபத்தைத் தூண்டாது என்பது உண்மை ; உன் உதாரணமே தபசிகளுக்கு உபதேசமாயிருக்கிறது. சப்த ரிஷிகளின் பூஜையால் நகுவது போன்ற ஆகாச கங்கையைவிட, உனது வரலாற்றினாலே இந்த இமாலயம் புனிதமானது. நீ பொருளையும் இன்பத்தையும் விலக்கி, அறத்தையே கடைப்பிடிப்ப

தால், முப்பொருளில் அறமே சிறந்ததென ஏற்படு கிறது. ‘ஏழு வார்த்தை பேசினுல் நண்பர்’ என்பர் அறி ஞர்; உன்னுடன் பல வார்த்தைகள் பேசினேன்; நீ வழிபட்ட என்னை அன்னியன் என்றெண்ணுதே; தபோதனீ, சாந்தையே, அந்தண்மையால், நட்புரிமை யால், சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்; இர கசிய மில்லாவிட்டால் விடையளிப்பாயாக:

நீ உயர்ந்த குலத்திற் பிறந்தாய்; மூவுலகிலும் அழகிற் சிறந்தாய்; வற்ருப் பொருளின்பம், இளமை - ஆகிய எல்லாச் செல்வமும் படைத்தாய். கேள்வரால் உண்டான வெறுப்பால், சில வீரப் பெண்கள் இப்படிக் கடுந்தவம் பூணுவர்; உனக்கு அப் படிப்பட்ட குறையிருக்க முடியாதே; அழகியே, உனது உடல் துயருறத் தக்கதல்ல; பிறந்த வீட்டில் உன்னை யாரும் புறக்கணிக்க இடமில்லை; பிறரும் உன்னை அவமதியார். பாம்புத் தலைமேலிருக்கும் மணியை எடுக்க யார் கை நீட்டுவர்? உன்னை யார் அவமதிப்பர்? ஹே கௌரீ, இந்த இளமையில், ஆபர ணங்களை நீக்கி, கிழவியைப்போல மரவுரி யணிந்ததேன்?: சந்திரன், தாரகை இவற்றுடன் கூடிய இரவு அருண னைக் கூடுமோ? மதிமுகியான நீ தாரகை போன்ற நகைகளை நீக்கி மரவுரி யணிந்ததேன்! சுவர்க்கத்தை விரும்பித் தவம் புரிகிருயா? நிறுத்து; உனது தந்தை யின் இமயமலைப் பிரதேசமே தேவர் வாசமன்ருே? வரனுக்காகத் தவம் புரிகிருயா? வேண்டியதில்லை; மாணிக்கம் பிறரைத் தேடுவதில்லை; அதையே பிறர் தேடுவர்.

"வரன் பேச்செடுத்ததும், உன் உயிர்ப்பின் சூடு அதற்கே நீ தவம் புரிகிறாய் என்பதை விளக்குகிறது. ஆனாலும் ஒரு சந்தேகம் உள்ளது; உன்னால் விரும்பத் தக்கவன் இல்லை; நீ விரும்பி அடையாதவன் இல்லை. காதணியின்றி, ஜடை வளர்த்த உனது கோலத்தைப் பிடிக்காமல், ஒருவேளை நீ நினைத்த வாலிபன் உன்னை உபேக்ஷித்தானா? அவன் நெஞ்சு வைரம்போலும். விரதங்களால் மிகவும் இளைத்து, நகைப்பொலிவின்றி, பகல் மதிபோல மங்கியிருக்கும் உன்னைக் கண்டு யார் மனந்தான் இரங்காது? அழகான பார்வையும், வளைந்த இமையும் கொண்ட உன் விழிக்கு நீண்டகாலம் காணாதிருக்கும் காதலன், அழகுச் செருக்கால் தன்னையே வஞ்சிக்கிறான். ஹே கௌரீ, எவ்வளவு காலம் நீ வருந்துவாய்? நான் பிரமசரியாசிரமத்தில் சேர்த்த தவத்தில் பாதியும், நீ கோரிய கணவனையும் பெற்றுக்கொள்; நீ நினைத்த கணவன் யார்? நன்றாய் அறிய விரும்புகிறேன்."

கணவன் பெயர் சொல்ல நாணிய பார்வதி, அருகிலிருந்த தோழிக்குக் கண்ஜாடை காட்டினாள். தோழி கூறுவாள்: சாதுவே, இவள் பூமேனியை வாட்டி யாருக்காகத் தவம் புரிகிறாள் என்பதை அறிவாயாக: இந்திரன், யமன், வருணன் குபேரனாதி தேவர்களைத் திரஸ்கரித்து, மாரனை யொழித்து, புலனை யடக்கி, உருவால் வெல்லொணாத பினாகபாணியைக் கருதியே இவள் கடுந்தவம் புரிகிறாள். முன்னே மாரன் கணை விட்டான்; "ஹுங்" என்றான் அரன்; பாணம் கிட்டவரவில்லை; மதனும் எரிந்தான்; ஆனால்

அந்தக் கணை இவள் பூமேனியில் ஆழப் பாய்ந்தது. அதுமுதல் இவள் விரக்தையானாள். இவள் தாபத்தைப் பனிக்கட்டி கூடத் தணிக்கவில்லை.

"சிவ சரிதம் கேட்டால், இவள் இசைத் தோழிகளான கின்னரக் கன்னிகளும் அழும்படி, மொழிகுழறி, விழிபெருகி வேசற்றிருப்பாள். இரவு நாலு ஜாமத்திற்கும், கண்ணை மூடிக்கொண்டு (கனவு கண்டு) 'ஹே நீலகண்டா, எங்கே போகிறாய் ?' என்று யார் கழுத்தையோ அணைவதுபோல் விழித்துக் கொள்வாள். உறக்கமில்லாமல் இவள் சிவ சிந்தனையில் விழித்துக் கொண்டிருக்கிறாள். தன் கையால் சந்திரசேகரனை எழுதி, 'அரனே, உன்னை எல்லாம் அறிந்தவன் என்பர் அறிவாளர் ; என்றால் என்னையேன் அறியாய் ?' என்று தனியே நிந்திப்பாள். சிவனையடைய வழியில்லாமல், தந்தை யனுமதியின் பேரில், இவ்வனத்தில் இவள் தவம் புரிகிறாள். இவள் விதைத்த செடிகள் பூத்துக் கனிந்து, இவள் தவத்திற்குச் சாட்சி சொல்லுகின்றன. ஆனால், சிவனை யடையும் இவள் மனோரதம் முளைகூட எடுக்கவில்லை ; அது பலனாக வெகுதூரம் இருக்கிறதல்லவா ? இவளோ தவத்தால் உலர்கிறாள் ; தோழிகளாகிய நாங்கள் இவள் பரிதாபந் தாங்காமல் கண்ணீர் விடுகிறோம் ; வாடும் பயிர்நிலம் மழையை எதிர்பார்ப்பதுபோல, இவள் சிவனை எதிர்பார்க்கிறாள் ; அரன் வருவானோ ? எப்போதோ ?"

பார்வதியின் மனமறிந்த தோழிகள் சொல்வதைக் கேட்டு, நைஷ்டிக பிரமசாரி, மகிழ்வை அடக்கிக் கொண்டு, "பார்வதி, உன் தோழிகள் சொல்வது

உண்மையா ; கேலியா ?" என்று கேட்டான். விரல்களை முகிழ்த்து, முன் கையில் படிக மாலையை வைத்து, வெட்கத்தால் நிறம் பெயர்ந்து பேசினாள் பார்வதி: "வேத வித்துக்களில் சிரேஷ்டனே, என் தோழிகள் சொன்ன தெல்லாம் உண்மைதான்; கோரிக்கை அபாரமானது ; அதற்கு என் அற்பத் தவம் போதாது ; உயர்ந்த நிலையை விரும்புகிறேன். இத் தவத்தால் அதை அடைய முடியுமா முடியாதா என்பது என் மனோரதத்திற்குப் புலப்படவில்லை."

பிரமசாரி சொல்லுகிறான் :—"மஹேசுவரனை நான் அறிவேன் ; நீ அவனையே நினைத்துக்கொண்டிருக்கிறாய். அவனோ சுடுகாட்டில் வசிக்கும் அசுப வொழுக்கமுடையான் ; நீ அவனைக் கோருவது எனக்குப் பிடிக்கவில்லை. அவன் பாம்பு வலயம் பூண்டவன் ; விவாக கங்கணம் பூண்ட உன் கையை அவன் பிடிப்பது பாங்காகுமா ? பாம்பைப் பார்த்து நீ பயப்படுவா யல்லவா ? நீயோ அன்னப் பப்பளிச் சேலை அணிவாய் ; அவனோ இரத்த மொழுகும் யானைத் தோலை யணிவான் ; இரண்டிற்கும் சம்பந்தமுண்டா? நீயே நினைத்துப்பார். நல்ல மாளிகையில், மலர்மேல் செவ்வரக்குத்தோய நடக்கத்தகும் உன் மெல்லடிகள், மயிர்கள் உதிர்ந்திருக்கும் சுடுகாட்டில் அவனோடு திரியப் பகைவனுவது சம்மதிப்பானா? ஹரிசந்தனம் பூசும் உன் மார்பில் அவன் அணியும் சுடுகாட்டுச் சாம்பலைப் பூசவோ ? கலியாணத்தில், யானை மேல் பவனி வரவேண்டிய நீ, அவனுடைய கிழட்டுக் காளையில் ஏறும்போது ஊர் சிரியாதா ? உனது முக விலாசம் உலக விழிகளுக்கினிய நிலவளிக்கிறது.

சிவன் விரூபாக்ஷன் ; அவன் விழிகள் அழகற்றன ; அவன் பிறவியை யாரும் அறியார் ; அவன் திகம்பரன் ; கையில் பணமில்லை ; ஓடேந்தி வந்ததையுண்கிறான் ; மான் விழியே, ஒன்றுமில்லாதவனையோ நீ மணப்பது ? அவனெங்கே, புண்ய லக்ஷணங்களுள்ள நீ யெங்கே ? இந்த எண்ணத்தை விடு. யூபஸ்தம்பத்திற்குச் செய்யும் வைதிக வழிபாடுகளைச் சுடுகாட்டுச் சூலத்திற்குச் செய்வதா ?''

அந்தணன் இவ்வாறு எதிரிடையாகச் சொல்லவே, சினத்தாற் கண் சிவந்து, பார்வதி சொல்வாள் : "என்னைப் பார்த்து இப்படிப் பேசியதால், நீ சிவனை உண்மையாக அறிந்தவனல்லன் என்றாகிறது. சிந்தனைக்கரிய பெரியார் வரலாற்றை மூடர்கள் இப்படித் தூற்றுகின்றனர். கேடு நீங்கவும், செல்வ மெய்தவும் வேண்டுவோர் மங்கள கந்த மாலைகளை விரும்புவர். சிவன் சர்வலோக ரக்ஷகன் ; நிராசைப் பெருமான் ; விருப்பு வெறுப்பில்லான் ; இந்த ஆசா விருத்திகளால் எம் இறைவருக்கு என்ன பயனும் ? அவர் ஏழைதான் ; ஆனால் அவரே எல்லாச் செல்வங்களுக்கும் காரணராவர் ; அவர் முதுகாட்டி விருப்பினும், மூன்றுலகிற்கும் இறைவராவர் ; அவர் பயங்கர ரூபரானாலும், ' சிவன் ' (இன்பன், சௌம்யன்) எனப்படுகிறார். அரன் உண்மையை அறிந்தவர் யார் இவ்வுலகில் ? எனதிறைவர் விசுவமூர்த்தி ; அவர் உடல் ஆபரணங்களாற் பொலியும் ; இன்றேல் பாம்புகளை அணியும் ; யானையுரி போர்க்கும் ; பட்டையும் அணியும் ; கபாலமேந்தும் அல்லது பிறை சூடும் ; அவர் எப்படியும் விளங்குவார் ;

அவர் உருவை யார் நிர்ணயிக்க முடியும் ? அவர் பூசும் விபூதி பவித்திரமானது ; அவர் நடனமாடும்போது உதிரும் சாம்பலைத் தேவர் சிரத்திலணிவர். ஐராவதத்திற் செல்லும் இந்திரன், ஏழையாய்க் காளை மீதேறும் எம்பிரானை முடிதோய வணங்குகிறான் ; அவன் முடியிற் சூடிய கற்பக மலர்த்தூள், அவர் பாதத்தைச் சிவப்பாக்குகிறது. சுயம்புவான பிரமனுக்கும் அவரே காரணர் ; அத்தகை இறைவரை நீ எப்படி அறிவாய் ? போதும் சம்வாதம் ; நீ சொன்னபடி எல்லாம் இருக்கட்டும் ; என்மனம் அவருடன் ஏக ரஸ பாவனையிற் கலந்துள்ளது ; நான் சிவகாமி ; காதல் குறை காணாது". பிரம்மசாரி ஏதோ பேச வாயெடுத்தான்; "தோழி, இவர் ஏதோ பேச வாயெடுக்கிறார் ; இவரைத் தடைசெய் ; பெரியாரை நிந்திப்போருக்குமட்டுமல்ல ; நிந்திக்கக் கேட்டோருக்கும் பாபம் சூழும். அப்படிப்பட்ட இடத்தில்கூட இருக்கலாகாது. இதோ நான் போகிறேன்" என்று எழுந்தாள் பார்வதி : அச்சமயம் பிரமசாரியாகத் தோன்றிய சிவனார் தமது உண்மை வடிவைக் காட்டி, நகைத்து, பார்வதி தேவியைப் பற்றிக் கொண்டார். நாதனைப் பார்த்தாள் பார்வதி ; உடல் நடுங்கி வியர்த்தாள் ; மலை குறுக்கிட்ட நதிபோல், செல்ல முடியாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். "பார்வதீ, இன்று முதல் உன் தவத்திற்குத் தாஸனானேன்" என்றார் சிவபெருமான் ! பலன் கிடைத்தது ; பார்வதிக்குத் தவத்தால் உண்டான சிரமம் நீங்கியது !

ஓம் சுத்த சக்தி !

மஹாகவி காளிதாஸன்

நூல் II

அபிக்ஞான சகுந்தலம்

நாடக பாத்திரர்கள்

நடர்

நடன்—நாடகமாட்டுவோன்
துஷ்யந்தன்—ஹஸ்தினபுரி மன்னன் (தலைவன்)
தேர்ப்பாகன் சேனாபதி—(பத்ரஸேனன்)
விதூஷகன்—(மாதவய்யன்)
பரதன்—(ஸர்வதமனன்) அரசன் புதல்வன்
ஸோமராதன்—(புரோகிதன்)
ரைவதகன், கரபகன் } சேவகர்
வைதாலிகர்—பாடகர்
கண்வர்—(காச்யபர்) சகுந்தலையின் வளர்ப்புத் தந்தை
வைகானஸன், சார்ங்க்ரவன், சாத்வதன், ஹரீதன், கௌதமன் } கண்வன் சீடர்
சியாலன்—அரசன் மைத்துனன், பொலீஸ் தலைவன்
தீவரன்—செம்படவன்
ஸூசகன், ஜானுகன்—பொலீஸ்காரர்
மாதலி—இந்திரன் தேரோட்டி
மாரீசன்—(கச்யபன்) ஒருமுனிவன்

நடிகள்

நடி—நடன் மனைவி—சகுந்தலை—(தலைவி)
அனஸூயா, பிரியம்வதை—தோழிமார்
கௌதமி—ஒரு துறவினி
சதுரிகை, பரப்ருதிகை, மதுகரிகை, ப்ரதிஹாரி, யவனி } சேவகிகள்
ஸானுமதி—மேனகையின் தோழி: ஓரணங்கு
அதிதி—கச்யபன் பத்தினி

பிரஸ்தாவனை

வணக்கம்

யா ஸ்ருஷ்டி : ஸ்ரஷ்டு ராத்யா
வஹதி விதி ஹுதம்,
யாஹவிர் யாச ஹோத்ரீ
யே த்வே காலம் விதத்த :
ச்ருதி விஷய குணா
யாஸ்திதா வ்யாப்ய விச்வம்,
யா மாஹு : ஸர்வ பீஜ
ப்ரக்ருதி ரிதி யயா
ப்ராணின : ப்ராண வந்த :
ப்ரத்ய க்ஷாபி : ப்ரபன்ன
ஸ்தனு பிரவது வஸ்
தாபி ரஷ்டா பிரீச :

வேதாமுன் படைத்ததெது ? விதிவேள்வி
அவியுய்ப்ப தெது ? வேட்பானார் ?
போதிரண்டும் வகுப்பதெது ? புவிமுழுதும்
ஒலியியல்பாய் நிறைந்த தெஃதாம் ?
யாதெல்லா விதைகட்கும் ஆதியாம் ?
ஆருயிர்கட் குயிர்ப்பி யாதாம் ?
ஈதால்எட் டுருவாகி முன் இலகும்
ஈசன்உமக் கருள்க மாதோ !

[பொருள் :—(1) பிரமன் முதலிற் படைத்த நீர், (2) விதி முறைப்படி வழங்கிய வேள்வி அவியைத் தேவரிடம் சேர்க்கும் தீ, (3) வேள்விசெய்வோன் (4, 5) இரவு பகல் ஆகிய இரண்டு காலங்களையும் வகுக்கும் இரவி, திங்கள் (6) ஓசையைக் குணமாகக்கொண்டு உலகெலாம் நிறைந்த ஆகாசம், (7) விதைகளுக்கு மூலகாரணமான பூமி (8) உயிர்கள் உயிர்க்கும் காற்று - நமது உணர்விற்குப் புலனாகும், இந்த எட்டையும் உடலாகக் கொண்டு விளங்கும் பரமேசன் உங்களைக் காத்தருள் புரியட்டும்.]

[வணக்கத்திற்குப் பிறகு]

நடன் :—(அரங்கினுள் நோக்கி) ஆர்யே, வேடங் கட்டி முடிந்தால் இங்கே சற்றுவா.

நடி :—ஆர்யபுத்ர (நாதா), இதோ இருக்கிறேன்.

நடன் :—சரி, இது புலவர் நிறைந்த சபை; இதன் முன், நாம் இன்று காளிதாஸன் இயற்றிய புதிய நாடகமான அபிக் ஞான சகுந்தலத்தை யாக்கும் நடித்துக் காட்டவேண்டும். ஆதலால், ஒவ்வொரு நாடக பாத்திரத்தையும் நன்கு கவனிக்க வேண்டும்.

நடி :—எனது நாதன் சரியான ஏற்பாடுகள் செய்திருப்பதால், ஏதும் குறையிராது.

நடன் :—ஆர்யே, உண்மையைச் சொல்லுகிறேன்:

திண்ணிய நிபுணர் சித்தமும் சவறும் ; (ஆதலால்,)
கற்ற புலவர் களித்தா லன்றி,
நாட்டியப் புலமை நன்றென வுன்னேன்.

நடி :—அவ்வாறே நன்கமைந்துள்ளது. இனிச் செய்யவேண்டியதை இறைவர் பணித்தருளுக.

நடன் :—இச்சபையோர் செவிக் கினிமை செய்வ தினும் வேறென்ன ? சுகமான கோடைகாலம் தொடங்கி அதிக நாளாகவில்லை ; அதைப்பற்றிப் பாடு பார்ப்போம் :—

நீர் முழுக் கினிதாம் ; நெடுவனக் காற்று
பாடலங் கமழும் ; பசுநிழல் உறக்கம்
எளிதாம் இந்தக் களிமிகு மாலையே !

நடி :—மெத்தென வண்டுகள் முத்திடும்,
மெல்லிய தாதுகள் மேவிடும்,
புத்தலர் வாகையை அன்புடன்
பூவையர் காதணி பூண்கின்றார்.

நடன் :—ஆஹா, உனது பாட்டில் சித்தம் லயித்துச் சபை முழுதும் சித்திரப் பாவையானதே! நல்லது, இப்போது எந்த நாடகத்தால் இச்சபையை ஆராதிக்கலாம்.

நடி :—' அபிக்ஞான சகுந்தலம் என்னும் அபூர்வ மான நாடகத்தை நடிக்க வேண்டு ' மென்று முன்பே தேவரீர் பணித்திரே !

நடன் :—ஆர்யே, நன்கு நினைப்பூட்டினை ; அதை இப்போது மறந்தே போயிருந்தேன் ; ஏனென்பாயா ?

உன்னிசை யின்பத்தின் வேகமே—என்
உள்ளத்தை அள்ளிக் கொண் டோடிற்றால்
மன்னவன் துஷ்யந்தனை அந்த—வேக
மானங் கிழுப்பது போலவே !

(போகிறான்)

பிரஸ்தாவனை முற்றிற்று

அங்கம்—1

க. மான் வேட்டை

[நடன் - நடி சென்றதும் அம்பும் வில்லும் பிடித்து, மானைத் துரத்திப் பாகனுடன் துஷ்யந்தன் தேர் மேல் வருகிறான்]

பாகன் :—(அரசனையும், மானையும் பார்த்து) ஆயுஷ்மன்,

புள்ளி மானையும் பூட்டிய வில்லொடும்
போலியும் உன்னையும் பார்த்திடும் போதினில்,
துள்ளு வேள்வி மறியைப் *பிநாகியே
துரத்திச் சென்றிடுந் தோற்றத்தைப் போலுமே.

அரசன் :—பாக, மான் நம்மை வெகுதூரம் இழுத்து வந்துவிட்டது; பார், இன்னும் அது சளைக்கவில்லை ; அது கழுத்தை அழகாக வளைத்து ஓடுந்தேரில் பார்வை யூன்றுகிறது ; பின்னுடல் முன்னுடலில் புகுந்ததுபோல் நெளிக்கிறது ; களைப்பால் வாயைத் திறந்து, பாதிமென்ற தருப்பைப் புல்லை வழியில் சிந்தி, மண்ணைவிட விண்ணிலே செல்வதுபோலக் கடுவேகமாகத் தாவிப் பறக்கிறது ! நான் அதை நெருங்கித் துரத்துகிறேன் ; எனினும் எப்படி அது என் கண்ணில் தட்டுப்படாமல் ஓடுகிறது பார் !

---

* தக்ஷன் வேள்வி செய்தான்; அதற்குச் சிவனை அழைக்கவில்லை. மகள் சதிதேவி வந்திருந்தாள். தக்ஷன் சிவனை இகழ்ந்தான். அது பொறாத சதிதேவி யோகத்தால் உயிர் துறந்தாள். சிவன் தக்ஷனைக் கொன்றான். யக்ஞம் ஒரு மானுருக்கொண்டு ஓடியது. அதைத் துரத்தினான் பிநாகபாணி, சிவன்.

பாகன் :—ஆயுஷ்மன், பாதை மேடுபள்ளமாயிருந்ததால், கடிவாளத்தை இழுத்துப் பிடித்துத் தேரின் வேகத்தைக் குறைத்தேன் ; அதனால் மான் வெகு தூரம் ஒடிப்போயிற்று. இப்போது சமநிலத்தில் இருப்பதால், மான் தங்களைத் தப்பாது.

அரசன் :—ஆனால், கடிவாளத்தைத் தளர்த்து.

பாகன் :—ஆயுஷ்மன், உத்தரவுப்படியே ! (தேர் வேகத்தைக் காட்டல்) ஆயுஷ்மன், பாருங்கள், பாருங்கள் ! கலின வாரைத் தளர்த்தியதும், மான் வேகத்தைப் பொருதனபோல முன்னுடலை நீட்டி, சாமரசிகை அசைவற, காது நிமிர, பரிகள் விரைகின்றன ! அவை எழுப்பும் புழுதிகூட அவற்றை அதிக்ரமிக்கவில்லை.

அரசன் :—மெய்தான் ! சூரியன் புரவிகளினும், இந்திரன் புரவிகளினும் வேகமாய் ஓடுகின்றன நமது குதிரைகள் ; தேர் வேகத்தால், சிறிது பெரிதாகவும், பிரிந்தது சேர்ந்தது போலும், இயல்பிற் கோணலாயிருப்பது நேராகவும் தோன்றுகிறது. எதுவும் தொலைவிலுமில்லை ; அருகிலுமில்லை. தேர் வேகத்தால் தூரவுள்ளது கிட்ட வருகிறது; அடுத்துள்ளது தூரச் செல்லுகிறது. இதோ கணை தொடுக்கிறேன் : பாக, பார் அந்தமான் பட்டது.

(அம்பைக் குறிவைக்கிறான்)

[திரைக்குப் பின்னே]

ஹா, ஹா, அரசே அது ஆசிரம மான் ; அதைக் கொல்லக் கூடாது, கொல்லக் கூடாது !

பாகன் :—(ஒடி சத்தம் கேட்டு, ஆராய்ந்து) ஆயுஷ்மன், உன் அம்பு தைக்கப்போகும் மான் வழியே தபஸ்விகள் நிற்கின்றனர்.

அரசன் :—(பதறி) அப்படியானல் நிற்கட்டும் குதிரைகள் !

பாக :—அப்படியே (தேர் நிற்கிறது)

[வருதல் - சீடருடன் ஒரு தவ முனிவர்]

தவ :—(கைகளை உயர்த்தி) அரசே இது ஆசிரம மான் ! கொல்லொணுது ! கொல்லொணுது ! பஞ்சுப் பொதியில் தீவைப்பது போல், இம்மானின் மிக மெல் லிய உடலில், இக்கணை தைக்கலாகாது ; ஆகாது அதிலோலமான மானுயிர் எங்கே, உனது வலிய வைரக் கூர்கணை யெங்கே? ஆர்த்தரைக் காப்பதே உன் அம்பின் கடமை ; குற்றமற்றவரை எய்வதல்ல. ஆதலால் குறிவைத்த கணையை மீட்டுக் கொள்க !

அரசன் :—இதோ அம்பை மீட்டுக் கொண்டேன்.

(அவ்வாறே செய்தல்)

தவ முனி :—புருவம்ஸ விளக்கான உனக்கு இது தக்கதே. புருவம்ஸத்திற் பிறந்த நினக்கு இது சாலப் பொருந்தும் ! இத்தகைய சிறந்த குணங்களைக்கொண்டு சக்கரவர்த்தியாய் விளங்கும் மகனை நீ அடைதி !

மற்ற தபஸ்விகள் :—(கையுயர்த்தி) தடையில்லாமல், சக்கரவர்த்தியாகும் செல்வனைப் பெறுக !

அரசன் :—(தலைவணங்கி) ஆசியை ஏற்கிறேன் !

தவ முனிவர் :—நாங்கள் சமிது சேர்த்துவரச் செல்கிறோம். அதோ, மாலினி யாற்றங்கரையில் குல

பதி கண்ணுவர் ஆசிரமங் காண்கிறது ; மற்ற அலுவல்கள் தடைசெய்யாவிட்டால், அங்கு விஜயம் செய்து, எங்கள் அதிதி ஸத்காரத்தை ஏற்றருளுக ! அத்துடன், அங்கே தபோதனர் தமது இனிய கருமங்களைத் தடையில்லாமல் இயற்றுவதைக் கண்டு, நாண் வடுப்பட்டதினது புயம், உலகை எப்படிக்காக்கிறதென் றறிவாய்.

அரசன் :—குலபதி ஆசிரமத்தில் இருக்கிறாரா ?

தவ முனிவர் :—அதிதிகளை உபசரிக்கத் தமது புதல்வி சகுந்தலையை நியமித்து, தெய்வாதீனமாக அவளுக்கெய்தும் ஒரு இடரைத் தவிர்க்க, சோம தீர்த்தம் சென்றிருக்கிறார் குலபதி.

அரசன் :—நல்லது; நான் அவளைக் காண்கிறேன். அவள் என் அன்பை யுணர்ந்து முனிவருக் குரைப்பாள்.

தவ முனிவர் :—இப்போது நாங்கள் சமிதிற்காகச் செல்லுகிறோம். (சீடருடன் செல்லல்)

அரசன் :—பாக, குதிரைகளைத் தூண்டு ; புண்ணிய ஆசிரமத்தைக் கண்டு நாம் புனிதராவோம்.

பாகன் :—ஆயுஷ்மன், உத்தரவுப்படியே.

(மீண்டும் தேர் வேகம் காட்டல்)

அரசன் :—பாக, இந்த இடம் தபோவனத்தைச் சார்ந்ததென்று சொல்லாமலே தெரிகிறது.

பாகன் :—எப்படி ?

அரசன் :—என்ன, காணவில்லையா ? கிளிகள் வசிக்கும் மரப் பொந்துகளினின்றும் காட்டு நெற்கள் உதிர்ந்திருக்கின்றன ; (கூட்டில் கிளிக்குஞ்சுகளுக்குத் தாய்க்கிளி

கள் தரும்போது சிந்தின நெல்.) எண்ணெயேறிய கற்கள் அங்கே தபஸ்விகள் *இங்குதிக் கொட்டைகள் உடைத்திருப்பதைக் காட்டுகின்றன. யாரும் தமக்குத் தீங்கு செய்யார் என்று நம்பி, மான்கள் நடையை மாற்றுமல், அஞ்சி ஓடாமல், தேரோசையைப் பொறுத்து நிற்கின்றன. நீர்த்துறைகளுக்குச் செல்லும் வழிநெடுக, மரவுரி சொட்டிய நீர்த்தாரைகள் காண்கின்றன.

பாகன் :—எல்லாம் சரியாய் உள்ளன.

அரசன் :—(சிறிது தூரம் சென்று) தபோவன வாசிகளுக்கு இடையூறிருக்கக் கூடாது ; இங்கே தேரை நிறுத்து ; நான் இறங்குகிறேன்.

பாகன் :—வாரை இழுத்துப் பிடித்தேன் ; ஆயுஷ்மன் இறங்கட்டும்.

அரசன் :—பாக, எளிய வுடை தரித்தே ஆசிரமத்திற்குட் செல்லவேண்டும். ஆதலால் இதைப் பிடி. (ஆபரணங்களையும், வில்லையும் கழற்றிப் பாகனிடம் தருகிறான்) பாக, நான் ஆசிரம வாசிகளைப் பார்த்து வருவதற்குள் குதிரைகளுக்கு முதுகு தேய்த்துக் குளிப்பாட்டி வை.

பாகன் :—அப்படியே. (செல்கிறான்)

அரசன் :—(சுற்றி நோக்கி) இதுவே ஆசிரம வாசல்; உள்ளே செல்கிறேன். (ஒரு நற்குறி கண்டதுபோல நடித்து) இந்த ஆசிரமம் சாந்தநிலயம் ; இருப்பினும் என் வலது புயம் துடிப்பதேன் ? (அது மணமாவதற்கு அறிகுறி). இக்

---

*இங்குதிமரக் கொட்டைகளினின்று எண்ணெய் பிழிவர்; அதையே முனிவர் உபயோகிப்பர்.

குறி இங்கே பலிப்பதெங்கனம்? ஏன், வருமவற்றிற்கு எங்கும் வாயில்களாம்!

உ. தவக் கன்னியர்

[திரையின் பின்னே பெண்கள் செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல்]

பெண்கள் :—இங்கே, சகிகாள், இங்கே!

அரசன் :—(உற்றுக் கேட்டு) ஆ! இம்மரச்சாலையின் தென்புறம் ஏதோ சம்பாஷணை கேட்கிறதே; அங்கே செல்கிறேன். (சுற்றிப் பார்த்து) ஆ! இத் தவக் கன்னியர் இளஞ் செடிகளுக்குத் தண்ணீர்விட, அவரவர் அளவிற்கேற்ற நீர்க்குடங்களைச் சுமந்து, இந்தப் பக்கம் வருகின்றனர். (கூர்ந்து நோக்கி) ஆ, இவர்கள் காட்சி எவ்வளவு இனிமை! அந்தப்புரத்தில் காணரிய அழகு, இந்த ஆசிரம வாசிகளிடம் காண்கிறது:

தோட்டக் கொடிகளைக் காட்டுக் கொடிகள்
வனப்பில் வென்றன வென்ப துறுதியே!

இந்நிழலில் தாமதிக்கிறேன்.

(நோக்கிக் கொண்டிருக்கிறான்)

[முன் சொன்ன காரியமாக இரண்டு சகிகளுடன் சகுந்தலை வருகிறாள்]

சகுந்தலை :—இங்கே, சகிகாள், இங்கே!

அனஸூயா :—அடி சகுந்தலே, தந்தை *காச்யபருக்கு இந்த ஆச்ரம விருக்ஷங்கள் உன்னினும் பிரியமானவை என்றெண்ணுகிறேன். அதனாலேதான், நவமல்லிகைப் பூப்போல் மெல்லியளாயினும், இப்பாத்தி

*கண்ணுவர் காச்யப கோத்திரர்.

களுக்குத் தண்ணீர் நிரப்ப நீ அவரால் நியமிக்கப் பெற்றாய்.

சகுந் :—தந்தையின் கட்டளை மட்டுமல்ல ; இவற்றிடம் எனக்குச் சகோதர நேசமும் உண்டு. (செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல்)

அரசன்:—ஓஹோ ! இவள்தானோ கண்ணுவர் கன்னிகை ! கஸ்யப முனிவர், இவளை, ஆசிரம தருமத்தில் உய்த்தது சரியான யோசனையன்று.

இவ்வஞ்சமற்ற ரஞ்சித வடிவம் தவசாதனம்புரிய விரும்பும் முனிவர், கருங்குவளை இதழால் சமீளக் கொம்பை வெட்ட முயன்றவ ராவர். இருக்கட்டும், மரங்களின் மறைவிலிருந்தே, அமைதியாக, அவளைப் பார்க்கிறேன். (அப்படியே செய்கிறான்)

சகுந் :—சகி அனஸூயே ! பிரியம்வதை இந்த மரவுரியை இறுக்கி முடித்துவிட்டாள் ; கொஞ்சம் அதைத் தளர்த்து.

அனஸூ :—அப்படியே. (தளர்த்துகிறாள்)

பிரியம்வதை :—(நகைப்புடன்) இதற்கு, உனது கொங்கையைப் பெருக்கும் இளமையைக் குற்றஞ் சொல்லவேண்டும்.

அரசன் :—(மறைவிலிருந்து) உண்மை ; அவள் வடிவினுக்கு மரவுரி ஏற்றதில்லை ; எனினும், அதுவும் அவளை அணியுறுத்துகிறது. ஏனெனில்,

வாரிசம் பாசி மூண்டும் வனப்புறும் ; திங்களுக்குக்
கார்நிறக் களங்கந் தானும் கட்டழ களிப்ப தாமே ;

*சீரையே யுடுத்தும் : இந்தச் சிற்றிடை திருவின் மிக்காள் :
†ஆர்வடி வினியர் தம்மை அணிசெயா ததெவு முண்டோ ?

ஸாஸிஜ மனுவித்தம் ஸைவலே ஞபி ரம்யம்
மலின மபி ஹிமாம் ஸோர் லக்ஷ்ம லக்ஷ்மீம் தனேதி
இய மதிக மனேக்ஞா வல்கலேனபி தன்வீ
கிமவஹி மது ராணும் மண்டனம் நாக்ருதீனும் !

சகுந் :—(முன்னேக்கி) காற்றசைக்கும் தளிர் விரல்களால், இந்த மகிழ மரம், என்னை விரைந்தழைப் பதுபோலக் காண்கிறது. நான் அதைக் கவனிக்கிறேன்.

(மரத்தை நோக்கித் திரும்புகிறுள்)

பிரியம் :—அடி சகுந்தலே, சற்று நீ அங்கே நில் ; நீ அருகிருந்தால், மகிழ மரம் ஒரு கொடியோடு இணைந்திருப்பது போலக் காண்கிறதடி !

சகுந் :—அதனல் நீ (பிரியமாகப் பேசும்) பிரியம் வதையானுய்.

அரசன் :—பிரியத்துடன், சகுந்தலைக்குப் பிரியம் வதை உண்மையைச் சொன்னுள். உண்மையாகவே,

சுந்தரி அதரம் செந்தளிர் போலும் ;
பொலிவுறுங் கொம்புகள் போலும் புயங்கள் ;
அங்க மெல்லாம் மங்கல
மலர்போல் இளமை இலகு மிவட்கே !

அனஸூ :—அடி சகுந்தலே, இம் மாமரத்தின் ஸ்வயம்வர - மனைவி (நீ "வன ஜ்யோத்ஸ்னா" என்று பெய ரிட்ட) மல்லிகைக் கொடி, இதோ ? அதை மறந்தாயா ?

---

*சீரை=மரவுரி. †ஆர்வடிவு=அழகிய வடிவு.

சகுந் :—ஆனால் என்னையே மறந்தவளாவேன் ; (கொடியை யணுகி நோக்கி) மரமுங் கொடியுமான இந்த வதூவரர் சேர்க்கை, அதி ரமணீயமான காலத்தில் ஏற்பட்டுள்ளதடி ! " வன நிலா " நாண்மலர்களில் இளமை பொலிகிறது ; தளிர் மிகு மாமரம் போக சக்தி மிக்கது. (அவற்றைப் பார்த்து நிற்கிறாள்)

பிரியம் :—அனஸூயே! சகுந்தலை "வன நிலா"வை வியந்து பார்ப்பதேன் தெரியுமா ?

அனஸூ :—நான் ஊகிக்க முடியவில்லை ; நீ சொல்லு.

பிரியம் :—' இந்த வன நிலா, தனக்கேற்ற மரத்துடன் சேர்ந்தது போல, நானும் எனக்கேற்ற வரனை அடைய மாட்டேனா ?' என்பதே அவள் நினைப்பு.

சகுந் :—இது நிச்சயமாக உனது சொந்த விருப்பமே யாகும். (நீர்க்குடைத்தை யூற்றுகிறாள்)

அரசன் :—இவள் குலபதிக்கு வேறு ஜாதியில் பிறந்தவளா யிருக்கலாமோ? அல்லது....சந்தேகமேன் ? நேர்மையான என் மனம் அவளை விரும்புகிறது ; ஐயமில்லை ; இவள் ஒரு க்ஷத்திரியன் வரிக்கத் தக்கவளே. ஏனெனில், சந்தேகமான விஷயங்களில், நல்லோருக்கு, அந்தக்கரணம் சொல்வதே பிரமாணம். இருப்பினும், இவள் வரலாற்றை நான் அறிய வேண்டும்.

சகுந் :—(அச்சமுடன்) அம்மவோ ! நான் நீர் தெளித்த வேகத்தால், ஒரு தும்பி, மல்லிகைக் கொடியி

னின்று விரைந்தெழுந்து, என் *முகத்தை நோக்கி வருகிறதடி! (தம்பி தன்புறத்துவதுபோல் நடிக்கிறாள்)

அரசன் :—நன்று நன்று! அவள் நோவதும் ரமணியமாயிருக்கிறது! தும்பி செல்லும் திசையெல்லாம் அவள் விழி சுழல்கிறது. (ஆவலாகப் பார்த்து)

அலைந்ததிர் விழிக்கோணத்தை அடிக்கடி தீண்டு கின்றாய்!
†உலைந்தவள் காதில் மெல்லச் செய்தியொன் றாது கின்றாய்;
மலைந்தகை ஓட்டும் போது மதுரமாம் அதர முண்பாய்!
குலைந்தனம் பொருளைத் தேடிக்கொண்டனை யின்ப வண்டே!

சகுந் :—இந்தத் துஷ்டத் தும்பி விடமாட்டேனென்கிறதடீ! வேறெங்கேனும் போகிறேனம்மா! (ஓடி சென்று நோக்கி) என்ன, அது இங்கேயும் வருகிறதே! இந்த நெறி கெட்ட தும்பி என்னையே தாக்குகிறது! தோழி, என்னை விடுவி!

தோழிகளிருவரும் :—(புன்னகையுடன்) உன்னை விடுவிக்க நாங்கள் யார்? துஷ்யந்தனிடம் முறையிடு! தபோவனங்களைக் காப்பவன் அரசனன்றோ!

அரசன் :—என்னை வெளியிட இதுவே சமயம்! "அஞ்சல்! அஞ்சல்! (தன்னை யடக்கிக்கொண்டு...பக்கத்தில்) ஆனால் நான் அரசன் என்பது வெளிப்பட்டுவிடும்; நல்லது, இவ்விதம் சொல்லுகிறேன்.

---

*வாரிச முகமும், கூரிய மூக்கும், நெருங்கிய மார்பும், நீண்ட கேசமும், குவளைக்கண்ணும் கொடிபோல் வடிவும் பதும மணமும் பதுமினிக் கழகாம். சகுந்தலை முகம் தாமரை போன்றிருப்பதைக் கவி அழகாக வர்ணிக்கிறார்.

†உலைதல்=திரிதல்.

சகுந்:—(மற்ருேரடி வைத்து நோக்கி) என்ன இங்கும் என்னைத் தொடர்ந்து வருகிறதடி !

அரசன் :—(முன்னுல் விரைந்து)

நெறியிலாரை யொறுக்கும் *பவுரவன்
நீதி செய்திந்த மேதினி காக்கையில்
†மறமிலாத் தவக் கன்னிகை மாரிடம்
மாறு பட்டு நடப்பவன் யாரடா ?

(அனைவரும் திகைத்தல்)

சேடியர் :—ஆர்ய ! இடரொன்று மில்லை ! எங்கள் பிரிய சகி, இவள், (சகுந்தலையைச் சுட்டி) ஒரு வண்டு தொந்திரவு செய்து அச்சமெய்தினுள் !

அரசன் :—(சகுந்தலையை நோக்கி) தவம் வளர் கிறதா ?

(சகுந்தலை நாணத்தால் பேசாதிருக்கிருள்)

அனஸூ :—உத்தமமான அதிதி வந்திருக்கிருர். அடி சகுந்தலே, பர்ணசாலைக்குப் போய், அதிதி ஸத்காரத்திற்காகப் பழங்களுடன்‡அர்க்யம் கொண்டுவா ; இது (கையிலுள்ள நீர்) பாதோதகமாகும்.

அரசன் :—உங்கள் இதமொழிகளே என்னை நன்கு உபசரித்தன.

பிரியம் :—ஆர்ய ! குளிர் நிழல் கொண்ட இந்த ஸப்த பர்ண வேதிகையில் வீற்றிருந்து, சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள்.

---

*புருவம்சத்தனை துஷ்யந்தன். †தீங்கிலாத.

‡ நீர், பால், தருப்பை, தயிர், நெய், அரிசி, யவதான்யம், கடுகு இவ்வெட்டும் அர்க்யமாகும்.

அரசன் :—நீங்களும் இத் தோட்டவேலையாற் களைத்திருக்க வேண்டும்.

அனஸூ :—பிரிய சகுந்தலே, நமது அதிதிக்கு மரியாதை செய்வது நல்லது. வாருங்கள், இங்கே உட்காருவோம். (எல்லாரும் வீற்றிருத்தல்)

சகுந் :—(தன்னுள்) இவரைப் பார்த்ததும், தபோ வனத்திற்கு ஆகாத ஒரு மனக்கிளர்ச்சி என்னைக் கவர்ந்த தென்னே !

அரசன் :—(அனைவரையும் பார்த்து) ஆ ! சமவயதும், வடிவும் பொருந்திய உங்கள் நட்பு எவ்வள வின்பமா யிருக்கிறது !

பிரியம் :—(தனித்து அனஸூயையிடம்) அன ஸூயே ! மதுர கம்பீர வடிவும், சாதுரியமான அன்பு மொழிகளும் கொண்டு, மாண்புற விளங்கும் இவர் யாராயிருக்கலாம் !

அனஸூ :—ஸகி, எனக்கும் வியப்பாயிருக்கிறது. நான் இதோ அவரைக் கேட்கிறேன். (உரத்து) ஆர்ய, தங்கள் இன்சொல் ஈந்த துணிவு, என்னைத் தூண்டு கிறது : எந்த ராஜ ரிஷியின் வம்சம் தங்களால் அலங் கரிக்கப்படுகிறது ? தங்களைப் பிரிந்து வருந்தும் பிரஜை களைக் கொண்ட தேசம் எது ? எக்காரணத்தால் மிக வும் ஸுகுமாரரான தாங்கள், சிரமப்பட்டு, இத் தபோ வனத்திற்கு வரும்படி நேர்ந்தது ?

சகுந் :—நெஞ்சே பதருதே ! உன் எண்ணங் களை அனஸூயை மொழிகிருள்.

அரசன் :—(மனத்துள்) என்னை எப்படி வெளியிடுவேன். அல்லது மறைத்துக் கொள்வேன்? நல்லது, அவளுக் கிவ்வித முரைக்கிறேன். (வெளிப்படையாய்) பெண்மணி, புருகுலத்தரசனால், தருமாதிகாரியாக நியமிக்கப்பட்டு, இடர்களின்றி அற வினைகள் நடக்கின்றனவா என்றறிய, இத் தருமாரண்ய முற்றேன்.

அனஸூ :—இப்போது அறவினை யாளருக்கு, ஒரு பாதுகாப்பாளன் இருப்பது நன்று.

(சகுந்தலை சிங்கார லஜ்ஜை காட்டல்)

பிரியம்வதை, அனஸூயா:—(இருவர் குறிப்பையும் அறிந்து, சகுந்தலையிடம் தனித்து) பிரிய சகுந்தலே! இன்று தந்தை (கண்வர்) இங்கு அருகே யிருந்தால்........

சகுந் :—என்னவாகும் ?

பிரியம்வதை, அனஸூயா :—இச்சிறந்த வாழ்வில், தனக்குரிய பொருளனைத்தையுந் தந்து, இச்சிறந்த விருந்தாளியை மகிழ்விப்பார்.

சகுந் :—போங்களடி! நெஞ்சில் ஏதோ வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள்; நான் உங்கள் வார்த்தையைக் கேட்கமாட்டே னம்மா!

அரசன் :—நானும் தங்கள் சகியைப்பற்றிச் சில கேட்க விரும்புகிறேன்.

பிரியம்வதை, அனஸூயை :—ஆர்ய! இவ்வேண்டுகை எங்கட் குவந்ததே.

அரசன் :—பகவான் காச்யபர், நைஷ்டிக பிரமசரியம் பூண்டுள்ளது உலகறிந்ததே; எனின், இவள், தங்கள் சகி, அவர் மகள் ஆனதெப்படி ?

அனஸூ :—ஆர்ய, கேட்கவும் : கௌசிக கோத்திரராய், மிகப் பெருமை வாய்ந்த ராஜரிஷி யொருவ ரிருக்கிறார்.

அரசன் :—ஆம், கேட்டுள்ளேன்.

அனஸூ :—அவரை நமது பிரிய சகியின் பிதா வென்றறிக. (அனாதையாய்க்) கைவிடப்பட்ட இவள் உடலை வளர்த்ததனால் காச்யபர் இவள் (வளர்ப்புத்) தந்தையாவர்.

அரசன் :—“ கைவிடப்பட்ட ” என்ற சொல், எனது வியப்பைத் தூண்டுகிறது. அடியிலிருந்து அனைத்துங் கேட்க விரும்புகிறேன்.

அனஸூ :—ஆர்ய, கேட்க : ராஜரிஷியானவர் கௌதமீ தீரத்தில், முன்னே உக்ரதபஸ் செய்துகொண்டிருந்தார் ; தேவர்கள் அதைப் பொறாதஞ்சி, தவத்தைக் கலைக்க, மேனகை யென்னும் அப்ஸர ஸ்திரீயையனுப்பினார்க ளென்பர்.

அரசன்:—பிறர் தவத்தைக் குறித்துத் தேவர்களுக்கிந்த *அச்சமிருக்கிறது !

அனஸூ :—வஸந்த காலத்தில், வெறிபிடிக்கச் செய்யும் அவள் வடிவழகைக் கண்டு..........................
(இப் பாதியுரையுடன் நாணத்தால் நிறுத்துகிறாள்)

அரசன் :—பின்னிகழ்ந்தது தெரிந்ததே................ முடிவில் இவள் அப்ஸர ஸ்த்ரீ பெற்றவளா ?

---

*உயர்ந்த தவஞ்செய்தவர் இந்திரபதவி யடைவராதலின், தவமுயல்வோரிடை இந்திராதி தேவர்கட்குப் பொறாமை யேற்படுகிறதாம்.

அனஸூ :—பிறகென்ன ?

அரசன் :—அது சரிதான் :

மானிட மாதருள் இத்தகை
மாசில் அழகு பிறக்குமோ ?
வானிற் சலித்தொளிர் மின்னலும்
மண்மிசை தோன்றுவ தாகுமோ ?

(சகுந்தலை தலைகுனிந்து நிற்கிருள்)

அரசன் :—(தன்னுள்) என் மனோரதம் நிறைவேற இடமுள்ளது.

பிரியம் :—(புன்னகையுடன் சகுந்தலையை நோக்கிப் பின்பு சுதாநாயகன்பால் திரும்பி) ஆர்ய, தாங்கள் மீண்டும் பேச விரும்புகிறீர்கள் போலும் ! (சகுந்தலை விரலாற் சுட்டிச் சகியை முனிதல்)

அரசன் :—தங்கள் ஊகம் சரி ; நல்லோர் வரலாற்றைக் கேட்கும் விருப்பால் இன்னொரு கேள்வி உதிக்கிறது.

பிரியம் :—தயங்கற்க ! தபஸ்விகளை எக்கேள்வியும் தடையின்றிக் கேட்கலாம்.

அரசன் :—தங்கள் தோழியைக் குறித்து இதை அறிய விரும்புகிறேன் :—

வைகானஸர் வகுத்த (மதனவாடையை விலக்கும்) தவ விரதத்தை, இவள், மணம் புரியுமட்டும் காப்பதோ ? இன்றேல், தன்னைப்போன்ற விழியுள்ளதால் அன்பு பேணும் பெண் மான்களிடையே, இவள் என்றைக்குமே வாழ்வதோ ?

பிரியம் :—ஆர்ய, அறவினைக ளாற்றினும், இவள் தந்தையைச் சார்ந்தே யிருக்கிருள். இவளைத் தக்க வரனுக்குக் கொடுக்கவேண்டு மென்பதே தந்தையின் எண்ணம்.

அரசன் :—(தனித்து) இவ்விச்சை நிறைவேறுதல் கடினமல்ல.

ஐய மற்ற தறுதி பிறந்ததால்,
ஆசைகொள் ; அடைவாய் எனதுள்ளமே ;
செய்ய தீயெனச் சிந்தித் திருந்தது,
தீண்டற் காய செழுமணி யானதே !

சகுந் :—(சினப்பது போல்) அனஸூயே நான் போகிறேனம்மா !

அனஸூ:—ஏனே ?

சகுந் :—பிரியம்வதை கண்டதைப் பேசுகிருளென்று ஆர்ய, கௌதமியிடம் நான் சொல்லுவேன் !

அனஸூ :—சகி, அரிய விருந்தை மரியாதை செய்யாது, இஷ்டப்படி விட்டுப்போதல் அழகல்ல! (வார்த்தை சொல்லாது, சகுந்தலை புறப்படுகிருள்)

அரசன் :—(அவளை நிறுத்த விரும்பியும், தன்னை யடக்கிக்கொண்டு தன்னுள்) ஓஹோ ! காம ஜனங்களின் மனோ விருத்தி, செயலுடன் எவ்வளவு ஒத்திருக்கிறது ! ஏனெனில் நான்........என்னிடத்தினின்று எழுந்திருக்கவில்லை ; எனினும் இந்த முனிமகளைத் தொடர விரும்பி, (ஆனல் வினயத்தால் தடுக்கப்பட்டு) சென்று மீண்டவன் போலாயினேன்.

பிரியம் :—(சகுந்தலையை நிறுத்தி) அடி சகுந்தலே செல்லுதல் உனக்குச் சரியல்ல.

சகுந் :—(புருவத்தை வளைத்து) ஏனோ ?

பிரியம் :—நீ இன்னும் எனக்கு இரண்டு செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வா, கடனைத் தீர்த்த பிறகு நீ போகலாம்.

அரசன் :—மெல்லியலீர் ! செடிகளுக்கு நீரூற்றுவதாலே, இந் நல்லாள் களைப்புற்றுக் காண்கிறாள். ஏனெனில் அவள்,

*தண்குடங் கைக ளேந்தத் தளர்ந்தன புயங்கள் ; மிக்க
அங்கைகள் சிவந்த ; மூச்சால் அளகங்கள் விம்மும் ; வேர்வை
மங்கள முகத் தரும்பிக் காதணி மலரைத் தேக்கும் ;
செங்கை யொன் றிணைத்த கூந்தல் சிதைந்தது திருவிற் கம்மா!

கைகளால் குடந்தூக்கிப் புயங்கள் தளர்ந்தன ! அங்கைகள் மிகச் சிவந்தன ; (வேலையால்) அதிக அளவு சுவாசம் விடுதலால், இன்னும் தனங்கள் விம்மிக்கொண்டிருக்கின்றன. அவள் முகத்தில் குறுவேர்வைகள் பொடித்துக் காதி லணிந்த வாகை மலர் ஆடுவதைத் தடுத்தன ; முடியவிழ்ந்து, அவள் ஒரு கையாற் பற்றிக் கொண்டிருக்கும் சோர் குழல் குலைந்துள்ளது ; ஆதலின் அவள் கடனை நானே தீர்க்கிறேன்.

[இப்படிச் சொல்லித் தனது மோதிரத்தைத் தருகிறான். அதில் முத்திரையிட்டுள்ள பெயரைப் படித்து ஒருவரை யொருவர் பார்க்கின்றனர்]

அரசன் :—என்னை வேறொருவனென் றெண்ணுதீர்கள்—(என்னை அரசனென் றெண்ணுதீர்கள்). இது அரச

*தண்ணீர் இருப்பதால் குளிர்ந்த குடம்.

னது சன்மானம் ; ஆதலால் என்னை ஒரு ராஜ புருஷ னென் றறியுங்கள்.

பிரியம் :—ஆனல் இம்மோதிரம் விரலினின்று விலகொணுது ; ஆர்யர் சொல்லாலேயே அவள் கடன் நீர்ந்தது. (புன்சிரித்து) பிரிய சகுந்தலே, உனக்கிரங்கிய ஆர்யர் அல்லது மஹாராஜனல் நீ விடுதலை பெற்ருய் ; இனிச் செல்.

சகுந் :—(தனித்து) முடியுமா ? எனக்கு (இவரைப் பிரிந்து செல்லத்) திறமையுண்டா ?............ (வெளியில்) என்னைப் போக்கவும் நிறுத்தவும் நீ யார் ?

அரசன் :—(சகுந்தலையைப் பார்த்துத் தன்னுள்) நான் அவளை விரும்புவது போல, அவளும் என்னை விரும்பக் கூடுமா ? அல்லது, எனது வேண்டுகோள் நிறைவேறி யது போலும். ஏனெனில்,

என் மொழிகளுடன் தன் மொழிகள் கலவாவிடி னும், நான் பேசும்போது காது கூர்ந்து கேட்கிருள் ; முழுமுகமும் என்னை நோக்கித் திரும்பாது நின்ருலும், அவள் கண் குறிப்பது வேறு பொருளல்ல !

(திரைக்குப் பின்னல்)

ஹே ! ஹே ! தபஸ்விகாள் ! தபோவனப் பிராணி களைக் காக்கத் தயாராயிருங்கள் ! வேட்டையில் மகிழ்ந்து, மன்னன் துஷ்யந்தன், அருகில் இருக்கிரு னெனத் தெரிகிறது. ஏனெனில் அவனுடைய தேர்க் குதிரைகளின் குளம்புகள் எழுப்பிய அக்நிவான் போன்ற துசி, விட்டிற் கூட்டம் போல், ஈரமான மரவுரிகள் உலரும் ஆசிரம மரங்களின் மீது அடிக் கிறது ! மேலும்,

தேரைக்கண்டு வெருண்ட ஒரு யானை, ஒரு கொம்பு பலமாக மரத்தில் மோதியதால், புயத்தில் காயப்பட்டு, தனது காலால் இழுத்துச் செல்லும் கொடிகளிற் சிக்குண்டு, மான் கூட்டங்களைச் சிதறடித்து, நமது தவத்திற்கு இடையூறே உருவெடுத்தாற் போல, தருமாரண்யத்தில் நுழைந்துகொண்டிருக்கிறது.

(எல்லாரும் கேட்டுத் தியங்குகின்றனர்)

அரசன் :—(தனித்து) ஆஹா! சை! நம்மைத் தேடி வரும் குடிகள் தபோவனத்திற் கிடையூறு செய்கின்றனர்; சரி நாம் உடனே செல்வோம்.

பிரியம்வதை, அனஸூயா :—ஆர்ய! காட்டானையின் செய்தி கேட்டு நாங்கள் அஞ்சுகிறோம்; ஆதலின், பர்ணசாலைக்குச் செல்ல விடை கொடுங்கள்.

அரசன் :—(அவசரமாய்) நீங்கள் போகலாம்; ஆசிரமத்திற்கு இடையூறு வராதபடி யாமும் முயலுகிறோம்.

(எல்லாரும் எழுதல்)

பிரியம்வதை, அனஸூயா :—ஆர்ய! தங்களுக்கு இப்போது அதிதி ஸத்காரம் முறைப்படி செய்யவில்லை; மீண்டும் தங்களை விஜயஞ்செய்ய வேண்டுவதில் வெட்கப்படுகிறோம்.

அரசன் :—அப்படியன்று; உங்கள் காட்சியே என்னைக் கௌரவித்தது.

சகுந் :—அனஸூயே, ஒரு தருப்பாங்குரம் என் காலில் குத்தியது; மருதோன்றிக் கிளையில் என் மரவுரி சிக்கியது. அதை எடுத்து விடுமட்டும் தாமதி.

[அரசனைப் பார்த்துக்கொண்டே, ஏதேனும் சாக்கு வைத்துத் தயங்கித் தங்கி, சகுந்தலை தனது தோழிகளுடன் செல்கிறாள்]

அரசன் :—எனது நகரத்திற்குத் திரும்பும் விருப்பம் குறைந்தது; ஆதலின், அனுசரர்களை யடைந்து, அவர்களைத் தபோவனத்தினின்று சிறிது தூரத்தில் தங்கச் செய்கிறேன். சகுந்தலை நினைப்பை மாற்ற முடிந்திலேன்.

காற்றெதிர் கொண்டு செல்லும்—கொடி
ஏற்றிய *பட்டெனவே,
முன்செல்லு கின்றதுடல்—சித்தம்
பின்னிட்டுத் தாவு தம்மா !

(செல்லல்)

முதல் அங்கம் முற்றிற்று

அங்கம்—2

க. வேட்டையை நிறுத்தல்

[விதூஷகன் களைத்து வருதல்]

†விதூஷகன் :—(நெட்டுயிர்ப்புடன்) அட விதியே ! இந்த வேட்டை விரும்பும் வேந்தன் நட்பால் களைத்துப்

---

*சீலைப்பட்டு.

†விகார உடை, உரு, வேடிக்கைப் பேச்சு—இவற்றால் விதூஷகன் அரசனுக்கு நகைப்பூட்டுவதுடன், காதல் வெற்றிக்கும் துணைபுரிவான். விதூஷகன், அரசன் பக்கத்தில் நம்பிக்கையுடன் இருந்து, ஹாஸ்யத்தால் பல நீதிகளைச் சொல்வதுடன் மனவருத்தந் தீர நகையூட்டிக் கொண்டிருப்பான்.— “விக்ருதாங்க வசோ வேஷைர் ஹாஸ்யகாரி விதூஷக:”

போனேன்! கோடையருந்தல்; மரநிழல் கூட அரிதான நெடுங்காடு; அதனூடு, "இதோ மான்! அதோ பன்றி! அதோ போகிறது புலி!" என்னும் கூச்சலைக் கேட்டு, அடவிக்கடவி, உச்சி வெயிலில்கூட அலைகின்றோம்! இலைசேர்ந்து கலங்கிக் கஷாயமாகிக் கசக்கும் மலையாற்று நீரையே குடிக்கிறோம். அகாலத்தில் சூலத்தில் வாட்டிய ஊனையே பெரும்பாலும் புசிக்கிறோம். குதிரைமேல் அரசனைத் தொடர்ந்து, பூட்டுகள் நெரிந்து, இரவில்கூடப் படுக்கை கொள்ளவில்லை; பிறகு அதிகாலையில், இந்தத் தாசி மகன்கள் காட்டைச் சுற்றுகையில், கோலாகலஞ் செய்வதால், தூக்கங் கலைந்து எழுப்பப்படுகிறேன். இதோடு பீடை விட்டபாடில்லை! புண்மேல் பரு வெடித்துள்ளது! நேற்று, மானைத்துரத்தி, மன்னன் ஆசிரம எல்லையிற் புகுந்தான்; நாங்கள் சற்றே பின் தங்கினோம்; எனது கஷ்டகாலம், முனி மகளான சகுந்தலையை அவனுக்குக் காட்டிவைத்தது. இப்போது நகரந் திரும்பும் பேச்சே இல்லை. இப்படி நான் நினைக்கையில் இரவு சென்றது; கண்ணுக்குக் காலை வந்தது. கதியில்லை! தமது கடன் முறைகளை முடித்த சமயம் அவரைக் காண்கிறேன். (திரும்பிப் பார்த்து) வனமலர் மாலை சூடி, வில்லுங் கணைகளுங் கையிலேந்திய யவனப் பெண்கள் சூழ, இதோ எனது பிரிய நண்பர் இங்கே வருகிறார். நல்லது; எனது அங்கம் தளர்ந்ததால் சோர்ந்ததுபோல நிற்கிறேன். இந்தச் சாக்கிலாவது எனக்குச் சிறிது ஓய்வு கிடைக்கலாம்!

(தடிக் கம்பில் ஊன்றி நிற்கிறான்)

[முன் சொன்னபடியே பரிவாரத்துடன் மன்னன் வருதல்]

மன்னன் :—என் ஆசைக்கேற்ற அவளை யடைதல் எளிதில்லை ; ஆயினும் அவளுடைய காதல் குறிப்பைக் கண்டு என் மனம் களிக்கிறது. ஆசையின் எண்ணம் நிறைவேறாவிடினும், ஒருவருக்கொருவர் காதலை அறிவித்தலும் இன்பமே. (புன்னகைத்து) தனதெண்ணத்தால், தனக்குப் பிரியமானவர் சிந்தையை ஊகிப்பவன் இப்படி ஏமாறுகிறான். வேறுபக்கம் விழிகளைத் திருப்பியும் அவள் என்னையே அன்புடன் நோக்கினாள் ; இடுப்புக்கனத்தால், விளையாட்டுப்போல மெல்ல நடந்தாள் ; 'போகாதே' என்று தடுத்த தோழியை முனிந்தாள். இவையெல்லாம் அவள் என்பால் ஈடுபட்டதையே குறிக்கின்றன ! காதலன் தன்னையே யாங்கணுங் காண்கிறான் ! "ஸர்வம் தத்கில மத்பாரா யணமஹோ காமீ ஸ்வயம் பச்யதி"

விது :—நண்பா, எனது கை கால்கள் விறைத்துக் கொண்டன ! ஆதலால் உன்னை வாயால் மட்டும் உபசரிக்கிறேன் ; உனக்கு வெற்றி, வெற்றி ! ஜயது, ஜயது பவான் !

மன் :—உன் உறுப்புக்கள் எனிப்படி விறைத்தன ?

விது :—நீயே கண்ணைப் புண்படுத்திக் கண்ணீரின் காரணத்தைக் கேட்பதேன் ?

மன் :—உண்மையாக, நீ சொல்வது விளங்கவில்லை.

விது :—நண்பனே, படுகை நாணல், கூனன் போல நடித்தல், தனது திறமையாலா, அல்லது நதி வேகத்தாலா ?

மன் :—நதி வேகமே அதன் காரணம்.

விது :—என் விஷயத்திலும் தாங்களே காரணம்.

மன் :—எவ்வாறு ?

விது :—ராஜ கார்யத்தை விடுத்து, இந்த விலங்குக் காட்டில், துன்பப் பிரதேசத்தில், வனவேடன்போல் நீ வாழ நேர்ந்தது. உண்மையைச் சொல்லுகிறேன்: நாள் விடாமல், காட்டு மிருகங்களை வேட்டையாடிப் பூட்டு விட்டுப் போயிற்று! என் உறுப்புக்கள் ஸ்வாதீனத்திலில்லை. ஆகையால், ஒரு நாளாவது எனக்கு ஓய்வு கொடுக்க வேண்டுகிறேன்.

மன் :—(தனக்குள்) இவன் இவ்வாறுரைக்கிறான் ; காஸ்யபன் மகளை எண்ணி யெண்ணி, என் மனத்திற்கும் வேட்டை பிடிக்கவில்லை. ஏனெனில், மானைக் குறித்து, கணை பூட்டிய இவ்வில்லை வளைக்க எனக்கு மனமில்லை ; அவற்றின் விழிகள் என் காதலி விழிகள் போன்றன ; அவை என் காதலியுடன் உறைந்து, விழிகளை அழகாகத் திருப்ப அவளுக்குக் கற்றுக் கொடுத்துள்ளனவன்றோ ?

விது :—(மன்னன் முகத்தை நோக்கி) ஏதோ உள்ளே வைத்துக் கொண்டு, தேவரீர் முணுமுணுக்கிறீர் ! நான் காட்டில் அழுதவனானேன்.

மன் :—(புன்னகையுடன்) நான்தான் நண்பன் மொழிகளை மறுக்கக் கூடாதென்று இங்கேயே இருக்கிறேனே ! இன்னு மென்ன ?

விதூ :—சிரஞ்சிவி யாகுக! (போக விரும்புதல்)

மன் :—நண்ப, இரு, என் வார்த்தை இன்னும் முடியவில்லை.

விதூ :—தேவரீர் ஆணை யிடுக!

மன் :—இளைப்பாறிய பிறகு, ஒரு லகுவான காரி யத்தில் எனக்கு நீ துணையிருக்க வேண்டும்.

விதூ :—என்ன, மோதகம் சாப்பிடவா? தயார். அதற்கு இவன் சரியான ஆள்!

மன் :—எதில் என்று சொல்லுகிறேன். யாரங்கே?

வாயற் காப்பான் :—(வந்து வணங்கி) கட்டளை, மஹாராஜா!

மன்:—ரைவதகா! சேனாபதியைச் சற்றுக் கூப்பிடு!

வாயற் :—உத்திரவுப்படி மஹாராசா. (சென்று சேனாபதியுடன் மீளுகிறான்) தமது கட்டளையைச் சொல்ல, மஹாராஜா இந்தப் பக்கமே ஆவலாகப் பார்க் கிறார்; தேவரீர் சமீபிக்கலாம்.

சேனாபதி:—(மன்னனைப் பார்த்து) வேட்டையில் குற் றம் உண்டு; எனினும், மஹாராஜாவிற்கு அதனால் நலமேற்பட்டிருக்கிறது. ஏனெனில், மஹாராஜாவின் உடல், மலையில் திரியும் யானை மாதிரி வைரவுறுதி கொண்டது. அடிக்கடி வில் தெறிப்பதால், அதன் முன் பாகம் திண்புற்று, வெய்யிலைத் தாங்கக் கூடியதாய், வேர்வையை (களைப்பை) லக்ஷியம் செய்யாததா யிருக் கிறது; தசை வலிவுற்றிருப்பதால், அதன் இளைப்புக் கூடத் தோன்றவில்லை. (சமீபித்து) ஜெயது ஸ்வாமி!

வேட்டைத் தடம் குறித்தாய் விட்டது! இறைவர் தாமதிப்பதேன்?

மன் :—மாதவய்யன் வேட்டையை இகழ்ந்ததால், எனது உற்சாகம் குறைந்துவிட்டது.

சேனுபதி :—(பக்கத்தில், விதூஷகனுக்கு) நண்ப, நீ விடாது தடை செய்; மஹாராஜாவின் சித்தப்படி நான் நடக்கிறேன்; (உரக்க) இந்த முட்டாள் உளறட்டும்! வேட்டையின் நலத்திற்கு மஹாராஜாவே நிதர்சனம்.

வேட்டையால் உடல் லகுவாகிறது; உழைப்பைத் தாங்குகிறது; சதை குறைந்து, இடை மெலிகிறது; அச்சத்தாலும் சினத்தாலும் பதைக்கும் விலங்குகளின் உள்ளத்தைக் காண முடிகிறது. ஓடும் குறியை யெய்தல், வில்லாளியின் சிறந்த திறமையை விளக்குகிறது. வேட்டையைத் தீதென்பது பொய்! அத்தகைய ஆடல் எங்குள்ளது?

விதூ :—(சினம் கடித்து) மஹாராஜா சுபாவமாயிருக்கிறுர்; நீ அவரைச் சிரமப்படத் தூண்டுகிறுயா! செல்! காட்டிற்குக் காடு திரியும்போது, மனித மூக்கிற்கு ஆசைப்படும் ஒரு கிழட்டுக் கரடி வாயில் நீ விழப் போகிறுய்!

மன் :—நல்லோய், சேனுபதி, ஒரு ஆசிரமத்தருகே நாம் தங்கி யிருக்கிறோம். ஆதலின் நீ சொல்வதை நான் ஒப்பவில்லே. இன்று எருமைகள் கொம்புகளால் துளாவி, குண்டு நீரில் முழுகட்டும்; மான் கூட்டம் நிழலிற் கூடி அசை போடட்டும்; காட்டுப் பன்றிகள் அச்ச மின்றி, குட்டைகளில் கிழங்கு தோண்டட்டும்;

நாணைத் தளர்த்தி, இந்த எமது வில்லும் உடனே இளைப்பாறட்டும்.

சேனாபதி :—இறைவர் விருப்பம் !

மன் :—ஆயின் நல்லது, முன்னால் சென்றுள்ள வன வேடரைத் திருப்பிடுக ! தபோவனத்திற்கு இடர் செய்யாமல் எமது படை வீரருக்கு ஆணையிடுக, ஏனெனில்,

*ஶமப்ரதானேஷு தபோதனேஷு
கூடம்ஹி தாஹாத்மக மஸ்திதேஜ :
ஸ்பர்ஶானுகூலா இவஸூர்யகாந்தா
ஸ்ததன்ய தேஜோ(அ)பி பவாத்வமந்தி.

தபஸ்விகள் சாந்தராகக் காணப்பட்டாலும், ஒரு சக்திக்கனல் அவர்களுள் மறைந்துள்ளது ; தொட்டால் குளிரும் ஸூர்யகாந்திக் கல்லில், வெப்பம் மறைந்திருப்பது போன்றது ; யாரேனும் தங்களை இடர் செய்து வருத்தினால், அப்போது முனிவர் அக்கனலை யுமிழ்ந்து பகைவரைத் தகிப்பர்.

சேனாபதி :—இறைவர் ஆணைப்படி.

விதூ :—நீ ராஜாவை உத்ஸாஹப்படுத்தும் பேச்சு மண்ணாய்ப் போகட்டும் !

(சேனாபதி செல்கிறான்)

மன் :—(பரி ஜனங்களை நோக்கி) நீங்கள் வேட்டை யுடைகளைக் களைந்திடுங்கள். ரைவதக, நீயும் உன் காரியத்தைக் கவனி.

---

*'ஶமம்' என்பது புலனடக்கம்—உள்ளமைதி. ஶ்ரவணாதி வ்யதிரிக்த விஷயேப்யோ மனஸோ நிக்ரஹ : அதாவது கேட்டல் முதலிய விஷயாதிகளை மனத்தாலடக்குதல்.

பரிஜனங்கள் :—தேவரீர் ஆணைப்படியே (செல்கின்றனர்)

விது :—தேவரீர் ஒரு ஈயின்றி ஓட்டி விட்டீர் ! மேற்கட்டியாக மர நிழல் விரிந்த இச் சிலா தலத்தில் தேவரீர் வீற்றிருந்தால், நானும் சுகமாய் உட்காருவேன்.

மன் :—முன் செல்.

விது :—வாருங்கள்.

உ. காதலி வர்ணனை

[இருவரும் சுற்றி நோக்கி உட்காருகின்றனர்]

மன் :— மாதவய்யா ! விழியின் பயனை நீயடையவில்லை ; ஏனெனில், நீ காட்சிக் கினியதைக் காணவில்லை.

விது :—ஏன் (காட்சிக்கினிய) தேவரீர் என் முன்னேயே இருக்கிறீரே.

மன் :—ஒவ்வொருவரும் தமதே அழகெனக் காண்பர். ஆசிரமத்திற் கணியான சகுந்தலையைப் பற்றி யான் பேசுகிறேன்.

விது :—(தன்னுள்) இருக்கட்டும் ; இவர் நினைப்பை ஆதரிக்கமாட்டேன். (விளக்கமாய்) நண்பா, நீ ஆசை கொண்டது ஒரு தவக் கன்னிகை மீதல்லவா ?

மன் :—நண்பா, பௌரவன் மனம் தகாத பொருளிடம் ஒருகாலும் செல்லுவதில்லை.

முனிமகள் பிறந்தது ஒரு ஸுர யுவதியிடம் ; எருக்கில் உதிரும் நவமல்லிகை மலர்போல், அவள்

கைவிடுக்கப் பெற்ருள்; கண்ணுவர் அவளைக் கண்டெடுத்து வளர்த்தார்.

விதூ :—அந்தப்புரப் பெண்மணிகள் சலித்து, ஆசிரமக் கன்னிகையை விரும்புகிருய். பேரீச்சம்பழம் சலித்துப் புளியம்பழத்திற்கு ஆசைப்படுவது போலிருக்கிறது உன் விருப்பம்.

மன் :—நீ அவளைப் பார்க்கவில்லை. அதனுலேதான் இப்படிச் சொல்லுகிருய்.

விதூ :—உன் வியப்பையும் தூண்டிய பொருள் ரமணீயமாகவே யிருக்கவேண்டும்.

மன் :—நண்ப, வார்த்தை யதிகமேன் ?

சித்ரே நிவேஷ்ய பரிகல்பித ஸத்வயோகா
ரூபேச்ச யேன மனஸா விதினு க்ருதானு
ஸ்த்ரீரத்ன ஸ்ருஷ்டி ரபரா ப்ரதிபாதிஸாமே
தாதுர் விபுத்வ மனுசிந்த்ய வபுஸ்ச தஸ்யா :

சித்திர மெழுதி யாவி சேர்த்தன னென்கோ வேதன் !
முத்தழ கெல்லாங் கூட்டி மனத்தினு லுருச்செய் தானே !
மற்றவன் றிறமை நோக்கி, மாதிவள் வடிவு நோக்கின்,
பொற்றிரு நல்லாள் *வேறு சிறப்புடன் பொலிகின் ருளே!

விதூ :—அப்படியானுல், மற்றெல்லா ரூபவதிகளும் பின்னுல் ஒதுக்கித் தள்ளப்பட்டார் போலும்!

மன் :—இதுவும் என் மனத்திற்படுகிறது :—

முகர்ந்திடா மலரே ; யாரும் கிள்ளிடா முளையே ; இன்னும்
உகந்திடாப் புதிய தேனே ; குடைந்திடா மணியே ; ஓங்கும்

---

* தனிச்சிறப்பு.

அகண்டபுண் ணியத்தின் பேறே; அழகமு திதனைத் துய்க்கத் தகவுளா னெவனோ? வேதா தன்னுள மறிகி லோமால்!

விதூ:—அப்படியானால், தலையில் இங்குதி எண்ணெய்ப் பிசுக்குப் பிடித்த ஒரு தவசி கையில் படாமல், தேவரீர் உடனே அவளை விடுவிக்கவும்.

மன்:—அவள் பாராதீனை; அவள் தந்தையும் அருகிலில்லை.

விதூ:—தேவரீர்பால், அவள் கண் ஜாடையின் விருப்பம் எப்படி?

மன்:—தவக் கன்னியர் இயல்பிலேயே நாண் மிக்கவர்; இருப்பினும், என்னைப் பார்த்தாள்; நான் பார்த்ததும் அவள் பார்வை அப்புறப்பட்டது; வேறொரு காரணங்கொண்டு நகைத்தாள்; இப்படி நாணம் தடுக்கும் அவள் ஆசை, நன்றாகத் தோன்றவுமில்லை; மறையவுமில்லை.

விதூ:—உன்னைப் பார்த்ததும், தொடையில் வந்து உட்காருவாளா?

மன்:—நான் விடைபெற்றுக் கொள்ளும்போது, நாணத்துடன் என்பால் வைத்த ஆசையை உணர்த்தினாள்.

அம்மெல்லியல், சில அடிகள் சென்றதும், காலில் தருப்பைப்புல் அழுத்தியதென்று சொல்லித் திடீரென்று நிற்பாள்; தனது வற்கலை கிளைகளிற் சிக்காவிடினும், அதை விடுவிப்பவள் போல, முகத்தை என் புறம் திருப்புவாள்.

விதூ:—அப்படியானால், சாப்பாட்டிற்கு வேண்டியதைச் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள்

தபோவனத்தை உல்லாசவன மாக்கிவிட்டதாகத் தோன்றுகிறது!

மன் :—நண்பா, சில தபஸ்விகள் என்னைத் தெரிந்து கொண்டிருக்கின்றனர்; ஆதலால், எந்தச் சாக்கு வைத்து மீண்டும் ஆசிரமத்திற் புகலாம்? ஒரு யோசனை சொல்.

விதூ :—ராஜாக்களான உங்களுக்கு வேறென்ன சாக்கு வேண்டும்? அங்கே சென்று, தபஸ்விகளை, காட்டு நெல்லில் ஆறிலொரு கடமை கொண்டுவரச் சொல்லுங்கள்.

மன் :—முட்டாள், இரத்னக் குவியல்களும் ஈடு காணுத, மற்றொரு கடமையை இத்தபஸ்விகள் செலுத்துகின்றனர் :

நால்வருணத்தாரும் அளிப்பதால் மன்னருக்கு வரும் செல்வம், அழியக்கூடியது; வனவாசிகளான முனிவர் அருளும், ஆறிலொரு பங்கு தவச்செல்வம், அழிவில்லாதது.

(திரைக்குப் பின்னுல்)

அப்ப! நமதெண்ணம் நிறைவேறியது!

மன் :—(செவி கொடுத்து) ஆ! ஆழ்ந்த அமைதியுள்ள குரலால், அங்கே பேசுவது சில தபஸ்விகளாகவே யிருக்கவேண்டும்.

(வருதல்; வாயற்காப்பான்)

வாயற் :—ஜய மஹராஜ்! இரண்டு ரிஷி குமாரர் வாயலில் வந்திருக்கின்றனர்.

மன் :—தாமதமின்றி அவர்களை உள்ளே அழைத்து வா!

வாயற்:—இதோ அழைத்து வருகிறேன் மஹராஜ்! (சென்று இரண்டு ரிஷி குமாரருடன் வருதல்) இதோ, இங்கே சாமிமாரே !

(இருவரும் மன்னனைப் பார்த்து)

முதல் ரிஷி குமாரன் :—ஆ! தேஜோமயமா யிருப்பதுடன், இம் மன்னன் தோற்றம், அணுக இனிமையா யிருக்கிறது ; இவனுக்கும் ரிஷிகளுக்கும் அதிக வேறுபாடில்லை. ஏனெனில்,

அத்யாக் ராந்தா வஸதி ரமுதாப்
யாஶ்ரமே ஸர்வ போக்யே
ரக்ஷா யோகா தயமபிதப :
ப்ரத்யஹம் ஸஞ்சினோதி
அஸ்யா பித்யாம் ஸ்ப்ருஶதி வஶினஸ்
சாரண த்வந்த கீத :
புண்ய : ஸப்தோ முனிரிதி முஹு :
கேவலம் ராஜ பூர்வ :

முக்தி பெறுவதற்கு, ரிஷிகள் வனங்களில், யோகாசிரமத்தில் வசிப்பர் ; இம் மன்னன் சகல போகங்களும் நிறைந்து, அனைவரும் அணுகத்தக்க கிரகஸ்தாசிரமத்தில், ராஜ்யாசிரமத்தில் வசிக்கிறான். முனிவர் ஆத்மயோகம் பயில்வர் ; இவன் மன்னுயிரைத் தன்னுயிர்போலக் காக்கும் ரக்ஷயோகம் புரிகிறான். முனிவர் புலன்களை யடக்குவர் ; இவன் நாட்டிலுள்ள தீமைகளையும், கலகங்களையும் அடக்கிக் குடிகளுக்கு நன்மை செய்கிறான். ஆதலால் இவனை 'ராஜமுனி, ராஜரிஷி' என்றும் தேவசாரணர், வானோங்கப் போற்றி செய்வர்.

மற்ருெருவன் :—கௌதமா, இந்தத் துஷ்யந்தன் *பலாஸுரனைக் கொன்ற இந்திரன் நண்பனே ?

முதல்வன் :—பின்னென்ன ?

மற்ருெருவன் :—அப்படியாயின், நகர வாயில் தாழ்ப்பாழ் போன்ற (உரத்த கரங்களையுடைய) இவனே, கடலை நீல எல்லையாகக் கொண்ட உலகனைத்தையும் புரப்பது வியப்பன்று ; ஏனெனில், அசுரர்பால் ஆழ்ந்த பகை கொண்ட தேவர் கணங்கள், இவனுடைய நாணேற்றிய வில்லையும், இந்திரன் வஜ்ராயுதத்தையுமே தங்கள் போர் வெற்றிக் கெதிர்பார்க்கின்றனர்.

(மன்னனை நெருங்கி).

இருவரும் :—விஜயஸ்வ ராஜன்! (அரசே வெல்க)

மன் :— (இருக்கையி னின்றெழுந்து) அபிவாதயே பவந்தவ் (இருவருக்கும் வணக்கம்)

இருவரும் :—ஸ்வஸ்திபவதே! (மங்களமாகுக !) (கனிகள் அளித்தல்.)

மன் :—(வணங்கி ஏற்று) ஆஞ்ஜா பயிது மிச்சாமி ! (கட்டளை வேண்டுகிறேன்).

இருவரும் :—தாங்கள் இங்கிருப்பது ஆசிரம வாசிகளுக்குத் தெரியும். ஆதலின் தங்களை அவர்கள் வேண்டுகின்றனர்.

மன் :—அவர்கள் கட்டளை என்ன ?

---

*பலன் தேவர்க்கிடையூறு செய்யும் அசுரன் ; வேதம் இவனை, விருத்ரன், அஹி, ஸம்பரன், நமுசி என்னும் பல பெயரிட் டழைக்கும். இவ்விருட் பகைவய இந்திரன் கொன்ருன்.

இருவரும் :—கண்வ மஹர்ஷிகள் இங்கில்லாததனல், ராக்ஷஸர்கள் எங்கள் வேள்விக் கிடையூறு செய்கின்றனர். ஆதலால், தாங்கள் ஸாரதியுடன், சில நாட்கள், ஆசிரமத்திலேயே தங்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றனர்.

மன் :—அனுக்ர ஹீதோஸ்மி (அருள்பாலிக்கப் பெற்றேன்).

விது :—(தனியே) இந்த வேண்டுகோள் உனக்கு இப்போது அனுகூலமானதே!

மன் :—(புன்னகைத்து) ரைவதகா, எனதாணைப்படி ஸாரதியை வில்லுடன் தேரைக் கொண்டுவரச் சொல்.

ரைவதகன் :—மஹாராசா உத்தரவுப்படி.

(செல்கிருன்)

இருமுனிவரும் :—முன்னோரைப் பின்பற்றும் தங்களுக்கு இது தகவே; வருந்தினோர் இடர் தீர்க்கும் யாகதீக்ஷை பூண்டவர்களன்றோ பௌரவர்?

மன் :—(வணங்கி) தேவரீர் விடைபெற்றுக்கொள்ளுங்கள்; இதோ யான் தங்கள் பின் வருகிறேன்.

இருவரும் :—விஜயஸ்வ! (வெற்றியுறுக)

(செல்கின்றனர்)

மன் :—மாதவய்யா, சகுந்தலையைத் தரிசிக்க உனக்குக் குதூகலம் உள்ளதா?

விது :—முன்னால் அளவற்றிருந்தது; அரக்கரின் வரலாறு கேட்டதும், இப்போது, ஒரு துளிக்கூட இல்லை.

மன் :—அஞ்சாதே; நீ என் பக்கமே யிருப்பாய்.

விது :—அப்போது, அரக்கரிடமிருந்து நான் காக்கப்பட்டவனாவேன்!

(வருதல், வாயற்காப்பான்)

வாயற் :—இறைவர் வெற்றியுடன் புறப்படத் தேர் தயாராயிருக்கிறது; ஆனால் ராணியம்மாள் உத்தரவு கொண்டு, நகரினின்று கரபகன் வந்துளான்.

மன் :—(மரியாதையுடன்) என்ன, நமது அன்னை அனுப்பின ஆளா?

வாயற் :—ஆமாம் மஹாராசா!

மன் :—சரி, உடனே அழைத்து வா.

வாயற் :—மஹாராசா, உத்தரவு! (சென்று கரபகனுடன் வருகிறான்) இதோ மஹாராசா - அணுகுங்கள்!

கரபகன் :—ஜயமஹராஜ்! தேவியார் ஒரு மொழி விடுத்துள்ளார்: "வரும் நான்கா நாளன்று புத்ர - பிண்டபாலன விரதம் முடிந்து, பாரணை தொடங்குகிறது. அச்சமயம் தீர்க்காயுசான என் மகன் உடனிருந்து என்னைக் கௌரவித்தல் வேண்டும்" என்று.

மன் :—தவசிகள் காரியம் ஒரு புறம்; அன்னை ஆணை மறுபுறம்; இரண்டும் மீற முடியாதன. இச்சங்கடந் தாண்டுவதெப்படி?

விது :—இரண்டிற்கும் நடுவே திரிசங்குபோலிரு!

மன் :—உண்மையாகவே நிகைக்கிறேன்! இரண்டு கடமைகள்; வெவ்வேறிடத்தில்! என் மனம் குன்று தடுத்த ஆற்றோட்டத்தைப்போலே, இருகிளையாயுள்ளது. (யோசித்து) நண்ப, என் அன்னை உன்னை மகனாகக் கருதுகிறாள்; ஆதலால், நீ திரும்பிச் சென்று என்

மனம், முனிவர் பணியில் ஈடுபட்டுள்ளதென்று தெரிவித்து, ஒரு மைந்தன் செய்யத்தக்கதை நீ எனது தாய்க்குச் செய்வாயாக !

விது :—என்னை அரக்கருக்கு அஞ்சினவனென்று எண்ணவேண்டா !

மன் :—(நகைத்து) தங்களை அப்படி எண்ணத் தகுமா ?

விது :—ராஜாவின் தம்பிபோல நான் செல்கின்றேன்.

மன் :—ஆம், தபோவனத்திற்கு இடையூறெதுவுமிருக்கக்கூடாது. அதனால், எனது அனுசரர்களனைவரையும் உன்னுடனனுப்பிவிடுகிறேன்.

விது :—(செருக்குடன்) ஆனால் நான் இப்போது யுவராஜனாகிவிட்டேன்.

மன் :—(மனதுள்) இந்தப் பயல் வாயாடி ; எனது விருப்பைப்பற்றி அந்தப்புர ஸ்திரீகளிடம் பேசினாலும் பேசுவான். நல்லது ; இவ்வாறு இவனுக்குச் சொல்லுகிறேன் : (விதூஷகன் கையைப் பிடித்து) நண்பா, ரிஷிகளிடம் வணக்கத்தால் ஆசிரமம் செல்கின்றேன் ; உண்மையாக முனிமகளிடம் எனக்கு விருப்பமில்லை.

க்வவயம்? க்வபரோக்ஷ மன்மதோ
ம்ருகஶாவை: ஸமமேதி தோ ஜன :
பரிஹாஸ விஜல்பிதம் ஸகே
பரமார்த்தேன ந க்ருஹ்ய தாம்வச :

நாமெங்கே! மான்களிடை வளர்ந்து, காம மறியாத அவள் எங்கே! நண்பா, வேடிக்கையாய்

மொழிந்த என் பேச்சை யதார்த்தமாகக் கொள்ள வேண்டாம்!

விதூ:—மெய்தான்!

(எல்லாரும் செல்லல்)

இரண்டாம் அங்கம் முற்றிற்று

அங்கம்—3

க. *விஷ்கம்பகம்

[கண்ணுவர் சீடன் தருப்பை யேந்தி வருதல்]

சீடன்:—அஹோ! மன்னன் துஷ்யந்தன் மஹானுபாவன்; அப்பெருந்தகை ஆசிரமத்தில் பிரவேசித்த மாத்திரத்தில், எங்கள் வேள்வி வினைகள் இடரின்றி நடைபெறுகின்றன.

கா கதா பாண ஸந்தானே
ஜ்யா சப்தே னைவதூரத:
ஹூங்காரே ணைவ தனுஷ:
ஸஹிவிக்ந னபோஹதி!!

கணை தொடுக்கும் பேச்செதற்கு? நாணொ டங்காரஞ் செய்த மாத்திரத்தில், வில்லின ஹூங்காரம்

---

*சபை முன் நடிக்கப்படாது. கதையின் முன் பாகத்தையும், இனிவரப்போவதையும் இணைப்பது விஷ்கம்பகம். விஷ்கம்பகம்=உறுதியாக இணைத்தல். முதன்மையான நடர்களின்றி ஒன்று அல்லது இரண்டு சிறிய நடர்களால் நடிக்கப்படுவது சுத்த விஷ்கம்பகமாம். தாழ்ந்த நடிகரால் நடிக்கப்படுவது சங்கீர்ண விஷ்கம்பகமாம். இவ்விடம் சுத்த விஷ்கம்பகம் என்றறிக.

போன்று, தூரத்திருந்தே அவன் இடர்களை விலக்கு கின்றான். இப்போது வேதிகையைச் சுற்றிப் பரப்ப, இந்தத் தருப்பையை ரித்விக்குகளிடம் கொண்டு செல் கின்றேன். (சுற்றி, வானை நோக்கி) ப்ரியம்வதே! காம்பு டன் கூடிய தாமரை யிலைகள், இலாமிச்சைத் தைலம் எல்லாம் யாருக்கு? (பதில் கேட்பது போலப் பாவனை செய் தல்) ஆ, என்ன சொல்கிறாய்? 'வெய்யிலடியால் சகுந் லைக்கு உடல் நலமில்லை. அவளுடலைக் குளுமையாக்கவே இவை' என்கிறாயா! ஆனால் விரைந்து செல். பிரியம்வதே கவனமாகச் சிகிச்சை செய்! சகோதரீ, அவள் குலபதி பகவான் கண்வரின் உயிராவள். யானும், கௌதமி யின் மூலம், யக்ஞ - சாந்தி - உதகம் அனுப்புகிறேன்.

(செல்கிறான்)

(விஷ்கம்பகம் முடிவு)

உ. வைரப் பூங்கணை

[காதலால் வருந்தி, மன்னன் வருகிறான்]

மன் :—(நெட்டுயிர்த்து)

ஜானே தபஸோ வீர்யம்
ஸா பாலா பரவதீதி மே விதிதம்
அலமஸ்மி ததோஹ்ருதயம்
ததாபி நேதம் நிவர்தயிதும்.

தவத்தின் வீரியம் அறிவேன். அக் கன்னி, தந் தையைச் சார்ந்திருப்பதும் அறிவேன்; தாழ்ந்த நிலத் திற் பாயும் நீர்போல், இம் மனத்தையும் அவளிட மிருந்து திருப்ப என்னால் முடியவில்லை. (மதன வேதனை யைக் காட்டி) ஏ மலர்கணைக் கடவுளே! உன்னாலும்,

சந்திரனும் (உங்களிருவரையே நம்பியிருக்கும்) காமி ஜனங்கள் ஏமாற்ற மடைகின்றனர். ஏனெனில்,

தவகுஸுமஸரத்வம் ஸீத ரஸ்மித்வமிந்தோர்
த்வயமித மயதார்தம் த்ருஸ்யதே மத்விதேஷு
விஸ்ருஜதி ஹிமகர்பை ரக்னி மிந்துர் மயூகை
ஸ்த்வமபி குஸும பாணன் வஜ்ர ஸாரீ கரோஷி.

மலர்க்கணை யுள்ள தன்பால் ;
மதியிடங் குளிர் நிலாவே ;
அலக்கணுற் றிருக்கும் என்பால்
இரண்டும்பொய் யான தன்றே ;
அலக்குதண் கதிரால் இந்து
நெருப்பினைத் தூவு கின்றான் ;
மலர்க்கணை களைநீ வைர
வலிவுறச் செய்கின் றாயால் !

உருள்தடங்கண்ணாளான அவளையும் வருத்தினால், என்னை இடைவிடாமல் வருத்தும் மகரக்கொடியோனை நான் விரும்புவேன். (சுற்றி நடந்து) வேள்வியினை முடிந்தது ; புரோகிதர் விடை கொடுத்தனர்.

தளர்வுற்ற யான், எங்கே சென்று உல்லாசிப்பது ? (நெட்டுயிர்த்து) எனது காதலியைக் காண்பதினும் வேறு கதி யேது ? அவளையே இப்போது நாடுகிறேன். (சூரியனைப் பார்த்து) பொதுவாக இக்கொடிய வெய்யில் வேளையில், கொடிப் பந்தல் சூழும் மாலினீ நதிக்கரையில், தோழிமார்களுடன் சகுந்தலை காலங் கழிக்கிறாள். அங்கேயே செல்கிறேன். (சுற்றித் திரும்பிக் காற்றின் ஸ்பர்சத்தை யுணர்ந்து) ஆ ! இனிய காற்றால் இப்பிரதேசம் எவ்வளவு சுகமாயிருக்கிறது ? தாமரை மண

மும், மாலினித் துமிகளும் கொண்டு வீசும் காற்றை, வேட்கையால் வருந்தும் அங்கங்கள் இங்கே அணையலாம். (சுற்றிப் பார்த்து) பிரம்புக் கொடிகள் சூழ்ந்த இந்தக் கொடிப்பந்தலுக்கு அருகேயே அவள் இருக்கவேண்டும். ஏனெனில், (சுற்றிப் பார்த்து) வெண் மணல் விரிந்த இக் கொடிப் பந்தலின் வாயலில், வரிசையாகப் புதிய காலடிச் சுவடுகள் அழுந்தியுள்ளன. இடை கனப்பதால், அவற்றின் முன்பாகம் உன்னதமாயும், பின்னே ஆழ்ந்து பதிந்துமுள்ளன. இச்செடிகளின் வழியே, இப்போதே, சென்றிருக்கிறாள். இவற்றின் மலர்கள், இப்போதே, கொய்யப்பெற்றுள்ளன. இக்கிளைகளூடு அவளைக் காண்கிறேன். (திரும்பி அவ்வாறே இன்புற நோக்கி) ஆ! எனது நேத்ரானந்தம் பெற்றேன்: இதோ, என் மனத்திற் கினியாள், மலர் பரவிய ஒரு சிலாசனத்தில் படுத்திருக்கிறாள். இரண்டு சகிகள் பணிசெய்கிறார்கள். நல்லது, அவர்களுடைய இரகசியப் பேச்சை நான் கேட்கிறேன். (குறித்து நிற்கிறான்)

௩. வேட்கை

[முன் வர்ணிக்கப்பட்டது போல, இரண்டு தோழிகளுடன் சகுந்தலை காணப்படுதல்.]

தோழிகள் :—(மெதுவாக விசிறிக் கொண்டே) அடி சகுந்தலே, தாமரை இலைக் காற்று உனக்குச் சுகமாயிருக்கிறதா ?

சகுந்தலை :—என்ன, சகிகள் எனக்கு விசுறுகிறார்களா ? (தோழிகள் கலங்குவதுபோல் நடித்து ஒருவரையொருவர் பார்க்கின்றனர்.)

மன் :—(செடி மறைவிலிருந்து நோக்கி) சகுந்தலை மிகவும் உடல் வருந்தக் காண்கிருள் ; (யோசித்து) அது வெய்யிலின் குற்றமா யிருக்குமோ, இன்றேல் என் மனத்திலிருப்பது போன்றதோ ? (வேட்கையுடன் பார்த்து) ஐயமொழிக !

மார்பில் இலாமிச்சைத் தைலம் அப்பி, கையி லுள்ள தாமரைக் கொடி வலயம் தளர்ந்து, எனது காதலியின் நொந்த மேனி எவ்வளவு கமநீயமா யிருக் கிறது ! வேட்கையும், வெப்பமும் தரும் இன்னல் சம மாகும். எனினும், யுவதிகளிடம் வெப்ப நோயினும் வேட்கை நோயே மனோகரமானது.

பிரியம்வதை:—(தனித்து) அனஸூயே, அந்த ராஜ ரிஷியை கண்டது முதலே சகுந்தலை வருந்துகிருளெனத் தெரிகிறது. இவள் ஆதங்கம் அவனைக் குறித்ததே போலும் !

அனஸூ :—ஸகி, என் மனதும் அவ்வாறே ஐய முறுகிறது ; நல்லது, இப்போது அவளையே கேட் கிறேன். (உரக்க) சகீ, உன்னை யொன்று கேட்க வேண் டும். உனது ஸந்தாபம் பலமாகவே யிருக்கிறது.

சகுந் :—(படுக்கையி லிருந்து உடலின் முன் பாகத்தை யுயர்த்தி) தோழி, என்ன சொல்ல விரும்புகிருய் ?

அனஸூ :—ஸகி, சகுந்தலே, மதன விருத்தாந் தம் எதுவும் எங்களுக்குத் தெரியாது. ஆனல் இதிஹா ஸங்களில் காம நோயாளரைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறோம். உனது நிலைமை அவர்களை யொத்துள் ளது. எதனல் நீ வருந்துகிருய் சொல்லு ; கோளாறு

உண்மையாகத் தெரிந்தாலன்றி, அதற்கு மாற்றைச் செய்ய முடியாது.

மன் :—அனஸூயைக்கும், என்னைப் போன்ற சந்தேகம் பிறந்துள்ளது ; எனது அனுமானம் என் சொந்த அபிப்பிராயமல்ல.

சகுந் :—(தனக்குள்) என் ஆவல் மிகப்பெரிது. இப்போதும் அதை இவர்களிடம் உடனே வெளியிட முடியவில்லை.

பிரி :—ஸகி சகுந்தலே, அனஸூயை சரியாகச் சொல்லுகிறாள் ; உனது ஆதங்கத்தை ஏன் உபேக்ஷிக்கிறாய் ? நாளுக்கு நாள் அங்கம் மெலிகிறாய் ; கேவலம் நினது லாவண்யத்தின் சாயலே உன்னை நீங்கவில்லை.

மன் :—பிரியம்வதை சரியானதே பேசினாள் ; ஏனெனில்,

க்ஷாம க்ஷாம கபோல மாநந முர: காடின்ய முக்தஸ்தனம்
மத்யக் லாந்ததர: ப்ரகாம விநதா வம்ஸௌ சவி: பாண்டுரா
ஸோச்யாச ப்ரியதர்ஸநாச மதந க்லிஷ்டே யமாலக்ஷ்யதே
பத்ரா ணமிவ ஸோஷணேந மருதா ஸ்ப்ருஷ்டா லதா மாதவீ.

கன்னம் வடிந்த முகம், கடினம் விடுத்த முலை,
இன்னம் மெலிந்த இடை, இறங்கும் புயம், பசலை
துன்னும் பெருங்காமம், துயர் செய்யிவள் இனிமை
வன்காற்றிலை வாட்டும் வனமல்லிகைக் கொடியே !

சகுந் :—சகீ, வேறு யாரிடம் யான் அதைச்சொல்வேன்? இப்போது யான் உங்களுக்குச் சிறிது தொந்தரவு தந்தவளாவேன்.

இருவரும் :—அதற்கே யாங்கள் மன்ருடுகிரும் ; இனியார்களுடன் பங்கு கொள்ளும் இன்னல், பொறுத் தற் கெளிதாகிறது.

மன் :—இன்ப துன்பங்களைத் தன்னேடு தாங்கு வோர் கேட்பதால், தன் மனத்திலுள்ள காரணத்தை, இந் நங்கை, அவர்களுக்குச் சொல்லாது தீராள். என்னையே வேட்கையுடன் அவள் (அன்று) பல தடவை நோக்கினும், இந்த நிமிஷம் அவள் மறுமொழியைக் கேட்க அஞ்சுகிறேன்.

சகுந் :—சகி, தபோவன ரக்ஷகனை அந்த ராஜரிஷியைக் கண்ணிற் கண்டது முதல்...................

(இத்துடன் லஜ்ஜை காட்டுகிருள்)

இருவரும் :—பிரிய சகி, மேலே சொல், சொல் !

சகுந் :—அது முதல், அவர் மீது ஆசையால் இந்நிலை யெய்தினேனடி !

மன் :—கேட்டற்கரியது கேட்டேன் ! கார் மேகங்களால் இருண்ட கோடை யிறுதிநாள், ஆருயிர் களுக்கு இன்பமாவது போல், எனது தாபஹேதுவான சித்தஜன், எனக்கு, இப்போது ஆறுத லளித்தவனுனன்.

சகுந் :—ஆதலின் அது உங்கள் சம்மதமாயின், ராஜரிஷிக்கு, என்பால் மனமிரங்குதற்கு, ஆவன செய் யுங்கள் ; இன்றேல், எனக்கு எள்ளுத் தண்ணீர் தெளித்துவிடுங்கள் !

மன் :—இம் மொழியால் ஐய மொழிந்தது !

பிரி :—அனஸூயே, காதல் மீறிவிட்டது ; கால தாமதத்தை இவள் தாங்காள். இவள் விருப்புற்

திருப்பது புருகுல பூஷணத்தை ; அவளுடைய விருப்பம் நமது மகிழ்ச்சிக் குரியதே.

அனஸூ :—நீ சொல்வது சரியே.

பிரி :—(உரத்து) ஸகி, அதிர்ஷ்ட வசமாக நீ தக்க விருப்பம் கொண்டாய். ஒரு பெரிய நதி, கடலைத்தப்பி எங்கே விழும் ? இலையடர்ந்த அதிமுத்தக் கொடியை, மாமரத்தைத் தவிர வேறெது தாங்க முடியும் ?

மன் :—இரட்டையான விசாக நக்ஷத்திரங்கள் (தோழிகள்) சந்திரகலையை (சகுந்தலை) அனுசரிப்பதில் வியப்பென்ன ?

அனஸூ:—விரைவில், ஆனல் இரகசியமாக, நமது ஸகியின் மனோரதத்தை நிறைவேற்ற வழி யென்ன ?

பிரி :—ரஹஸ்யம் சிந்தனைக்குரியது ; விரைவு, எளிது.

அனஸூ :—எப்படி ?

பிரி :—அன்பான பார்வைகளால், அவள்பால், தான் கொண்ட காதலைக் குறிக்கும் ராஜரிஷியும், உறக்கமின்றி மெலிந்து காண்கிறார்.

மன் :—உண்மையாய் அப்படியே யுள்ளேன் ; உட்கொதிப்பால் வெப்பமுற்று, எனது கண்ணோரத்தினின்றும், இரவிரவாய் வடியும் விழிநீரால், கறையுண்ட மணி பொதிந்த இத்தங்க வலயம், நாணின் வடுவைத் தாண்டி, மணிக்கட்டினின்று நழுவ நழுவ, மீண்டும் பின்னே கையில் ஒதுக்கிக் கொள்ளப்படுகிறது.

பிரி :—ஸகி, ஒரு காதற்கடிதம் எழுது ; அதை மலர்களில் மறைத்து, தேவ ப்ரஸாதம் என்ற பாவனை செய்து, அவர் கையிற் சேர்க்கிறேன்.

அனஸூ :—இவ்வினிய சூட்சி எனக்குச் சம்மதமே; ஆனல் சகுந்தலை என்ன சொல்லுகிருள்!

சகுந் :—என்ன; உங்கள் ஏற்பாடு எனக்கு விகற்பமாகுமா?

பிரி :—ஆயின் உன்னை அறிவிக்கும் ஓர் இனிய கவி புனையச் சிந்திப்பாயாக!

சகுந் :—நான் சிந்திக்கிறேன். ஆனல், நிராகரிக்கப் படுமோ வென்றஞ்சி என்னுள்ளம் பதறுகின்றதே!

மன் :—(மகிழ்வுடன்)

அயம் ஸ தேதிஷ்டதி ஸங்க மோத்ஸுகோ
விசங்கஸே பீரு யாதோ (அ)வ தீரணம்
லபேதவா ப்ரார்த்த யிதான வாஸ்ரியம் :
ஸ்ரியாத ராப : கதமீப்ஸிதோ பவேத்!

யாருனை மறுப்பான் என்று நீ யஞ்சினை,
அவன் இதோ வுள்ளான் அவாவியுன் சேர்க்கை;
திருவை வேண்டினேன் சேர்வனே இலனே
திருவே வேண்டிற் சேரொணு னெவனே!

சகிகள் :—உனது மேன்மையைப் பழிப்பவளே! உடலுக் கிதஞ் செயும் ஸரத்நிலாவை ஆடை நுனியால் தடுப்பவன் யார்?

சகுந் :—(புன்னகைத்து) இப்போது காரியமா யிருக்கிறேன். (உட்கார்ந்து யோசிக்கிருள்.)

மன் :—இமை கொட்ட மறந்துபோன விழிகளுடைய எனது காதலியை நான் பார்ப்பது பொருத்தமானதே! பதங்களைப் புனையும்போது, ஒரே கொடிபோன்ற

புருவம் நிவந்த முகம், புளகிக்கும் கன்னங்களால் என் மீது அனுராகத்தை விளம்புகிறது.

சகுந் :—செய்யுட் பொருளைச் சிந்தித்தாயிற்று ; ஆனால் எழுத வேண்டிய சாதனங்கள் அருகி வில்லையே.

பிரி :—கிளி மார்பு போன்று மெல்லியதான இந்தத் தாமரை இலையில் எழுத்துக்களை உனது நகத்தால்கீறு.

சகுந் :—(அவ்வாறே செய்து) ஸகி, அது சரியாக அமைந்திருக்கிறதாவென்று இப்போது கவனி.

இருவரும் :—கவனமாகவே யிருக்கிறோம்.

சகுந் :—(படித்தல்).

தவ ந ஜானே ஹ்ருதயம் ;
மமபுனர் மதனோ திவாபி ராத்ராவபி
நிர்க்ருண தபதி பலீய
ஸ்த்வயி வ்ருத்த மனோரதாயா அங்காநி

தெரிகிலேன் உன்மனம் ; பரிவிலோய், உன்பால்
ஆசை நாட்டுமென் அங்கங் களையே
பகலிர வாகத் தகிப்பவன் வேளே !

மன் :—(விரைந்தெதிர்ந்து)

தபதி தநுகாத்ரி மதனஸ்த்வா
மநிஸம் மாம்புனர் தஹத் யேவ
க்லபயதி யதாஸ ஸாங்கம்
நத்தாஹி குமுத்வதீம் திவஸ :

உனைவேள் தகிப்பான் ; எனையோ மெல்லியே !
அனிசமு மெரிப்பான் ; வனசம் வாட்டுதல்
தினகர னல்ல திங்களி னளவே !

[இங்கே தன்னைச் சூரியனாகவும், சகுந்தலையைச் சந்திரனாகவும் குறிப்பதறிக.]

சகி:—(மன்னனைக் கண்டு மகிழ்ந்தெழுந்து) தாமதமில்லாமல் வந்த (எங்கள் சகியின்) மனோரதமே வருக!

(சகுந்தலை மரியாதைக்கு எழுந்திருக்க முயல்கிறாள்)

மன் :—ஆயாசம் வேண்டாம்; வேண்டாம்.

மலர்த்தவி சழுந்திப் பூந்தாள்
வளைகவி வுற மணந்தே
உலமறு முன்னங் கங்கள்
உபசாரங் காட்ட வேண்டா!

தாமரைத் தவிசில் அழுந்தி, (தாபத்தால்) சீக்கிரம் வாடும் தாமரைத் தாள் மணந்து, மிக வருந்தும் உனது மெல்லிய உறுப்புக்கள், எனக்கு உபசாரங் காட்டற்குரியனவல்ல!

அனஸூ:—நண்பர் இச் சிலாதலத்தின் ஒரு பாகத்தை அலங்கரிக்கட்டும்.

(மன்னன் உட்காருதல் : சகுந்தலை நாணுதல்)

பிரி:—ஒருவர்க்கொருவர் உங்கள் காதல் வெளிப்படை; இருப்பினும், எனது தோழியன்பு சிலதை மிகையுறப் பேசச் செய்கிறது.

மன் :—மெல்லணங்கே! இது தவிர்க்கொணாது; சொல்லவேண்டியதைச் சொல்லாவிட்டால் அல்லலாம்.

பிரி:—தன்னரசில் வருந்தும் ஒருவர் துயரைத் துடைத்தல் உன் போன்ற மன்னன் அறமதாகும்.

மன் :—இதனினும் உயர்ந்த செயலில்லை.

பிரி:—அப்படியானால் இவள், எம் அன்புத் தோழி, உம்மை யுத்தேசித்தே, மதன பகவனால், இந்

நிலேக்கு மெலிந்தனள். அவள்பாலிரங்கி, அவள் உயிர் தரிக்கச் செய்தருள்க!

மன் :—அணங்கே! இந்த வேண்டுகோள் சாதாரணமே! எனேத்தாலும் நான் அருள்பாலிக்கப் பெற்றேன்!

சகுந் :—(பிரியம்வதையை நோக்கி) ஸகி, அந்தப்புர ஸ்திரீகளின் பிரிவால் வருந்தும் ராஜரிஷியை ஏன் தடை செய்கிறுய்?

மன் :—ஸுந்தரி!

இத மனன்ய பராயண மன்யதா
ஹ்ருதய ஸங்கிஹிதே ஹ்ருதயம் மம
யதி ஸமர்த்தயஸே மதி ரேக்ஷணே
மதன பாண ஹதோஸ்மி ஹத : புன :

மற்றுப் பற்றறு மென்னுளம் வேறெனின்,
மதிர மான் விழியே! யிதயத் துளாய்!
செற்ற தென்றனேச் சித்தசன் வெங்கணே
செருக்கப் பட்டனன் இன்னமு மோர்முறை!

அன :—நண்பரே, மன்னர் பன்மனேவியாள ரென்பர். ஆதலின் எங்கள் பிரிய சகியைப்பற்றி அவளுடைய பந்து ஜனங்கள் வருந்ாதவாறு பார்த்துக் கொள்வீராக!

மன் :—அணங்கே, அதிகமேன்?

பரிக்ரஹ பஹுத்வேபி த்வே ப்ரதிஷ்டே குலஸ்ய மே |
ஸமுத்ர வஸநா சோர்வீ ஸகீ ச யுவயோரியம் ||

பலமனே வியரே னும்,என் குலச்சிறப் பிருவ ராவர்:
அலேயணி யுலகும், உங்கள் மலரணி சகியு மென்க!

பல மனைவியர் இருப்பினும், என் குலச்சிறப்பு இருவரேயாவர் : (க) கடலுடுத்த பார், (உ) உங்கள் சகியாம் இவள்.

இருவரும் :—மகிழ்ந்தோம்.

பிரி :—(விழிநோக்கி) அனஸூயே, இப்பால் ஆவலாக நோக்கும் இந்த மான், தனது தாயைத் தேடுகிறது. நாமிருவரும் அதைத் தாயிடம் சேர்ப்போம், வா. (இருவரும் புறப்படல்)

சகுந் :—சகிகாள், சரணற் றிருக்கிறேன் ; உங்களிலொருவர் திரும்பி வரவேண்டும்.

இருவரும் :—உலகின் சரண் யாரோ அவரே உன்னருகிருக்கிறார். (போதல்)

சகுந் :—ஆ ! சென்றே விட்டார்கள் !

மன் :—அயரல் ! உன் தொண்டன், இவன், உன் அருகே யிருக்கிறான். தாமரையிலை விசிறியால், உன் மெலிவு தீரத் திவலை யுதிர்க்கும் இளங்கால் வீசட்டுமா ? எனது தொடையில், உனது செம்மலரடியை வைத்துச் சுகமுண்டாகும்படி பிடிக்கவா ?

சகுந் :—வணங்கத் தக்கவரிடம் அபராதத்திற் குள்ளாகேன். (எழுந்து செல்ல விரும்புகிறாள்)

மன் :—ஸுந்தரி, இன்னும் பொழுது விழவில்லை- உன் உடல் நிலையும் இவ்வாறுள்ளது. தாமரை இலை உன் மார்பை மூடிய மலரணையை விடுத்து, நொந்து மெலிந்த உன் அங்கங்கொண்டு, எப்படி நீ வெயிலிற் செல்ல முடியும் ?

(பலாத்காரமாகத் திருப்பிக் கொணர்கிறான்),

சகுந் :—பௌரவ, விநயம் பேணு! ஆசையால் வருந்தினும், நான் என் வசமில்லை.

மன் :—பீருவே, பெரியார் அச்சம் வேண்டா! முறையான அறந்தெரிந்த குலபதி, உன்னை யறிந்து, அதிற் குற்றங்காணார். மேலும், பல ராஜரிஷி கன்னியர் காந்தர்வ விவாகம் புரிந்தனர்; அவர் தந்தையர் அதற்காக மகிழ்ந்தனர்.

சகுந் :—இப்போது என்னை விடுவிப்பீராக! மீண்டும் என் சகிகளை நன்கு மதிக்கிறேன்.

மன் :—சரி - விடுவிக்கிறேன்.

சகுந் :—எப்போது ?

மன் :—

புதுமல ரிற்புகு வண்டுபோல்—உன்
புத்தப் புதியதோர் பூம்இதழ்
மதுவை விரும்பினேன்; மெல்லென—நான்
மாந்திய பின்செல் அழகியே!

[அவள் முகத்தை நிமிர்க்க முயல்கிறான். சகுந்தலை தடுப்பது போல் காட்டுகிறாள்.]

(திரைக்குப் பின்னால்)

சக்ரவாகப் பேடே! உன் ஜோடிக்கு விடைதா! இரவு நெருங்கியது.

சகுந் :—(பதற்றமுடன்) பௌரவ, எனது உடல் நலத்தை வினவ, ஆர்யா கௌதமி இங்கு வருகிறாள் - உறுதி; ஆதலால், கிளைகளுக்குப் பின் ஒளிக!

மன்:—அப்படியே (தன்னைமறைத்து நிற்கிறான்) (அப்போது இரு ஸகிமாருடன், கையில் பாத்திரமேந்தி, கௌதமி வருதல்)

இருவரும்:—இங்கே, இங்கே, கௌதமியம்மையே!

கௌதமி :—(சகுந்தலையை நோக்கி) குழந்தாய், உன் அங்க நலிவு தணிந்ததா!

சகுந் :—ஆர்யா, எனக்குச் சிறந்த நலம் ஏற்பட்டுள்ளது.

கௌதமி :—இந்தத் தருப்பை நீரால், உன்னுடல் நலிவு முற்றும் தீரும். (சகுந்தலையின் தலையில் நீர் தெளித்து) குழந்தாய், பொழுது போயிற்று; பர்ணசாலை செல்வோம், வா.

சகுந் :—(தனக்குள்) உள்ளமே! நின் மனோரதம் எளிதிற் கூடுகையில் நீ அச்சம் விடவில்லை; வருத்தமுடன் பிரிகிறாய்; நீ வருந்துவது சரிதான். (ஓரடி நகர்ந்து, உரக்க) என் தாபந் தணித்த லதாவலயமே! நின்னை மீண்டும் அழைக்கிறேன் - இன்புற.

(மற்றவர்களுடன் சகுந்தலை விசனத்தோ டகலல்)

மன் :—(தனது முன்னிருக்கை யெய்தி, நெட்டுயிர்த்து) ஆஹா! கருதியது கைகூட எத்தனை இடையூறுகள்! அழகிய இமையுள்ள விழியாளின் திருமுகத்தை நிமிர்த்தேன்; ஆனால் கொஞ்சவில்லை; விரல்களால் அதரத்தை மூடி, மறுப்பு மொழிகளை அரைகுறையா யுரைத்து, புயத்தை நோக்கித் திரும்பிய முகம் மிக வசீகரமாயிருந்தது. நான் இப்போது செல்வ தெங்கே? அல்லது, என் காதலி யின்புற்று இப்போதகன்ற இந்த லதாவலயத்திலேயே சிறிது நேரம் தாமதிக்கிறேன். (சுற்றிலும் பார்த்து) இங்கே இச்சிலாசனத்தில், அவளுடல் அழுந்திய மலரணையுள்ளது! இங்கே தாமரையிலையில், அவள் நகம்

கீறிய காதற் கடிதம்; இங்கே அவள் கையினின்று நழுவிய தாமரைத் தாளணியுள்ளது; இந்த இடம் சூனியமா யிருக்கிறது. எனினும், இப்பொருள்களில் என் விழிகள் ஆழ்ந்தன; இப்பிரப்பங்கொடி வீட்டைவிட்டு விரைவாகச் செல்ல முடியவில்லை. (ஆகாயத்தில்)

அரசே! சந்த்யாக்கிரியைகள் தொடங்கி விட்டன! மாலை மேகம்போல், கபில நிறமாக, அரக்கர் சாயை தீயெழும் வேதிகையைச் சுற்றிப் படர்ந்து, பல வகையாகத் திரிந்து அச்சுறுத்துகிறது!

மன் :—இதோ வருகிறேன்! (செல்லல்)

மூன்றம் அங்கம் முற்றிற்று.

அங்கம்—4

க. தூர்வாசர் சாபம்

(இடைக்காட்சி)

[இரு தோழியர் மலர் கொய்து வருதல்]

அன :—பிரியம்வதே, சகுந்தலை, தக்க கணவனை, காந்தர்வ விதிப்படி மணந்தாள்; அதனால் என்னுள்ளம் மகிழ்வடைந்தது; எனினும் இதை நன்குச் சிந்திக்கவேண்டும்.

பிரி :—எதை?

அன :—இஷ்டி முடிந்து, ரிஷிகளிடம் விடை பெற்று, இன்று ராஜரிஷி, தனது நகரம் புகுந்து, அந்தப்புரங்களுடன் கலந்தபின், இங்கு நடந்ததை நினைப்பாரோ என்னமோ என்பதை.

பிரி :—கவலையற்றிரு ; இத்தகைய பெருந்தகை யாளர், தங்கள் தன்மைக்கு மாருக நடவார் ; தந்தை (காச்யபர்) இவ்வரலாற்றைக் கேட்டு என்ன செய் வாரோ தெரிகிலேன்.

அன :—எனக்குத் தெரிந்தவரையில், இது அவ ரால் சம்மதிக்கப்படும்.

பிரி :—அதெப்படி ?

அன :—தமது கன்னியை ஒரு குணவானுக் குக் கட்டிக்கொடுப்பதே பெரியாரின் முதல் எண்ணம். தெய்வமே அப்படிக் கூட்டினுல், பெரியார் முயற்சி எளிதில் நிறைவேறியதாகும்.

பிரி :—(பூக்குடலையை நோக்கி) சகி, வழிபாட்டிற்கு வேண்டிய மலர் கொய்து விட்டோம்.

அன :—சகுந்தலையின் ஸௌபாக்ய தேவதைக்கு இன்று விசேஷ அர்ச்சனை செய்யவேண்டாமா ?

பிரி :—ஆமாம் !

(அவ்வாறே மலர் கொய்கின்றனர்)

[திரைக்குப்பின்]

அஹோ யான் வந்துளேன்.

அன :—(கேட்டு) அதிதிகளின் குரல்போலிருக் கிறதே !

பிரி :—அதிதிகளை ஏற்கத் தயாராக, சகுந்தலை, பர்ணசாலையில் இருக்கிருள் - ஆனுல் இதயத்தில் இல்லை. அவள் இதயம் விடைபெற்றுச் சென்ற கணவன்பா லுள்ளது.

அன :—சரி, இவ்வளவு பூ போதும்.

(செல்கின்றனர்)

[திரைக்குப்பின்]

ஹா—அதிதியை மதிக்காதவளே !

விசிந்தயந்தீ யமநந்யமானஸா
தபோதனம் வேத்ஸி ந மாமுபஸ்திதம்
ஸ்மரிஷ்யதி த்வாம் ந ஸ போதிதோ (அ)பிஸந்
கதாம் ப்ரமத்த : ப்ரதமம் க்ருதாமிவ :

மாறிலா தெவனை மனத் தெண்ணிநீ
மதித்திலாய் நின்ற மாதவப் பேறென்னை,
கூறினும் நினையான் ; உன்னைக் கொண்டவன்
குடி வெறியன் முற் கூறிய தென்னவே !

பிரி :—அந்தோ ! அந்தோ ! வந்தது தீங்கு ; நினைப்பு மறந்த சகுந்தலை, வணங்கத்தக்க யாருக்கோ அபராதியானுள்........(முன்னே நோக்கி) சாமான்ய மனிதருக்கல்ல ! எளிதிற் சினக்கும் தூர்வாசரே இங்கே வந்துள்ளார். அப்படிச் சபித்துவிட்டு, தடுக்க முடியாத வேகத்துடன் அவர் வருகிறுர்.

அன :—தீ தவிர வேறு எது சுடவல்லது ? உடனே ஓடி அவர் காலில் வீழ்ந்து, அவரை அழைத்துவா ; நான் அர்க்யோதகம் தயார் செய்கிறேன்.

பிரி :—அப்படியே (விரைதல்)

அன :—(கால் தடுக்குவதுபோல் நடத்தல்) ஆ, அம்மா வேகத்தால் வழுக்கி, பூங்குடலை என் கைதவறி விழுந்து விட்டது. (பூக்களைச் சேர்த்தல்)

(வருதல் பிரியம்வதை)

பிரி:—ஸகி, இயல்பிலேயே கோணலான அவர், யார்வேண்டுகோளை யேற்பார்? இருந்தாலும், அவரைச் சற் றிரங்கச் செய்தேன்.

அன:—(புன்னகைத்து) இதுவே பெரிது! சொல்லு!

பிரி:—திரும்ப வர மறுத்ததும், அவரை இவ் வாறு நயந்தேன்:—பகவானே, இது முதல் தடவை; தேவரீர் தவப்பெருமை யறியாத தங்கள் புதல்வியின் இந்த ஒரு குற்றத்தை மன்னித்தருளவேண்டும்............

அன:—அதன் பின்?

பிரி:—பிறகு, 'என் வாக்கு வீணாகக் கூடாது; ஆனால் அடையாளமான ஓர் ஆபரணத்தைக் கண்ட வுடனே சாப விமோசனமாகும்' என்று உடனே மறைந்தார்.

அன:—நம்பிக்கைக்கு இடமிருக்கிறது: பிரியும் சமயம், ஞாபகார்த்தமாக, ராஜ ரிஷியே சகுந்தலையின் விரலில் போட்ட, அவர் பெயரிட்ட, மோதிரமுள்ளது. அதனால் சகுந்தலை சாப நிவாரணம் பெறுவாள்.

பிரி:—சகி, அவளுக்காகத் தெய்வ வழிபாடு செய் வோம், வா (திரும்பி) (குறித்து), அதோபார் அனஸூயே இடக்கையில் கன்னத்தை வைத்து, நமது அன்புத் தோழி, சகுந்தலை சித்திரப் பாவைபோற் காண்கிறாள். நாயகனை நினைந்து, தனது நினைப்பற்றாள்; வந்த விருந்தை எப்படி நினைப்பாள்?

அன:—பிரியம்வதே, இந்தச் சம்பவம் நம் இருவருக் குள்ளேயே இருக்கட்டும்; இயல்பிலேயே மெல்லியளான நமது பிரிய சகி, இதைக் கேளாது காக்க வேண்டும்.

பிரி :—நவ மல்லிகை மேல், வெந்நீர் தெளிப்பதார்?

(செல்கின்றனர்)

(விஷ்கம்பகம் முடிந்தது)

உ. பயணப் பேச்சு

[ஒரு சீடன் துயிலெழுந்து வருதல்]

சீடன் :—யாத்திரையினின்று திரும்பிய பகவான் காச்யபர் மணி பார்க்கச் சொன்னார். வெளியிற் சென்று இரவு இன்னும் எவ்வளவு இருக்குமெனக் காண்கிறேன். (சுற்றிப் பார்த்து) ஆ பொழுது புலர்ந்தது! எனெனில்,

*திங்களும் அஸ்திச் சிகரம் அடைந்தான்;
தினகரன் அருணனைத் திகழமுன் விடுத்தான்;
இங்கிரு சுடர்களின் எழுச்சியும் வீழ்வும்,
இப்புவி மாந்தரின் இருநிலை போலும்;
காதலன் பிரிந்திட வருந்திடும் பெண்போல்
கலையினன் பிரிந்திடக் குவிந்திடும் அல்லி;
சீதப் பனித்துளி செந்நிறம் காட்டும்
திருப்பள்ளி யெழுந்திடும் மயிலொடு மானும்!

(திரையை வீசி யொதுக்கி வருதல்)

அன :—நான், விரக்தை, உலக விஷயந் தெரியாதவள்; ஆயினும், அவ்வரசன், சகுந்தலையின்பால் அனார்யத்தனமாக நடந்திருக்கிறனென் றெண்ணுகிறேன்.

---

*இங்கே சீடன் 4 விருத்தங்கள் பாடுகிறான்; அவற்றில் இடைச்செருகல் உள்ளதென்பர்; நான்கின் கருத்தையும் இங்கே குறித்தாம்.

சீடன் :—ஹோமவேளை வந்துவிட்டதென்று குரு விடம் தெரிவிக்கிறேன். (போகிறான்)

அன :—விழித்தெழுந்ததும், என்ன செய்வ தென்றே தோன்றவில்லை. செய்ய வேண்டிய காரியங் களுக்குக்கூடக் கை கால் ஓடவில்லை.

தூய மனத்தளான எனது சகி, ஒரு பொய்யனை நம்ப வைத்த காமதேவன் இச்சை, இப்போது திருப்தி யாகட்டும் ! அல்லது துர்வாசன் கோபம் இந்த மாற் றத்தை யுண்டு பண்ணிற்றோ ! இன்றேல், அவ்வாறு இனிய மொழி பேசிய அந்த ராஜரிஷி, இவ்வளவு கால மாக, ஒரு கடிதங்கூட அனுப்பாததேனோ ? (சிந்தித்து) ஆதலின், இந்த அறிகுறி மோதிரத்தை அவருக்கனுப்பு வோம். துறவிகள் வருந்தித் தவம் புரிகின்றனர். யாரைத் தூதனுப்பலாம் ?

அவளைத் துஷ்யந்தன் மணந்து கருவுற்றிருப்ப தைப் பற்றி, யாத்திரையினின்று திரும்பிய தந்தை காச்யபருக்குச் சொல்வதெப்படி ? இந்நிலையில் என்ன செய்வது ?

பிரி :—(சிரித்து வருகிறாள்) சகி, சகுந்தலையின் பய ணத் திருநாளைக் கொண்டாடத் துரிதஞ் செய் ; துரிதஞ் செய்.

அன :—ஸகி, அதெப்படியடி ?

பிரி :—கேள் ; சுகநித்திரை செய்தாளா என்று விசாரிக்க, இப்போது தான் சகுந்தலையிடம் சென் றேன்.

அன :—பிறகு?

பிரி :—அப்போது, நாணத்தால் தலைகுனிந்த அவளை, தந்தை காச்யபர் தழுவி, இவ்வாறு இனிதுரைத்தார் :—

' மகிழ்வு ! புகையால் கண் கசங்கினும், அதிர்ஷ்ட வசத்தால், எஜமானன் ஆஹுதி, அக்கினியிலே விழுந்தது ! குழந்தாய் நன் மாணாக்கனுக்குப் பயிற்றிய கல்வி போல, நீ கவலைக் கிடமில்லாதவளாயினை ! ரிஷிகளின் காப்பில், இன்றே உன்னை உனது கணவன் மனைக்கனுப்புகிறேன் '

அன :—இந்தச் சமாசாரம் தந்தை காச்யபருக்குத் தெரிந்தது யாரால் ?

பிரி :—ஹோமசாலை புகும்போது, ஓர் அசரீரியான செய்யுளால்

அன :—(வியந்து) சொல்லு !

பிரி:—தனலுட் கனலும் சமீள மரம்போல்,
தொல்புவி விளங்கத் துஷ்யந்தன் வீறன்
செல்வி தாங்கினள் தெரிதியந் தணனே !

அன :—(பிரியம்வதையைத் தழுவி) ஸகி, சந்தோஷம் ! சந்தோஷம் ! ஆனால், சகுந்தலை இன்றே அழைத்துச் செல்லப்படுவதால், எனது களிப்புடன் கவலையும் கலந்துள்ளது.

பிரி :—ஸகி, நமது கவலையைப் போக்கலாம் ; அந்த ஏழை மகிழட்டும்.

அன :—ஆனால் நல்லது ; மாங்கிளையில் தொங்கும், இந்தத் தென்னங் குடலையில், மகிழம்பூ மாலையுள்ளது ; அது கொஞ்ச காலம் மணங் கெடாமலிருக்கும்;

இந்தச் சந்தர்ப்பத்திற்காகவே அதை வைத்திருந்தேன். அதைக் கைக்கெட்டும்படி செய்; நானும், கோரோசனம், தீர்த்த மண், அருகம்புல் முதலிய மங்கல அலங்காரங்களைத் தயாராக்குகிறேன்.

பிரி:—அப்படியே ஆகட்டும். அனஸூயை செல்லல். பிரியம்வதை (பூக்கொய்வது போல நடித்தல்.)

[திரைக்குப் பின்னே]

கௌதமி! சகுந்தலையை நடத்திச் செல்ல, சார்ங்க்ரவன் முதலியோரைப் பணிப்பாயாக!

பிரி:—(கேட்டு) அனஸூயே, சீக்கிரம் சீக்கிரம்! ஹஸ்தினபுரத்திற்குச் செல்லும் ரிஷிகள் அழைக்கப் படுகின்றனர்.

அன:—(அலங்காரச் சாமானுடன் வந்து) சகி, செல்வோம் வா!

(திரும்பிச் செல்கின்றனர்)

௩. மங்கல வாழ்த்து

[வருதல் பிரியம்வதை, அனஸூயை]

பிரி:—காலையிலேயே மங்கள ஸ்நானஞ் செய்து, கையில் வனநெற் கொண்டு, தபஸ்வினிகள் ஸ்வஸ்தி வாசனஞ் சொல்ல, அதோ சகுந்தலை காண்கிறாள். நாம் அருகே செல்வோம்.

(சமீபித்தல்)

[முன் சொன்னபடியே சகுந்தலை காணப்படுதல்]

முதல் தபஸ்வினி:—(சகுந்தலையை நோக்கி) குழந்தாய், உன் கணவன், 'மஹாதேவி' என்று உன்னை வெகு மதிக்கட்டும்.

இரண்டாவது தபஸ்வினி :—செல்வியே! வீரனைப் பெறுவாயாக!

மூன்றாவது :—மதலாய்! கணவன் உன்னை மாண்புறுத்துக! (இப்படி ஆசி கூறி, கௌதமியைத் தவிர மற்றத் தபஸ்விினிகள் செல்லுதல்)

பிரியம்வதை, அனஸூயை:—(சமீபித்து) சகி, இந்தத் திருமுழுக்கு உனக்கு இன்பமாகுக!

சகுந் :—தோழிகளே வாருங்கள்! இங்கே உட்காருங்கள்!

இருவரும் :—(மங்கல பாத்திரங்களுடன் அமர்ந்து) பிரிய சகி, உனக்கு மங்களாலங்காரம் செய்வோம்; தயாரா யிரு.

சகுந் :—இதுவும் போற்றத்தக்கதே; என் சகிகளின் கையினால் அலங்கரிக்க இனிக் கிடைக்காது.

(கண்ணீர் விடுகிறாள்)

இருவரும் :—ஸகி, இந்த மங்கல வேளையில், அழுதல் அழகல்ல. (கண்ணீரைத் துடைத்து, அலங்கரித்தல்)

பிரி :—(உயர்ந்த) ஆபரணங்கள் பூணும் இவ்வழகு, ஆசிரமத்தில் எளிதாகக் கிடைக்கும் இந்த மலர் அலங்காரங்களால் அவமதிக்கப்படுகிறது.

(பரிசணிகளுடன் இரண்டு ரிஷி குமாரர் வருதல்)

ரிஷி குமாரர் :—இதோ அணிகள்! அணியுங்கள் அம்மணிக்கு. (அனைவரும் வியந்து)

கௌதமி :—மைந்த, நாரத, இதெல்லாம் எங்கிருந்து?

முதல் ரிஷி குமாரன் :—எல்லாம் தந்தை காச்யபர் பெருமையிலிருந்தே.

கௌதமி:—என்ன, மானஸ சித்தியாலா ?

இரண்டாவது ரிஷி குமாரன் :—அப்படி யில்லை ; கேட்கவும் : சகுந்தலைக்கு மரங்களில் மலர் கொய்து வர, பகவான் எம்மைப் பணித்தார்.

பிறகு, இம்மங்கல வேளைக்கேற்ப, ஒரு மரம் திங்கள் போன்ற வெண்பட்டொன்றை யளித்தது. மற்றொன்று, சேவடிக்கப்பச் செஞ்சாந்து வடித்தது ; வன தேவதைகளின் தளிர்க் கைகளாலே, ஏனைய மரங்கள் ஆபரணங்க ளீந்தன.

பிரி :—(சகுந்தலையை நோக்கி) அடி ஸகி, இந்த நல்லளியால், கணவன் மனையில், நீ ராஜலக்ஷ்மி போலச் சுகிப்பாயென விளங்குகிறது.

(சகுந்தலை நாணங் காட்டுகிறாள்)

முதல் ரிஷி குமாரன் :—வா, வா கௌதமா ! காச்யபர் இப்போது நீராடி யிருப்பார், மரங்களின் சேவையை அவருக் கறிவிப்போம்.

மற்றொருவன் :—அப்படியே. (இருவரும் செல்லல்)

சகிகள் :—ஆ, நாங்கள் பூண்களை ஒருக்காலும் பூண்டிராதவர்கள் ! ஆனால் சித்திரப் பழக்கத்தால், உனது அங்கங்களில் அவற்றைப் பூட்டுகிறோம்.

சகுந் :—உங்கள் திறமையை யானறிவேன்.

(சகுந்தலைக்கு இருவரும் அணி பூட்டுதல்)

(அப்போது காச்யபர் நீராடி வருகிறார்)

காச் :—

யாஸ்யத் யத்ய ஶகுந்த லேதி ஹ்ருதயம்
ஸம்ஸ் ப்ருஷ்ட முத்கண்டயா
கண்டஸ் தம்பித பாஷ்ப வ்ருத்தி கலுஷ
ஶ்சிந்தா ஜடம் தர்சனம்
வைக்லவ்யம் மம தாவ தீத்ருச மஹோ
ஸ்நேஹா தரண்யௌ கஸ:
பீட்யந்தே க்ருஹிண: கதம் நு தநயா
விஶ்லேஷ து: கைர் நவை:

செல்கின்றாள் இன்றென் சகுந்தலை யென்ற
சிந்தனை யுறத்துதே யுளத்தை :
சொல்லினை விழிநீர் அடைக்குதே ; வெறுமை
தோன்றுதே புலன்களில் அந்தோ !
அல்லவித் துணையாம் அன்பினுல் என்னின்
அரணிய முறைந்திடும் எனக்கே,
இல்லறத் துறைவோர் செல்வியர் பிரிவால்
எத்துணை வருந்துவா ரம்மா !

[சுற்றி நோக்குதல்]

சகிகள் :—ஸகி சகுந்தலே, அலங்காரம் முடிந்தது; இனி இவ்விரு பட்டாடைகளை யுடுத்திக் கொள்.

(சகுந்தலை எழுந்து உடுத்திக்கொள்ளுதல்)

[புத்தகத்தில் இவ்வாறிருப்பினும், அரங்கில் சகுந்தலை புடவை யுடுத்திக் கொள்வது பாங்காகாது. ஆதலின், காச்யபர் வந்துகொண்டிருக்கையிலேயே, தோழிமார் “சகுந்தலே உனக்கு அணி செய்கிறோம் வா,” என்று உடனே திரையைப் போட்டுவிடுதலே நாகரிகமா யிருக்கும்.

காச்யபர் சுலோகத்தை முடித்ததும் அலங்காரத்துடன் சகுந்தலையைத் திரையுயர்த்திக் காட்டுவது மிகப் பொருத்தமாயிருக்கும்]

கௌதமி :—குழந்தாய்! ஆனந்தக் கண்ணீர் ததும்பும் விழிகளால், உன்னை அணைப்பது போன்று பிதா வருகிறார் ; மரியாதை செய்.

சகுந் :—(நாணத்துடன்) அப்பா, நமஸ்காரம்.

காச் :—யயாதிக்குச் சர்மிஷ்டைபோலே, நீ கணவன் பெருமை செய்ய வாழ்வாயாக ! அவள் புரூவைப் பெற்றதுபோல், நீ ஒரு அரச மைந்தனைப் பெறுக !

கௌதமி :—பகவன், இது வரம் ; ஆசியல்லவே.

காச்யபர் :—செல்வீ, இப்போது ஹோமஞ் செய்யப்பெற்ற தீயை வலஞ் செய்ய வா !

[எல்லாருஞ் செல்லல்]

ச. தீவலம் வருதல்

[ஹோமாக்னி எரிகிறது. காச்யபர் வேதமோதுகிறார். சகுந்தலை தீவலம் வருதல்]

காச்யபர் :—மகளே,

வேதிகை சுற்றி விதிப்படி யமைந்து
ஸமித்துக ளுண்டு, தருப்பை சூழ்ந்து,
ஆகுதி மணத்தால் தீவினை யோட்டும்
சுடர்க ளுன்னைத் தூய்மையாக் குகவே !

இப்போது பயணப்படு. (சுற்றி நோக்கி) சார்ங்கரவன் முதலியோ ரெங்கே? (க்வதே ஸார்ங்கரவ மிஸ்ரா:)

சீடர் :—(பிரவேசித்து) இதோ நிற்கிறோம், பகவன்! (பகவன் இமேஸ்ம:)

காச்யபர் :—ஆயின், சகோதரியை வழி நடத்துமின். (பகின் யாஸ்தே மார்க்க மாதேசய)

சார்ங்க்ரவன் :—இவ்வழி, இவ்வழி, அம்மணி. (இத ,இதோ பவந்)

(அனைவரும் செல்லல்)

ரு. அன்புக் கண்ணீர் !

[சகுந்தலையின் மலர்வனக்காட்சி·வன மல்லிகை பூத்துள்ளது - மான்கள் துள்ளி விளையாடுகின்றன. பசு மரங்கள் காட்சி யளிக்கின்றன.]

காச்யபர் :—ஹே, தபோவனஞ் சூழ்ந்த தருக்காள்!

பாதும் ந ப்ரதமம் வ்யவஸ்யதி ஜலம் யுஷ்மாஸ்வ பீதேஷு யா
நாதத்தே ப்ரியமண்ட நாபி பவதாம் ஸ்நேஹேந யா பல்லவம்
ஆத்யேவ : குஸும ப்ரஸூதி ஸமயே யஸ்யா பவத் யுத்ஸவ :
ஸேயம் யாதி ஶகுந்தலா பதிக்ருஹம் ஸர்வை ரநுஜ்ஞாயதாம்!!

நீவிர்முன் செழிய உண்டிடின் அல்லால்
தான்முன்னே நீரினை யருந்தாள் ;
மேவினுள் அணிகள் என்னினும் அன்பால்
மெல்லிய தளிர்களைக் கிள்ளாள் ;
பூவிளைப் புதுநாள் உற்சவஞ் செய்வாள்
புக்ககஞ் செல்கின்றுள் இன்றே ;
போவிடை தருவீர் மரங்களா, செல்வப்
புதல்வியாம் சகுந்தலை தனக்கே !

(குயில் கூவுகிறது)

இதோ சகுந்தலையின் வனவுறகளான மரங்கள் இனிய குயிற்குரலால் விடையளிக்கின்றன.

(ஆகாச வாணி)

தாமரை தழைத்த காமர்த் தடங்கள்,
கதிர்வெப் பந்தணி கனிநிழல் மரங்கள்,
**பூர்தூள் மேவிப் பூங்கால் வீசிப்*
பூவையின் பாதை பொலியுக சிவமே !

(அனைவரும் வியந்து கேட்டல்)

கௌதமி :—குழந்தாய், உறவினர் போன்று உனக்கன்பு பேணும் வனதேவதைகள் நல்விடை யீந்தனர் ; இத் தேவதைகளை வணங்கு.

சகுந் :—(வணங்கி, திரும்பி) அன்பான பிரியம்வதே, எனது நாதனைக் காண ஆவலாயிருப்பினும், ஆசிரமத்தை விட்டுப்போவதால், என்னடிகள் மிகவும் வருத்தத்துடன் முன் செல்லுகின்றன.

பிரி :—தபோவனத்தைப் பிரிவதால், என்னன்புத் தோழியான நீ மட்டும் வருந்தவில்லை ; உன்னை இதோ பிரியும் தபோவனத்தின் நிலையையும் பார் :—

தருப்பைக் கவளம் உமிழ்ந்தன மான்கள் ;
திருநடம் புரிதல் விடுத்தன மயில்கள் ;
விழும்பழுப் பிலையுடன் கொடிகள்,
விழிநீர் சொரிவபோல் விளங்கின மாதோ !

சகுந் :—(நினைப்புற்று) ஆம் ! அப்பா, எனது லதா சோதரியான வன நிலாவிடம் விடை பெற்றுக்கொள்கிறேன்.

காச்யபர் :—அதன்பால் உனக்குள்ள சகோதரி—யன்பை யானறிவேன். இதோ அது நமது வலப்புற முள்ளது.

---

*மகரந்தம்போல மெல்லிய மண் தூகள்.

சகுந் :—(அருகே சென்று கொடியை யணைத்து) வன நிலாவே, நீ மாமரத்துடன் இணைந்திருப்பினும், இப்பால் நீண்ட உனது கோடுகளால் என்னைத் திரும்பி யணைந்துகொள் ; உன்னின்று இன்றுதொட்டுத் தொலை வில் வசிப்பேன் !

காச்யபர் :—

ஸங்கல்பிதம் ப்ரதம மேவ மயா தவார்த்தே
பர்த்தார மாத்ம ஸத்ருஶம் ஸுக்ருதைர் கதாத்வம்
சூதேந ஸம்ஶ்ரிதவதீ நவமாலிகேய -
மஸ்யா மஹம் த்வயி ச ஸம்ப்ரதி வீத சிந்த :

நான் முதலில்,

உன்னிய படியே உன்னிகர் கணவனை
நலமுற மணந்தனை நல்வினைப் பயனால் ;
வனமல் லிகையும் வரித்தது மாவை ;
அதனிடம், உன்னிடம் அற்றனன் கவலை.

இது பாதை - பயணம் புறப்படு.

சகுந் :—(சகிகளுக்கு) சகிகாள், இவ்வன நிலாக் கொடியை உங்கள் கையில் ஒப்புவிக்கிறேன் !

பிரி, அன :—எங்களிருவரையும் யாரிடம் ஒப்பு வித்திருக்கிறது. (கண்ணீர் விடுதல்)

காச்யபர் :—அழாதே அனஸூயே ! உங்களிருவ ராலே தானே சகுந்தலை மனவுறுதி பெறவேண்டும்.

(அனைவரும் திரும்புதல்)

சகுந் :—அப்பா, கர்ப்பமானதால், மந்தமாகப் பர்ணசாலைக் கருகே திரியும் இந்த மான்பேடு சுகப்பிர ஸவமானால், யார் மூலமாவது எனக்கு நற்செய்தி யனுப்ப வேண்டும்.

காச்யபர் :—இதை நான் மறவேன்.

சகுந் :—(ஏதோ வழித் தடை செய்ததுபோல நடித்து) எனது புடவையை இழுப்பது யாரிங்கே!

(திரும்பிப் பார்த்தல்)

காச்யபர் :—குழந்தாய், இதோ இந்த மான்: தருப்பை முனை குத்திப் புண்ணானல், அதன் வாய்க்கு இங்குதித் தைலந் தடவுவாய்; அன்புடன் கையாற் சோறூட்டி வளர்த்தாய்; உன் மகன்போலப் போற்றிய இக் கலைமான், உன்னைத் தொடர்ந்து வழி மறைக்கிறது.

சகுந் :—என் அருமைக் குழந்தையே, உன் உறவை விடப்போகும் என்னை ஏன் தொடர்கின்றாய்? பிறந்ததும் தாயை இழந்தாய்; எனினும் (என்னால்) நன்கு வளர்க்கப் பெற்றாய்; இப்போதும், என்னைப் பிரிந்தாய்; இனி அப்பா உன்னைக் கவனிப்பார். ஆதலால் திரும்பிப் போ. (கண்ணீருடன் புறப்படுகிறாள்)

காச்யபர் :—மகளே, அழாதே; மனவுறுதியால் கண்ணீரை யடக்கிக்கொள். இமை நிவந்த நின் கயல் விழிகளின் பார்வையை அது தடுக்கிறது. மேடு பள்ளம் பாராமல், உன் சேவடிகள் பாதை தவறுகின்றன.

சார்ங்க்ரவன் :—பகவன், பிரிய ஜனங்களை, நீர்க்கரை மட்டும் வழி நடத்த வேண்டுமென்பது சுருதி. இதோ ஏரிக்கரை; ஆதலின், எங்களுக்கு வேண்டியதைச் சொல்லித் தாங்கள் திரும்புவது நலம்.

காச்யபர் :—ஆயின், இந்த ஆலமரத்து நிழலைச் சேர்வோம். (அனைவரும் திரும்புதல்)

கூ. பிரிவுக் காட்சி

[காட்சி :—ஏரிக்கரையில் ஆலமரம் ; அனைவரும் அதனடியில் வீற்றிருக்கின்றனர்.]

காச்யபர் :—(தன்னுள்) மாட்சியுள்ள துஷ்யந்த னுக்கு எத்தகைய செய்தி யனுப்புதல் நலமாகும் ?
(யோசிக்கிறார்)

சகுந் :—(பக்கத்தில்) சகி, இதோ பார் ; தாமரை இலையால் மறைந்த தனது துணையைக் காணாது, சக்ர வாகப்பேடு வருந்தி ஆவலோடு கதறுகிறது. நானும் கஷ்டமானதைச் சகிக்கிறேன்.

அன :—சகி, அப்படிச் சொல்லாதே. அதுவும் (சக்ரவாகப்பேடும்) தனது காதலனைப் பிரிந்து, துன்பத் தால் நீளிரவு கழிக்கிறது. விரகதுக்கம் பெரிதுதான் ; என்றாலும், ஆசாபந்தம் அதைச் சகிக்கச் செய்கிறது.

காச்யபர் :—சார்ங்க்ரவ ! சகுந்தலையை முன்னிடு கையில், என் பெயரால் நீ அரசனுக்குச் சொல்லத் தக்கது இதுவே :

சார்ங்க்ரவன் :—பகவான் கட்டளை யிடட்டும்.

காச்யபர் :—

அஸ்மாந் ஸாது விசிந்த்ய ஸம்யமதநா
நுச்சை : குலம் சாத்மநஸ்
த்வய்யஸ்யா : கதமப்ய பாந்தவ க்ருதாம்
ஸ்நேஹ ப்ரவ்ருத்திஞ் சதாம் ;
ஸாமாந்ய ப்ரதிபத்தி பூர்வகமியம்
தாரேஷு த்ருஶ்யா த்வயா
பாக்யா யத்த மத : பரம் நகலுதத்
வாச்யம் வது பந்துபி :

தன்னடக்கச் செல்வர்களாம் சாதுகள் எங்களை, யுன்
உன்னதநன் மரபை, உன்பால் ஊறுமிவள் *இயலன்பை
உன்னியேற் றுன்மனையிற் சமவுரிமை யுதவிடுவாய் ;
பின்னரவள் பாக்கியமாம் ; பெண்கொடுத்தோர் பேச்சிதுவே.

சார்ங்க்ரவன் :—தங்கள் திருவாக்கை ஏற்றேன்.

காச்யபர் :—என் குழந்தாய், உனக்குச் சில புத்தி மதிகள் கூறத்தகும். வனவாசிகளேனும், நாங்கள் லௌகிகமும் தெரிந்தவரே யாவோம்.

சார்ங் :—புலவர் அறியாப் பொருளுண்டோ ?

காச்யபர்:—நீ இங்கிருந்து கணவனில்லஞ் சேர்ந்து,

ஶுஶ்ரூஷஸ்வ குரூர் குரு ப்ரியஸகீ
 வ்ருத்திம் ஸபத்நீஜநே
பர்த்துர் விப்ர க்ருதாபி ரோஷணதயா
 மாஸ்ம ப்ரதீபம் கம :
பூயிஷ்டம் பவ தக்ஷிணா பரிஜநே
 போகேஷ் வநுத்ஸேகி நீ
யாந்த்யே வம் க்ருஹிணீபதம் யுவதயோ
 வாமா : குலஸ்யாதய :

பேரியோர்க்குப் பணிபுரிவாய் ; சவத்திகட்குப்
 பிரியசகி யாவாய் ; நாதன்
பரிபவஞ் செய் தாலுமுரண் செய்யாமற்
 சினவாமற் பணிவு பேணாய் ;
பரிசனத்தை மிகமதிப்பாய் ; பணச்சுகத்திற்
 செருக்கறுப்பாய் ; பாங்கி னில்லம்
புரிநங்கைக் கிவைசிறப்பாம் ; எதிர்புரிவார்
 குலக்கேடர் ; பொலிவு மிக்காய் !

*உறவோர் கூட்டாமல் தானே வளர்ந்த காதல்.

கௌதமிக்கு (இந்தப்புத்திமதி) எப்படித் தோன்று கிறது ?

கௌதமி :—இதுவே இளமணப் பெண்களுக்கு ஏற்ற உபதேசமாம். குழந்தாய், இதை யெல்லாம் நினைப் பில் வைத்துக் கொள்.

காச்யபர் :—மகளே, என்னையும் தோழிகளையும் தழுவிக் கொள்.

சகுந் :—அப்பா, பிரியம்வதை முதலிய தோழிகள் இவ்விடத்தினின்றே திரும்பிச் செல்வாரா ?

காச்யபர் :—செல்வி, இவர்களும் (மணஞ் செய்து) கொடுக்க வேண்டியவர்களே ; அங்கே செல்லுதல் அவர்களுக்கு அடுக்காது ; உன்னுடன் கௌதமி வரு வாள்.

சகுந்:—(தந்தையைத் தழுவி) மலையத் தடத்தினின்று வேர்பறிக்கப்பட்ட சந்தனச் செடி போல், அப்பாவின் மடியிலிருந்து விலகி, அன்னிய பூமியில் யானெப்படி உயிர் தரிப்பேன் ?

காச்யபர் :—அருமைச் செல்வி, என் இத்துணை வருந்துகிறாய் !

பெருநிதி, செயலின்மிக்கான், பெருங்குலத் தலைவன்போற்றும்
திருமிகும் அரசியாகித் தினமணி தனைக் கிழக்கு
தருவது போலத் தூய தனையனைத் தந்து வாழும்
பெருமித நாளில் என்றன் பிரிவினை வருந்த மாட்டாய்.

(சகுந்தலை தந்தை காலில் விழுகிறாள்)

காச்யபர் :—எதை விரும்புகிறேனோ, அது உனக் காகுக !

சகுந் :—(தோழிகளை யணைந்து)சகிகாள், இருவரும் சேர்ந்து என்னை யணைத்துக்கொள்ளுங்கள் ! (அணைக்கின்றனர்)

சகிகள் :—ஸகி, அரசன் உன்னை யறியத் தாமதித்தால், அவன் பெயர் குறித்த இந்த மோதிரத்தைக் காண்பி.

சகுந் :—உனது இச் சந்தேகத்தால், எனக்கு நடுக்கமுண்டாகிற தம்மா !

சகிகள் :—அஞ்சாதே ; " ஸ்நேஹப் பாபசங்கீ " அன்பு தீதை ஐயுறும்.

சார்ங் :—இரவி *இரண்டாங் காலம் அடைந்தது. அம்மணி, துரிதப்படுங்கள்.

சகுந் :—(ஆசிரமத்தை நோக்கி முகந் திருப்பி நின்று) அப்பா, இனி எப்போது நான் தபோவனத்தைக் காண்பேன் ?

காச்யபர் :—கேட்பாயாக!

பூர்வா சிராய சதுரந்த மஹீஸ பத்னீ
தௌஷ்யந்தி மப்ரதிரதம் தநயம் நிவேஸ்ய
பர்த்தா ததர்பித குடும்ப பரேண ஸார்த்தம்
ஸாந்தே கரிஷ்யஸி பதம் புனராஸ்ர மேஸ்மின்.

---

*யுகாந்தரம் :—12 மணி நேரங் கொண்ட பகல், நான்கு யுகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு யுகமும் மூன்று மணி நேரமாம். ஆறு மணிக்குப் பகல் தொடங்கும்; எனில் இப்போது ஒரு யுகம் கழிந்து 9 மணிக்குமேல், இரண்டாவது யுகம் 10 மணி நடக்கிறது என்பது கருத்து.

நாற்றிசை யுலகி னோடு நாயகி யாகி நீடு
போற்றித் துஷ்யந்தன் சேயைப் பொருவறு மரியணைமேல்
ஏற்றி, வீட்டின் பொறுப்பை ஈந்தபின் கணவனோடு
வீற்றிருப் பாயிச் சாந்த நிலயத்தில் விசார மற்றே!

கௌதமி :—குழந்தாய், பயணவேளை வந்துவிட்டது; அப்பாவை அனுப்பு: (காச்யபருக்கு) இப்படியே திருப்பித் திருப்பிப் பேசுவாள், பகவான் திரும்பட்டும்.

காச்யபர் :—குழந்தாய்! தபோனுஷ்டானம் தடையாகிறது.

சகுந் :—(மீண்டும் தந்தையைத் தழுவி) அப்பா தேகம் தவத்தால் ஏற்கெனவே நொந்து போயுள்ளது; ஆதலால் எனக்காக அதிகம் வருந்தாதே, அப்பா!

காச்யபர்:—(உயிர்ப்புவிம்மி) நீ முன் நிவேதித்த வன நெல் - பர்ணசாலை வாசலிலே முளைத்திருக்கக் கண்டும் சோகந் தணிவ தெப்படியோ?

சிவாஸ் தே பந்தா ந: ஸந்து!

(ஏகுக; உன் வழி சிவமாகுக!)

[சகுந்தலை துணைவருடன் செல்கிறாள்]

சகிகள் :—(சகுந்தலையை நோக்கி) ஹா! ஹா! காட்டு மரங்களில் சகுந்தலை மறைந்தாள்!

காச்யபர் :—(நெட்டுயிர்த்து) அனஸூயே! உன் அறவினைத் துணைவி சென்று விட்டாள்; அதனாலுண்டாகும் துயரை அடக்கி, என்னுடன் வா.

இருவரும் :—சகுந்தலையில்லாது, வெறுமையான ஆசிரமத்தில் நுழைகிறோம்.

காச்யபர் :—உனது நேசம் இப்படிக் காண்கிறது. (யோசித்துத் திரும்பி) அப்ப! சகுந்தலையைப் பதிமனை யனுப்பியதும், இப்போது மனம் நிம்மதியானது - ஏனெனில்,

அர்தோ ஹி கன்யா பரகீய ஏவ
தாமாத்ய ஸம்ப்ரேஷ்ய பரிக்ரஹீது:
ஜாதோ மமாயம் விஸத: ப்ரகாமம்
ப்ரத்யர்பித ந்யாஸ இவாந்த ராத்மா!

கன்னியின் ஒருவர் கைப்பொரு ளாவளே
அவளைக் கணவன் அகத்திற் கனுப்பி
ஈட்டுப் பொருளை ஈந்தது போன்றென்
உள்ளத் தமைதி யுறவ நின்றே!

(எல்லாரும் செல்லல்)

நான்காம் அங்கம் முற்றிற்று.

அங்கம்—5

க. கஞ்சுகி

[அரசன் ஆசனத்தமர்ந்து, விதூஷகனுடன் தோன்றுகிறான்]

விதூஷகன் :—(காது கொடுத்து) நண்பா, சங்கித சாலைக்குள் உனது காதைச் செலுத்து! ஸ்வரத்துடன் கூடித் தெள்ளினிய கீதம் கேட்கிறது! அங்கு ஹம்ஸ பதிகை யம்மை வர்ணஸாஹித்யம் செய்கிறாள் போலிருக்கிறது.

மன்னன் :—சும்மா இரு - நான் கேட்கிறேன்.

(பாட்டு ஆகாய மூலம் கேட்கிறது)

*புதுத்தேன் விரும்பியலை தும்பியே - மாம்
பூவைநீ வேட்கையுடன் கொஞ்சியே - இன்று
பதுமத்தி னுள்ளுறைந்து மகிழ்ந்தே - அதைப்
பட்டென மறந்தென்ன விந்தையே !

மன் :—ஆஹா ! இன்னிசை வெள்ளம் !

விது :—என்ன, அக்கிதத்தின் அக்ஷரார்த்தந் தெரிந்ததா ?

மன் :—(புன்னகைத்து) இவளை ஒரே தடவை காதலித்தேன். (அவளை நினையாது) நான் விரும்பும் அரசி வசுமதியைக் குறிப்பிட்டு, எனக்குச் சாட்டை கொடுக்கிறாள் போலும். நண்ப மாதவய்யா, "நான் தந்திரமாகச் சூடு கொடுக்கப்பெற்றேன்" என்று ஹம்ஸபதிகைக்கு என் மொழியால் தெரிவி.

விது :—தேவரீர் கட்டளைப்படி! (எழுந்து) நண்பா, அவள், சேடிகள் கைகளால் என் குடுமியைப் பிடித்து அடிக்கும்போது, ஆசைபோன சந்யாசி அப்ஸர ஸ்த்ரீ கையிலகப்பட்டதுபோல எனக்கு இப்போதைக்கு விமோசனம் கிடைக்காது.

மன் :—போ, அதை நாகரிகமாக அவளுக்குத் தெரிவி.

விது :—வேறு கதி ? (போகிறான்)

---

*இந்தச் சுலோகத்தில், தூர்வாசன் சாபத்தால், துஷ்யந்தன் (தும்பி), சகுந்தலையை மறந்து (மாம்பூ), தனது அந்தப்புரத்தில் (பதுமம்) வசிப்பதைக் கவி குறித்து, நிகழப்போகும் காட்சியைத் தெரிவிக்கிறார்.

[விதூஷகன் சகுந்தலையை யறிவான்; ஆதலின், அவனிருந்தால் பின்னே ஞாபகப்படுத்துவானென்று, கவி, இப்போதே அவனை அனுப்பிவிடுகிறார்]

மன் :—(தனக்குள்) ஏனோ தெரியவில்லை - இஷ்ட ஜனத்தினின்று நான் பிரியாதவனேனும், இப்பாட்டின் கருத்தைக் கேட்டு வலிவான கலக்க முண்டாகிறது.

ஒருவன் சந்தோஷமாகவே இருக்கிறான்; அவன் அழகான வஸ்துவைப் பார்க்கிறான்; இன்னிசை கேட்கிறான்; அப்போது அவன் மனத்தில் ஒரு கலக்கம் உண்டாகிறது; தன்னையறியாமலே சித்தத்திற் படிந்த பூர்வஜன்ம நட்புறவுகளின் நினைப்பே அக் கலக்கத்தின் காரணமாம்.

(தியங்கி நிற்கிறான்)

*(கஞ்சுகி வருதல்)

கஞ்சுகி:—அஹோ, முடிவில் இந்தக் கதிக்கு வந்து விட்டேன்! அரண்மனை அந்தப்புரத்தில் எனக்கு உத்தியோகம்; அதற்கு அடையாளமாக, நான் பிடித்த இந்த மூங்கில்தடி இப்போ வயதாகி நடை தள்ளாடும் எனக்கு ஊன்றுகோலாயிருக்கிறது.

தர்மகாரியம், அரசனால் தாமதப்படக் கூடாதே; ஆனால் இப்போதுதான் தருமாஸனத்தினின்றெழுந்த

* கஞ்சுகி - நீண்ட தொள தொளத்த சட்டை யணிந்தோன் - கிழட்டுப் பார்ப்பான் - ராஜாவின் அந்தப்புரத்தில் கௌரவம் வாய்ந்த சேவகன் - நன்னெறியும் லௌகிகத் திறமையும் வாய்ந்தவன் - கஞ்சுகி எப்போதும் ஊன்றத் தடி பிடித்து வருவான்.

மஹாராஜாவிற்கு, கண்வ சிஷ்யர் வரவைக்கூற என் மனந் துணியவில்லை ; ஏனெனில், அது மீண்டும் அவருக்குத் தொந்தரவளிக்கும் ; அல்லது, உலகாளுவோர் இளைப்பாற்றுவ தேது ?

பரிதியின் குதிரைகள் (ஒரே தடவையாகப்) பூட்டப்படுகின்றன. காற்று, இரவும் பகலும் அலைகிறது ; ஆதிசேஷன், எப்போதும் பூபாரத்தைத் தாங்குகிறான். ஆறிலொரு கடமை வாங்கும் மன்னனுடைய ஆட்சியறமும் இவ்வகையேயாம்.

ஆதலின், என் கடமையைச் செய்கிறேன். (சுற்றி நோக்கி) இதோ தேவர் இருக்கிறார்.

பகலெல்லாம் யானைக் கூட்டத்தை நடத்தி, வெப்பந்தணியக் குளிர் நிழலில் இளைப்பாறும் தலைவன்-யானை போலவே, மன்னன், பிரஜைகளைச் சொந்தப் பிள்ளைகள் போலப் பரிபாலித்து, தளர்ந்த மனத்துடன், தனிமையில் அமர்ந்துள்ளான். (அருகிற் சென்று) 'ஜயது, ஜயது தேவ : இமய மலையடிவாரத்தைச் சார்ந்த வனவாசிகளான சில தபஸ்விகள், ஸ்திரீகளுடன், காச்யபரின் செய்தி கொண்டு எழுந்தருளி யுள்ளனர் ; சமூகம் கேட்டுத் தீர்மானிக்கட்டும்.

மன் :—(வியப்புடன்) என்ன! தபஸ்விகள், பெண்டிருடன், காச்யபர் செய்திகொண்டு வந்திருக்கிறார்களா!

கஞ்சுகி :—ஆமாம் !

மன் :—ஆனால் நான் சொன்னதாக, உபாத்தியாயர் ஸோமராதர், விதிப்படி உபசரித்துத் தானே அவர்களை அழைத்து வரவேண்டுமெனத் தெரிவி. தபஸ்வி

களைத் தரிசிக்கத்தக்க இடத்தில் நானும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கஞ்சுகி :—தேவர் கட்டளைப்படியே.

(செல்கிறான்)

மன் :—(எழுந்து) வேத்ரவதி, அக்னி - மண்டபத்திற்கு வழி நடத்து.

ப்ரதீஹாரீ :—இதோ இதோ வழி, தேவ !

மன் :—(திரும்பி, தனது ஆட்சியிலுள்ள சிரமத்தைக் காட்டி) விரும்பியதைப் பெற்றதும் ஒவ்வொருவனும் இன்புறுகிறான். அரசன் இஷ்டலாபம் துன்பமாய் முடிகிறது. வெற்றி, கவலையைத் தணிக்கும் ; அடைந்ததைக் காக்கும் தொழிலே கடினமாகும். குடைநிழலில் இருப்பது களைப்பை நீக்கும் ; குடையின் தண்டைப் பிடிப்பது களைப்பை யுண்டாக்கும். குடைத் தண்டையேந்துவோனே அரசன் - அரசு குடை போன்றது -

(திரைக்குப் பின்)

வைதாலிகர் :—(சட்டியக்காரர், குறித்த வேளை மன்னன் புகழைப் பாடுவோர்)

வாழிஎம் அரசே, வாழிநீ டூழி !
உன்னலம் கருதாய், மன்னுயிர்க் குழைப்பாய்
ஒவ்வொரு நாளும் உன்றொழில் இதுவே.
தலையில்வெவ் வெய்யிலைத் தாங்கினு மேமரம்
தன்னிழ லடைந்தோர் தளர்வினை நீக்கும் ;
அதுபோல் இதஞ்செய் அரசநீ வாழ்க !

இரண்டாவது வைதாலிகன் :—

செங்கோல் ஓச்சித் தீயரை ஒறுத்தாய் !
கலகந் தீர்த்துக் காத்தனை யுலகை.

பொருள்செழித் தாலே பொருந்துவர் உறவோர்;
நீயே என்றும் நிலவுயி ருக்கு
நண்பனாய் நின் று நலம்புரி கின்றாய் !
வாழியெம் அரசே வாழிநீ டுழி !

மன் :—இப் புகழுரைகள் என் மனக் கவலையைப் போக்கிப் புதிய ஊக்க மளிக்கின்றன. (செல்லல்)

உ. மறதியின் கோடுமை

[அக்கினி மண்டபம் - ஒரு மேடையில் முத்தீ எரிதல் - ஒரு பசுவும் அருகிருத்தல்]

(அரசன் வருகிறான்)

ப்ரதிஹாரி :—இதோ சுத்தமான அக்னிஸரணாவிந்தம் (அக்னி மண்டபத்தின் முன்னுள்ள ஒருசதுரமேடை) அங்கே ஹோமதேனுவும், புதுநீராட்டப்பட்டு அழகு பொலிகிறது ! தேவர் மேலேறட்டும்.

மன் :—(ஏறி தனது பரிஜனங்கள் கைதாங்க நிற்கிறான்) வேத்ரவதி, பகவான் காச்யபர் எதை உத்தேசித்து ரிஷிகளை யனுப்பியிருக்கிறார் ? தவமுனிவர் விரதம் இடையூற்றதோ? அற வனத்தில் மேயும் மிருகங்களுக்கு யாராவது தீங்கு செய்தாரோ ? யான் செய்த பிழையால் செடிகொடிகள்-பலனளிக்கவில்லையோ? இத்தகைப் பல சிந்தனைகளால் என் மனம் கலங்குகிறதே.

ப்ரதிஹாரி :—நல்ல செயல்களைக் கண்டு மகிழும் ரிஷிகள் தேவரீரை மெச்சவே வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

[வருதல் - கௌதமியுடன் ரிஷிகள், சகுந்தலையை முன்னிட்டு வருகின்றனர். அவர்களுக்கு முன் கஞ்சுகியும், புரோஹித னும் வழி நடத்தி வருகின்றனர்]

கஞ்சுகி :—இத இதோ பவந்த :

(இது வழி, இது வழி! முனிகாள்!)

சார்ங் :—சாரத்வத, மன்னன் மகாபாகன் ; முறை தவறுதவன் ; அவன் குடிகள், தாழ்ந்த நிலையிலும், தீ நெறி புகாதவர். எனினும், எப்போதும் தனிமையிலேயே பழகிய என் மனத்திற்கு, ஜன நெருக்கமுள்ள இந்த அரண்மனை, அனல் சூழ்ந்ததுபோலக் காண்கிறது.

சரத்வதன் :—இந்நகர் புகுந்ததும் நீ இப்படியுணர்வது சரியே ; எண்ணெய் தேய்த்துக்கொண்டவனை நீராடியவன், அசுத்தனைச் சுத்தன், துயில்வோனை விழித்தோன், அடிமையைச் சுதந்திரன் காண்பது போலவே, போக சுகத்தில் பொருந்திய இந்த நகர மக்களை நான் மதிக்கிறேன்.

சகுந் :—(தீக்குறி கடித்து) ஆ ! எனது வலது கண் துடிப்ப தென்னே ?

கௌதமி :—குழந்தாய் அமங்கலம் நீங்குக ! உன் கணவன் குலதேவதைகள் உனக்கு இன்பமளிக்கட்டும்!

(திரும்புகிறாள்)

புரோகிதன் :—(மன்னனைக் காட்டி) தபஸ்விகளே, ஆச்ரம தர்மங்களைக் காக்கும் மன்னன் தனது ஆஸனத்தினின்றெழுந்து, அதோ உங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறான். அவனைக் காணுமின்.

சார்ங் :—பெருமைசால் அந்தணு! மன்னன் பணிவு போற்றற் குரியதே! இருப்பினும், நாங்கள் இதைப் பாராட்டவில்லை - ஏனெனில், கனிச்சுமையால் மரம் வணங்குகிறது; நீரால் கனக்கும் மேகம் கீழே தணிகிறது. செல்வரான நல்லோர் செருக்கில்லாது நடந்து கொள்ளுகின்றனர். பரோபகாரிகளுக்கு இவை இயல்பேயாம்.

ப்ரதிஹாரி :—தேவ, ரிஷிகள் கனிந்த முகத்துடன் காண்கின்றனர்; அவர்கள் அமைதியான காரியமாகவே வந்துள்ளனர் என்றறிகிறேன்.

மன் :—(சகுந்தலையைப் பார்த்து) சரீர லாவண்யம் நன்கு தெரியாது மறைத்து, பழுப்பிலைகளுக்கிடையே தளிரிலைபோன்று, தபோதனரிடையே விளங்கும் இப் பெண்மணி யாராயிருக்கலாம்?

ப்ரதிஹாரி :—தேவ, என் ஊகம் வியந்து மேற் செல்லவில்லை; ஆனுல் அவள் வடிவழகு கண்ணிற் கினிதே.

மன் :—சரி; பரதாரத்தைப் பார்க்கலாகாது.

சகுந் :—(கையை மார்மேல் வைத்து, தனித்து) உள்ளமே ஏன் பதறுகின்ருய்? நாதன் அன்பையெண்ணித் தைரியமாயிரு.

புரோகிதன் :—(முன் வந்து) முறைப்படி உபசரிக்கப்பட்ட தபஸ்விகள் இவர்கள்; தங்கள் குருவிடமிருந்து செய்திகொண்டு வந்துள்ளார்; தேவரீர் கேட்டருள்க!

மன் :—கவனித்துக் கொண்டிருக்கிறேன்.

ரிஷிகள் —(கையை யுயர்த்தி)விஜயஸ்வராஜன்! (அரச வெல்க !)

மன் :—ஸர்வாநபிவாதயே (அனைவர்க்கும் வணக்கம்)

ரிஷிகள் :—இஷ்டேந யுஜ்ஜஸ்வ (விரும்பியதடைக !)

மன் :—முனிவர் தவம் தடையற நடக்கிறதா ?

ரிஷிகள் :—

> காவலன் நீயெனில், தூயநல் லாரின்
> தவவினை கட்குத் தடையேது முண்டோ ?
> இரவி யொளிர்கையில் இருளு மிருக்குமோ ?

மன் :—ஆயின் "ராஜன்" எனும் பட்டம் எனக்குப் பொருளுடையதே யாகும். உலகிற்கருள, பகவான் காச்யபர் சுகமாயிருக்கிறாரா ?

ரிஷிகள் :—சித்தர் க்ஷேமம் அவர் ஸ்வாதீனத்திலேயே யுள்ளது. (ஸ்வாதின குஸலா : ஸித்தி மந்த :) அவர் தங்கள் குசலம் விசாரித்து இவ்வாறு விண்ணப்பிக்கிறார் :—

மன் :—பகவான் ஆணை யென்ன ?

சார்ங் :—"இருவரும் மனமொத்து, மாண்புமிக்க தாங்கள் இந்த என் புதல்வியை மணந்தீர் ; உங்களிருவர் செயலையும் நான் மனமுவந்து சம்மதித்தேன்.

தகைமைக் குரியாரில் நீ தலை சிறந்தவன் ; சகுந்தலை நற்குண வடிவாவள் ; 'பொருத்தமான வதூவரரைச் சேர்ப்பதில்லை' என்று பிரம்மாவுக்கு நீண்ட காலம் வசையேற்பட்டிருந்தது. உங்களைத் தம்பதிகளாகக் கூட்டியதால் அந்த வசை நீங்கியது. ஆதலின்,

இப்போது கர்ப்பவதியாயிருக்கும் இவளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளுக !

கௌதமி :—ஆர்ய, நானொன்று சொல்ல விரும்புகிறேன். எனது மொழிகளுக்கு அவசரமில்லை ; ஏனெனில், அவள் பெரியோர்களைக் கேட்கவுமில்லை ; அவனுறவினரை நீர் வினவவுமில்லை ; இருவரும் மனம் ஒத்துக் காரியம் முடிந்தபின், உங்களுக்குத் தனித்தனியாகச் சாற்றுவதுண்டோ ?

சகுந் :—(தனியே) எனது நாதன் இப்போதென்ன சொல்வார் ?

மன் :—எனக்கெடுத் துரைக்கப் படுவதென்ன ?

சகுந் :— அவன் சொல்லத் தொடங்குவது நெருப்பா யிருக்கிறதே !

சார்ங் :—இதெப்படி ? தாங்கள் லோக விருத்தாந்தம் முழுதுந் தெரிந்தவர்கள். கற்புள்ளவளானுலும், கணவனிருக்கையில், உறவினர் வீட்டிலே வசித்தால், உலகோர் அவளைச் சந்தேகிப்பர் ; ஆதலினலே, கணவன், விரும்பினுலும் வெறுத்தாலும், பெண்ணை அவனுடன் இருக்கவே சுற்றத்தார் விரும்புவர்.

மன் :—என்ன, இப்பெண்ணை முன்னே மணந்தேன ?

சகுந் :—(கவலையுடன், தனித்து) உள்ளமே, உனது ஆசங்கை சரியானது !

சார்ங் :—செய்த காரியம் பிடிக்காவிட்டால், தருமத்தை மறுத்தல் அரசனுக்கு அழகாகுமா ?

மன் :—இந்த உண்மையற்ற கற்பனைப் பேச்செதற்கு ?

சார்ங் :—செல்வச் செருக்காளருக்கே வழக்கமாக இத்தகைய விகாரம் ஏற்படுகிறது.

மன் :—பெரிதும் நிந்திக்கப்பட்டேன் !

கௌதமி :—குழந்தாய், நாணத்தைச் சற்று விடு. நினது முகமூடியை இதோ திறக்கிறேன் ; அப்போது நின் கணவர் உன்னை யறிவார். (அப்படியே செய்கிறாள்)

மன் :—(சகுந்தலையைக் கூர்ந்து நோக்கித் தன்னுள்) இவ்வகை வந்த இம்மாசிலாத் திருவை, முன்பு ஏற்றேனோ அல்லனோ அறிகிலேன் ! பனியுறையும் *குந்த மலர் முன் காலைத் தேனீபோல், நுகரவுமாற்றிலேன், விடுக்கவும் முடிகிலேன். (ஆலோசனையி லிருக்கிறான்)

ப்ரதிஹாரி :—(தன்னுள்) அஹோ, எஜமான் கருமத்தைப் பார்க்கிறார் ! இத்தகை யழகு எளிதில் வந்தபின் யாரே தயங்குவர் ?

---

*குந்தம்=குருந்தம். குந்த மலர் காலையில் தேன் நிறைந்திருக்கும் ; ஆனால் அதைப் பனி மூடியிருக்கும். பனியைக் கண்டு தேனீக்கள், 'இதை நுகர்வதா இல்லையா' என்று மயங்கி நிற்கும் ; சூரியன் புலப்பட்டால் பனி நீங்கித் தேன் விளங்கும் ; அப்போது தேனீ அதை அருந்தும். அதுபோல, இப்போது தூர்வாசன் சாபத்தால் மறதி யென்னும் பனி இத்தேன் மலரான சகுந்தலைக்கும் தனக்குமிடையே நின்று, மன்னனை தேனீயை மயக்குகிறது ; பின்னால் உண்மைக் கதிர் விளங்கியதும் எல்லாம் நலமாகும் என்ற ஆழ்ந்த கருத்துடைத்து இவ்வுவமை.

சார்ங் :—அரசே! ஏன் இவ்வாறு சும்மா இருக்கிறீர்?

மன்:—தபோதனர்களே, சிந்தித்தேன்; இம்மாதை மணந்ததாக நினைப்பில்லை; இவளோ கர்ப்பவதியா யிருக்கிறுள்; பரதாரத்தை நான் எப்படி அங்கீகரித்து க்ஷேத்ரியனுவேன்? (க்ஷேத்ரியன் = இன்னொருவன் நிலத்தில் விதைப்பவன்; இன்னொருவனுல் பிறந்த குழந்தை யுடையவள் கணவன்)

சகுந் :—(தனித்து) எனதாரியர் மணந்ததையே சந்தேகிக்கிருர்; இப்போது என் உன்னத விருப்பங்கள் எங்கே?

சார்ங் :—மன்ன, அப்படிச் செய்யாதே; நீ ரிஷி மகளைத் தீண்டினை; அவர் அதை அனுமதித்தார். கவர்ந்த கள்வனிடமே தனது பொருளைத்தருகிருர் ரிஷி; உன்னைத் தகுந்த பாத்திரமாக நினைத்து, மகளைத் தரும் முனிவரை நீ நிந்தித்தவனுகிருய்.

சரத் :—சார்ங்க்ரவ, இதோடு நிறுத்து! சகுந்தலே, நாங்கள் சொல்லவேண்டியதைச் சொன்னேம். அவர் அப்படிச் சொல்லுகிருர். அவருக்குச் சரியான பதில் கூறு.

சகுந் :—(தனித்து) அப்படிப்பட்ட காதல் இப்படிமாறினபின், நினைப்பூட்டுவதா லென்னுகும்? என்னை நான் ருஜுப்படுத்திக் கொள்ளவே இம்முயற்சி; (உரக்க) நாதா மணந்ததை ஐயுற்ருய்; இப்படி மொழிதல் அழகல்ல! பௌரவ, இயல்பிலேயே எளிய மனதுள்ள இவ்வேதிலாளை, முதலில் அவ்வகை வாக்களித்து, ஆசிர

மத்தில் ஏற்று, இப்போது ஏமாற்றி மறுப்பது தங்களுக் கழகல்ல !

மன் :—(காதைப் பொத்தி) சாந்தம் பாபம் ! தண்ணீரைச் சேருக்கிக் கரை மரத்தையும் வேர் பெயர்க்கத் தனது அணைகளை யுடைக்கும் ஆற்றைப்போல, நின் குலத்தையும் கெடுத்து, இம்மனிதனையும் இழிவுறுத்துவதேன் ?

சகுந் :—நல்லது ; நான் பரதாரமெனச் சந்தேகித்து, நீர் இவ்வாறு நடந்தால் இந்த அறிகுறியால் தங்கள் ஐயந்தீர்க்கிறேன்.

மன் :—அது நல்லதே—

சகுந் :—(தனது மோதிர விரலைத்தடவி) ஐயையோ! எனது விரல் மோதிரத்தைக் காணோமே !

(விசனத்துடன் கௌதமியைப் பார்க்கிறாள்)

கௌதமி:—சக்ராவதாரத்திலுள்ள சசீதீர்த்தத்தை வணங்கும்போது,நினது மோதிரம் தவறிவிட்டதுறுதி.

மன் :—“மடந்தையருக்கு உடனே யோசனை” என்பது இதுதான்.

சகுந் :—இங்கு விதி வலிதானது ; தங்களுக்கு வேறொன்று சொல்லுகிறேன் :

மன் :—இப்போது கேள்விக்கு வந்து விட்டது !

சகுந் :—ஒரு நாள் நாம் மல்லிகைப் பந்தலில் இருக்கையில், தாமரையிலைத் தொன்னையில் வைத்த தண்ணீரைத் தாங்கள் கையிலெடுத்தீர்.

மன் :—கேட்கிறோம் !

சகுந் :—அக்கணம் எனது தத்துப் பிள்ளையான தீர்க்காபாங்கன் எனும் மான் அங்கு வந்து நின்றது. அதனிடம் அன்பு கொண்டு, "இது முதலிற் குடிக்கட்டும்" என்று அதைக் குடிக்க இனிமை பேசி யழைத்தீர் ; தங்களிடம் பழக்கமில்லாததால், அது கைக்கருகே வரவில்லை ; பிறகு என் கையில் வைத்துக்கொண்டதும், அது, அதே தண்ணீரை விரும்பியது. அப்போது தாங்கள் "இனம் இனத்தை நம்பும் ; இருவரும் அரண்ய வாசிகளே" என்று வேடிக்கையாகச் சொன்னீர்.

மன் :—பெண்கள், தம் காரியத்தைக் சாதிக்கப் பேசும் இனிய பொய்களால், காமிகளே மயங்குவர்.

கௌதமி :—மகாபாக, அப்படிச் சொல்லலாகாது; தபோவனத்தில் வளர்ந்த இவள் வஞ்சமறியாள்.

மன் :—தவக்கிழவி !

ஸ்த்ரீணாம் அஶிக்ஷித படுத்வம் அமானுஷீணாம்
ஸந்த்ருஶ்யதே கிமுத யா : ப்ரதிபோத வத்ய :|
ப்ராகந்த ரிக்ஷ கமனாத் ஸ்வமபத்ய ஜாதம்
அன்யைர் த்விஜை : பரப்ருதா : கிலபோஷ யந்தி. ||

இயல்பாய்ப் பெண்ணிடம் இசைந்த தந்திரம்,
விலங்குப் பிணைக ளிடத்தும் விளங்கும்.
அறிவுளோ ரிடத்தில் அதைக்கேட் பானேன் ?
பெண் குயில்கள், விண்ணிற் பறக்குமுன்
தமதுகுஞ் சுகளைத் தந்திர மாக
மற்றைப் புட்கள் வளர்க்கச் செய்யுமே.

[இவ்விடம் சகுந்தலையை மேனகை பெற்றதும், பிறர் கையில் வளர்க்க விடுத்ததும், குயிலின் உதாரணத்தால் குறிக்கப் படுகிறது]

சகுந் :—(ரோஷத்துடன்) அனார்யா ! உன் மனம் போல் (என்னை)க் காண்கிறாய். உனைப்போல் யார் அறவுடை தரித்து, புல் மறைத்த கிணறாயிருப்பர் ?

மன் :—(தனித்து) வனவாசி யாதலால், அவள் சினத்தில் வக்கிரப் பார்வையில்லை ; கண்கள் சிவக்கின்றன ; வார்த்தைகள் தட்டில்லாமல் கடுமையாக வருகின்றன ; கோவை - அதரம் பனியுண்டது போல் துடிக்கிறது ; இயல்பாய் வளைந்த புருவங்கள் சேர்ந்து நெறிகின்றன. என் மனத்தைக் கலக்கும் அவள் சினம், வஞ்சமற்றதாகக் காண்கிறது ; மறதியால் தனிமையில் நடந்த காதலை ஒப்பாத கல்நெஞ்சனானேன் ; அவள் கண்கள் மிகச் சிவந்தன ; அவள் புருவங்கள் நெறிகையில் காமன் வில் ஒடிகிறது. (உரக்க) அம்மையே, துஷ்யந்தன் நடத்தை நன்கு தெரிந்ததே ; அவன் குடிகளிடம்கூட இப்படிப்பட்ட குற்றமிராதே !

சகுந் :—ஹா, என்னை விபசாரி என்றார் ! புரு வம்சத்தை நம்பி, உதட்டில் தேனும் உள்ளே நஞ்சுமுள்ள ஒருவன் கையிற்பட்டு, நான் ஆலோசனையற்ற பெண்ணானது நன்றாகத்தானிருக்கிறது ; (முகத்தை முந்தாணியில் மூடி யழுகிறாள்)

சார்ங் :—அடங்காது, தன் இஷ்டப்படி செய்வினை இப்படித் தகிக்கிறது. இரகசியச் சேர்க்கையை நன்கு ஆராய்ந்தே செய்யக் கடவர் ! ஒருவர்க்கொருவர் உள மறியாத நட்பு இவ்வாறே பகைமையாகும்.

மன் :—ஏனையா, இம்மாதின் பக்கமே சார்ந்து, நம்மை எண்ணற்ற தீமொழிகளாற் புண்படுத்துகின்றீர் ?

சார்ங் :—(வெறுப்புடன்) என்னைத் தாங்கள் நன்கு கேட்கவில்லை. பிறவியில் வஞ்சமே யறியாதார் வார்த்தை உறுதியல்லவோ ? எனில், பிறரை வஞ்சிப் பதே தொழிலாய்க் கற்ருேர் உண்மை யுரைப்போராக மதிக்கப்படட்டும்.

மன் :—ஹே ஸத்திய வாதியே ! தாங்கள் சொல் வதை யெல்லாம் அங்கீகரிக்கிருேம் ; ஆனுல் இம்மாதை வஞ்சிப்பதால் பயனென்ன ?

சார்ங் :—வீழ்வு !

மன் :—வீழ்வைப் பௌரவர் விரும்பக் கேட்டி லம் !

சரத்வதன் :—சார்ங்க்ரவ, பதில் சொல்வதில் பய னில்லை. குருவின் கட்டளையைச் செய்துவிட்டோம். நாம் செல்வோம் ? (மன்னனுக்கு)

ஏலுக, விலக்குக, இவளுன் மனைவி ;
உரியவள் மீதெலா வுரிமையும் உண்டு !

கௌதமீ, முன் செல்!

(புறப்படுகின்றனர்)

சகுந் :—என்ன ! இவ்வஞ்சகனுல் யான் ஏமாற் றப்பட்டேன் ; நீங்களும் என்னைக் கைவிடுகின்றீர்களே!

(அவர்களைப் பின்பற்றுகிருள்)

கௌதமி :—பிரிய சார்ங்க்ரவ, நொந்து, வருந்தி, இதோ சகுந்தலை நம்மைப் பின்தொடர்கிருள். கண வன் கொடுமையாய்க் கைவிட்டான் ! பாவம்! ஏழைப் பெண் என் செய்வாள் ?

சார்ங் :—(சினத்துடன் திரும்பி) அடங்காப் பெண்ணே! என்ன, சுயேச்சை கொண்டாடுகிறாய்?

(சகுந்தலை அஞ்சி நடுங்குகிறாள்)

சார்ங் :—சகுந்தலே, நீ அரசன் சொன்னது போன்றவளானால், குலக்கட்டுப்பாட்டை மீறிய உன்னைக்கொண்டு தந்தை என்ன செய்வார்? பழுதில்லாத நடத்தையுள்ளவளானால், நீ பதி மனையில் அடிமை செய்தலும் பண்பாம். இங்கிரு; நாங்கள் போகிறோம்.

மன் :—தபஸ்விகாள்! இம்மாதை என் ஏமாற்றுகிறீர்கள்.

மதிம லர்த்துவ தல்லியை மட்டுமே;
கதிரவன் கமலத்தை மலர்த்துவான்;
இதா ரில்லை மருவற் கிசையுமோ
முதிரத் தம்வச முற்றவ ருள்ளமே!

சார்ங் :—(இப்போது) கவனம் மாறியதால், முன் நடந்ததைத் தாங்கள் மறந்திருக்கிறீர்; பாபத்திற்கு அஞ்சும் தாங்கள் இந்த மனைவியை எப்படிக் கைவிடலாகும்?

மன் :—(புரோஹிதரிடம்) எது மிகக் குறைவென்பதைத் தங்களிடம் இப்போது வினவுகிறேன்; என் மன மயக்கமோ, இவள் பொய் சொல்லுகிறாளோ என்று நான் ஐயமுறுகிறேன். மனைவியை மறுத்தவனாவேனோ, பிறர் மனைதொட்டுப் பிழை செய்வேனோ?

புரோகிதன் :—(யோசித்து) இப்படிச் செய்யலாம்.

மன் :—தேவரீர் கட்டளையிடுங்கள்.

புரோ :—இவ்வம்மை பிரஸவிக்குமட்டும் என் வீட்டிலிருக்கட்டும்.

மன் :—ஏனிப்படிச் சொல்கிறீர் ?

புரோ :—உங்களுக்குத் தலைப்பிள்ளை சக்ரவர்த்தியாகப் பிறப்பானென்று ரிஷிகள் கூறியுள்ளனர். கண்வ ரிஷியின் பேரன் ராஜ லக்ஷணத்துடன் கூடியிருந்தால், இவளைச் சுபமாகத் தங்கள் அந்தப்புரத்திற் சேர்த்துக் கொள்ளுங்கள். மாறுபட்டால், பிதாவிடம் இவளைக் கொண்டு விட்டுவிடுவதே சரியானது.

மன் :—குரு வுகந்தவாறே !

புரோ :—குழந்தாய், என்னுடன் செல்.

சகுந் :—பூமாதேவியே, புதை குழி காட்டு! (பகவதி வஸுதே தேஹிமே விவரம்)

(அழுதுகொண்டு புறப்படுகிருள்)

(புரோகிதன் முனிவருடன் செல்லல்)

[அரசன் சாபக்கேட்டால் மறதிகொண்டு, சகுந்தலையைப்பற்றி யோசிக்கிருன்]

(திரைக்குப் பின்னே)

ஆச்சர்யம்! !

மன் :—(கேட்டு) அது ஏதாயிருக்கலாம் !

(புரோகிதன் வருதல்)

புரோ :—(வியந்து) பேராச்சரியம் நடந்தது !

மன் :—என்ன ?

புரோ :—தேவர் கண்வர் சிஷ்யர் சென்ற பின்னர், விதியை நொந்து, கையுயர்த்தி, அப்பெண் அலறி முறையிட்டாள்.

மன் :—பிறகு !

புரோ :—உடனே, பெண் வடிவாக ஒரு ஜோதி எழுந்து, அவளை வானுயரத் தூக்கிக்கொண்டு அப்ஸர தீர்த்தத்தை நோக்கிச் சென்றது !

(அனைவரும் வியந்து)

மன் :—பகவன், முன்னேயே நாம் இப்பொருளை மறுத்துவிட்டோம் ; இனி வீண் யோசனைகளாற் பயனென்ன? பகவான் இளைப்பாறச் செல்லட்டும்.

புரோ :—(மன்னனை நோக்கி) நீ வெல்க !

(செல்லுகிறான்)

மன் :—வேத்ரவதி, நான் கலக்கமுற்றுள்ளேன் ; பள்ளியறைக்கு வழி நடத்து.

ப்ரதிஹாரி :—இதோ, இதோ தேவ! (செல்லுகிறாள்)

மன்:—உண்மையில் (இப்போது) மறுத்த முனிவன் மகளை, நான் முன்னே மணந்ததாக நினைப்பெனக்கில்லை ! ஆயினும் என் உள்ளம் வலிவான வேதனைப்படுகிறது ; அது, உண்மையென்று உறுத்துகிறதே !

(அனைவருஞ் செல்லுதல்)

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

—

அங்கம்—6

க. மோதிரம்

[வருதல் நகரிகன் (நகரப்பொலீஸ் தலைவன்) ஒரு கைதி, இரண்டு காவலர்]

காவலர் :—(உதைத்து) சொல், கள்ளா, உண்மையை! பெரிய மணிச்சுடர் மோதிரம்; அரசன் பெயர் பதித்தது—இதை எங்கே திருடினாய்?

கைதி :—(அஞ்சி) ஐயா, தயவு செய்து கேளுங்க; நான் அப்படிப்பட்ட காரியம் செய்யமாட்டேனுங்க!

1-வது காவலன் : பின்னென்ன, யோக்கியமான பிராமணன் என்று மகராஜா உனக்குப் பரிசளித்தாரோ?

கைதி :—தயவு செய்து கேளுங்க: நான் சக்ராவதார தீரத்திலுள்ள ஒரு செம்படவனுங்க!

2-வது காவலன்:—கள்ளா, உன்சாதியையா கேட்டோம்?

நகரிகன் :—ஸூசக, அவன் முறையாக எல்லாம் சொல்லட்டும்; குறுக்கிட வேண்டாம்.

இருவரும் :—எசமான் உத்தரவு? (கைதியிடம்) சொல் உன் கதையை.

கைதி :—வலை, தூண்டில் போட்டு மீன் பிடித்து என்குடும்பத்தை நடத்துறேனுங்க.

நகரிகன் :—(நகைத்து) புண்ணியமான பிழைப்பு!

கைதி :—அப்படிச் சொல்லக் கூடாது எசமான்; பிறர் இகழ்ந்தாலும், சாதித்தொழிலை விட்டுடலாமா?

இரக்கமுள்ள வேதியர், இரக்கமில்லாமல், யாகப் பசுவைக் கொல்லுறுங்களே ?

நகரிகன் :—அப்புறம் ?

கைதி :—ஒரு ரோஹிதமீனை ஒரு நாள் பிடித்தேனுங்க ; அதைக் கண்டம் போடும்போது, அதன் வயிற்றிலே இந்த மணிச்சுடர் மோதிரம் இருந்ததுங்க. அதை இங்கே விற்பனைக்குக் கொண்டுவந்தேனுங்க. நீங்க பிடிச்சுக்கிட்டீங்க. என்னை வெட்டுங்க, கொல்லுங்க, சம்மதம் - நடந்த உண்மை இதுதானுங்க.

நகரிகன்:—பச்சையூன்வாடை வீசும் இச் செம்படவன் உடம்பு - தின்னிதான் ; சந்தேகமில்லை ; இந்த மோதிரம் அகப்பட்டதை விசாரிக்க வேண்டும் ; நாம் அரண்மனைக்குச் செல்வோம்.

காவலர் :—அப்படியே : செல், முடுச்சவிழ்க்கிப் பயலே ! (எல்லாரும் திரும்புதல்)

நகரிகன் :—ஸூசகா, நீங்களிருவரும், நகரவாசலில், உஷாராக இவனைக்காத்துக் கொண்டு நில்லுங்கள். நான் அரசனிடம் இந்த மோதிரத்தையும், அது கிடைத்த விவரத்தையும் தெரிவித்துக் கட்டளை பெற்று வருகிறேன்.

இருவரும் :—மஹாராசா தயவைப் பெற எசமான் செல்லட்டும்.

உ. வேதுமதி

1. காவலன் :—ஜானுக, எஜமான் தாமதிக்கிறார்.

2. காவலன்:—மன்னர்களைச் சமயம்பார்த்தே அணுக வேண்டும்.

1. காவலன் :—ஜானுக, மாலை போட்டு, இவனைக் கொல்ல என் கை நமைக்குதடா !

(கைதியைக் காட்டி)

கைதி :—காரணமில்லாமே கொல்லலாமா ?

2. காவலன் :—(பார்த்து) இதோ, அரசன் கட்டளை கொண்டு எஜமான் வருகிறார். நீ கழுகிற் கிரையாவாய் ; இன்றேல், நாய் வாய்ப் படுவாய்.

நகரிகன் :—(வந்து) ஸூசக ! இவ் வலயனை விடுதலை செய் ; மோதிரம், அவன் சொல்லும் விதமாகவே வந்தது உறுதியானது.

ஸூசகன் :—எஜமான் சொற்படி.

2. காவலன் :—இவன் எமலோகஞ் சென்று திரும்பினான் !

செம்படவன் :—(நகரிகனை வணங்கி) எஜமான் இன்று பிழைப்பிற் கென்ன செய்வது ?

நகரிகன் :—இதோ உனக்குப் பரிசு ; மோதிரத்தின் விலைக்குப் பணம் உத்தரவாயிருக்கிறது.

(பணத்தை ஆள் கையிற் கொடுக்கிறான்)

செம்படவன் :—(வணங்கி ஏற்று) எஜமான் அருளுக்கு வந்தனம்.

ஸூசகன் :—இது அருளே ; உன்னைக் கழுவினின் றிறக்கி யானைப் பிடரியில் அமர்த்தினார் ராஜா.

ஜானுகன் :—எஜமான், அந்த ரத்தின மோதிரம் மஹாராஜாவிற்கு மிகப் பிரியமென்று இப்பரிசால் விளங்குகிறது.

நகரிகன் :—அதிலுள்ள விலை யுயர்ந்த இரத்னத்தை மன்னன் வெகுமதிக்கவில்லை. அதைக் கண்டதும், மன்னனுக்கு அன்புமிக்க ஒருவர் நினைப்புதித்தது ; கம்பீர சுபாவமுள்ளவரா யிருப்பினும் கொஞ்சம் கண் கலங்கினர்.

ஸூசகன் :—அப்போது, எஜமான் நிச்சயமாக மஹாராஜாவிற்கு ஓர் உதவி செய்தீர்கள் !

ஜானுகன் :—இந்தச் செம்படவனுக்கும் (உதவி செய்தீர்) என்னலாம்.

(செம்படவனை அஸூயையுடன் நோக்குகிறான்)

செம்படவன் :—ஐய, இதிற் பாதி தங்களுக்குப் பூவாங்க இருக்கட்டும்.

ஜானுகன் :—அது சரியே.

நகரிகன் :—தீவர (வலையன்), நீ மிகவும் பெருந் தன்மையுள்ளவனாதலின், இப்போது என் பிரிய நண்பனானாய். நமது நட்பை மதுவால் உறுதி செய்வோம் ; வா மதுக்கடைக்கு. (எல்லாரும் செல்லல்).

௩. வசந்தத் திருநாள்

[ககனமார்க்கத்தில் ஸானுமதி என்ற அப்ஸர ஸ்திரீ வருகல்]

ஸானுமதி :—சாது ஜனங்கள் நீராடும்போது, முறைப்படி, அப்ஸர தீர்த்தத்தைக் காக்கவேண்டியது என்கடமை. அது முடிந்தது. இப்போது, இந்த ராஜரிஷியின் நிலைமையைக் கண்ணாரக் காண்கிறேன். மேனகை மகளான சகுந்தலை, எனக்குச் சரிசமானை யாவள். தனது மகளுக்காக மேனகை ஒன்று செய்யச்

சொன்னாள் ; (சுற்றிப் பார்த்து) பருவம் வந்தும், அரண்மனையில், வசந்தோத்ஸவத்திற்கு எவ்விதமான ஏற்பாடும் செய்யக் காணாததேன் ? நல்லது ; அனைத்தையும் தியானத்தால் அறியும் சக்தி எனக்குள்ளது ; ஆனால், எனது சகி அன்பை நான் நன்கு மதிக்கவேண்டும் ; எனது திரஸ்கரணி வித்தையால், இவ்விரு தோட்டக்காரிகள் பக்கம் மறைந்துலாவி, எனக்கு வேண்டிய செய்தியை அறிகிறேன்.

(கீழிறங்கி அவ்வாறே இருக்கிறாள்)

[வருதல் : மாம்பூவைப் பார்த்துக் கொண்டே ஒரு சேடி ; அவள் பின் வேறொருத்தி]

சேடி :—சிகப்பு, பச்சை, வெண்மை கலந்த மாம்பூவே, வஸந்த மாத உயிர்வாழ்வே ; உன்னைக் கண்டேன், உனக்கு வசந்த மங்களம் செய்கிறேன்.

2. சேடி :—பரப்ருதிகே, ஏன் தனியே முணுமுணுக்கிறாய் ?

1. சேடி :—மதுகரிகே, மாம்பூவைக் கண்டு "பரப்ருதிகை" (குயில்) பித்தானாள்.

2. சேடி :—(மகிழ்ந்து விரைந்து வந்து) என்ன மதுமாசம் பிறந்துவிட்டதா ?

1. சேடி :—மதுகரிகே, உனது காமக் களிப்பாட்டுகளுக்குக் காலம் இதுவே.

2. சேடி :—சகி, என்னைத் தாங்கிக்கொள் ; ஒரு மாம்பூ கொய்து காமதேவார்ச்சனம் செய்கிறேன்.

1. சேடி :—அர்ச்சன பலத்தில் பாதி எனக்கானால்தான்.

2. சேடி :—நீ சொல்லாவிட்டாலும் அப்படியே யாகும்; உடலிரண்டானாலும் நமது உயிரொன்றே; (சகியின்மேல் சாய்ந்து மாமலர் கொய்தல்) ஆ! முழுதும் மலராவிடினும், காம்பிலிருந்து கொய்த மாம்பூ மணம் வீசுகின்றது. (கைகுவித்து)

காமன், வில்லுக் குன்னைத் துவுவேன்—ஐங்
கணைகளிற் கூரிய தாகுவாய்
மாமலரே! வழி மாந்தரின்—இள
மாதரை யேகுறித் தெய்குவாய்!

(மாமலர் தூவுகிறாள்)

[திரையைக் கோபத்துடன் விலக்கிக்கொண்டு கஞ்சுகி வருகிறான்]

கஞ்சுகி :—முட்டாளே, நிறுத்து! மன்னன் வசந்தோத்ஸவத்தை மறுத்திருக்கையில், நீ மாமலர் கொய்ததேன்?

இருவரும் :—(அஞ்சி) தயவு செய்யுங்களையா— எங்களுக்குத் தெரியாது.

கஞ்சுகி :—வசந்த மரங்களும், அவற்றிலுறையும் புட்களுங் கூட, மன்னராணையைப் பணிந்து நடப்பதை அறியாதார் நீங்களிருவருமே யாவீர். ஏனெனில், பூத்து வெகுநாளாகியும், மாம்பூவில் மகரந்தங் காணவில்லை; வாடாக் குறிஞ்சி பூத்தும், மொட்டாகவே யிருக்கிறது; கார்காலம் கழிந்தும், ஆண் குயில்களின் பாட்டு தொண்டைக் குள்ளேயே இருக்கிறது. மாரனும் அச்சத்தால், பாதியிழுத்த அம்பைத் தூணிக்குள்ளேயே போட்டு விட்டான்.

ஸானு :—ஐயமில்லை ; ராஜரிஷி மிகப் பெருமை வாய்ந்தவர். (அவருக்கு எல்லாம் அடங்கி நடக்கின்றன)

முதல் சேடி :—ஐயா மன்னன், மைத்துனர் மித்ராவஸு, சில நாட்களுக்கு முன்பே எம்மை மன்னர் அடித்தொண்டிற்கு அனுப்பினர் ; இந்த உல்லாசத் தோட்டக் காவலே எமது வேலை ; புதியரானதால், இந்தச் செய்தி நாங்கள் கேட்டதில்லை.

கஞ்சுகி :—சரி, இனி அப்படிச் செய்யக்கூடாது.

இருவரும் :—ஐயா, எங்களுக்கு ஒன்று வியப்பாயிருக்கிறது ; அதை நாங்கள் கேட்கக்கூடுமானல், மன்னர் வசந்தத் திருநாளை ஏன் நிறுத்தினர் என்பதைச் சொல்லியருளுக.

ஸானு :—மாந்தர் விழா விரும்புவோர் ; இந்த நிறுத்தத்திற்கு ஒரு பலமான காரணமிருக்கவேண்டும்.

கஞ்சுகி :—பலர் அறிந்ததைச் சொன்னலென்ன ? சகுந்தலையின் துறவைப்பற்றி நீங்கள் கேள்விப்படவில்லையா ?

இருவரும் :—மோதிரம் பார்த்தது மட்டும் அரசர் மைத்துனர் மூலம் நாங்கள் அறிவோம்.

கஞ்சுகி :—பின்னே உங்களுக்குச் சொல்லவேண்டியது கொஞ்சந்தான். மோதிரத்தைக் கண்டதும், முன்னே சகுந்தலையை இரகசியமாக மணந்ததும், பின்பு மதி மயங்கி மறுத்ததும் அரசர் நினைப்பிற்கு வந்தன ; அது முதல், மன்னர் தன் பிழைக்கு வருந்துகிறர். ஏனெனில், மன்னர் காம்ய வஸ்துக்களை வெறுக்கிறர். நாடோறும், முன் போல அமைச்சர் சூழ்வ

தில்லை ; படுக்கையிற் புரண்டு இரவைத் துயிலின்றிக் கழிக்கிறார். தாக்ஷிண்யத்தால் அந்தப்புரங்களுக்குத் தக்க பதில் அளிக்கும்போது, பெயர்களைத் தவறாகச் சொல்லி, பிறகு வெகு நேரம் வெட்கத்தால் கலங்குகிறார்.

ஸானு :—மகிழ்ந்தேன்.

கஞ்சுகி :—இந்த மனக் குழப்பத்தால் வசந்த விழா விலக்கப்பட்டது.

இருவரும் :—சரிதான்.

[திரைக்குப்பின்]

மஹாராஜா முன் செல்லட்டும்.

கஞ்சுகி :—ஆ! தேவர் இங்கேயே வருகிறார் ; உங்கள் காரியத்தைக் கவனியுங்கள்.

இருவரும் :—சித்தம் (செல்கின்றனர்)

ச. துஷ்யந்தன் வருகை

[வருதல் : மனவருத்தத்தைக் காட்டும் உடையுடன் மன்னன், விதூஷகன், ப்ரதிஹாரி]

கஞ்சுகி :—(மன்னனை நோக்கி) ஆ! எந்நிலைகளிலும் இனிய வடிவழகு ! இவ்வளவு வருந்தியும், தேவர், காண்டற் கின்பமாகவே இருக்கிறார். மன்னர் சிறப்பான அணிகளை வெறுத்தார் ; ஒரே தங்க வலயத்தை இடது கையி லணிந்தார். பெருமூச்சால் அதரம் சிவந்து, (சகுந்தலையைப் பற்றிய) கவலையால் விழியுறங்காது, வருந்தி மெலிந்தும், அப்படிக் காணாது, தனக்குரிய ஒண்மையால், மஹாராஜா கடைச்சல் பிடித்த மகாமணி போலக் காண்கிறார்.

ஸானு :—(மன்னனை நோக்கி) இவன் மறுக்க இகழ்வுற்றும், சகுந்தலை இவனுக்காக வருந்துவது சரியே.

மன் :—(சிந்தனையுடன் நடந்து) முன்னே எனது மான்விழி எழுப்பியும் உறங்கி, இந்த இழி மனம், இப்போது பிழையை வருந்தி விழித்திருக்கிறது.

ஸானு :—பாவம், அந்த ஏழைப் பெண்ணின் பாக்கியமும் இப்படியே இருக்கிறது !

விதூ :—(தனித்து) மீண்டும் இவரைச் சகுந்தலை நோய் பிடித்து விட்டது ! இவருக்கு எப்படிச் சிகிச்சை செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை.

கஞ்சுகி :—(அருகுற்று) இறைவ ! வெற்றி, வெற்றி ! மஹராஜ், *உத்யான வனத்தடங்கள் நன்ருகப் பார்வையிடப்பட்டன. விநோத ஸ்தானங்களில், இறைவர், மனம்போல வீற்றிருக்கலாம்.

மன் :—வேத்ரவதி, நமது அமைச்சர் ஆர்யபிசுனரிடம் " தாமதமாக எழுந்ததால், இன்று தர்மாஸனம் வகிக்க உத்தேசமில்லை. ஐயர் கவனித்த, பொது விஷயங்களை நமக்கு எழுத்தில் அனுப்பவும்" என்று நமது ஆணையைத் தெரிவி.

ப்ரதிஹாரி :—தேவர் கட்டளைப்படி (செல்லல்)

மன் :—வாதாயன, நீயும் உன் காரியத்திலிருந்து விலகாதே.

கஞ்சுகி :—தேவர் ஆணைப்படி (செல்கிருன்)

---

* வனத்தில் யாரேனும் சதியாளர், பகைவர் ஒளிந்திருக்கிருர்களா என்று சோதித்தே, பின்பு மன்னன் அதிற் புகுவது வழக்கம்.

விது :—ஒரு ஈயின்றி ஓட்டி விட்டீர். கோடையி லும் குளிர்வெப்பம் சமமாகி, ரமணீயமாயிருக்கும் இந்த உல்லாஸச் சோலையில் இன்புறுங்கள்.

மன் :—நண்ப, 'இடங்கிடைத்தால் இடர்கள் வாட் டும்' என்பது தப்பாத வார்த்தை. இப்போது, முனி மகளை நான் மணந்த நினைவெழுந்தது. அதைத் தடுத்த இருளினின்று என் மனம் விடுபட்டது. அதே காலத் தில், சித்தஜன் என்னை எய்தற்குத் தனது வில்லில் மாம் பூங்கணை பூட்டியுள்ளான்.

விது :—சற்றே பொறு; இந்தத் தடிக்கம்பால் காம பாணத்தை நாசஞ் செய்கிறேன். (கம்பை ஓங்கி மாம்பூக்களை அடிக்கப் போகிறான்)

மன் :—(சிரித்து) இரு; உனது பிரஹ்மவர்சஸ் தெரிகிறது; நண்பா, சிறிது எனது காதலியைப்போன் றிருக்கும் கொடிகளைப் பார்த்துக்கொண்டே, அங்கே யமர்ந்து, எனது கண்ணை மகிழ்விக்கலாம்.

விது :—'நான் மாதவி மண்டபத்தில் இவ்வேளை இருப்பேன். என் கையால், திருமதி சகுந்தலையின் உரு வைத் தீட்டிய சித்திரப் பலகையை, அங்கே கொண்டு வா' என்று, தங்கள் சேவகி சதுரிகைக்கு உத்தரவிட் டீர்களே.

மன் :—அதுவே என் மனமகிழும் இடம். அங்கே என்னை நடத்து.

விது :—இப்படி, இப்படி, இறைவ!

(இருவரும் செல்லல்; ஸானுமதி தொடருகிறாள்)

ரு. சகுந்தலை நினைப்பு

விது :—இதோ, மணி சிலாதலத்துடன் கூடிய மாதவீ மண்டபம், பூவழகிந்து தங்களை வரவேற்கிறது. இறைவர் உள்ளே சென்றிருந்தருளுக !

(இருவரும் உள்ளே சென்று உட்காருதல்)

ஸானு :—ஒரு கொடியினின்று, எனது தோழியின் உருவத்தைச் சிறிது காண்கிறேன் ; பிறகு கணவரின் அன்புப் பெருக்கைச் சகுந்தலைக்குச் சொல்லுவேன்.

(அப்படியே பார்த்துக் கொண்டிருத்தல்)

மன் :—நண்பா, சகுந்தலையைக் குறித்த முன் வரலாறுகளெல்லாம், இப்போது நினைவிற்கு வருகின்றன. அதை உனக்கும் சொன்னேன். ஆனால் நான் அவளை மறுத்தபோது நீ பக்கத்திலில்லை; முன்பும் அவள் பெயரை நீ சொல்லவில்லை. நீயும் என்னைப்போலவே மறந்தனையோ ?

விது :—நான் மறக்கவில்லை. ஆனால், எல்லாம் சொல்லி, முடிவில் மீண்டும், 'அது வேடிக்கை, உண்மையல்ல' என்று தாங்கள் குறித்தீர்கள். என் களிமண் மூளையும் அதை நம்பியது. ஆம் ; விதி வலிதே!

ஸானு :—அப்படித்தான்.

மன் :—(சிந்தித்து) நண்பா, என்னைக் காப்பாற்று!

விது :—இதென்ன, நண்பா ! உனக்கிது தகாது! நல்லோர் நலிவிற் கிடங்கொடார். பெருங் காற்றிலும் மலைகள் குலையா.

மன் :—எனது மறுப்பால் வருந்தி அவள் பட்ட துன்ப நிலையை யெண்ணி, மிகவும் புகலற்றுள்ளேன்.

இங்கே மறுக்கப்பட்டுத் தன் உறவினரை அவள் பின் பற்ற முயன்ருள். அப்போது தந்தைக் கிணையான சிடன் "நில்" என்று அரற்றினன்; அப்படியே நின்று, கண்ணீரால் கலங்கிய பார்வையை மீண்டும் கொடியனுகிய என்மீ துறுத்தினுள். இதுவே விஷக் கணை போன்று என்னை வருத்துகின்றது.

ஸானு :—அம்ம, சுயகாரிய நேசம் இப்படியுள்ளது! அவர் வருத்தம் என்னை மகிழ்விக்கிறது.

விது :—அம்மையாரை ஏதோவொரு ஆகாச தேவதை தூக்கிச் சென்றதென்றே யான் ஊகிக்கிறேன்.

மன் :—கணவனே கடவுளென மதிக்கும் அவளைப் பிறர் யார் தொடத் துணிவர்? நினது தோழியின் (ஸகுந்தலையின்) தாயார் மேனகை யென்று யான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த மேனகையின் தோழிகளே அவளைத் தூக்கிச் சென்றிருக்க வேண்டுமென்று என்னுள்ளம் சந்தேகிக்கிறது.

ஸானு :—அவர் மறப்பே வியப்பு; நினைப்பல்ல.

விது :—அப்படியானுல், காலக்கிரமத்தில் அந்த அம்மையுடன் தாங்கள் கூடுவது திண்ணம்.

மன் :—எவ்வாறு?

விது :—ஏனெனில், தாய் தந்தையர் தங்கள் புதல்வி கணவனிடமிருந்து நீடு பிரிந்து வாழ்வதைக் காணுர்.

மன் :—நண்பா!

மாயமோ கனவோ மதி மயக்கமோ!
இத்தணைப் பயனுடன் இழந்த புண்ணியமோ!

சென்றது வாரதினி ; என்றன் மனோரதம்,
ஏகும் ஆற்றின் இடிகரை யாமே!

விதூ :—அப்படியன்று ; நாம் நினைக்காத வழியில் நடப்பது நடந்தே தீரும்! மோதிரம் கிடைத்ததே அதற்கு அத்தாட்சி.

மன் :—(மோதிரத்தை நோக்கி) ஆ! எளிதில் எட்ட முடியாத இடத்தில் இம்மோதிரம் தவறியது பரிதாபகரம்! செவ்விய நகங்களால் அழகுபெற்ற அவள் விரல்களில் இடம் பெற்றாய் ; அந்த இடத்தினின்று நழுவினை; மோதிரமே, என்னைப்போல் உனக்கும் அதிட்டமில்லை.

ஸானு :—அது பிறர் கையிற் சிக்கி யிருந்தால் வருந்தத்தக்கதா யிருக்கும்.

விதூ :—எதை உத்தேசித்து இந்த மோதிரத்தை அந்த அம்மணி கையில் போட்டாய்.

ஸானு :—என்னைத் தூண்டும் விருப்பு இவனையும் தூண்டுகிறது.

மன் :—கேள் ; நான் நகரத்திற்குப் புறப்படும்போது, என் காதலி கண்ணீருடன், "எனது நாதர் எவ்வளவு காலத்திற்குப் பிறகு எனக்குச் செய்தி யனுப்புவார்" என்று வினவினள்.

விதூ :—பிறகு, பிறகு நடந்த தென்ன?

மன் :—பிறகு, இம்மோதிரத்தை அவள் விரலிற் போட்டு, இவ்வாறு அவளுக்குரைத்தேன் :—"மோதிரத்திற் பதித்த என் பெயரின் எழுத்துக்களை ஒரு நாளைக்கு ஒன்ருக எண்ணுவாயாக ; என் காதலீ, அது முடிவதற்குள் உன்னை எனது அந்தப்புரத்திற்கு

அழைத்துச் செல்லும் ஜனங்கள் வருவார்கள்." கொடியவனான நான் மறதியால் அப்படிச் செய்யவில்லை.

ஸானு :—அது ரமணீயமான சமயம்; விதியால் தவறியது.

விது :—இம்மோதிரம், செம்படவன் அறுத்த ரோஹித மீன் வயிற்றில் இருந்ததெப்படி?

மன் :—உனது தோழி, சசீ தீர்த்தத்தை வணங்கிக் கொண்டிருக்கையில், கங்கை வெள்ளத்தில் அது நழுவி விழ்ந்தது.

விது :—இருக்கலாம்.

ஸானு :—அதனாலேதான், பாபத்திற் கஞ்சும் இந்த ராஜரிஷி, பேதை சகுந்தலையுடன் தான் புரிந்த மணத்தை மறுத்தான்; அல்லது இத்தகைய காதலன் அடையாளம் வேண்டியதேன்?

மன் :—இந்த மோதிரத்தை இப்போது முனிகின்றேன்.

விது :—(தனித்து) பித்தர் வழியைப் பின்பற்றுகிறார்.

மன் :—மோதிரமே, அழகிய விரல்களையுடைய அவள் கையை நழுவி, நீ என் தண்ணீரில் விழுந்தாய்? இன்றேல் நீ அசேதனம், குணமறியாய், உணர் உள்ள நான் அவளை மறுத்ததேன்?

விது :—(தனக்குள்) என்னைப் பசியுண்பதேன்?

மன் :—என்னருமைக் காதலீ! நின்னை அகாரணமாக விலக்கிய இவன்மனம், இரக்கத்தால் வருந்துகிறது.

அவன் மேற் பரிவு கொண்டு மீண்டும் முன்னே தோன்றுவாயாக !

(சதுரிகை கையில் ஒரு படத்தைக் கொண்டு, வருதல்)

சதுரிகை :—இதோ, சித்திரத்தில் பத்தினி.

(படப்பலகையைக் காட்டுகிறாள்).

விதூ :—நண்பா, சித்திரம் வெகு நேர்த்தி ! அழகாக எழுதியிருக்கிறாய் ! உணர்ச்சி ததும்புகிறது ! இந்தச் சித்திரத்தின் ஏற்றத்தாழ்வில்,என் விழிகள் தடுமாறுவதுபோலக் காண்கின்றன. உயிர்க்களை சொட்டுகிறது ; அதனோடு பேசத் தோன்றுகிறது.

ஸானு :—ஆ, இந்த ராஜரிஷியின் திறமை என்னே ! என் சகி முன்னிருப்பதுபோ லிருக்கிறதே !

மன் :—படத்தில், சரியா யிராததைத் திருத்தினேன் ; எனினும் சித்திரத்தால் அவள் அழகு சிறிதே விளக்க முடிகிறது.

ஸானு :—இரக்கம் மூண்ட, செருக்கற்ற அவள் அன்பிற்கு இது சரியே.

விதூ :—நண்பா, இங்கு மூன்று திருவையர் காண்கின்றனர். எல்லாரும் காட்சிக்கினியரே ; இதில் சகுந்தலையம்மாள் யார் ?

ஸானு :—இவனுக்குக் கண்ணிருப்பது வீண். இத்தகைய அழகைத் தேர்ந்தெடுக்க முடியாதவனானன் !

மன் :—நீ யாரை ஊகிக்கிறாய் ?

விதூ :—நீருண்டு சிலிர்த்த தளிரிலை நிறைந்த மாமரத்தின் பக்கத்தில், சிறிது களைத்ததுபோல் எழுதப் பெற்ற இப்பெண்மணி யென்றே ஊகிக்கிறேன் ;

முடியவிழ்ந்து, பூவுதிர்ந்த கூந்தலாள்! அவள் முகத்தில் குறுவேர்வைகள் காண்கின்றன; அவள் புயங்கள் மிகத் தாழ்ந்துள்ளன—அவளே சகுந்தலை—மற்றிரு வரும் அவள் சகிமார் ஆவர்.

மன்:—ஆம்; நீர் நிபுணர்! எனது பாவனைக் குறிப்பு இங்கே தெரிகிறது. என் வேர்க்கும் விரல்களின் அடையாளங்கள் படத்தின் ஓரங்களிற் காண்கின்றன. படத்தின் கன்னத்தில் விழுந்த என் கண்ணீர், வர்ணம் கிளர்ந்து தெரிகிறது. சதுரிகே, எனது இவ்விநோத வேலை பாதியே முடிந்தது; ஆதலின் எனது பீலியைக் கொண்டு வா!

சதுரிகை:—ஆர்ய, மாதவய்ய, யான் வருமளவும் இப்படத்தைப் பிடித்துக் கொண்டிருங்கள்.

மன்:—நானே இதைப் பிடித்துக்கொண் டிருக்கி றேன். (அவ்வாறே செய்தல்) [சேடி செல்லல்]

மன்:—(அழுது) முன்னே,

தானே வந்த மானை மறுத்தேன்;
சித்திரத் தெழுதிச் சிறப்பிக் கின்றேன்!
வளநீர்க் கங்கையை வழியிற் கடந்து,
கானலை விரும்பினேன் காணாய் நண்பனே!

விது:—(தனித்து) மஹாராஜா இப்போது ஆற்றைத் தாண்டிக் கானலை யடைந்துளார்! (உரத்து) நண்பா, இன்னும், இங்கென்ன எழுதவேண்டும்?

ஸானு:—எனது தோழிக்குகந்த இடங்களை எழுத அவர் விரும்புகிறார் போலும்.

மன்:—புளினத்தில் இணை-அன்னங்கள் உறை யும் மாலதியாற்றை யெழுதி, அதன் இருமருங்கும்

மான்கள் மேவிய புனித இமயமலைகளை யெழுத வேண்டும். கிளைகளில் வற்கலைகள் தொங்கும் ஒரு மரத்தின் கீழ், ஒரு கரு மான்* கலையில் தனது இடது கண்ணைத் துடைக்கும் பெண்மானை யெழுத விரும்புகிறேன்.

விதூ :—இச்சித்திரப் பலகையைத் தாடி நீண்ட தவசிக்கூட்டத்தால் நிரப்பிவிடுவார்போல் எனக்குத் தோன்றுகிறது.

மன் :—நண்பா இன்னொன்று ; சகுந்தலைக்குவந்த அலங்காரத்தை நான் மறந்து விட்டேன்.

விதூ :—அது என்ன ?

ஸானு :—அவளுடைய ஸௌகுமாரத்திற்கும், வனவாஸத்திற்கும் ஏற்றவொன்று.

மன் :—நண்பா, காம்பு காதிற் பொருந்தி, கேஸரங்கள் கன்னம் மட்டும் தொங்கும் சிரீஷமலர் எழுதவில்லை ; இன்னும், சரச்சந்திர கிரணங்களைப் போன்று கோமளமான தாமரை யிழைகளாலாகிய ஸூத்ர மொன்று தனங்களுக்கிடையே எழுதவேண்டும்.

விதூ :—நண்பா, அம்மணி மெல்லிய செந்தாமரைக் கையால் முகத்தை மறைத்து, அஞ்சுவது போல நிற்பதேன் ? (கூர்ந்து நோக்கி) ஆ, பூந்தேனைத் திருடும் இந்தத் தாசி மகன் தேனீயன்றோ அம்மணியின் மலர் முகத்தில் தாவுகிறது.

மன் :—அந்த வெட்கங் கெட்டவனை நிறுத்து.

---

*கரு மான்கள் புனிதமானவை. அவை யிருக்குமிடங்களைப் புனிதமென் றெண்ணி, முற்கால ஆரியர்கள் குடியேறி வந்தனர்.

விது :—தீயரைத் தண்டிக்கும் மஹாராஜாவே அதைத் துரத்த முடியும்.

மன் :—அது சரி ; பூங்கொடி விரும்பும் விருந்தே, அவளைச் சுற்றித் திரிந்தேன் இடர்ப்படுகிறாய்? உன்னன்பு மிக்க இம்மதுகரி, தாகமுற்றும், பூமேலிருந்து உன்னை யெதிர் பார்க்கிறது ; நீ யின்றி அது மது வுண்ணாது.

ஸானு :—ஐய, இப்போது அது மரியாதையாக ஒட்டப்பட்டது.

விது :—ஒட்டினாலும் போகாது ; இந்தச் சாதி, அடமுள்ளது.

மன் :—ஒஹோ, அவ்வாறு எனது ஆணையைப் பணியாயோ? ஆனாற் கேள் :—

அக்லிஷ்ட பால தருபல்லவ லோப நீயம்
பீதம் மயா ஸதயமேவ ரதோத்ஸவேஷு
பிம்பாதரம் ஸ்ப்ருசஸி சேத் ப்ரமர ப்ரியாயா
ஸ்த்வாம் காரயாமி கமலோதர பந்தனஸ்தம்!

கலவியில் யானே கனிவுடன் உண்டஎன், காதலியின்
கொழுந்துபோ லின்பக் கோவை யுதட்டைத்
தீண்டின் மலரையுட் சிறைசெய்வேன் வண்டே!

விது :—இவ்வளவு கடுமையாகத் தண்டித்தும், உம்மை என் அது அஞ்சவில்லை? (சிரித்து - தனித்து) இவருக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது ; இவர் சேர்க்கையால் நானும் அவ்வண்ண மானேன்! (உரத்து) நண்பா, இது வெறும் படமன்றோ?

மன் :—என்ன, படமா?

ஸானு:—நானும் இப்போதே உண்மையறிந்தேன். அமைத்தவாறே அனுபவிக்கும் அரசனைப்பற்றி யென் சொல்க!

மன் :—நண்பா! இதென்ன சேட்டை! எனது காதலியிடம் தன்மயனான இதயத்தால், முன்னிற்பது போலவே, அவளுடைய காட்சி யின்பத்தை யனுபவித்தேன். எனக்கு நினைப்பூட்டி, மீண்டும் அவளைச் சித்திரமாக்கி விட்டாயே! (கண்ணீருகுக்கிறான்)

ஸானு :—முன்பின் வேறுபட்ட இக் காதல்வழி நூதனமானது!

மன் :—நண்பா, எப்படி இவ்வாறு ஓயாத் துக்கமனுபவிக்க முடியும்? கனவினிற் காண்பது விழிப்பாற் கெடுகின்றது; அவளைப் படத்திற் காண்பதையும் கண்ணீர் தடுக்கிறது!

ஸானு :—மறுப்பினால், சகுந்தலைக்குற்ற துயரனைத்தையும் நீ துடைத்தாய்.

(வருதல் சதுரிகை)

சதுரிகை :—இறைவர் வெல்க! சித்திரக்கோல் பெட்டியுடன் இவ்வழியே வந்துகொண் டிருந்தேன்....

மன் :—பிறகு?

சது :—தரலிகையுடன் வந்த ராணி வஸுமதிதேவி 'எனது நாயகனுக்கு யானே அதை நேரில் கொண்டு போவேன்' என்று என்னிடமிருந்து வலியப் பற்றிக் கொண்டாள்.

விது :—நீ விடுபட்டது அதிர்ஷ்டமே!

சது :—ஒரு மரக்கிளையிற் சிக்கிய அரசியின் மேலாக்கைத் தரலிகை விடுவித்துக் கொண்டிருக்கையில் நான் தப்பிவந்தேன்.

மன் :—நண்பா, ராணி சமீபித்து விட்டாள்! பொறுமைத் தியால் மிகவும் செருக்குற் றிருக்கிறாள்! இந்தப் படத்தைப் பத்திரமாக வைத்துக்கொள்.

விது :—"உன்னைப் பத்திரமாக வைத்துக்கொள்" என்று சொல்லவும். (படத்தை யெடுத்துக்கொண்டெழுந்து) அந்தப்புரச் சூட்சிகளினின்று விடுபட்டதும், மேகப்ரதிச்சந்த மாளிகையில் என்னைக் கூவவும். (விரைகிறான்)

ஸானு :—அவன் பிரியம் மற்றொருத்தியிடம் சென்றாலும், முதற் காதலியை நன்கு மதிக்கிறான்.

(சேவகி கடிதத்துடன் வருதல்)

சேவகி :—தேவருக்கு வெற்றி!

மன் :—வேத்ரவதி, நீ வழியில் அரசியைச் சந்திக்கவில்லையா?

சேவகி :—ஆமாம்! கடிதமும் கையுமாக என்னைக் கண்டதும் அவள் திரும்பிச் சென்றுவிட்டாள்.

மன் :—காரியமறிந்து, என் காரியத்தடையாகாதிருக்கின்றாள்.

சேவகி :—முதலமைச்சர் விண்ணப்பத்தைக் கேட்டருள்க : "பலபான்மையான வருமானக் கணக்கு எண்ணவேண்டிய வேலை மிகுதியால், ஒரு பொதுக் காரியமே என்னால் பரிசிலனஞ் செய்ய முடிந்தது. அதைப் பத்திரத்தில் பதித்திருப்பதைத் தேவர் காண்க.

மன் :—காயிதத்தை இங்குக் காட்டு.

(சேவகி அதைத் தருதல்)

மன் :—(தனக்குள் படித்தல்) என்ன, கப்பல் வியாபாரி, தலைமையான வாணிபன், தனமித்திரன், கப்பல் உடைந்து மறித்தான்! பாவம், அவன் பிள்ளையற்றவன் என்கின்றனர்; அவன் சேர்த்த செல்வம் ராஜாவுக்குச் சேருகின்றதென அமைச்சர் எழுதுகிறார். ஆ! பிள்ளையில்லாதவன் பாடு துன்பம்! வேத்ரவதி! அந்தப் பெரிய முதலாளி, பெருத்த தனவந்தராகையால், அவருக்குப் பல மனைவியர் இருக்கவேண்டும். அவன் மனைவியரில், யாருக்கேனும் குழந்தையுண்டா என்று விசாரிக்கப் படட்டும்.

சேவகி :—தேவ, ஸாகேதத்திலுள்ள ஒரு செட்டியார் மகளான அவன் மனைவிக்கு, இப்போதுதான் பும்ஸவனம் நடந்ததென்று கேள்வி.

மன் :—ஆனால், வயிற்றிலிருக்கும் பிள்ளைக்கே சொத்து உரியது. சென்று, அமைச்சருக்கு அப்படிச் சொல்லு.

சேவகி :—தேவராணைப்படியே.

மன் :—திரும்பி வா.

சேவகி :—இதோ இருக்கிறேன்.

மன் :—சந்ததி யுள்ளதா இல்லையா என்ற கேள்வி யேன்? “அருமையான உறவை இழந்த குடிகள் அனைவருக்கும் துஷ்யந்தனே உறவு” என்று அறை கூவுக!

சேவகி :—அப்படியே கூவப்படும். (போதல்) (மீண்டு வந்து) கால மழைபோல, தேவராணை ஜனங்களால் கொண்டாடப்படும்!

மன்:—(வெய்ய பெருமூச் செறிந்து) அந்தோ, இவ்வாறே, சந்ததியின்றி, நாதியற்ற குடும்பங்களின் செல்வங்கள், மூலப்புருஷன் காலமான பின், பிறருக்குச் சேருகின்றன; என் காலத்திற்குப்பின் புருவம்சச் செல்வமும் இதே கதிதான் அடையும்.

சேவகி :—தீதொழிக!

மன் :—வந்த திருவை வெறுத்தேனே, ஹா!

ஸானு :—எனது சகியை மனத்தில் வைத்தே தன்னை நிந்தித்துக் கொள்ளுகிறார்.

மன் :—அவள் எனது தரும பத்தினி; என்னால் கருத் தரித்தாள்; என் குலத்தை நிலைக்கச் செய்பவள்; காலத்தில் விதைத்து, விளைவேறிக் கனபலன் அளிக்கும் நிலத்தைப் போன்ற அவளைக் கைவிட்டேனே!

ஸானு :—உன் மரபு இனிக் குன்றாதோங்கும்!

சதுரிகை :—(சேவகிக்கு) ஆ, அந்த வியாபாரியின் கதையைக் கேட்டு, மன்னன் கவலை இருமடங்கானது; அவரைத் தேற்ற, மேகப்ரச்சந்த மாளிகையினின்று விதூஷகனை யழைப்பாயாக!

சேவகி :—நன்றே பேசினை!

(செல்கிறாள்)

மன் :—ஆ! துஷ்யந்தன் பிதுர்க்கள் ஐயுறுகின்றனர்! 'இவனுக்குப் பிறகு வேத விதிப்படி யார்

சிரார்த்தங்கள் செய்வர்?' என்று கவலை கொண்டு, பிள்ளையில்லாப் பாவியான என்னால் விடப்பட்ட திலோதகத்தையே, - கண்ணீர் துடைத்து மீதியிருப் பதை - அவர்கள் குடிக்கின்றனர். ஆ!

(மயக்கமாகிறான்)

சதுரிகை :—(கலங்கி) தெளிக, தலைவ, தெளிக!

ஸானு:—ஆ! அந்தோ, அந்தோ! விளக்கிருந்தும், ஊடே திரையிருப்பதால், இருளிடர் வருந்துகிறார். உடனே நான் அவரை இன்புறுத்துகிறேன். ஆம்; பர்த்தா துஷ்யந்தன், தனது தரும பத்னியை விரும்பி யழைக்க, யக்ஞ பாகம் விரும்பும் தேவர்களே சீக்கிரம் ஏற்பாடு செய்வார்களென்று, சகுந்தலையை, மஹேந்தி ரன் தாயார் தேற்றக்கேட்டேன். ஆதலின், அதுகாறும் பொறுப்பது நலம். இதனிடையே இங்குற்ற செய்தி யால் என் சகியைத் தேற்றுகிறேன்.

(ஆகாயத்தில் உந்திச் செல்கிறாள்) (திரைக்குப்பின்)

வேண்டாம், பார்ப்பான்! பார்ப்பான்!

மன் :—(தெளிந்து, கேட்டு) ஆ! மாதவய்யா கூக் குரல்போ லிருக்கிறதே! யாரங்கே?

சேவகி :—(விரைந்து வந்து) தங்கள் நண்பரைக் காப்பாற்றுங்கள், அபாயத்திலிருக்கிறார்.

மன் :—மாதவய்யனை வருத்தியதார்?

சேவகி:—ஏதோ கண்மறைவான பூதம், அவனைப் பிடித்து, மேகப்ரச்சந்த மாளிகை உச்சியில் ஏற்றி விட்டது!

மன் :—(எழுந்து) இது கூடாதே; என் வீடும் தீய பேய்களுக்கிடமானதா? இன்றேல், நாளுக்குநாள், கவனக் குறைவால் நானிழைக்கும் குற்றங்களை தெரிந்து கொள்ள முடியாதிருக்கின்றனை! எனின், எனது பிரஜைகளில் யார் எந்தவழி செல்கிறார்களென நான் எப்படி முற்றிலும் உணர முடியும்? (திரைக்குப்பின்)

விதூ :—ஐயையோ நண்பா!

மன் :—(அவசரமாகத் திரும்பி) அஞ்சாதே, அஞ்சாதே, நண்பா! (திரைக்குப்பின்)

விதூ:—ஐயையோ நண்பா! எப்படி அஞ்சாதிருப்பேன்? யாரோ என் கழுத்தை முறித்துக் கரும்புபோல் என்னை மூன்று துண்டாக்குகிறார்!

மன் :—(சுற்றிநோக்கி) வில்லை உடனேகொண்டுவா.

(வில்லுடன் யவனி வருதல்)

யவனி :—இறைவர் வெல்க! இதோ கையுறையுடன் வில்.

(மன்னன் வில்லையும் கணையையும் வாங்கி) (திரைக்குப்பின்)

புதிய தொண்டை யிரத்தத்திற்கு வேட்கையரன யான், உயிர் தடுமாறும் உன்னை, புலி பசுவைக் கொல்வது போலக் கொல்லுகிறேன். துன்புற்றோர் அச்சந் தவிர்க்க, வில்லைத் தாங்கிய துஷ்யந்தன் இப்போதுன்னைக் காக்கட்டும்.

மன் :—(சினந்து) என்ன, என்னைக் கூவுகிறான்; நில் பிணந்தின்னியே! நீ இனிப் பிழைக்க முடியாது. (ஏணேற்றி) வேத்ரவதி, மாடிக்கு வழிநடத்து!

சேவகி :—இது, இது, வழி.

௬. இந்திரன் அழைப்பு

[எல்லோரும் விரைந்தோடி வருதல்]

மன் :—(சுற்றி நோக்கி) எல்லாம் வெறுமையா யிருக்கிறதே !

(திரைக்குப்பின்)

ஐயோ ! ஐயோ ! நான் தங்களைப் பார்க்கிறேன் ! தாங்கள் என்னைப் பார்க்கவில்லை. பூனை பற்றிய எலி யைப் போல, என்னுயிர் பிழைக்க வழியில்லை.

மன் :—மறைந்துறையும் வித்தையில் செருக்குற்ற பேயே, என் கணை உன்னைக் கண்டுபிடிக்கும். இதோ கணை விடுகிறேன். அது இறக்கத்தகும் உன்னைக் கொல் லும். காக்கத்தகும் அந்தணனைக் காக்கும் ; அன்னம் பாலைக்கொண்டு, அதிற் கலந்துள்ள நீரை விட்டுவிடு மல்லவா ?

(அம்பைக் குறி வைத்தல்)

[விதூஷகனை விடுவித்து, மாதலி வருதல்]

மாதலி :—அரக்கரை உன் அம்பிற்குக் குறியாக்கி ளுன் இந்திரன் ; ஆதலால், அவர்களைநோக்கி அம்பு தெறிப்பாயாக ! நண்பர்மீது, நல்லோர் அன்புவிழியே பாயும் ; கொடுங்கணை யல்ல.

மன் :—(அம்பை மீட்டு) ஆ ! மாதலியா ! மஹேந் திரன் சாரதிக்கு நல்வரவாகுக !

விது :—(வந்து) யாகப்பசுபோல், என்னை வதைத்த வனை மன்னன் நல்வரவேற்கிருன் !

மாதலி :—(சிரித்து) ஆயுஷ்மன், இந்திரன் என் னைத் தங்கள் சமுகத்திற்கு அனுப்பிய விவரம் கேட்க !

மன் :—கவனமாயிருக்கிறேன்.

மாதலி :—காலநேமியின் சந்ததிகளான துர்ஜயர் என்ற அரக்கர் கூட்டம் ஒன்றுள்ளது.

மன் :—ஆம் உள்ளது; முன்னே நாரதரிடமிருந்து கேட்டோம்.

மாதலி :—அந்த ராக்ஷச கணங்களை வெல்ல இந்திரனுலாகாதெனப்படுகிறது; போரின் முன்னணி நின்று, நீயே அவர்களைக் கொல்லவல்லோன் எனக் கருதுகின்றனர். சூரியனுல் விலக்கமுடியாத இரவின் இருளைச் சந்திரன் விலக்குகிறது. ஆதலால், தாங்கள் இப்படியே இந்திர ரதத்தில் ஏறி, விஜயத்திற்குப் புறப்படுங்கள்.

மன் :—இந்திரன்பால் இப் பேறு பெற்றுப் பெருமை கொண்டேன்! இருக்கட்டும், மாதவய்யனை ஏன் அப்படி நடத்தினீர்?

மாதலி :—அதையும் விவரிக்கிறேன்: ஆயுஷ்மன் ஏதோ ஒன்றினுல் மனக்கவலையுற்றுத் தளர்ந்திருக்கக் கண்டேன்; ஆயுஷ்மன் சீறியெழும் பொருட்டே அவ்வாறு நடந்தேன்!

ஏனெனில், விறகைத் தள்ளினுல் அனல் எரிகிறது; கோபமூட்டினுல் பாம்பு படமெடுக்கிறது; சீற்றத்தால் ஒவ்வொரு பிராணியும் தனது பலத்தை விளக்குகிறது.

மன் :— (விதூஷகனுக்கு) நண்பா, இந்திரன் ஆணையை மீறலாகாது. ஆதலின் மந்திரி பிசுனருக்கு, இந்த விவரந்தெரிவித்து, என் உத்தரவு-இதைச் சொல்ல

வும் : "நாணேற்றிய என் வில், வேறொரு வேலையில் ஈடுபட்டிருக்கிறது ; உன் மதியே குடிகளைத் தாங்குக."

விதூ :—தங்கள் ஆணைப்படியே (செல்கிறான்)

மாதலி :—ஆயுஷ்மன் தேரில் ஏறட்டும் (மன்னன் தேரேறுகிறான்)

(எல்லாரும் செல்லல்)

ஆறும் அங்கம் முற்றிற்று.

அங்கம்—7

க. விண் வழியே

[ஆகாய மார்க்கத்தில், ரதத்தில் மன்னனும் மாதலியும் வருதல்]

மன் :—மாதலே, மகவான் பணித்ததைச் செய்து முடித்தேன். ஆனால் அவன் செய்த அபரிமிதமான மரியாதைக்கு நான் தகுந்தவனல்லன் எனத் தோன்றுகிறது.

மாதலி :—(நகைத்து) ஆயுஷ்மன், இருவருக்கும் திருப்தி யில்லையென்றே கருதுகிறேன். பெற்ற சன்மானத்திற்குத் தாங்கள் முன் செய்த வுதவி பெரிதல்ல என்று நினைக்கின்றீர்; தங்கள் பராக்கிரமத்தை வியந்து, இந்திரனும் தங்களுக்கீந்த ஸன்மானத்தை மிகப் பெரிதாகக் கருதவில்லை.

மன் :—மாதலி, அப்படியன்று. எனக்கு விடை கொடுக்கும்போது, அவன் செய்த மரியாதை என் மனோரதத்திற்கு மிஞ்சியது. ஏனெனில், தேவர்

முன்னிலையில், *பாதியிருக்கை கொடுத்து, என் கழுத்தில் மந்தாரமாலை சூட்டினன்; அது இந்திரன் மார்பிற் பூசிய அரிசந்தனந் தோய்ந்திருந்தது; எனக்குச் சூட்டுகையில், நெஞ்சில் அம்மாலையை விரும்பி நின்ற ஜயந்தனைப் புன்னகையுடன் பார்த்தான் இந்திரன்.

மாதலி:—அமரேசன் கையினின்று ஆயுஷ்மனுக்கு எதுதான் தகாது! சுகபரனை இந்திரனுக்கு, இரண்டு செயல்களால் தானவரென்னும் முட்களினின்று சுவர்க்கம் விடுவிக்கப் பெற்றது: ஒன்று சமன் செய்யப்பெற்ற உனது நீள் சரங்களால்; இரண்டாவது, முன்னே நரசிம்மத்தின் வளைந்த நகங்களால்.

மன்:—யான் சம்பந்தப்பட்ட வரையில், இந்திரன் மகிமையே துதிக்கத் தகுந்தது. தலைவர் செய்யும் சிறப்பாலன்றோ, பெரிய காரியங்களிலும் சேவகர் வெற்றி பெறுகின்றனர்? இரவி, தனது தேர் முன் இணைப்பதாலன்றோ அருணன் இருளையோட்ட வல்லவனாகிருன்?

மாதலி:—தமக்கிது தகையே! (சிறிது தூரம் சென்று) ஆயுஷ்மன், வானமெங்கும் நின்று நிலவும் நின்னிசையின் பெருமையை இங்கிருந்து காண்க! ஸுரஸுந்தரிகள், தம்மை யலங்கரித்து மீந்த வர்ணங்களால், கற்பக மீந்த சித்திரச் சேலையில், பாட்டினுக்கேற்ற பொருளெனத் தேர்ந்து, நினது விரக்கதையை வானவர் எழுதுகின்றனர்!

மன்:—மாதலே, நேற்று, நிருதரைப் பொருதும் உற்சாகத்தில், வானேறும்போது, இப்பிரதேசத்தை

*இந்திரன் அரியணையின் பாதியில் சமமாகயிருத்தல்; இதுவே சிறுயர்ந்த மரியாதையாகும்.

நான் பார்க்கவில்லை. இப்போது எந்தக்காற்று வழியே நாம் செல்கிறோம் ?*

மாதலி :—இதை (மஹாவிஷ்ணுவின் இரண்டாவது அடி வைத்ததால்) ராஜஸமில்லாத பரிவாக வாயு மார்க்கம் என்பர் ; இது முப்பாலான ஆகாசகங்கையை வகிக்கிறது. (மந்தாகினி, பாகீரதி, போகவதி இம்மூன்றும் முறையே வான், புவி, பாதாள கங்கைகள்) அது எங்கும் சுழன்று நக்ஷத்திரங்களை முறையாகக் கதிரிட்டியங்கச் செய்கிறது.

மன் :—அதனாலேதான் எனது அந்தராத்மா உட்புறக் கரணங்களுடன் அமைதி பெற்றுள்ளது. (தேர் உருளைகளை நோக்கி) நாம் மேக வழிக்கு இறங்கியுள்ளோம்.

மாதலி :—அதெப்படித் தெரியும் ?

மன் :—தங்கள் தேர் உருளைகளின் ஓரங்கள் நீர்த் துளிகளால் ஈரமுற்றுள்ளன ; சூல்மேகத்தூடு தேர் செல்வதை அது குறிக்கிறது ; †சாதக பட்சிகளும் சக்

---

* நமது ஹிந்து சாஸ்திரப்படி, ஆகாச மண்டலம் ஏழு மார்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது:—1. வாயுமார்க்கம் ; இது பூமியிலும் பாதாலத்திலும் பரவியுள்ளது. ஆவாஹன் என்னும் அதன் காற்று, மேகம், மின்னல் முதலியவற்றைத் தாங்கும். 2. ஸூர்யமார்க்கம் ; அதன் காற்று ப்ரவாஹன். 3. சசிமார்க்கம்; இதன் காற்று ஸம்வாஹன். 4. நக்ஷத்திர மார்க்கம் ; இதன் காற்று உத்வாஹன். 5. க்ரஹ மார்க்கம் ; இதன் காற்று விவாஹன். 6. ஸப்தரிஷி மார்க்கம் ; இதன் காற்று பரிவாஹன். 7. த்ருவ மார்க்கம் ; இதன் காற்று ப்ரவாஹன்.

† சாதக பட்சி, மேக மண்டலத்திலுள்ள நீரைத்தான் அருந்தும்.

கிரத்தின் ஆர்களூடு தாவுகின்றன ; குதிரைகளும் மின்னொளியுற் றொளிர்கின்றன.

மாதலி :—இன்னும் ஒரு கணத்தில் ஆயுஷ்மன், தமக்குரிய நிலத்திலிருக்கலாம்.

மன் :—(கீழே நோக்கி) மாதலே, நாம் விரைவாயிறங்குவதால், மனிதருலகம் அற்புதக் காட்சி யளிக்கிறது. ஏனெனில், ஓங்கிய மலை முடிகளினின்று மேதினி இறங்குவதுபோலக் காண்கிறது! அடிமரம் தெரிவதால், மரங்கள் இலைகளால் மறைபடாதிருக்கின்றன. குறுகி மறைந்த நீரோடைகள், பெருக்கத்தாற் புலனாகின்றன. யாரோ மேலேற்றுவதுபோல், பூமி என் அருகே வருகிறது காணாய்!

மாதலி :—நன்குக் குறித்தீர்! (வியப்புடன் பார்த்து) ஆ! உலகம் பெருமையும் அழகும் பொலிகின்றது!

மன் :—மாதலே, கீழ், மேற் கடலிற் புகுந்து, பொன்னருவி பாய்ச்சி, அந்தி - மேக - மதில்போற் காணும் இது எம்மலை?

மாதலி :—ஆயுஷ்மன், இதுதான் ஹேம கூடமென்னும் கிம்புருஷர் மலை, தவசித்தி நிலயம்; இதைக் காணாய்! பிரமன் மகன் மரிசி; அவன் மகன் பிரஜாபதி; இவனே சுராசுரரைப் பெற்றவன்; இவன் தனது மனைவியுடன் இங்கே தவம் புரிகிறான்.

மன் :—நன்மையைத் தாண்டிச் செல்லொணாது. பகவானைப் பிரதக்ஷிணஞ் செய்து செல்கிறேன்.

மாதலி .—சிறந்த நினைப்பு.

(இறங்குதல்)

மன் :—(வியந்து) மண்ணைத்தொடாததால், தேர் உருளைகள் ஓசைப்படவில்லை. முன்னே தூளி யெழவில்லை; கலினவாரை யிழுக்காததால், தேர் இறங்கியது கூடத் தெரியவில்லை.

மாதலி :—இந்திரனுக்குந் தங்களுக்கும் இதுவே வேற்றுமை.

மன் :—மாதலே, மாரீசாச்ரமம் எங்குள்ளது?

மாதலி :—(கையாற் காட்டி)

மருங்கெழும் புற்று மேவி, மார்புபாம் புரியால் மூடி.
கருகிய கொடிகள் சுற்றக் கழுத்தடர் சடை நெருங்கக்
குருவிகள் கூடு கட்டக் குன்றெனப் பரிதி நோக்கி
அருமுனி தவத்தில் மூழ்கி அசைவற நிற்கின் றானல்.

இடைமட்டும் கரையான் புற்று மேவி, மார்பில் பாம்பின் சடைகள் மூடி, உலர்ந்த கொடி வலயங்கள் கழுத்தை இறுகிச் சுற்ற, தோள்களில் விரியும் சடை மண்டிலத்தில் குருவிகள் கூடு கட்ட, மலைபோல் அசையாமல் அதோ முனிவன், சூரிய பிம்பத்தை நோக்கி, (கிழக்கே திரும்பி) அதோ அசைவற நிற்கிறான்!

மன் :—வணக்கம் நினக்கு, வன்றவமே!

மாதலி :—(ரதத்தின் கலினவாரை இழுத்து) அதிதி தேவியால் வளர்க்கப் பெற்ற, மந்தார மரங்கள் மலிந்த பிரஜைத் தலைவன் ஆசிரமத்திற் புகுந்தனம்.

மன் :—விண்ணினும் அமைதியான இடம்! அமுத வாரியில் மூழ்கியதுபோல் உணர்கின்றேன்.

மாதலி :—(தேரை நிறுத்தி) ஆயுஷ்மன் இறங்குக!

மன் :—(இறங்கி) மாதலே, இப்பொழுது தங்கள் இச்சை யெப்படி?

மாதலி :—தேரை உறுதியாக நிறுத்தினேன். யானும் இறங்குகிறேன்; (அப்படியே செய்து) ஆயுஷ்மன், இது வழி; (திரும்பி) ரிஷிகளின் தபோவனக் காட்சியைத் தாங்கள் பார்க்கலாம்.

மன் :—வியப்புறப் பார்க்கிறேன்! கற்பகக் காடு; கற்பகக் காற்றே அதிலிருப்போர் உணவு; பொற்றாமரைத் தூளால் பழுப்பேறிய நீரில் புண்ணிய முழுக்கு; இரத்தினச் சிலைவீட்டில் தியானம்; தெய்வப் பெண்டிர் முன்னிருந்தும் சம்யமம், மனஅடக்கம்? பிற முனிவர் வேண்டும் பொருள்களை வேண்டாமல், இம்முனிவர் தவம் புரிகின்றனர்.

மாதலி :—பெரியோர் விருப்பம் அரியவும் உயர்ந்ததே.

(முன் செல்லல்)

உ. சிங்கக் குட்டியுடன் ஆடும் சேய்

(ஓர் அசோகமரக் காட்சி)

(வானில் ஓசை)

அயே! வ்ருத்த சாகல்ய, பகவான் மாரீசர் என்ன செய்கிறார்? என்ன சொல்லுகிறாய்? கேட்டு பதிவ்ருதா தர்மத்தைப்பற்றித் தாக்ஷாயணி வினவ, மகர்ஷிகளின் பத்தினிகள் சூழ, அவளுக்கு விவரித்துக் கொண்டிருக்கிறாரா?

மன் :—(செவி கொடுத்து) அந்த விஷயம், அவசியம் முடியக் கேட்க வேண்டியது!

மாதலி :—(மன்னனைப் பார்த்து) தங்கள் வரவைச் சமயம் பார்த்து இந்திர குருவிற்கு அறிவிக்கு மட்டும் ஆயுஷ்மன் இந்த அசோக மரத்தடியில் அமர்ந்திருக் கட்டும்.

மன் :—தாங்கள் கருதியபடியே. (உட்காருகிருன்)

மாதலி :—ஆயுஷ்மன், யான் செல்கிறேன்.

(செல்லுதல்)

மன் :—(நற்குறி கண்டு) மனோரதத்திற் கிடமில்லை ? ஏனோ வீணாய்த் துடிக்கிறாய் வாகுவே ! நன்மையை முன்னே மறுத்தேன் ? இப்போது துயரமே சூழ்ந் துள்ளேன். (திரைக்குப் பின்னால்)

இப்படி முரட்டுத்தனம் செய்யாதே! ஆ! மீண்டும் உன் வழக்கத்திற்குப் போய்விட்டாயா ?

மன் :—(கேட்டு) இங்கே முரட்டுச் செயலுக்கிட மில்லையே ! இப்படித் தடுக்கப்படுவதார் ? (வியப்புடன் பேச்சு வந்த பக்கந் திரும்பி) ஒரு குழந்தைக் கில்லாத பலங் கொண்ட இக்குழந்தை யாராயிருக்கலாம் ? இரண்டு தபஸ்வினிகள் இதைக் கவனமாகக் காக்கின்றனர்.

பிடரி கலையப் பிடித்தி ழுத்தே
தாய்மருங் கினின் றுந் தடமுலை பாதி
குடித்த சிங்கக் குட்டியை
அஞ்சா தெடுத்திவன் ஆடுகின் றானே !

[முன் வர்ணித்ததுபோல் குழந்தை, இரண்டு தபஸ்வினிகள் தொடர வருதல்]

குழந்தை :—சிங்கம், வாயைத் திற ; உன் பல்லை எண்ணுகிறேன் !

முதல் தபஸ்வினி :—முரட்டுப் பயலே, நமது குழந்தைக்குச் சமானமான விலங்குகளை என் துன்புறுத்துகிறாய்? எது உனது வேகம் வலுக்கிறது! ரிஷிகள் உன்னை 'ஸர்வதமனன்' என்றழைப்பது சரியானதே.

மன் :—எனது சொந்தப்பிள்ளை போலவே இக்குழந்தை மேல், என் மனத்தில் அன்பு துளிர்ப்பதேன்? பிள்ளையில்லாமை என் அன்பைத் தூண்டுகிறது!

2. தபஸ்வினி :—குட்டியை விடாவிட்டால், இப்பெண் சிங்கம் உன்மேல் பாயும், பார்!

குழந்தை :—(சிரித்து) அம்மவோ, எனக்கு நிரம்பப் பயந்தான்! (கீழுதட்டைப் பிதுக்குகிறான்)

மன் :—

மஹதஸ் தேஜஸோபீஜம் பாலோயம் ப்ரதி பாதிமே|
ஸ்புலிங்கா வஸ்தயா வன்ஹி ரேதாபேக்ஷ இவஸ்தித:||

விறகையே வேண்டிப் பொறிதீ போற்பெருந்
திறமைவித் தடனிச் சேய்பொலி கின்றான்!

1. தபஸ்வினி :—குழந்தாய், சிங்கக் குட்டியை விட்டுவிடு! உனக்கு வேறொரு விளையாட்டுச் சாமான் தருகிறேன்!

குழந்தை :—எங்கே, தா! (கையைக் காட்டுகிறான்)

மன்:—என்ன ஆச்சரியம்! இவனிடம் சக்கரவர்த்தி லக்ஷணம் (ரேகையில்) காணப்படுகிறதே! ஏனெனில், வலைபோலிணைந்த விரல்களுடனே, விரும்பியதற்கு விரித்த செங்கை, காலையொளி தோய்ந்து, இதழ் நெருங்கிய கமலம் போலக் காணுகின்றதே!

2. தபஸ்வினி :—ஸுவ்ருதே, வார்த்தை யளவில் இவனை நிறுத்த முடியாது. ஆதலால் போ ; என் குடிசையில், ரிஷி குமாரன் மார்க்கண்டேயனுடைய வர்ண மணி மயில் உள்ளது ; அதை இவனுக்குக் கொண்டுவா.

1. தபஸ்வினி :—நல்லது. (செல்லுதல்)

குழந்தை :—அது வரைக்கும், இதனோடே விளையாடுவேன் (தபஸ்வியைப் பார்த்துச் சிரிக்கிறான்)

மன் :—

ஆலக்ஷ்ய தந்த முகுலான் அநிமித்த ஹாஸைர்
அவ்யக்த வர்ண ரமணீய வச ப்ரவ்ருத்தீன்
அங்காஸ்ரய ப்ரணயின ஸ்தனயான் வஹந்தோ
தன்யாஸ் ததங்க ரஜஸா மலினீ பவந்தி.

அகாரணச் சிரிப்பு பல் அரும்பினைத் தோற்ற
மனத்திற் கின்னிய மழலைகள் பேசி,
உடல்மண் ணேறத் தொடையிலன் பாயமர்
செல்வரைத் தாங்கினோர் செல்வரா வாரே !

தாபஸீ:—சரி, என்னை நீ மதிக்கவில்லை(பக்கம் பார்த்து) யாரங்கே ரிஷி குமாரன்? (மன்னனைப் பார்த்து) ஸுமுகரே, சற்று இங்கே வருக ! பிள்ளை - விளையாட்டாக, இவன் துன்புறுத்தும் சிங்கக் குட்டியை விடுவியுங்கள் ! அவன் கைப் பிடியை விடுவிப்பது கடினம்.

மன் :—(நகைத்து) ஏ ரிஷி மகனே ! உன் தந்தைக்குரிய ஆத்ம தமனத்தை ஏன் தவிர்த்தாய் ? அதனால், இவ்வனத்தில் எல்லா விலங்குகளும் இன்பமாய் உறைகின்றன. சந்தன மரத்திற் கருநாகக் குட்டிபோல,

உன்னிடம் ஆசிரமத்திற் கொவ்வாத் தன்மை இருப்ப தேன்?

தாபஸீ :—நல்லோய், இவன் ரிஷிகுமார னல்லன்!

மன் :—அவன் உருவைப் போலச் செய்கையும் அப்படியே சொல்லுகிறது. இடத்தை யுத்தேசித்து அப்படி நினைத்தோம். (தான் வேண்டியபடியே, சிங்கக் குட்டியை விடுத்த குழந்தையின் ஸ்பரிசத்தை யுவந்து, தனக்குள்)

ஆ! வேறொரு குலத்தின் கான்முளை, இவன் என்னைத் தீண்டியதும், எனது அங்கங்களில் இன்பம் பாய்கிறதே! ஈன்றூர் உடலுக்கு இவன் எவ்வளவு இன்பம் விளைவிப்பான்!

தாபஸீ :—(இருவரையும் நோக்கி) ஆ! ஆச்சரியம்! ஆச்சரியம்!

மன் :—ஆர்யே, என்ன?

தாபஸீ :—இக்குழந்தை வடிவம் தங்களை ஒத்திருக்கிறது. ஆச்சரியப்படுகிறேன்! பழக்கமில்லாவிட்டாலும், தங்களை அவன் வெறுக்கவில்லை.

மன் :—(குழந்தையைக் கொஞ்சி) இவன் முனி குமார னின்றேல், எக் குலத்தோன்?

தாபஸீ :—புரு வம்ஸன்!

மன் :—(தனக்குள்) என்ன வியப்பு! என் மரபா? அதனாலேதான் இவ்வம்மை என்னைப் போன்றவனென்கிருள்! பௌரவரின் முடிவான குலவிரதம் இதுவே :

புருகுலமன்னர், முதலில் போகசுகங்கள் நிறைந்த மாளிகையில், உலகைக் காக்கவே வசிக்க விரும்புவர்.

இறுதியில், யதிவிரதத்தை உறுதியாய்க் காத்து, தரு மூலங்களே வீடாயிருப்பர். (வெளிப்படையாய்) இங்கே தங்கள் திறமையால் மனிதர் வர வியலாதே!

தாபஸீ :—தாங்கள் சொல்வது சரியே; இவன் தாயார் ஒரு அப்ஸர ஸ்திரீயின் உறவால், தேவ குருவின் தபோவனத்தில் குழந்தையை ஈன்றாள்.

மன் :—(தனித்து) ஆ! இன்னொரு நம்பிக்கை உண்டாகிறதே. (வெளிப்படையாய்) அந்த அம்மை எந்த ராஜரிஷி பத்னி?

தாபஸீ :—தர்ம பத்னியை மறுத்த அவன் பெயரை யார் சொல்லக் கருதுவர்!

மன் :—(தனக்குள்) இவ்வரலாறும் என்னையே குறிக்கிறது! இக் குழந்தையின் தாயார் பெயரை வினவ வேண்டும்; இன்றேல், ஆம், பரதார விவகாரம் சரியல்ல.

[மண் மயிலுடன் முதல் தாபஸீ வருதல்]

1. தாபஸீ:—ஸர்வதமனா, சகுந்த லாவண்யம் பார்!

குழந்தை :—(சுற்றிப் பார்த்து) என்னம்மா எங்கே?

இருவரும் :—தாயன்பால், ஒத்த பெயரில் மயங்கினான்.

2. தாபஸீ :—குழந்தாய், இந்த மண்மயி லழகைப் பார்; இதைத்தான் சொன்னேன்.

மன் :—(தனக்குள்) என்ன, இவன் தாயின் பெயர் சகுந்தலையா? மீண்டும், பெயரிலும் ஒற்றுமை யுள்ளதே! பெயரின் குறிப்பு மட்டும், கானலைப்போல என்னை மயக்குமோ?

குழந்தை :—அக்கா, இந்த நல்ல மயில் எனக்குப் பிடிக்கிறது.

(பொம்மையை எடுத்துக் கொள்ளுகிறாள்)

1. தாபஸி :—(திகைத்து) ஆ, இவன் மணிக்கட்டில் ரக்ஷையைக் காணோமே !

மன் :—கலங்கவேண்டாம் ! சிங்கக் குட்டியுடன் பொருதியதால், அது கீழே விழுந்திருக்கிறது. (அதைக் கண்டெடுக்க விரும்புகிறான்)

இருவரும் :—வேண்டாம் ! வேண்டாம் ! அதைத் தொட்டால்....என்னே ! அதை எடுத்து விட்டாரே !

[இருவரும் மார்மேல் கைவைத்து, மன்னனைப் பார்த்தல்]

மன் :—நாமேன் தடுக்கப்பட்டோம் ?

1. தாபஸி:—மஹாராஜா கேட்கட்டும்! அபராஜிதம் என்ற இம்மூலிகை, இவனுடைய ஜாதகர்ம சமயத்தில், பகவான் மாரிசரால் கொடுக்கப்பட்டது! அது கீழே விழுந்தால், அவனுடைய தாய் தந்தையர் தவிர வேறொருவரும் எடுக்க முடியாது.

மன் :—எடுத்தால் ?

1. தாபஸி :—உடனே அது பாம்பாகி அவரைக் கடிக்கும்.

மன் :—அது பாம்பாக மாறியதை நீங்கள் எப் போதாவது கண்டதுண்டா ?

இருவரும் :—பல தடவை.

மன் :—(இன்புற்று, தனக்குள்) என் மனோரதம் நிறை வேறியும் நான் மகிழாததேன் ? (குழந்தையைக் தழுவிக் கொள்ளுகிறான்)

1. தாபஸீ:—ஸுவ்ருதே, வா; தவநியமத்திலுள்ள சகுந்தலைக்கு இதைக் குறித்துச் சொல்வோம். (செல்லல்)

குழந்தை:—நான் அம்மா கிட்டப் போவேன்; என்னை விடு!

மன்:—என் மகனே என்னோடு கூட அம்மாளை நீ மகிழ்விப்பாய்!

குழந்தை:—என் அப்பா துஷ்யந்தன்; நீ யில்லை.

மன்:—(புன்னகையுடன்) இந்த மறுப்பே உறுதி கூறுகிறது.

[ஒரே முடியாய் முடிந்த கூந்தலுடன் சகுந்தலை வருதல்]

சகுந்:—பிறர் தொட்டால் பாம்பாய் மாறும் சர்வ தமனன் மூலிகை, இவர் தொட்டும் இயல்பாயிருந்தது என்று கேள்வியுற்றேன்; இருப்பினும், நான் அவ்வளவு பாக்யவதி யென்பதில் எனக்கு உறுதியில்லை. அல்லது, ஸானுமதி சொன்னதிலிருந்து இது நடந்திருக்கலாம்.

மன்:—(சகுந்தலையை நோக்கி) ஆ, இவளே சகுந்தலா தேவி!

ஆ, மாசற்ற நடையாள், மங்கலான இரண்டு ஆடைகளணிந்து, விரதத்தால் முகம் வாடி, கூந்தல் ஒரே சடையாகி, மிகவும் கொடியனான என்னிடமிருந்து பிரிந்து, நீண்ட கடுமையான விரதம் அனுட்டிக்கிறாள்.

சகுந்:—(மனம் வருந்தும் மன்னனை நோக்கி) இவர் எனது கணவரைப் போலக் காணவில்லை; ரக்ஷா மங்களந் தரித்த எனது மகனைத் தமது உடலால் அணைத்து மாசுறுத்தும் இவர் யார்?

குழந்தை:—(தாயையணுகி) அம்மா, இங்கே யாரோ என்னை அவர் குழந்தேனு கட்டிக்கிருர்.

மன் :—ப்ரியே! நானுனக் கிழைத்த கொடுமையும் நல்ல முடிவுற்றது! இப்போது என்னை நீ அறிந்து கொண்டாய்....

சகுந் :—(தனக்குள்) உள்ளமே, ஆறுதல், ஆறுதல்! பகையை விடுத்து, விதியும் எனக்கு இரங்கியது! இவரே என் இறைவர்.

மன் :—பிரியே!

ஸுமுகி! கிரஹணத்திற்குப்பின், ரோஹிணி சந்திரனுடன் கூடியதுபோல, நினைப்பு வந்ததும், மயக்கவிருள் மாறிய என்முன், அதிர்ஷ்ட வசத்தால் நிற்கிருய்!

சகுந் :—ஜயது, ஜயது, ஆர்ய புத்ர!

(பாதி மொழியில் விழி நீரால் குரலடைத்து நிறுத்துகிருள்)

மன் :—ஸுந்தரி! உன் வெற்றி முழக்கத்தை விழி நீர் அடைத்தது; எனினும், பூச்சின்றி வெளிறிய வுதட்டைக் கொண்ட உன் முகங் கண்டதுமே நான் வெற்றி பெற்றேன்.

குழந்தை :—அம்மா, இவர் யார்?

சகுந் :—மைந்த, நினது பாக்கியத்தையே கேள்!

மன் :—(சகுந்தலையின் பாதத்தில் வீழ்ந்து)

மறத்தன னழகி! உன்னுன் வருத்தத்தை மாற்ருய்! ஏனோ
பெருத்ததோர் மதி மயக்கம் பெற்றனன்? தமசினுலே
திருத்தகு நலமும் போகும்; சிரத்தினில் மாலை போட்டும்,
குருடன்'சி பாம்பி'தென்றே கூச்சலிட் டொதுக்கு வானல்!

சகுந் :—ஆர்ய புத்ரர் எழுந்திருக்கட்டும்; முற்பவத்திற்செய்த வினை, எனது நலத்திற்கு எதிர்விளைக்க, அந்த நாள் காத்துக் கொண்டிருந்தது. அதனாலேதான், என் அன்புள்ள கணவரும் இரக்கமற்றார்.

(மன்னன் எழுந்திருத்தல்)

சகுந் :—இருக்கட்டும், துன்பப் பேறுபெற்ற இவளைப்பற்றி நாதருக்கு எப்படி நினைவு வந்தது?

மன் :—என் நெஞ்சினின்று துன்பக் கணையை எடுத்தபின் சொல்லுகிறேன் : கண்ணே, முன்னே நினது அதரத்தைத் துன்புறுத்திய கண்ணீர்த் துளிகளை எனது மோகத்தால் உபேக்ஷித்தேன்.

அக் கண்ணீர்த் துளிகளே இன்றுனது வளைந்த இமைகளிற் சுரந்துள்ளன ; அந்த விழிநீர் துடைத்தே விசனம் நீங்குவேன் !

(அப்படியே செய்கிறான்)

சகுந் :—ஆர்ய புத்ர, இதுவே அந்த அங்குளி.

மன் :—இம்மோதிரம் கிடைத்த பின்பே எனது நினைப்பு மீண்டது.

சகுந் :—எனதார்ய புத்திரருக்கு உறுதிகூறுங் காலத்தில், அது காணாமல் மோசம் செய்தது !

மன் :—*பருவத்துடன் கலந்ததற்கு அறிகுறியாகப் பசுங்கொடி இம் மலரை யடைக !

சகுந் :—எனக் கதில் விசுவாச மில்லை. எனதிறைவரே அதைப் பூணட்டும். (மாதவி வருதல்)

---

*பருவம் என்பது துஷ்யந்தனைக் குறிப்பது. மலர்= மோதிரம் ; கொடி=சகுந்தலை.

மாதலி :—தரும பத்தினியுடன் மீண்டும் கூடி, மகன் முகம் கண்ட ஆயுஷ்மனுக்கு வளமோங்குக !

மன் :—என் மனோரதம் இன்கனி பழுத்தது ! மாதலே, இச்செய்தி இந்திரனுக்குத் தெரிந்திருக்குமா ?

மாதலி :—இறைவர் விழிக்குத் தப்புவதெதுவே ! ஆயுஷ்மன் வருக ! பகவான் மாரீசர் தரிசனம் அளிப்பார்.

மன் :—சகுந்தலே, குழந்தையை எடுத்துக்கொள். உன்னை முன்னிட்டுப் பகவானைத் தரிசிக்க விரும்புகிறேன்.

சகுந் :—ஆர்ய புத்திரருடன் குரு ஸமீபம் செல்ல நாணுகிறேன்.

மன் :—நன்னாளில் இதுவும் செய்யத்தகும் ; வா, வா.

(எல்லாரும் செல்லுதல்)

௩. முனிவர் ஆசி

[அதிதியுடன் ஓர் ஆஸனத்தமர்ந்து, மாரீசர் தோன்றுகிறார்]

மாரீசர் :—(மன்னனைப்பார்த்து) தாக்ஷாயணி (அதிதி), இவன், உன் மகன் (இந்திரன்) போர்களில் முன்னணி வகிப்போன் ; உலகைத் தாங்கி இலகும் துஷ்யந்தன். இவன் வில்லொன்றே இன்கடன் முடிப்பதால், இந்திரன் குலிசம் இருப்பதோர் அணியே.

அதிதி :—வடிவிலிருந்தே அவன் வல்லமை யறியலாம்.

[வருதல் ; மன்னன், சகுந்தலே, மாதலி]

மாதலி :—ஆயுஷ்மன், தேவ குரவர், பிள்ளை யன்பைக்குறிக்கும் விழியுடன், நின்னை எதிர்நோக்குகின்றனர் ; அவர்களை அணுகலாம்.

மன் :—மாதலே, இவ்விருவரே தக்ஷ மரீசியிடம் உதித்தவர்கள்; ப்ரஹ்மாவிற்கு ஏகாந்தரம் ஆனவர்கள்; பன்னிரு வடிவில் விளங்கும் தேஜஸின் காரணரென்று முனிவரால் இசைக்கப்பெற்றவர் ; யக்ஞபாகத் தலைவனுய், மூவுலகையும் தாங்கும் இந்திரனைப் பெற்றவர். சுயம்புவான பரமாத்மா, தான் அவதரிக்க இவர்களையே இடமாகக் கொண்டான் !

மாதலி :—ஆமாம்.

மன் :—(சமீபித்து) வாசவன் கட்டளை போற்றும் துஷ்யந்தன், உங்களிருவருக்கும் வணக்கம்.

மாரீசர்:—குழந்தாய், நீடு வாழ்! நீணிலம் போற்று.

அதிதி :—மகனே, நிகரில் வீரனுக விளங்கு !

சகுந் :—என் மகனுடனே உன்னடி பணிகிறேன் !

மாரீசர் :—குழந்தாய், நின் கணவன் இந்திரனை நிகர்வான் ! நின் மகன் மற்றொரு ஜயந்தனை போல்வான் ! வேறொரு வாழ்த்து உனக்கேற்றதில்லை ! இந்திரன் மனைவி பௌலோமிபோல் விளங்கு !

அதிதி :—குழந்தாய், கணவன் வெகு மதிப்பைப் பெறு ! நீடு வாழும் நினது மைந்தன், இருகுலத்திற்கும் இன்பனுகுக ! உட்காரு !

(எல்லோரும் பிரஜைத் தலைவனைச் சுற்றி வீற்றல்)

மாரீசர் :—(ஒவ்வொருவரையும் சுட்டி) உத்தமி சகுந்தலே, இச்சிரிய குழந்தை, நீ (துஷ்யந்தன்), மூவரும் சிரத்தையும், செல்வமும், செயலும் போலச் சேர்ந்தீர்கள் ; சந்தோஷம்.

மன் :—பகவன், முதலில் விருப்ப நிறைவேற்றம் ; பிறகு தங்கள் தரிசனம் கிடைத்தது ; தங்கள் அனுக்கிரகம் அற்புதமானது. ஏனெனில்,

முன்னே மலராம் ; பின்னே கனியாம் ;
முன்னே மேகம் ; பின்னே மாரியாம்.

இதுவே காரண காரிய முறையாம் ; ஆனால், தாங்கள் அனுக்கிரகத்திற்கு முன்பே நன்மை வருகிறது.

மாதலி:—விதியின் கிழவர் இவ்வாறே அருளுவர்.

மன்:—பகவன், தங்கள் ஆணைக்குட்பட்ட இவளைக் காந்தர்வ விவாஹம் செய்துகொண்டேன். சிலகாலத்திற்குப் பின், உறவினர் அழைத்து வந்தபோது, நினைப்பு மறதியால், இவளை மறுத்து, தங்கள் ஸகோதரர் பகவான் கண்வருக்கு அபராதம் செய்தவனானேன். மோதிரங் கண்ட பிறகே, அவர் புதல்வியை நான் மணந்ததாக நினைப்பு வந்தது. எல்லாம் எனக்கு விசித்திரமாகக் காண்கின்றது ! உருவம் முன்னிற்கையில் யானையென்ற நம்பிக்கையின்றி, அது தூரச் செல்லும் போதும் ஐயமுற்று, பின்பு அதன் அடிச்சுவட்டைக் கண்டு உறுதி பிறந்தது போன்றது என் மன விகாரம் !

மாரீசர் :—குழந்தாய், உன் பிழையைப் பற்றிய ஐயத்தை நீக்கு! உன்மயக்கமும் அதற்குக் காரணம். கேள் :

மன் :—கவனிக்கிறேன்.

மாரீசர் :—அப்ஸர தீர்த்தத்திற்கு வந்த மேனகை, தன் மகள் சகுந்தலையின் துயரைக் கண்டாள். உடனே அவளை இங்கே தாக்ஷாயணியிடம் கொண்டு வந்தாள் ; அக்கணமே, இப்பேதை, உனது வாழ்க்கைத் துணைவி, துர்வாசர் சாபத்தினாலேதான் உன்னால் மறுக்கப்பட்டாள் என்று தியானத்தில் அறிந்தேன். மோதிரம் கண்டதும் அச்சாபம் நீங்க வேண்டுமென் றிருந்தது.

மன் :—(உல்லாஸத்துடன்) அப்ப! இம் மொழியால் பழி நீங்கினேன்!

சகுந் :—(தனக்குள்) சந்தோஷம்! ஆர்ய புத்ரர், அகாரணமாக என்னை மறுக்கவில்லை. சபிக்கப்பட்டது எனக்கு நினைப்பில்லை ; விரகத்தால், இதய சூன்யமான எனக்கு, ஒருகால் அச்சாபம் வந்தது தெரியா திருந்திருக்கலாம். அதனாலேதான், மோதிரத்தை எனது தோழிமார் காட்டச் சொன்னார்கள்.

மாரீசர் :—குழந்தாய், உண்மையறிந்தாய் ; நின் வாழ்க்கைத் துணைவரிடம் எவ்விதமான மனக்குறையும் கொள்ளாதே! சாபத்தால் நினைப்பு தடைப்பட்டு, உன் கணவன் உன்னை மறுக்கலானான். தடை நீங்கியது. இப்போது நீயே மேன்மை பெற்றாய். தூசி படர்ந்த கண்ணாடி சாயலைக் காட்டாது; அது சுத்தமாயிருப்பின் எளிதாகக் காட்டும்.

மன் :—பகவான் சொல்வது சரியே.

மாரீசர் :—மகனே, சகுந்தலைக்குப் பிறந்து, நாங்கள் முறைப்படி ஜாதகர்மம் செய்த இக்குழந்தையை, நீ இன்புடன் ஏற்றுயென் றெண்ணுகிறேன்.

மன்:—பகவன், அவனாலேதான் என்மரபு நிலைக்க வேண்டும். (குழந்தையை எடுத்துக் கொள்கிறான்)

மாரீசர் :—அவன் அவ்வாறே ஆவன் ; அத்துடன் அவன் சக்கரவர்த்தியாவன் என்று அறிக. தடையில்லாமல், நேராகச் செல்லும் தேரில், கடலைக் கடந்து, இவன் ஏழு கண்டங்களடங்கிய உலகனைத்தையும், எதிரின்றி வெல்வான் ; விலங்குகளை யெல்லாம் வலிய அடக்குவதால், இங்கு அவன் 'ஸர்வதமனன்' எனப்படுகிறான் ; உலகைத் தாங்கிப் பரிபாலித்தலால், பிறகு இவன் *'பரதன்' எனும் பெயரையடைவான்.

மன் :—பகவானால் புனிதமான இவனிடமிருந்து எல்லாம் எதிர்பார்க்கிறோம்.

அதிதி :—பகவன், கண்வர், தம் மகளின் மனோரதம் நிறைவேறிய செய்தியை விவரமாக அறியட்டும். மகள்மேல் அன்பால், மேனகையும் இங்கு வசிக்கிறாள்.

சகுந் :—(தன்னுள்) என் மனத்தி லிருப்பதையே அம்மை சொன்னாள்.

மாரீசர் :—தவ மகிமையால், கண்வர் அனைத்தையும் நேராகக் காண்பார்.

---

*பரதன், அன்பும் நீதியுந்தாங்கி, பாரததேசம் முழுமையும் ஆண்டான்-இவனாலேயே இந்தியாவிற்குப் பாரதவர்ஷம் எனப் பெயருண்டாயிற்று. இவன் சந்ததிகளே பாண்டவர்.

மன் :—அதனுலேதான் முனிவர் என்னை முனியவில்லை.

மாரீசர் :—ஆயினும், இந்த இன்பச் செய்தியை அவருக்கு நாம் அறிவிக்கத்தகும். யாரங்கே!

(வருதல் : சிஷ்யன்)

சிஷ்யன் :—பகவான், இதோ இருக்கிறேன்.

மாரீசர் :—காலவ, உடனே ஆகாய வழியே சென்று, துஷ்யந்தன், சாபம் நீங்கி, நினைவு மீண்டு, சகுந்தலையுடன் அவள் மகனையும் ஏற்றுக்கொண்டானென்ற நற்செய்தியைக் கண்வருக்கு என் மொழியால் அறிவி.

சிஷ்யன் :—பகவான் ஆணைப்படி (போகிறுன்).

மாரீசர் :—குழந்தாய், மனைவியுடனும், மகனுடனும், நினது நண்பன் இந்திரன் தேரில், உனது ராஜதானிக்குப் புறப்படு.

மன் :—பகவான் ஆணைப்படியே.

மாரீசர் :—மேலும், உனது

குடிகளுக்கு இந்திரன் கொட்டுக பெருமழை ;
இடையரு வேள்வியால் இமையவர் மகிழ்க !
இருவர் செயல்களும் இரண்டுலகிற்கும்
பெருநலம் விளைக்க ஒருநூறு யுகம்
வாழிய நீவிர் வாழிய மாதோ !

மன் :—பகவன், இயன்றமட்டும் இனிதே முயல்வேன்!

மாரீசர் :—குழந்தாய், உனக்கு வேறெந்த இனிமையுதவட்டும்.

மன் :—தங்களருளால் என் மனோரதம் நிறைவேறியது! இதனினும் மிக்க இனிமையுண்டோ? இருப்பினும் இஃதாகுக :

ப்ரவர்த்தாம் ப்ரக்ருதி ஹிதாய பார்திவ :
ஸரஸ்வதீ ஶ்ருத மஹதாம் மஹீயதாம்
மமாபி ச க்ஷபயது நீலலோஹித :
புனர்பவம் பரிகதஶக்தி ராத்மபூ :

மன்னுயிர்க் கினிமை செய்க மன்னவன் ; மறை யுணர்ந்தார்
பொன்மொழி பெருமை சேர்க ; திருவருள் பொலிய வீசும்
தன்னின்றாந் தானும் நீல லோகிதன், சக்தி பாகன்
என்மறு பிறவியாகும் இடர்களைந் தருள்க மாதோ !

(அனைவரும் செல்லல்)

அபிக்ஞான சகுந்தலம் முற்றிற்று

மஹாகவி காளிதாஸன் முற்றிற்று.

மஹாகவி காளிதாஸன், பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	3	னீஸ்வர	னீஶ்வர
31	13	அதன்	அவள்
		சகுந்தலம்	
7	11	ஆகாது	ஆகாது.
53	19	திரைத்கு	திரைக்கு
69	19	ளிருவரைபும்	ளிருவரையும்
99	13	உயிர் வாழ்வே ;	உயிர் வாழ்வே,
101	3	மன்னன்,	மன்னன்
101	24	தன்	தமது
126	21	கேட்டு	(கேட்டு)

அன்பு நிலய நூல்கள்

(சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியவை)

			ரூ.	அ.
1.	பைந்தமிழ்ச்சோலை	....	0	4
2.	இராமலிங்க விஜயம்	....	0	10
3.	இன்பமாலை (2-ம் பதிப்பு)	....	0	6
4.	தருமஸாதனம்	....	0	4
5.	பொதுநெறி	....	0	2
6.	இன்று மனிதனும் இனிவரும் மனிதனும்		0	6
7.	திருக்குறளின்பம் (ராப்பர்)	....	1	4
	,, (காலிகா)	....	2	0
8.	உடலுறுதி (படங்களுடன்)	....	1	0
9.	வரகவி தாகூர்	....	0	3
10.	அப்பரின் அன்பு வெற்றி (நாடகம்)	....	0	10
11.	புதுமையும் பழமையும் (நாடகம்)	....	0	8
12.	திருநூல் - தூய வாழ்வு	....	1	0
13.	தியானமாலை	....	1	4
14.	ஏழை படும்பாடு (நாவல்)	....	1	8
15.	யோக சித்தி	....	2	8
	,, (Calico)	....	3	0
16.	பரமஹம்ஸ லீலை	....	2	8
17.	ரமண விஜயம்	....	2	0
18.	பெரியார் வரலாறு	....	2	0
19.	பாரதி விளக்கம்	....	0	4
20.	நாடகக்கலை விளக்கம்	....	0	2
21.	கீதைகாட்டும் பாதை	....	0	10

			ரூ.	அ.
22.	பாரத சக்தி	....	1	8
23.	அரவிந்தப் பிரகாசம்	....	0	12
24.	புதுயுகப் பாட்டு	....	0	5
25.	The Yoga of Sri Aurobindo	....	2	0
26.	Mahatma Ramalingam	....	1	0
27.	கம்பக்கவியின்பம் (out of stock)	....	2	0
28.	தமிழுணர்ச்சி	....	1	0
29.	புத்தர் கருணை	....	0	8
30.	மஹாகவி காளிதாஸன்	....	1	4
31.	வசந்த சுந்தரி	....	0	8
32.	சிலப்பதிகாரச் செல்வம்	(அச்சில்)		
33.	திருமந்திர விளக்கம்	,,		
34.	சமய சாரம்	,,		

பா மலர்கள்

35.	தமிழ்க் கனல்	,,
36.	வாழ்வமுதம்	,,
37.	புண்ய பூமி	,,
38.	முன்னேற்றப் பாடல்கள்	,,
39.	பக்தி பரவசம்	,,
40.	ஞான வைராக்கியம்	,,
41.	தீர்க்கதரிசிகள்	,,
42.	வீர விருந்து	,,
43.	குழந்தையின்பம்	,,
44.	விருந்து (காவிய நாடகம்)	,,
45.	அருளமுதம்	,,

கிடைக்குமிடம் :—

அன்பு நிலயம்,

இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.